
# நிதர்சனங்கள்

பூவை எஸ். ஆறுமுகம்



துரை இராமு பதிப்பகம்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# நிதர்சனங்கள்

பூவை எஸ். ஆறுமுகம்

துரை. இராமு பதிப்பகம்
6, பிள்ளையார் கோயில் தெரு,
பழைய தாம்பரம், சென்னை-600 045.

Title :
NIDHARSANANGAL
நிதர்சனங்கள்

Author :
Poovai S. Arumugham
பூவை எஸ். ஆறுமுகம்

First Edition : November, 1992

Pages : 204 + viii = 2

Paper used : 11.6 Cream Wove

Size : 1/16 Double Crown

Printers :
T. M. S. PRINTERS,
6, Ramanathan Street,
T Nagar, Madras-600 017.
Phone : 440155.

Publishers :
Durai. RAMU PATHIPPAGAM,
6, Pillaiyar Koil Street,
Old Tambaram, Madras-600 045.
Phone : 402 600

Price : Rs. 30-00.

# எண்ணிப் பார்க்கிறேன்...

மாண்பு நிறைந்த மனிதப் பிறவியின் சோதனை மிகுந்த மனித வாழ்க்கையிலே, நித்த நித்தம் எத்தனை, எத்தனையோ கதைகள் நடக்கின்றன!— நடந்து காட்டுகின்றன அல்லவா?— எனவேதான், வாழ்க்கை ஒரு கதையாக ஆகிறது; ஆக்கப்படுகின்றது!— அது போலவே, கதையும் ஒரு வாழ்க்கையாக ஆகிறது; ஆக்கப்படுகிறது! இந்நிலையிலே தான், வாழ்க்கை எனும் கதையும், கதை ஆகிய வாழ்க்கையும் படைப்பின் தத்துவமாக மட்டுமல்லாமல், படைப்பின் விதியாகவும் அமைந்து விடுகிறது!

இப்படிப்பட்ட சித்திரவிசித்திரமான படைப்பின் தத்துவத்தையும் படைப்பின் விதியையும் உணர்ந்து, அறிந்து தெரிந்து கொள்கின்ற எழுத்துக்கலைஞர்கள் இரண்டாவது பிரம்மாக்களாகவே மதிக்கப் படுகின்றார்கள்!

எழுத்தாளர்கள் பாக்கியவான்கள்!

உண்மைதான்!— நான் பாக்கியவான்!— இரண்டாவது பிரம்மாவாக ஆவதென்பது சாமானியப் பட்ட காரியமா, என்ன?— ராஜபோகமான அடி நாட்களிலே, பொங்குவிரி காவிரியின் தாய்மடியிலே தவழ்ந்து கொண்டிருக்கின்ற திருச்சிராப்பள்ளியிலே, நான் பி. ஏ.— இரண்டாம் ஆண்டில் படித்துக் கொண்டிருந்தபோதுதான், என்னுடை முதல் கதை

வெளியானது; வெளிப்படுத்தப்பட்டது!— பாருக்குள்ளே நல்ல நாடான அருமைப் பாரதம் ஆனந்தச் சுதந்தரம் அடைந்த அப்புனித நன்னாளிலே, எழுத்தாளர் ஆன நான் உண்மையிலேயே பாக்கியவான் தான்!

இப்போது, நடப்பு உண்மை ஒன்றினையும் சொல்லிவிடவேண்டும்! நாடு விடுதலை பெற்ற நேரத்திலே, நான் அடிமை ஆனேன்!— நான் என்னுடைய எழுத்துக்கு அடிமையானேன்!

எண்ணிப்பார்க்கின்றேன்!— நான் ஏன் எழுத்தாளன் ஆனேன்?—எனக்குத்தெரிந்தவிடை 'விதியின் பிழை' என்பதுதான்!—ஓ...சிருஷ்டியின் பரம ரகசியத்தைச் சூட்சுமமாகத் தெரிந்து கொண்ட நான் உண்மையாகவே பாக்கியவான்தானே?

அந்நாளிலே, நான் எழுதிய 'கரகம்' என்னும் முதற்கதையைச் 'சுதேசமித்திரன்' ஞாயிறு மலரில் வெளியிட்டவர் சிரஞ்சீவிப் புகழ் கொண்ட நாவலாசிரியர் அமரர் சாண்டில்யன்!—இங்கே, ஓர் உண்மையையும் சொல்ல வேண்டும்!—நான் எழுதிய முதல் கதையே அச்சுவடிவம் பெற்று விட்டது!

என் தாய்வீடு: 'பொன்னி'!—அங்கேதான், என் முதல் நூலாகக் 'கடல் முத்து' வெளியானது; அந்தக் 'கடல் முத்து' அண்மையில், சரியாக நாற்பதாண்டுகள் கழித்து, மீண்டும் வெளிப்படுத்தப்பட்டது. கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தின் பொதுச் செயலாளர் அருள்திரு டாக்டர் தயானந்தன் ஃபிரான்சிஸ் அவர்களது அன்பு பெரிது.

'கடல்முத்து'வைத் தொடர்ந்தும், தொடர் சேர்த்தும் இப்பொழுது, முத்து முத்தான சிறு கதைகள் அடங்கிய 'நிதர்சனங்கள்' என்கிற என்னுடைய அடுத்த சிறுகதைத் தொகுப்பு நூல் துரை ராமு பதிப்பக வெளியீடாக வருகிறது. இது, என் சிறுகதை நூல் வரிசையில், இருபத்தி நான்காவது ஆகும்!

தமிழ்ப் படைப்பு இலக்கியத்தில் சிறு கதையின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் அருந்தொண்டு—பெருந் தொண்டு ஆற்றின 'உமா'வை இலக்கிய ஆர்வலர்கள் மறக்க மாட்டார்கள்; 'உமா'வை எண்ணுபவர்கள் இந்தப் பூவையையும் எண்ணியதும், எண்ணுவதும் சகஜம்!

''சுதேசமித்திரன்', 'தினமணி கதிர்', 'ஆனந்த விகடன்', 'அலிபாபா', கல்கி', 'உமா', 'கலைமகள்', 'அமுதசுரபி', 'புதுமை', 'பொன்னி', 'காவேரி', 'நவயுவன்' போன்ற ஏடுகளில் வெளியான நல்ல கதைகள் சில தேர்ந்தெடுக்கப்பட்டு, இப்போது திரும்பவும் வெளிப்படுத்தப்படுகின்றன.

'தமிழ் இலக்கிய வரலாறு' பற்றி ஆய்ந்தெழுதிய நல்லறிஞர்கள் சிறுகதைகள் குறித்துப் பேசும்போது, 'பூவையை' மறந்துவிடாமல் குறிப்பிட்டிருக்கின்றனர்.


1966ஆம் ஆண்டில் என்னுடைய 'பூவையின் கதைகள்' தமிழ்நாட்டு அரசாங்கத்தின் முதற் பரிசினை வென்றது. பின்னர், 1982-ம் ஆண்டிலே, தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி. ஆர். அவர்கள் தமிழக அரசின் சார்பிலே எனக்கு இரண்டு இலக்கிய

முதற் பரிசுகளை வழங்கினார். இரண்டு முதற் பரிசுகளை வென்ற நூல்களில் ஒன்று தான், 'தெய்வம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது!' என்னும் சிறு கதைத் தொகுப்பு ஆகும்.

'துரை ராமு பதிப்பக'த்தின் உடைமையாளர் திருமிகு துரை. இராமு அவர்கள் எனக்குக் கிடைத்த சடையப்ப வள்ளல் ஆவார். அன்னாருக்குத் தலை வணங்கி நன்றி கூறுகிறேன்.

அன்புடன்,
பூவை எஸ். ஆறுமுகம்

'தமிழ் அரசி'
சென்னை-18;
21-11-92.



துரை. இராமு பதிப்பகம்,
6, பிள்ளையார் கோயில் தெரு,
பழைய தாம்பரம்;
சென்னை-600 045.

# பதிப்புரை

எழுதுவது என்பது எளிதல்ல சிறப்பாக எல்லோரும் படிக்கக் கூடிய கதைகளை எழுத தனி ஆற்றல் வேண்டும். சிலர் எழுதுவது அறிஞர்களுக்கு மட்டுமே விளங்கும். இன்னும் சிலர் பாமரர்களுக்கு மட்டுமே எழுதுவர். சிலர் இந்த இருசாராரையும் மகிழ்விக்க முடியாமல் தங்கள் எழுத்துக்களை வடிப்பார்கள். மிகச் சிலரே தாங்கள் வடிக்கும் எழுத்துக்களை எல்லோரும் மகிழ்வுடன் ஏற்கும்படிச் செய்வார்கள்.

இம்மிகச் சிலரில் ஒருவராக விளங்குபவர் திருமிகு. பூவை. எஸ். ஆறுமுகம் அவர்கள். எளிய வாழ்க்கைக்கு உதாரணமாகத் திகழும் அவருக்கு என்று ஒரு தனி நடை; மிகச் சிறந்த உண்மைகள் எல்லாம் மிக எளிமையாக உள்ளன என்ற கருத்தை எல்லோரும் ஏற்கும் வண்ணம் எழுதும் ஆற்றல்; வாசகர்கள் குழம்பிப் போகாமல் தெளிவாகத் தன் கருத்துக்களைக்கூறும் பாங்கு; ஒவ்வொருவருக்கும் இன்பமாக வாழ அத்தியாவசியமான அறநெறிகளுக்கு அவர் அளித்திடும் உயரிய மதிப்பு; இவை அனைத்தும் அவருக்குக் கை வந்த கலை.

அன்னாருடைய 'நிதர்சனங்கள்' எனும் இச்சிறுகதைத் தொகுப்பு நூலை வெளியிடுவதில் பெருமைப்படுகிறோம்.

அன்புள்ள,
துரை. இராமு.

# உள்ளே...


| | |
|---|---|
| நிதர்சனங்கள் | 1 |
| ஏரோப்ளேன் காளை | 24 |
| பத்ரகாளியின் கற்பு | 56 |
| தேவி கருமாரி | 74 |
| மகமாயி பேசினாள் | 6 |
| காணிக்கை | 100 |
| தீபாவளிக் கடவுள் | 113 |
| பதினோராம் அவதாரம் | 122 |
| செந்தாழம் பூ | 137 |
| கஞ்சிக் கலயம் | 152 |
| காவல் | 165 |
| உரசல் | 173 |
| கல்லா | 179 |
| ஆணை பிறந்தது | 196 |

# நிதர்சனங்கள்

டாக்டர் உள்ளே;
தயவு செய்து சத்தம் போடாதீர்கள்!...

செக்கச் சிவந்த நெற்றியின் சுருக்கங்கள் ஏறி இறங்க, கவர்ச்சி கனிந்த கண்களின் தீட்சண்யம் துலாம்பரமாகப் பளிச்சிட, மார்பின் நெடுகிலும் நாடிக் குழலை நகர்த்திக் கொண்டிருக்கிறாள், டாக்டர் ரேகா. இப்போது அவள் நோயை இனம் கண்டிருக்க வேண்டும்; அழகான இதழ்களில் அழகான அரைப் புன்னகை பூநாகமாக நெளிகிறது. மருந்து எழுதிக் கொடுக்க, மருந்துச் சீட்டின் அட்டையிலிருந்து தாளைக் கிழித்தாள். நெற்றியை நுனி விரலால் லாவகமாகத் தடவிவிட்டுக் கொண்டவளாக, ''உங்க பேர் காந்தா—மிஸ்காந்தா தானே? ஆல்ரைட்!'' என்று தன் போக்கில் மெல்லிய குரலெடுத்துச் சொல்லிக் கொண்டே, ஊசி, மாத்திரை, டானிக் என கிறுக்கித் தள்ளினாள். ''ஸீரியஸா ஒண்ணுமில்லே; அதுவரைக்கும் நல்லது; மற்றபடி, வாழ்க்கைன்னா சோதிப்பும் பாதிப்பும் இயல்புதான். இது ஒரு வேடிக்கையான யுகம்—யாருக்குத் தான் நிம்மதி இருக்கு?—காந்தா நீங்க வயசுப் பொண்ணு திடமா இருக்கப் பழகிக்கணும். ஒரு 'கோர்ஸ்' இஞ்செக்ஷன் போட்டுக்கங்க. மருந்து, மாத்திரை சாப்பிடுங்க. பத்தியம் ஒண்ணும் இல்லே; முட்டை மட்டும் சாப்பிடலாம். குளியல் சுடுதண்ணியிலேயே நடக்கட்டும்'' என்று விவரம் சொல்லி மருந்துச் சீட்டை நீட்டினாள். ''வடக்கு நாளிலே

தானே வீடு. நெஞ்சிலே வலி எடுத்தா, என்கையிலே உடனடியா வந்து காட்டணும்!''

ஐந்து ரூபாய் நோட்டு முன்னும் பின்னும் சரி பார்க்கப்பட்டு, மேஜையின் இழுப்பறையில் தஞ்சமடைகிறது.

பூந்திரை விலகியது.

ரேகா சுழல் நாற்காலியில் சுகமாகச் சாய்ந்தாள்; செம்பாதியாக விழிகள் மூடிக்கொண்டன. சிந்தனை நிலை நீடித்தது ஒரு மாத்திரைப் பொழுதுதான். நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டபோது, இடது கை வாட்டத்தில் முந்திரிக் கொட்டையாகத் தலையை நீட்டிக் கொண்டிருந்த பழைய 'ஹிந்து' பத்திரிகையில் அவளது ஊடுருவல் நிலைத்திருக்கலாம். நீள் மூச்சொன்று நீளமாக ஆனால், சன்னமாக வெடித்தது. மறு இமைப்பில் அவள் தனக்குத் தானே சிரித்துக் கொண்டாள். ''எஸ்...நெக்ஸ்ட் ப்ளீஸ்... ஸிஸ்டர்!''—அவள் இப்போது டாக்டர்.

டவல் நழுவியது.

இளம் வெய்யில் எட்டிப்பார்த்தது; ஓடிவிட்டது.

சென்னையிலிருந்து புதுக்கோட்டைக்குப் பறந்து வந்த துரிதவண்டி ராணி ஆஸ்பத்திரியைக் கடந்தது.

'ஊம்' கொட்டியபடி, காப்பி டபராவை நகர்த்தினாள் ரேகா. சூடு இன்னமும் ஆறவில்லைதான். ஒருவாய் குடித்தாள்; ஆவிபறக்கக்காப்பியைச் சுவைத்துப் பருகுவதென்றால் அவளுக்கு நிரம்பப் பிடிக்கும். பிடி கொடுக்காமல் வீம்படித்து, வம்பு பிடித்த அந்த ஒரேயொரு கருப்பு முடியைப் பற்றிச் செருகிக் கொண்டாள்; நித்தியமல்லி ஒன்று உதிர்ந்தது; தலையை நேர்வசத்தில் திருப்பினாள்; சிந்தூரத் திலகம் மவுனச் சிலிர்ப்போடு பனிச்சிடுகிறது.

'பச்சை மண்ணும் தானுமாக நுழைந்தவன். மீனா. உடன் தொடர்ந்தவன் அவளுக்குத் திருப் பூட்டிய புள்ளி; ராமநாதன். அரிமழம்.

"பேபிக்கு தடுமன் எப்படி இருக்கு?"

"இப்ப பரவாயில்லங்க!"

"செட்டியார் எப்ப வந்தாங்க?"

"காலம்பறத்தான் வந்தாங்க!"

ராமநாதன் பின்னால் பையிலிருந்து ஆப்பிள், ஆரஞ்சு, மாதுளைப் பழங்களை எடுத்து, வெள்ளித் தட்டில் வைத்தான்; இரண்டு 'பச்சை' நோட்டுக் களுக்கு மின் விசிறி வெண்சாமரம் வீசும் பாங்கு அவனுக்கு அழகுணர்ச்சியைத் தந்திருக்கும். டாக்டரம்மாவைத் தலை நிமிர்ந்து நோக்கினான். "நாங்க இன்னைக்கு ஊருக்குப் புறப்படுறோமுங்க" என்றி செய்தி தெரிவித்தான்.

"சந்தோஷம். மருந்துங்களை வேளை தவறாமல் ஆச்சியைச் சாப்பிடச் சொல்லுங்க; குழந்தைக்கும் 'ட்ராப்ஸ்' கொடுத்தாகணும். ஆயுதக்கேஸ்இல்லியா? —அதனாலே, பளுவான சாமான்களைச் சுமக்கப் படாது; உடம்பை வருத்துகிற கடுமையான காரியங் களைத் தவிர்க்கிறதும் நல்லது" சிவப்புக் கொடியை மடக்கிவிட்டு, பச்சைக் கொடியான பத்துநாள் சிசுவை அன்பாகவும் பரிவாகவும் தடவிக் கொடுத் தாள் ரேகா. டாக்டர் ரேகாவின் கயல்விழிகள் ஏன் அப்படிக் கலங்குகின்றன?

மீனாவின் வெளுத்து மெலிந்த கரங்கள் லேடி டாக்டரிடம் அன்பளிப்புத் தட்டை நீட்டின.

இரண்டு நூறு ரூபாய்த் தாள்களைக் கவனிக்கத் தவறிவிடவில்லை ரேகா.

"பீஸ் வகையிலே நான் தரவேண்டிய பாக்கி ரூபா நூறு மட்டுமேதானுங்க. அடுத்த நூறு எங்க வீட்டு அன்பளிப்புங்க, டாக்டர்; நீங்க எல்லாத்திலேயுமே ரொம்பக் கண்டிப்பு, கறார்னு எனக்குத் தெரியாமல் இல்லை; ஆனாலும், இதை நீங்க தட்டாமல் ஏற்றுக்கிணு எங்களுக்கு ஒரு நல்ல திருப்தியை உண்டாக்கினா சிலாக்கியமாயிருக்கும்" என்று மனம் திறந்து பேசினான் ராமநாதன்.

இளமை அழகு ஊஞ்சல் ஆடிய ரேகாவின் வதனத்தில் புன்சிரிப்பு மலர்வதும், மலர்ந்த புன்னகை மறைவதுமாக, வேடிக்கையானதொரு கண்ணாமூச்சு ஆட்டம் அந்தரங்கமாக இதயத்தின் அம்பலத்திலும், நிதர்சனமாக உதடுகளின் அரங்கத்திலும் விளையாடிக் கொண்டிருக்கிறது; விளையாட்டுக் காட்டிக் கொண்டிருக்கிறது!

அன்றும் பதிவுத் தபால் ஒன்று வந்தது.

அது, அதற்கு உண்டான கூட்டிற்குள் அடைக்கலம் அடைந்தது; கூண்டுக்குள் சிறை புகுந்த கிளி தானோ?

"டாக்டரம்மா!"

சிறை மீண்டாள் அவள்.

மீனா ..."நீங்க பட்டணத்திலே இருக்கையிலே உங்களைப்பத்தி ரொம்ப தூரம் கேள்விப்பட்ட எங்க அம்மான் மகனும் ஐ. ஓ. பி, காஷியருமான மிஸ்டர் சிதம்பரம் உங்களை எங்களுக்கு சிபாரிசு பண்ணினாக; உங்க பேருக்கும் புகழுக்கும் தோதான இடம் மெட்ராஸ்தானே? அதை விட்டுட்டு, இங்கிட்டு, புதுக்கோட்டை பக்கம் ஏன் வந்தீங்கன்னு கூட நான் சிந்திச்சதுண்டுங்க; ஆனா, நீங்க இங்கே வந்தது எங்க பூர்வ புண்ணியம்; எங்களோட சோலையாண்

டவர், மீனாட்சி சுந்தரேஸ்வரர் கருணைதான்! உங்க கைராசி மகிமையிலேதான் புனர்ஜன்மம் எடுத்திட்டேன்; எங்க பாப்பாவும் புதுப்பிறவி எடுத்தாச்சு; நீங்க எங்க மட்டிலே, நேருக்கு நேராகவும் நிதர்சனமாகவும் தரிசனம் தந்துக்கிணு இருக்கிற ஒரு தெய்வமேதானுங்கம்மா!'' சிணுங்கல் இருமல் சிணுங்கியது.

''ஓ!'' என்றாள் ரேகா; பின்னர், ''ஓ. கே!''யும் சொன்னாள். பணத்தை உள்ளே போட்டாள்; குவிந்த பூக்கரங்கள் பிரிந்தன.

பிரியா விடையன் பிரிவிலே, கணங்கள் சில பேய்க் கணங்களாக ஊர்கின்றன.

அடுத்தடுத்து கேஸ்கள்.

பூஞ்சிட்டு 'ஒமேகா' விலிருந்து பான்மைகூட்டியும் பாங்கு காட்டியும் கூவியது.

மணி பத்து, முப்பது.

ரேகா உடலின் களைப்பை உணர்ந்தும், காப்பியின் தேவையை உணர்ந்து, மூடி வைத்திருந்த மூடியை எடுத்தபோது ஆறிவிட்டிருந்தது புரிந்தது, காப்பி எவ்வளவு சூடானாலும்கூட நேரம் கழிந்துவிட்டால், ஆறித்தான் போய்விடுகிறது. 'பஸ்ஸர்' ஒலி வரவழைத்த நர்ஸ் கண்ணகியிடம் காப்பி வேண்டுமென்றாள். பட்டணத்தில் எம். பி. பி. எஸ். படித்த காலத்திலும் இவ்வாறுதான், அடிக்கடி காப்பியை சூடாக—வெகு சூடாக அருந்துவாள். சூடு என்றால்தான் அவளுக்குப் பிடிக்கும். பட்டணத்தை எண்ணிப் பார்த்தவளுக்கு என்னென்னவோ ஞாபகங்கள் எப்படியெல்லாமோ சுழலத் தொடங்கி விட்டன. அவள் தலையும் சுழன்றது. கண்கள் மறுபடி அரை

வட்டம் போட்டு மூடிக் கொண்டன. நெஞ்சின் ஏதோ முனையில் நெறிஞ்சி முள் குத்தின மாதிரி வலி ஏற்பட்டது; தடவிக் கொடுத்தாள். முல்லைச்சரச் சங்கிலி பூப்போன்ற தளிர் விரல்களில் சிக்கவே, சங்கிலிக்கு விடுதலையளித்து ஒதுக்கி விட்டாள். ஒற்றைவடத்தின் அடியில் பளிச்சிட்ட கற்பதக்கத்தை அரைக்கணம் ஊடுருவினாள். நெடுமூச்சில் மன உளைச்சல் கரையாது போலும்! உணர்வுகளின் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும்; அழகான கனவுக் காட்சியில் மனம் லயித்தாள். அவளுக்கே உரித்தான கம்பீரச் சிரிப்பு பிறந்தபோது தான். அவள் நல்ல மூச்சு விடலானாள். குறிப்பறிந்த பாவனையில் வந்த காப்பியை மிச்சம் மீதம் வைக்காமல் குடித்து வைத்தாள் அவள்.

தலைச் சுற்றல்—கிழவி ஒருத்தி.

'க்ரேவால்' மாத்திரை அட்டையை தேடாமலே எடுத்தாள். அதில் ஒரு மாத்திரை குறைந்தது. அவளுக்கு கெட்ட கோபம் மூண்டது. நினைவு படுத்திப் பார்த்தாள். அவளுக்கு ஞாபகசக்தி கூடுதல் என்பதாகவே ஒரு பேர். வந்த மருத்துவப் பணிப் பெண்ணிடம் விசாரணை நடத்தினாள். புதுப்பிக்கப் பட்ட மனிதாபிமானம், குற்றம் உணர்ந்த கண்ணகியை மன்னிக்க உடன் பட்டது.

''கழிந்த மூணுமாசமாக, மாதம் பிறந்தவுடன் உனக்குச் சம்பளம் எண்ணிக் கொடுக்கிற எஜமானி என்கிற காரணத்தை முன்னிட்டு, என்னுடைய ஒரே யொரு 'டாப்லெட்'டை நீ எடுத்திருந்தால் கூட, என் அனுமதியை நீ முன் கூட்டியே பெற்றிருக்க வேணும். ஆனால் நீ தவறிட்டே என்றாலும் உன் குற்றத்தை நீ ஒப்புக் கொண்டாய். அப்போது என் உயர்வு மனப்பான்மை ஜெயிச்சிட்டது என்கிற அந்த

ரங்கம் உனக்கு நிதர்சனமாக விளங்கியிருக்கலாம். சரி, சரி நீ இங்கே நிலைக்கணுமென்றால், இனி மூன்றாவதாக ஒரு தப்பையும் செய்யாமல் இருக்க முயற்சி பண்ணு. ஊம், நீ போகலாம்'' என்று ரத்தம் தெறிக்கப் பேசி நிறுத்தினாள். 'என் அமைதியை உத்தேசிச்சு, ஒரு புத்தம் புதுசான சூழ்நிலையை உண்டு பண்ண நினைச்சு புதுசாகவே சமையல்காரியையும், ஆயாவையும், நர்ஸையும் வேலைக்கு அமர்த்திக்கினேன்; அதனாலேதான், என் செல்வாக்குக் கொடிக்கட்டிப் பறக்குதாக்கும்!' ஆணவமாக, தனக்குத்தானே புன்னகை செய்து கொண்டாள்.

வீட்டுத் தரகர் வந்தார்; போனார்.

ஒரு வாரத்துக்குப் படிந்து, திகைந்து வந்துவிட்டிருக்கும் கீழ ராஜவீதி பங்களாவை தை மாதம் வாங்கிவிடலாம்!

மெல்லிய மின்காற்று, மென்மையாகவே தவழ்ந்து கொண்டிருந்தது.

வந்த எக்ஸ்பிரஸ் தந்தியை ஓர் அலட்சியத்தோடு வாங்கி உரிய இடத்தில் திணித்தாள் ரேகா. பதுங்கிக் கிடந்த செய்தித்தாளில் இடம் கண்டிருந்த நெருக்கடிக் கால விசாரணைகள் என்ற வாசகத்தில் காணப்பட்ட 'விசாரணைகள்' என்ற சொல் அவளை என்னவோ செய்தது. 'நான் மிஸ் ரேகா!'—சங்கிலியின் டாலர் ஏன் அப்படிப் பெருமூச்செரிய வேண்டும்?

காலம் ஒரு புள்ளிமான்.

ரேகா டாக்டரும் ஒரு புள்ளிமான்தானே?

பகல் பன்னிரண்டு மணிக்குத்தான் அவள் அந்த அவசரத் தந்தியை பிரித்தாள்—என்னவோ ஊகத்தோடு, ஊக்கத்தோடு.

'விளம்பரம் கண்டேன்; ஞாயிறு மாலை 'இன்டர்வ்யூ'வின் போது சந்திப்பேன்!' என்கிற செய்தியின் அடியில், "எஸ். பி. சிதம்பரம், ஐ. ஓ பி." என்ற பெயர் அறிவிப்பின் குறிப்பைக் கண்டாள். இனம் புரிந்தும் புரியாமலும் ஆட்டிப் படைத்த தவிப்புணர்வை அவளுக்குச் சமாளிக்கத் தெரியும். 'ஓ...ஐ...ஸி!' அரிமளம் தம்பதி காலையில் நினைவு கூர்ந்த மிஸ்டர் சிதம்பரம்தான் இவர்!— நினைவூட்டிக் கொண்டதுதான் தாமதம்; தாமதமின்றி ஏனோ வேர்த்துக் கொட்டியது.

நோய்க்கு விதிமுறை இருக்கக் கூடும்; ஆனால், விடுமுறை கிடையாது.

ஞாயிற்றுக் கிழமைப் பொழுதில் சரிபாதி கழிந்த மாதிரிதான்.

அந்த ஓர் அந்திச் சம்பவத்தை மனப்பாம்பு சட்டை உரித்துக் கொண்டிருந்தது.

நர்ஸ் சாந்தி வந்து, "அம்மா 'அலம்பிக் ரெப்' உங்களை இன்னிக்குச் சாயந்திரம் சந்திக்க முடியுமான்னு கேட்கிறார்" என்றாள்.

"ஊஹூம்; முடியாதின்னு சொல்லிவிடு" என்றாள் லேடி டாக்டர்.

திடீரென்று அலறல் சத்தம் முழங்கிற்று.

"புருஷனை டைவர்ஸ் செஞ்சிட்ட அந்த பெண்டல் பேஷண்டோட அலறல்தாங்க அது!"—நர்ஸ் கண்ணகியின் வியாக்கியானம்

"ஓஹோ!" பிரக்ஞையோடு பெருக்கெடுத்தது வேர்வையே தான்!

'நியூட்டரின்' மிட்டாய் சுவைக்கிறது.

தனி அறை.

பிற்பகல் மணி ஒன்று இருபத்தி மூன்று.

பட்டு மெத்தையில் சல்லாபமாகச் சாய்ந்திருக்கிறாள் ரேகா.

கடிதங்கள், புகைப்படங்கள் சகிதமாகப் புரள்கின்றன. புரண்டு கொடுக்கின்றன.

ரேகாவுக்கென்று அப்படி ஒரு சிரிப்பா என்ன?

டிங் — டாங்!...

பல்வேறு வகையான அந்த நிழல் உருவங்களிலே நிழலாடிய பூஞ்சிரிப்பின் வகைகளை அவள் ஒரு வேளை இனம் காண முயன்றிருப்பாளோ? ஒரு தவிப்பு, ஓர் ஏக்கம், ஒரு நெருடல், ஓர் உறுத்தல்— அவள் இதயத்தின் உள்ளேயும் முக்காடிட்ட அந்த ரங்கங்கள் நிர்வாணமாகி, நிர்வாண நிலை பெற முயன்று பின், அவை நிதர்சனங்களாகவும் பளிச்சிட்டுத் தெறித்தன. ஏதோ ஓர் ஆணழகன் படம், இதுதான் சமயமென்று அவளது எம்பித் தணிந்த இளம் மார்பகத்தை முத்தமிட்டாற்போலப் புரண்டு விழுந்தது. அவள் கொதிப்படைய மாட்டாளா?— ரேகாவா, கொக்கா?—

கை தொட்டு எடுத்து, அதைச் சேரவேண்டிய இடத்தில் சேர்த்தாள். மேனிக் கிளர்ச்சி இப்போது அடங்கியிருக்க வேண்டும். கூடத்து சுவர்களிலே கூடி வந்த நினைவுகளாக புகைப்படங்கள் சில புகை படராமல் பள பளவென்று காட்சியளித்த கோலம் அவள் ரசனைக்கு இதமாக அமைந்தது. படங்களைப் பதட்டம் மூள ஒவ்வொன்றாகப் பார்வையிட்டாள்.

சோதிப்பு முடிந்தது. நல்ல மூச்சு விளைந்தது. ஒவ்வொன்றிலும் அவள்தான் உயர்வாகவும், எடுப்பாகவும், தூக்கலாகவும் தெரிந்தாள். மாரகச்சேலை சரியாகி விட்டது இப்போது. சிரிப்பதற்காக இதழ்களை விலக்கிய வேளையில் சிரிப்பொலி கேட்டது. சுற்றிச் சூழ நோக்கினாள். யாரையும் காணவில்லை. பின், சிரித்தது யாராம்?

உள்ளத்தை உள்ள படியோ என்னவோ செய்கிறது.

மெட்டியோசை ஆயாவுக்குச் சொந்தம்.

"மணி ரெண்டு அடிக்கப் போகுதுங்கம்மா; இன்னமுமா பசியெடுக்கல்லீங்க? ம்...இன்னிக்குப் பசிக்காது தாங்க; கொஞ்ச நாள் கழிஞ்சு, உங்களுக்கும் ஒரு வீட்டுக்கார ஐயா வந்திட்டா, அப்புறம் ஐயா பேச்சுக்குக் கட்டுப்பட்டு, உங்களுக்கும் பசிக்க ஆரம்பிச்சிடும்"

பேசியது நீதியா, தருமமா? விதியா?...

"ஆயா!" கோபாவேசகமாகப் புறப்பட்ட விளிப்பு எப்படியோ அடங்கியது. "சரி, சரி, சாப்பாட்டுக்கு ரெடிபண்ணு" என்று ஆணைபறப்பினாள். அன்று பட்டணத்தைத் துறந்துபோது, அந்தச் சூழல் அமைப்புக்கான பரிவாரங்களையும் ஒன்று சேர்த்து துறந்து வந்தது எவ்வளவோ புத்திசாலித்தனம்தான்! அவள் சமர்த்தும் கெட்டியும் யாருக்கு வரும்?

பணி உடைகள் கொடி மின்னலாகக் கொடியில் பளபளத்தன.

சோற்றைப் பிசைந்தாள் ரேகா. எதையோ நினைக்க விழைந்தாள் ஆனால், எதுவோ நினைவில் வீழ்ந்தது. மனப்புரவியின் லகானை வக்கிரமான

வெறியுடன், மூர்த்தண்யமான மிடுக்குடன் கட்டிப் பிடித்துத்தன் போக்கிற்கு இழுத்துக் கொண்டாள். வாகை மணம் சிதற, நிலைக் கண்ணாடிக்கு முன்னே நின்றாள். பொறி தட்டினமாதிரி, பொறி கலங்கி விட்டாள். நரை முடி எங்கே வந்தது. ஏன் வந்தது? துளி சாம்பார், முட்டை ஆம்லெட், கட்டித்தயிர்— முடிந்தது சாப்பாடு.

'எம். எம். ஃபோம்' சோபாவுக்குத் தாவின அந்தப் புகைப்படங்கள்!

எத்தனை விதமான படங்கள்!

எத்தனை ரகமான வாழ்க்கைக் குறிப்புக்கள்!

ஆண்மைத் தனத்தில் பெண்மையின் சாயல் நிழலாடிய பெரும் பகுதிக் குறிப்புக்களை நான்கு சுவர்களுக்குள்ளாக நின்று மனம் திறந்தும் வாய் திறந்தும் படித்த போது, அவள் பெண்மையில் ஆண்மை நிறக்க—சிறக்கச்சிரிப்பைக்கலக்கலானாள். அவள் ரேகா அல்லவா? "மணமகன் தேவை!" என்று அன்று கொடுத்திருந்த பத்திரிகை விளம்பரத் திற்குப் பதில் சொல்வன போன்று, இன்று வரை வந்து சேர்ந்திருந்த புகைப்படங்கள் மற்றும் குறிப்புக்களுக்கு முன்னே அவள் ஒரு விடுகதையாக விளங்க எண்ணித்தான் அவள் மறுபடியும் சிரிக்கின் றாளா?—'இன்றைக்கு மாலை ஐந்து மணிக்கு நான் என்னுடைய எதிர்காலத் துணைவரை 'செலக்ட்' செய்து கொள்ளப் போகிறேன்!'

'க்ளாக்ஸோ' பிஸ்கட் தேடி வந்தது, ரேகாவுக்கு

ஆகவே, அது ஓடிவந்தது.

பிஸ்கட் சுவைதான். போதையூட்டும் அரைப் புன்னகை இதழ் வளையங்களை முழுமையாக

வளைத்தது. நினைவுகள் வளைய வில்லை. தொடாந்தன; தொடர் சேர்த்தன; ஆமாம். எல்லாவகையிலும் எனக்குப் பிடித்தமானவரை — எனக்குப் பொருத்தமானவரை—என் கை ஓங்கியிருப்பதை ஆதரிப்பவரையே என்னால் தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியும். அது என் உரிமை. என் உரிமையின் விதியுங்கூடத்தான்! என் சுதந்திர வேட்கையை —இந்த விடுதலை மைனாவின் இதயத்தை நாளும் பொழுதும் மதிக்கத் தெரிந்து, என் சொல்லுக்கு கட்டுப்பட்டு வாழ்க்கையை நடத்தத் தெரிந்த ஒரு நல்ல மனிதர்தான் எனக்குத் துணை நிற்கவும் இயலும்! ஏன் தெரியுமா? நான் ரேகா!—என்னுடைய இந்த நவீன சுயம்வரத்திட்டம் ஊர் உலகத்துக்குப் புதிய அலை வீச்சின் அதிசயத்தைப் புதிய பாணியில் விளைவிக்கலாம். ஆனாலும், சமுதாயம் என்னை எந்த விதத்திலே கட்டுப்படுத்த முடியும்? வாழ்க்கை எனக்குத் தானே?—எனக்காகத் தானே? நான் பொறுக்கியெடுக்கப் போகும் கணவரும் எனக்கேதானே?... பெருமூச்சு சாரைப்பாம்பாக நழுவியது நெஞ்சில் நெருஞ்சி முள் எப்படித் தொலைக்கிறதோ?

கொட்டாவி பிரிகிறது.

'மணமகன் தேவை வரிசையில் டாக்டர்' தொழிலதிபர், படாதிபதி, கலைஞர், எஞ்ஜினியர், டாக்ஸி டிரைவர் என்று அணிவகுத்து நின்ற காகிதக் கட்டின் மேலே செருகப்பட்டிருந்த குறிப்புக்களில், டாக்ஸி டிரைவர் நிராகரிக்கப்பட்டிருந்தான்! எஸ். பி. சிதம்பரத்தின் அவசரத் தந்தியில் கோடிட்டிருந்த ஆச்சரியக்குறி இப்போது கேள்விக் குறியாகக் கண் சிமிட்டியது. சிதம்பரத்துக்குக் கல்யாணம் ஆகிவிட்டதே? .. ஒருவேளை, அம்மி மிதித்து அருந்ததி பார்த்து கட்டின பெண்டாட்டியை ரத்துச் செய்து விலக்கி

வைத்துவிட்டு...? 'நான் கொடுத்திருந்த விதி முறையை அனுசரிச்சு, மிஸ்டர் சிதம்பரம் படம், குறிப்பு ஒண்ணையும் அனுப்பக் காணோமே? ..''

இரண்டிலிருந்து மூன்றுவரை மிஸ் ரேகாவுக்கு ஓய்வு வேளை!— ஜாக்கிரதை!— ஓய்வுக்கூடத்தின் வெளியே 'நோ அட்மிஸன்' பலகை தொங்கிக் கொண்டிருக்கிறது!

'ஸ்பிரிங் கட்டில்' ஹாயாகவும் சல்லாபமாகவும் ஏறி இறங்கி அசைந்தாடுகிறது.

ரேகா துயில் கலைந்தாள். கலைந்து கிடந்த மாரகச்சேலை செயற்கைக் காற்றில் இயற்கையாக அலைந்து கிடந்தது.

'பாரி மிட்டாய்!' பலேஜோர்!...ரசித்தாள் ரேகா. ரசனைக்கேற்ற சகல விதமான விதிகளுக்கேற்பவே ரசித்தாள்; மாறுதலை விரும்புகின்ற பண்புடன் ரசித்தாள். ஐ வாண்ட் ஏ சேஞ்ச் இன் எனிதிங்-எவரி திங்!'—புன்னகையிலும் ஒரு மாற்றம் நெளியாமல் இல்லைதான்!

காற்றில் சலசலப்புச் சத்தம் கேட்டது.

அண்டினாள்; பார்க்க மறந்துபோன புத்தம் புதிய பொங்கல் மலர் அது; புரட்டினாள். திடுக் கிட்டாள். கற்புக்கரசிகளின் வண்ணச் சித்திரங் களின் தொகுப்பு, ஏடு புரண்டது. ரேகா ஏன் அப்படிச் சிலையாக மலைத்து விட்டாள்? திரும்பவும் நெருஞ்சிமுள் தைத்திருக்கலாமோ? — மோகினிச் சிலையாக நின்றவள், எதையோ நினைக்க முனைந்து, அவளையும் அறியாமல் அல்லது அவளையும்மீறி, வேறு ஏதோவொரு நினைவு ஜல்லிக்கட்டுக் காளை யாகப் பாய்ச்சல்காட்ட, இப்படிப் பட்ட விநோத

மான சலனக் கட்டத்திற்கு சில பல வினாடிகளை நிவேதனம்செய்து, பிறகு, சுயப் பிரக்ஞையை வலுக் கட்டாயமாக மீட்டுக்கொண்டவளாக, கோலமாதர் விழிகளை மூடி மூடித் திறந்தாள் ரேகா. பூவிரல்கள் இமை விளிம்புகளில் பூநாகங்களாக நெளிந்தன. சுடுகிறதே?...

கோடைத் தூற்றலென இரண்டொரு சுடுநீர் முத்தங்கள் சிதறின. அந்த ஈரத்தின் சிலிர்ப்பு அவளைத் 'திக்பிரமை' கொள்ளச் செய்திருக்கக் கூடும். 'என் கண்கள் அழுதனவோ?' சூறைக் காற்றில் அலைக்கழிந்து நிற்கும் அகல்விளக்கின் காலண்டர் படம் அவள்முன் ஆலவட்டம் சுற்றத்தலைப் பட்டது. 'ஊஹூம்... நான் ஏன் அழப்போகிறேன்? நான் வெறும் ரேகாவா, என்ன? நான் மிஸ் ரேகா வாக்கும்...!' நிர்த்தாட்சண்யமான துணிச்சலுடன், கூடத்தின் மேலண்டைப் பகுதியை அடைந்தாள். புதிய காட்ரெஜ் பீரோவைத் திறந்து உட்புறமிருந்த ரகசிய இழுப்பறையைப் பதட்டத்துடன் இழுத்தாள். அம்பலத்துக்கு வரநேர்ந்த அந்தரங்கங்கள் நிதர்சனங்களாக நேருக்கு நேர் காட்சியளிப்பன போன்று அந்த ஆல்பத்தின் நிழற் படங்கள் நிழலாடின. அவளுடைய தளிர்க்கரங்கள் நடுங்கின. நெஞ்சைத் தொட்டு அழுத்தி விட்டாள். மனம் அடித்துக் கொண்டிருக்கமோ? - மனமா? மனச்சாட்சியா?- கழுத்தை ஏக்கத்தோடு, தவிப்போடு, தாபத்தோடு, தாகத்தோடு தடவிக் கொண்டாள். வெறும் சங்கிலி மாத்திரமே தரிசனம் தந்தது. 'நான் வெறும் ரேகா இல்லை; மிஸ் ரேகாவாக்கும்!'

பதறிய நிலையிலே, ஆல்பத்தை அப்படியே போட்டு விட்டு, வேறு எதையோ தேடினாள் ரேகா. ஒட்டப்படாமல் இருந்த ஓர் உறையின் உள்ளே

உறங்கிக் கிடந்த அந்தக் கடிதத்தை-கையொப்பம் செய்யப்படாமல் இருந்த அக்கடிதத்தை நீர்ப்படலத்தின் ஊடாக, ஊடும் பாசமாகப் பார்வையிட்டாள். "ஓ...மை...மை...!" தொடர்ந்த சொற்களுக்குத் தொடர் சேர்க்க மனம் இழந்தவளாக கருந்தேள் கொட்டி விட்ட பாங்கிலே, பாங்காக நடுங்கிக் கொண்டே அந்தக் கடிதத்தையும் அந்தப் புகைப் படத் தொகுப்பையும் நூதனமான வெறி மூள அள்ளித் திணித்து விட்டு, ரகசிய இழுப்பறையை ரகசியமாகவே மூடிப் பூட்டி விட்டாள்.

அமிர்தாஞ்சனம் மணக்கும், மண்டைக் கனத்தை அழுத்த, ரேடியோக்ராமை அழுத்தினாள் ரேகா.

"விளக்கேற்றி வைக்கிறேன்;
விடிய விடிய எரியட்டும்...!"

ரேகா 'ஷவர்பாத்' எடுத்துக் கொண்டிருக்கிறாள்....எஸ். எஸ்., பிறந்த மேனியாகவே தான். உஷார்!—தொடர்ந்த கதை இங்கே முடிந்து விடும்! பராக்...!

'தம்மரே தம் புறப்பட்டது.

'ஒமேகா' பூஞ்சிட்டு ஒய்யாரம் சேர்த்து ஐந்து முறை கூவி, இரண்டொரு வினாடிகள் ஆகியிருந்தன!

"அ...ம்...மா! அம்மா!"

தட்டினால் திறக்கப்படும் என்பது பச்சைத்தனமான பொய்.

"அம்மா!...அம்...மா...!"

"என்ன?" என்று உள்ளேயிருந்து ஆணைக்குரலை வெளியே ஏவிவிட்டாள். ஆனால், அது ஏவுகணையாக இருக்க முடியாது!

"மணி ஐந்து ஆயிடுச்சுங்க அம்மா"

"தெரியும் எனக்கு, என் கையிலே 'வாட்ச்' இருக்கு. நீ போய் அங்கே 'வாட்ச்' பண்ணிக்கினு இரு!

இன்டர்வியூவுக்கு யார் யாரோ வந்திருக்காங்கம்மா!"

"வரட்டும், வரட்டும். நீ போ, சாந்தி!"

"சாந்தி இல்லேங்க, நான் கண்ணகி!"

"ஓஹோ! இருபதாம் நூற்றாண்டு கண்ணகியோ! சரி, சரி, நீ போகலாம்!"

குளிர் நீர் உள்ளத்தின் உஷ்ணத்திற்குத் தேவை தான்.

"அம்மா... டாக்டரம்மா!"

"நான் ரேகா! யார், கண்ணகியா?"

"சாந்திங்கம்மா, உங்களுக்கு 'ஃபோன் கால்' வந்திருக்குங்கம்மா!"

"யார் பேசறது?"

"யாரோ சிதம்பரமாம், மெட்ராசிலிருந்து வந்திருக்கிறவராம்!"

"என்ன விஷயம்?"

"வந்த விஷயத்தை உங்ககிட்டத்தானேங்க சொல்லுவார்?"

"என்னதான் சொல்றார்?"

"உங்களை மீட் பண்ணனுமாம்?"

"என்ன, என்னை 'மீட்' பண்ணவா?"

"வரட்டுமே! ஓ. கே! நீ இனி போகலாம்!"

அந்தரங்க அறை!

புதுப்புடவை சலசலக்க, கூந்தல் பூக்கள் சிலு சிலுக்க, நெற்றிப்பொட்டு தளதளக்க, புதுமணப் பெண்ணைப் போல வலது காலை முதலிலே எடுத்து வைத்து, பின் அடிமிதித்து, அடி பிரித்தாள் தீர்ப்பு வழங்கப் போகும் நீதிபதி அல்லவா?— 'எஸ் ஆமாம் நான் எனக்கு உகந்தவரை, உரியவரைத் தேர்ந் தெடுத்து, இதோ, தீர்ப்பு வழங்கப் போகிறேன்! மிஸ் ரேகா...இனி மிஸஸ்...? வினாக்குறியுடன் ஆச்சரி யக் குறியாக, அறையைத் தாண்டினாள்,

அப்போது:

கண்ணகி—ஆமாம், நர்ஸ் கண்ணகி ஏக்கமும் கலக்கமும் தழுவ எதிர்ப்பட்டாள்; "அம் மா! உங்க பேட்டிக்காக வந்திருந்த அத்தனை பேரும் இது வரைக்கும் காத்திருந்தாங்க. இண்டர்வியூ ஐந்து மணிக்கென்று குறிப்பிட்டிருந்தும், இன்னமும் நீங்க வரக்காணோமேன்னு பொறுமையோடு தவிச்சுக் கிட்டு இருந்தாங்க. அப்போ யாரோ சிதம்பரமாம்— அந்த ஆள் வந்து, காத்துக்கிடந்தவங்களோட காது களிலே என்னமோ ரகசியம் பேசினாருங்க. என் னவோ 'எச்சில் பழம்...எச்சில் பழம்'னு அடிக்கடி என் காதிலே விழுந்திச்சுங்கம்மா! — உடனேயே, அத்தனை ஆசாமிங்களும் திகைச்சு எழுந்து போயிட் டாங்க, அம்மா!" என்றாள்.

"என்ன எல்லாருமே போயிட்டாங்களா?" என்று கேட்டாள் ரேகா. பாதத்தடியில் சுழன்ற பூமி பிளந்து விட்டதா?

'உண்மைதாங்க; வந்திருந்த ஆட்களெல்லாம் போனதுக்கப்புறம், இப்போ புதுசாய் யாரோ ஒரு

பரதேசி உங்களோட பேட்டிக்காக காத்துக்கிட்டு இருக்காருங்க அம்மா!...என்ன சொல்லியும் அசையாமல் அப்படியே ஹாலிலே உட்கார்ந்திருக்காருங்கம்மா!''

''பெயர் கேட்பதுதானே?''

''கேட்காமல் இருப்பேனுங்களா?...அவர் சொன்னால்தானுங்களே அம்மா?—உங்களைக் கையோடு உடனடியாக வரச்சொல்லி உத்தரவு போட்டிருக்காருங்கம்மா!''

''என்ன?...''

தன்னையும் மீறிய வகையிலே அவள் — ரேகா அலறிவிட்டாள்!— அவள் கால் பாவி நிற்பது சென்னைப் பட்டணத்தில் அல்லவே? — புதுக்கோட்டையில்தானே? பேய் அடித்த மாதிரி ஆகிவிட்டாளே, பாவம்!...

மிஸ் ரேகா வந்தாள்.

மாப்பிள்ளைத் தேர்வுக்கெனப் பிரத்தியேகமாக அலங்கரிக்கப்பட்டிருந்த கூடத்தில் வட்ட மேஜை மீது வைக்கப்பட்டிருந்த குளிர்ப்பதனப் பானங்கள் அனைத்தும் வைத்தவை வைத்தபடியே காணப்பட்டன.

''வணக்கம்''!!

வணக்கம் சொல்லுவது யாராம்?

உள்ளம் |நடுங்க, உடலும் நடுங்கத் தலையை நிமிர்த்தினாள் ரேகா. பேசும் விழிகள் பேசவில்லை. ஆதலால், அவள் பேச வேண்டியவள் ஆனாள். ''ஆ!... ஓ! நீங்களா?'' கேட்டுக்கொண்டே, பூங்கரங்களைக் குவித்தாள் பூவை.

''ஆமாம், நான்தான்!...'' என்றான் அந்தப் பரதேசி.

துருதுருவென்றிருந்த அவனது கண்கள், அவளை-ரேகாவை எக்காளத்துடன் ஊடுருவிக் கொண்டிருந்தன. "உன்னோட—ஊஹூம், உங்களுடைய காதலுக்கு ஒரு காலத்திலே—முன்னொரு காலத்திலே பாத்திரமாயிருந்த உங்களுடைய மாஜி கணவன் சத்தியசீலன்தான்!"

"உட்காருங்க!"

"நீங்க நின்னுகிட்டிருக்கிங்களே?"

"என் அருமை நண்பர் மிஸ்டர் சிதம்பரம் எனக்குத் தகவல் கொடுக்காமல் இருந்திருந்தால், ஒரு பொன்னான சந்தர்ப்பத்தை அடியேன் இழந்திட்டிருப்பேன்! அந்தப் புண்ணியவானோட தயவினாலே தான் உங்க இண்டர்வியூக்காக பம்பாயில் இருந்து என்னாலே பறந்து வரவும் முடிஞ்சது!" குறும்புத்தனமாய் சிரிக்கின்றன.

அவனது அழகான உதடுகள். 'இளந்தாடியும் மீசையும் காற்'றில் அலைகின்றன.

"என்ன சாப்பிடுறீங்க?" என்று பரிவுடன் வினவினாள் ரேகா.

"நான் வந்தது சாப்பிடவல்ல; உங்களோட மணமகன் தேவை பேட்டிக்காக்கும்!"

மீண்டும் நல்ல பூமியின் பயங்கரமான மௌனம் நிலவியது.

"ஐயோ எப்படி ஆயிட்டீங்க நீங்க?" செருமினாள் ரேகா.

"நான் எப்படியும் ஆயிடுவேன்! ஊம், நேரமாகிறது. இன்டர்வியூவைத் தொடங்கலாமா?" என்று தனக்கே உரித்தான பழைய ஆணவச் செருக்குடன்,

வெகு அமர்த்தலான தொனியெடுத்துக் கேட்டான் மிஸ்டர் சத்தியசீலன். ரேகாவின் கண்கள் அழுவதைக் காணக்காணத்தான் அவனுடைய கண்கள் அப்படி விதியாகச் சிரிக்கின்றது போலும்!

"அத்...தான்!" என்று ஓலமிட்டாள் ரேகா. நான்கு சுவர்களுக்குள்ளே உருவாகி, உருப்பெற்றிருந்த அந்தத் தனிமையில் அவனுக்கும் அவளுக்கும் மட்டிலுமே சொந்தபந்தம் கொண்டிருந்த விசித்திரமான அந்தத் தனிமையில் அவள் ஓலம் ஒலித்தது; எதிரொலித்தது.

"நீங்க என் பந்தத்தை ரத்துச் செய்த அந்த ஒரு மாலை நேரத்திலேயே உன் அத்தான் பட்டணத்திலே செத்து மடிஞ்சு போயிட்டான்! உடலாலும் உள்ளத்தாலும் என் மூலமாக உன்னுள்ளே ஏற்பட்ட தொடர்பைக் கேவலம் ஒரு சின்ன வெள்ளை மாத்திரையைக் கொண்டு நீ கட்டறுத்துக்கிட்ட பின்னாலே, என்னை உன் அத்தான்னு சொந்தம் கொண்டாடிப் பந்தமும் கொண்டாட உனக்கே 'ஷேம்' ஆகத் தோணலையா? நான் இப்பொது சத்தியசீலன்—வெறும் பரதேசி சத்தியசீலன்! பசிக்குப் பதில் சொல்லி வயிற்றை வளர்க்கப் பட்டணத்தைத் துறந்து பம்பாய்க்கு ஓடிப்போன பரதேசி நான்!

இன்றைக்கு என்கை தாழ்ந்துவிட்ட போதிலும், என்னோட அந்தச் செருக்கத்தனம் இம்மியும் குறைந்து விடல்லே, என்கிறதை மட்டும் நீ...ஸாரி... நீங்க மறந்திடக்கூடாது!...ஆல்ரைட்! நேரம் ஆகுது! —போட்டியைத் தொடங்கலாம். நீங்க கொடுத்திருந்த 'மணமகன் தேவை' விளம்பரத்தின் பேரிலே உங்க இன்டர்வியூவுக்காகக் காத்திருக்கும் ஒரு அந்நியமான காண்டிடேட் நான்...!"

சந்தியசீலன் பேச்சை நிறுத்தினான்.

அவன் பேச்சு தன்னுடைய மூச்சை நிறுத்திவிட்ட திணறலுடன், அவள்-ரேகா மௌனப் பிண்டமாக கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள்.

அவன் விதிக்கே மண் காட்டி விடுபவன் போன்று வாய்விட்டும் மனம்விட்டும் சிரிக்கத் தொடங்கினான்.

மிகப்பயங்கரமான அந்தச் சிரிப்பின் மிகக் கொடுமையான தண்டனையைக் இனிமேலும் தாங்கிக் கொள்ளத் தனக்கு சக்தி இல்லை என்பதை உணர்ந்தவளாக, அவள் தலைவிரிகோலமாக உணர்ச்சிவசப்பட்ட நிலையில் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து சத்தியசீலனின் அழகான பரந்த மார்பை இலக்கு வைத்து, கடைசியில் அவன் காலடியில் சரண் அடைந்தாள் ரேகா! சத்தியசீலனின் பேய்ச்சிரிப்பு அவளை உயிர்க் கழுவில் ஊசலாடச் செய்திருக்க வேண்டும். கையெடுத்துக் கும்பிட்டாள்!

ஐயையோ; அத்தான்! இனியும் அப்படிச் சிரிக்காதீங்க, அத்தான்! நீங்க சொன்னமாதிரி, தெய்வம்னு ஒரு சக்தி இருக்கத்தான் இருக்குதுங்க. அதனாலே தான், நான் புதிதாகப் பிறப்பெடுக்கவும் வாய்ச்சிருக்குதுங்க! அத்தான், நான் எனக்கு நானே ஒரு சுயப்பரிசோதனை வச்சுக்கிட்டேன். என்னுடைய ரத்தத்திலே ஊறிப்போன உயர்வு மனப்பான்மைக்கு உயிர்ப்பாகத் தூண்டிய என் மனசாட்சியின் விளைவு தான் இந்த மணமகன் தேவை விளையாட்டு. ஆனால், என் நெஞ்சிலே அன்றைக்கு நீங்க ஆக்கிரமிச்சிருந்த அதே இடத்திலே இன்றைக்கும் நீங்களே தான் ஆட்சி செலுத்திக்கிட்டு இருக்கீங்க! நீங்க நம்ப மாட்டீங்க. உங்களுடைய நிலையான விலாசம் சரி

வரத் தெரியாததாலே, என்றைக்கோ உங்களுக்கு எழுதிவச்சிருந்த மன்னிப்புக் கடிதம் இன்றுவரை என் வசத்திலேயே முடங்கிக் கிடக்கவும் நேர்ந்திடுச்சுங்க! 'மணமகன் தேவை' பேட்டிக்கு வந்திருந்த அத்தனை பேர்களும் என் நிலை அறிஞ்சு பயந்தோடிய சம்பவம் என் மனசாட்சியைத் தோற்கடிச்சிடுச்சு! இதன் மூலம் என் மனம் வெற்றியடைஞ்ச உண்மை—சத்தியம் உங்களுக்குப் புரியக்கூடும்னு நம்புறேன். வெற்றி அடைஞ்சிட்ட என் மனம் உங்களுக்குச் சொந்தமானது இல்லீங்களா?— ஆனதாலே, என்னை நீங்க ரட்சிக்கத்தான் வேணும். பாவியை ரட்சிக்க ஏசுபிரான் வருவராமே? .."

மூச்சு இரைத்தது.

சத்தியசீலனின் பாதங்களில், அவனுக்காக எழுதப்பட்டிருந்த ரேகாவின் கடிதம் காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்தது.

சத்தியசீலன் மௌனத்தைத் துண்டாடிச் சிரிக்கத் தொடங்கினான், மீண்டும்... "ஏசுநாதர் தெய்வம்! .."

"நீங்களும்தான்!" விம்மல் வெடித்தது. எனக்குப் பூரணத்துவம் அளித்த உங்களை நிராகரித்த அந்த நிமிஷத்திலேயே என்னை உங்க ரிவால்வராலே சுட்டுப் பொசுக்காமல், என்னைத்துறந்து,பறந்தீங்க! ஆனால், நான் உங்களைத் துறக்க முடியலீங்களே "...அத்தான்...அத்தான்!" ரேகா அலறினாள். கதறினாள்!

என்னவோ ஓர் அரவம் கேட்கிறது.

புதுவெள்ளம் நுங்கும் நுரையுமாகச் சுழித்திட, கோலவிழிகளை மெல்ல உயர்த்துகிறாள் ரேகா, காண்பது கனவல்லவே?...

மேஜையின் ஒளிப்பரப்பிலே அசல் நூறு ரூபாய் நோட்டுக்கள் கொத்துக் கொத்தாகச் சிந்திச்சிதறி வீழ்கின்றன!

அங்கே இப்போது 'ரிவால்வர்' ஒன்றும் காட்சி அளித்தது.

அந்த ரிவால்வரைக் கையில் எடுத்தாள் ரேகா.

படீரென்று வெடிசத்தம் ஒலித்தது.

இப்பொழுதும் கூட, சத்தியசீலன் சிரிப்பை நிறுத்தவில்லை தான்! "ரேகா நீங்க, தமிழச்சி யாச்சே? உங்களோட அழகான உயிரை அத்தனை லகுவிலே குடிச்சிடுமா என்னோட ரிவால்வர்?— பாவம், அதில் இருந்தவை அத்தனையும் போலி ரவைகளாக்கும்!"

தலைமுடியைப் பிய்த்துக் கொண்டாள் ரேகா. "...ஐயையோ . தெய்வமே! என் தெய்வமே!" என்று மண்முட்டி விண்முட்ட, விண்முட்டி மண்முட்டக் கூக்குரலிட்டாள் அவள்!

"ரேகா! நான்யார், தெரியுமா? நான் சத்திய சீலன் விஜயராணியாக்கும்! வருகிறேன் ... குட்பை குட்பை!"

ரேகா பையப் பையச் சுயப்பிரச்சினையை மீட்டுக் கொண்டிருக்கலாம்; பேசும் கண்களை நிமிர்த்தினாள்; அந்தக் கண்களில் இப்போது ஒரு சொட்டுக் கண்ணீர்கூட இல்லை! தொண்டையை கனைத்துக் கொண்டாள்; மாரகச்சேலையினைச் சீராக்கியவளாக, கம்பீரமான மிடுக்குடன் தலையை உயர்த்தி விட்டாள். "மிஸ்டர் சத்தியசீலன், அப்படியே நில்லுங்க! நான் யாரென்று தெரியுங்களா? நான் மிஸஸ் ரேகாசத்தியசீலனாக்கும்! ஆல்ரைட்! இனி நீங்க உங்க போலி வேஷத்தைக் கலைச்சிட்டு உங்க ரிவால்வரோடும் பணத்தோடும் போகலாம்..."

தயவுசெய்து யாரும் சத்தம் போடக்கூடாது!...

டாக்டர் ரேகா எம்,பி.பி.எஸ். உள்ளே இருக்கிறாள்! ..

*

# ஏரோப்ளேன் காளை

## 1. காளையைக் காணோம்!

குண்டிக் கங்காணி காத்தமுத்துச் சேர்வைகாரர் வீடு திமிலோகப்பட்டது. தண்டோரா சத்தம் கேட்ட சடுதியில், கிராமப்புறத்தில் கூடும் ஜனங்கள் போல,கும்பல் சேர்ந்தது, தப்புச்சத்தம் ஏதும்மூச்சுப் பறியவில்லை. என்றாலும், எப்படியோ அந்தத் தாக்கல் ஊர் பூராவும் பரவிவிட்டது, காட்டுத் தீயாக!

காலத்தின் முத்திரைப்பதிவு தாங்கிய சேர்வைக் காரரின் முகத்திரையிலே தீயின் தகிப்புப் பொறிந் தது. வேதனைச் சறுக்கலில் நீந்திய விழிகள் அடிக்கடி வெஞ்சினத்தையும் உமிழத் தவறவில்லை. நரை முடி இழைகளை 'வலதுகை நெருடி விட்டது. கழுத்துக் கெவுடு' இடதுகை மோதிர விரலுடன் ஒட்டுதல் கொண்டது. இடித்துவைத்த புளிக்கட்டுப்போல அப்படியே திண்ணை முந்தலில் வீற்றிருந்தார் அவர், 'அட்டணைக்கால்' போட்டபடி!

"நான் சோமய்யாவுங்க!"

குரல் கொடுத்தவர் சற்றுப் பொறுத்து லேசாகக் கனைத்துக் காட்டினார்.

சேர்வைக்காரர் விழிப்புப் பெற்றார். "ஓ, நீயா?"

"ஆமாமுங்க, சேதி காதிலே பட்டுச்சுங்க. அந் தடியுமேதானுங்க வெரசா பறந்து வாரேனுங்க!"

"ஆமா, எனக்கே ஏதொண்ணும் மட்டுப்படலே. சிங்கத்தோட குகைக்குள்ளாற புகுந்து அது கண்ணு ரெண்டிலவும் ஒழுங்கை மண்ணைத் தூவிப்விட்டாப் பிலேதான் காரியம் நடந்திருக்குது. அடடே, வாங்க

கானா.. ருனா! .. குந்துங்க. டேலே மூக்கா! உள்ளாற எங்க செவந்திப்பொண்ணு இருக்கும். அதுகிட்டச் சொல்லி ஒரு கை களிப்பாக்கும், ஒரு கைப்புடி வெத்தலையும் மரவையிலே அள்ளிப் போட்டுக்கொண்டாந்து வை. ஆளுப்பேருங்க வருவாங்க! ம்.. யாரு, மூத்த மச்சாவியுங்களா?... பைய குனிஞ்சு வாங்க!''

சரமாரியாக ஆட்கள் வந்துகொண்டிருந்தனர். பக்கவாட்டில் கிழக்கிலும் மேற்கிலுமாக இருந்த திண்ணைகள் கொள்ளவில்லை. ஆறுகரைத்தலைக் கட்டுக்காரர்கள், பட்டாமணியக்காரர், பள்ளிக்கூட வாத்தியார், செட்டித்தெரு புள்ளிகள்—இப்படிப் பலரும் காட்சியளித்துக் கொண்டிருந்தார்கள். பணக்காரரைச் சுற்றிப் பத்துபேர் என்று ஒரு வழக்கு இல்லையா?

'முடிஞ்ச சங்கதியா என்னதான் அப்பாலே செய்யப்போறீங்க, கங்காணி அண்ணாச்சி?'' — குடியிருப்பின் குலதெய்வமான அங்காளம்மையின் 'சாமியாடி' அம்பலம் வினா விடுத்தார்.

வாய் எச்சிலை குவித்துப் பொருந்திய இடது கை விரல்களுக்கிடையே வாசலுக்குச் செலுத்திவிட்டு தோளில் சுற்றிக்கிடந்த உருமாலையை எடுத்து உதறியவாறு, திண்ணைச் சாய்மானத்தில் ஒருக்களித்துச் சாய்ந்து கொண்டார் காத்த முத்துக் கங்காணி; பிறகு, அட்டகாசமாகச் சிரிப்பை உமிழ்ந்தார். தங்கப் பற்கள் அவரது வளப்பத்துக்கு ஆதாரமா? அந்தச் சிரிப்பு, அவர் எடுத்த காரியம் யாவிலும் வெற்றி என்பதற்கு அறிகுறியா?

''ஒரு குறிப்புச் சொல்லிப்பிடுறேன். உங்க சகலத்தனை பேருங்களுக்கும்!'' என்று வாய் மொழிந்தார் சேர்வைக்காரர்.

''கேக்கிறோமுங்க!''— ஏகோபித்த தொனியில் பலதரப்பட்ட உள்ளங்கள் குரல் தரலாயின.

''என்னைப்பத்தி ஒங்க அம்புட்டுப் பேருக்கும் அத்துபடி உண்டல்லவா?''

''மறுகா?...'' என்று அனுசரணை பேசினார் ஆவுடைத்தேவர். கங்காணிக்காரர் எள் 'என்னும் முன்னே இவர் எண்ணெய் ஆக நிற்பார்; சூரர்!

''அக்கரைச்சீமையிலே மூணு கணக்குக்குக் கொண்டுவித்தவுகளாச்சுங்களே முதலாளி?... இப்ப தான், என்ன எச்சுப்போச்சு?...காவன்னா மூனா கங்காணி இண்ணாக்க, எட்டு கண்ணு விட்டெரியா தாங்காட்டி? .. இருப்புப் பொட்டகத்திலேயிருக்கிற காசு பணத்தைக் கொட்டி அளந்தாக்கூட, நாலு தலை மொறைக்குக் காணுமுங்களே?...''

இன்னும் ஏதோ சொல்ல வாயெடுத்தான் கீழத் தெரு சுப்பன்.

அதற்குள் இடைவெட்டினார் கங்காணி. ''காசு பணத்தைக் கேட்டிருந்தா, தெரு நாய்க்கு எலும்பு வீசறத்துக்கு ஏத்தபடி, நலியாமக் கொள்ளாம எடுத்து வீசிப் போட்டிருப்பேனே?... ஆனா, ஒரு பயல் என் வீட்டிலே மிதிச்சு, எம்மண்ணைத் தூசியா மதிச்சு,இப்படி ஒரு ஏடாகூடமான தப்புத் தண்டா வைச் செஞ்சிருக்கிறதை நினைச்சாகத்தான், நெஞ்சு கொதிக்குது; கோழி கூப்பிட வெள்ளனவே ஏந்தி ருச்சேன். வளமையா பார்க்கிறது கணக்கிலே மாட்டுக் கொட்டியை ஒருமூச்சுபோய்ப் பார்த்தேன். எம்மூச்சே, அசந்து போயிட்டதாட்டம் ஆகிபுடுச்சு, ஏரோப்பிளேன் காளைன்னு ஊர் மூச்சூடும் பட்டப் பேர் வச்சுக் கூப்பிட்ட அந்தக்காளையை எந்தக் களவாணிப்பயலோ காடுமாத்திப் பூட்டான்!...வரட்

டும், வரட்டும் ... வலையைத் தேடிக்கினே எட்டுக் கால் பூச்சி ஏதோ ஒண்ணு விழுகப் போவுது. இந்த காத்த முத்து சேதி தெரியாது போல இருக்கு! மேனி யிலே கடைசிச் சொட்டு ரத்தம் உள்ள மட்டும், பொட்டகத்திலே கடைசிச்சல்லி இருக்கிற வரைக்கும் சும்மா குந்துவேனோ? .... இல்ல, கேக்கிறேன், ஈரல்லே பித்தா, எலும்பிலே பித்தா? ...... மரு வாதையா ரவைக்குப் பொழுது பட்டியும் மாட்டைக் கொண்டாந்து கட்டினான்னா, மாடு திருடின போக்கணங் கெட்டபயல் தப்பிச்சான்! இல்லாட்டி அவனை தெற்கு வடக்கா இழுத்தடிச்சு கம்பி எண்ணவச்சு வேடிக்கை காட்டாம இருக்கிறது இந்த மீசைக்கார ஆம்பிள்ளை தானாக்கும்?...

மீசைமேல் கையைப்போட்டு 'உருக்கு' வைத்துப் பேசினார் பெரியவர்.

சகட்டுமேனிக்கு எல்லோருடைய விதவிதமான தலைகளும் 'ஆமாம்' என்கிற பாவனையில் ஆடி அசைந்தன.

வெற்றிலைத் தட்டு வந்தது.

சேர்வைக்காரரின் கண்சிவப்பு மற்றவர்களின் இதழ்களிலே குடியிருக்கத் தலைப்பட்டது.

மார்கழிப் பனிப்படலம் மறைந்து, உதயத்தின் கதிர்கள் சூடு ஏறத்தொடங்கியதும், "சரி அவுங்க அவுங்க காலங்கார்த்தாலே பசியாறிப்பிரிட்டு வயல் குடிக்காடுகளைக் கவனியுங்க, இன்னைக்கு ராவுப் பொழுதுக்குப் பொறுத்திருந்து பார்த்துப்புட்டு, பொறகாலே நடக்க வேண்டிய காரியம் நடப்புக்கு ஆளுகிட்டச் சொல்லிவிடுறேன்!" என்றார் காத்த முத்துச் சேர் வகாரர்.

வந்தவர்கள் பயணப்படும் வேளையில், ஓட்ட மாக வந்து நின்றான் செல்லய்யா. 'ஜரிகைத்

துப்பட்டா' காற்றில் அலைந்தது. 'மைனர்' சங்கிலி அழகு கூட்டிற்று!

"வங்க மாப்பிள்ளை!" என்று முகமன் கூறினார் அவர்.

"வாங்க மைனர்!" என்று மச்சான் முறை கொண்டவர் ஒருவர் 'கேலி' பண்ணினார்.

"ஆமாங்கறேன்!" என்று பதிலிறுத்த செல்லய்யா, வரவேற்புச் சொன்ன மைத்துனரின் முதுகில் தட்டினார். தூசு பறந்தது. பிறகு, சேர்வைகாரரின் பக்கமாக வந்து உட்கார்ந்தவாறு "நான் இப்பத் தான் எருக்கலக் கோட்டையிலேருந்து வந்து, மாட்டை அவுத்தேன். தாக்கல் எட்டுச்சு, பொட்டு நேரம் காலு தரையிலே தங்குமா? ஓடியாரேன். காளையைத் திருடினவன் வேறே யாருண்ணு மலைக் கிறீங்க மாமா?" என்று சொல்லி பிறகு பேச்சைத் துண்டு முறித்த துரிதத்துடன், சேர்வைகாரரின் காது களைக் 'கடிக்கத் தொடங்கினான் செல்லய்யா.

"ஆமா, மாப்பிள்ளே! அந்த மாடு பிடிக்கிப் பயமவன்தான்! அட்டியில்லே!..."

எனக்குச் சமதையாப் பகை கொண்டிருக்கிற இளவட்டத்தைத்தான் நான் என்னோட மாப்பிள் ளையாக் கொள்ளுவேன். அந்தச் சிங்கத்துக்குத்தான் எம்பிட்டு மகளான மகள் செவ்வந்தியை கண்ணாலம் கட்டிக் குடுப்பேன். சாதக ஏடுகளைப் பார்த்து பொருத்தம் எல்லாம் கூடி வந்தாக்க, பரிசத்துக்கு நான் நட்சத்திரம் குறிச்சு, கண்ணாலம் முடிஞ்ச கையோடவே, என் ஏரோப்பிளேன் காளையை எம் பெண்ணுக்குக் கண்ணுக்குச் சீதனமாக் கொடுத்திரு வேன்!.. எல்லாம் ஆத்தா செஞ்சு வார கடாட்சந் தானாக்கும்!...?

# 2. நேசமச்சான் யார்?

தண்ணீர்க் குடமெடுத்துக் தனி வழியே நடை பயின்று கொண்டிருந்தாள் செவந்தி. அடி வைத்தாள்; வைத்த அடி பெயர்ந்தது; பாதை வளர்ந்தது. அதை யொப்ப, கனவுகளும் வளர்ந்தன. குடியிருப்பினின்றும் ஈசானிய மூலைக்குமடங்கி, குணதிசைக்குத் திரும்பினாள் அவள். காரைச் செடிப்பத்தையின் ஒண்டலில் சுண்டும் பொழுதுவரை நின்றாள். அவளையும் அறியாமல், அவளது மனமெனும் முரசம் சதா ஒலியெழுப்பிக் கொண்டிருந்த தந்தையின் இதயமொழிகள் அவளுடைய நெஞ்சைக் குடைந்து, நினைவைச் சுண்டியிழுத்த வண்ணம் இருந்தன.

ரங்கோன்காரர் கேணி வந்தது.

"வா செவந்தி!"

"அக்காவா? சொகமா?"

"அத்தாச்சிப் பொண்ணா? எப்பைக்கு எங்களுக்கு விருந்துச் சோறு போடப் போறீகளாம்? கண்ணாலத்துக்கு ஊர் வத்திலை பாக்கு எப்ப வைக்கப்போறா கண்ணு எங்க மாமன்காரரு நச்சரிச்சுக்கிட்டே இருக்காரே?"

"ஊம், செவந்தி ராணிக்கு எந்த ராசா வாய்க்கப் போகுதோ? எந்த ஊரு மம்முதனுக்கு முந்தானை போட லவிதம் எழுதிக்கிடக்குதோ, யாருக்குத் துப்பு தெரியுது? .."

"தங்கச்சி வீட்டு அழகுக்கு மாப்பிள்ளையைப் பாக்கு வெத்தலை வச்சா அழைக்கோணும்? தன்னாலே ஓடி வர மாட்டார்களா? என்னா நான் சொல்றது அஞ்சலை?"

"சும்மாயிருங்கடி தேவானை பொன்னாத்தா! தைப்பொங்கல் வச்ச மைக்கா நாளு மூணா நாளு நம்ம செவந்திக்குக் கண்ணாலம் கூடிப்பிடும். நகை நட்டெல்லாம் தான் கைவசம் செஞ்சிருக்குது. காவணம் போட்டு, அய்யாசாமியை அழைச்சாந்து, மணவறையிலே புருஷன்—பொஞ்சாதியைக் குந்தவச்சு 'டும்டும்'னுகொட்டு முழக்கிப் பிட்டா, முடிஞ்சுது கதை! இல்லே, செவந்தி?..."

செவந்தி நாணிக் கண் புதைத்தாள். பேசும் விழிகளிடை பேசாத ரகசியமான நாணம் விளையாடியது அந்த நாணம் அவளது போதைச் செறிவின் எழிலுக்கு ஓர் உரைகல்லானது; ஆகவே, போதையில் போதம் சட்டை உரித்தது.

"அடியே! நீ என்னடி புள்ளே மங்காத்தா! கீழ வீட்டுக்காரி பொன்னாங் கண்ணிக்கீரை ஆக்கிச் சமைச்சாளாம். மேலே வீட்டுக்காரிக்கு நாக்கு ஊறுச்சாம். அந்தக்கதையாயில்ல இருக்குது! நீங்க எங்க செவந்தியைக் கூடிக்கினு நைத்தியமும் நையாண்டியும் செய்யுறது! காலாகாலத்திலே நடந்து ஆகவேண்டிய நல்ல சடங்கு இது. ஒங்களிலே செம்பாதிப் பேருக்கு ஆகலையா? இன்னும் பேர்பாதி பொம்பளைங்களுக்கு மூணு முடுச்சு விழுகாமத்தப் பாது. சரி, சாடாப்பேரும் அங்கிட்டாலே தள்ளிக்கிடுங்க. நான் எங்க செவந்திக்கிட்ட காதும் காதும் வச்சாப்பிலே ரெண்டொரு சங்கதி பேச வேணும்!" என்று எச்சரிக்கை அமைத்து, செவந்தியை அண்டிய சாகஸக்காரியின் பெயர் பவளக்கொடி.

"இந்தாலே மூஞ்சியைத் திருப்பு, 'நீ தொட்டதுக்கெல்லாம் வெட்கப்படுறதிலே அர்த்தமே கிடையாதாக்கும்! நான் ஒரு கேள்வியை கேட்கிறேன். நீ தடுத்துச் சொல்லாம, உள்ளதை உள்ளபடிக்குப்

பேசிப்பிடு. உம் மனசான மனசிலே ஊஞ்சல் ஆடுற ஆம்பிள்ளே யாராம்? மைனர் செல்லையாவா? இல்லாங்காட்டி, உன்னோட முறை மச்சான் பொன்னம் பலமா? கமுக்கமாச் சொல்லிப்பிடு, செவந்தி!'' என்று நையாண்டி பண்ணினாள்.

ஆடுதுறை வாழை குலை தள்ளும் போது. முதற் பூ ஏடு பிரியும் நிலையிலே ஒரு வகைக் காந்தச்சிவப்பு ஊர்ந்து குழையுமல்லவா, அந்தத் தோரணையிலே அவளின் கதுப்புக் கன்னங்கள் செக்கச்செவேரெனச் சிவந்தன.

''எல்லாம் நகளுங்க. அப்பாரு தேடுவாரு! தை பொறந்தடியும் சகலத்தையும் திரத் தெளியப் புரிஞ்சுக்கிடப் போறீங்களே, அதுக்குள்ளே ஏதுக்கு, இப்படி ஆலாப் பறக்குறீங்க ம்... நையாண்டி மச்சானே! நகருங்க!''

தலைச்சும்மாட்டுத் துணியில் செப்புக்குடம் இருந்தது; கைப் பிடிப்பு அதற்கு அணை. இன்னொரு கை 'கடகால்' வளையத்துக்கு அடக்கம்.

செவந்தி நடந்தாள். மனக் கனவுகளும் நடந்தன. ஆசை மச்சானின் நையாண்டி மொழிகளை அவள் மறப்பாளா?

ஆமாம்! செவந்தியின் எழில் விளக்கம் குறித்து உங்களுக்குச் சொல்ல வேண்டாமோ?

## 3. அன்னியமா? அசலா?

இரை எடுக்கும் நேரம்.

கங்காணி ஏப்பம் விட்டார். கார்த்திகை விரதச் சாப்பாடு. இலை போட்டு உணவு கொண்டார், நல்ல முறுக்குத்தான். இடுப்புச் சோமன் வேஷ்டியை பிடி தளர்த்திக் கொண்டே மடியில் செருகி வைத்திருந்த 'வத்திப் பெட்டி'யை எடுத்து, பிறகு வலது

காது இடுக்கில் ஒளித்து வைத்திருந்த 'சிவன் மார்க் சுருட்டை'க் கையில் பற்றினார். தீ பற்றியது; புகை கக்கியது. தலை வாசலுக்கு விரைந்தார். சுதாரிப்பான நடை

மொட்டை வண்டி வந்து நின்றது. சேர்மொட்டையன் நிலக்கடலைக் கொடிக் கட்டுகளை கவ்வல் கழியினால் பின்னிப்பிணைத்து வாசலை நோக்கி வீசி எறிந்தான்.

"என்னாடாலே, புளிய மரத்துத் தொங்கல் பக்கம் கெடந்த நெறை மூச்சூடும் அரிச்சாச்சா?"

"முக்காலும் முடிஞ்ச மாதிரிதானுங்க எசமான்! அந்திக்கு தொடுசு இருக்காதுங்க!"

"பலே, துருசு பண்ணு. எனக்கு இங்கணே தலைக்கு மேலே ஜோலி. நான் அங்கிட்டு இங்கிட்டு இத்தி நகள வாய்க்காது. உடையவன் இல்லாட்டி ஒரு முளம் கட்டைண்ணு சொல்லுற பேச்சை மெய்ப்பிச்சுப்பிடாதீங்க. தார்க்குச்சி பட்டதும் பறக்கற காளையாட்டம் அலுவலை முடிச்சுப்பிடணும், ஆமா, கறாரச் சொல்லிப்புட்டேன்!" என்று எச்சரித்து, 'கார்வார்' பண்ணினார் சேர்வைகாரர்.

இங்கு பொழுது.

செவலைப்பசு தன் கன்றுடன் தண்ணீர்த் தொட்டியை நாடியது. எடுபிடிப் பயல் புண்ணாக்குத் துணுக்குகளைப் பிசிறு தட்டிப்போட்டு கழுநீரைக் கலக்கிவிட்டான்.

மைனர் செல்லையாவின் நிழல் தட்டுப்பட்டது.

"வாங்க மாப்பிள்ளே. ஒங்களுக்காகத்தான் இம்மாம் பொழுதா வாசலிலே தவம் கிடந்தேன். மஞ்சக்கரை பள்ளச்செய் கதிரறுப்பு முடிஞ்சுச்சா?"

"ஓ!"

"சாப்பாடு?"

"சாப்பிட்ட கை ஈரம் காயலே; இங்காலே பாருங்களேன்!"

"நீங்க மெய்ப்பிக்கவா வேணும்? எனக்கு ஒரு நல்லது கெட்டதுன்னா, அது ஒங்களுக்குந்தானுங்களே? இது எனக்கு மட்டுப்பட்ட சேதிதானுங்க, மாப்பிள்ளே!"

"இதமான பேச்சுங்க. ஆமா, காணாமப் போன காளை விசயமா, திரும்பத் தடையம் ஏதுனாச்சும் காணக் கிடைச்சுதாமா?"

"ஊக்கூம். திக்காலுக்குத் திக்கால் நானும் ஆள் பேரை விரட்டியிருக்குறேன்" என்று விவரம் ஒப்பு, வித்த கங்காணி, பனை ஓலைக் கொட்டகையின் சமீபமாகச் சென்றார். தட்டு வண்டு ஒன்று 'தரம் கெட்ட பாவனை'யில் கிடந்தது. பர்மாவிலிருந்து தருவிக்கப்பட்ட 'தேக்கு-ஸாடோ' பலகையிலிருந்து உருவாக்கப்பட்டு ஒக்கிடப்பட்டது.

"என்னாங்க மாமா, தெகைச்சுப்போயி நின்னுப்புட்டீங்க, முன்னடியான் சாமிக்குத் தக்கனையா?"

"வண்டியைப் பார்த்தேன். காளை நெனைப்பு ஓடுச்சு. இந்த ரெண்டு பொழுதாக் கையொடிஞ்ச மாதிரி இருக்கு எனக்கு; கைக்கு மெய்யாப் பழகின தாச்சுங்களே அந்தக் காளை? ஏரோப்ளேன் காளை—ஏரோப்ளேன் காளைண்ணு பேருவச்சுக் கூப்பிட்டாங்க. கடைசீலே அதுமெய்யாலுமே ஆகாசக்கப்பலுக்குச் சமனாத்தான் பறந்து போயிருக்குது!"

''நீங்க ஒண்ணுங்க மாமு. காளையாவது பறக்கிற தாவது? தேசிங்குமவராசா குருதைதான் கண்ணு கடை தெரியாம பறக்குமின்னு பெரிய எழுத்து தேசிங்குராசா கதையிலே போட்டுருக்குண்ணு கோடி வீட்டுத் தம்பி படிச்சுச் சொல்லும்! இப்ப நீங்க இதை மனசிலே முடிபோட்டு வச்சுக்க வேணு மூங்க!'' என்று செல்லையா பெரிய தகவல் ஒன்றுக் குப் பீடிகை போடுவதை உணர்ந்த கங்காணி, இடை மறித்துக் குறுக்குக்குரல் எழுப்பினார். ''வந்த காலோடவே நிக்கிறீங்களே, செல்லையா மாப் பிள்ளை! வாங்க குந்திக்கிணே பேச்சாடலாம்!''

இவ்வாறு சொல்லிக்கொண்டே 'மூந்த' சுருட் டுக்கு உயிர்ப்பிச்சை நல்கி நடந்த போழ்தில், கோலம் பரப்பிக் கிடந்த இடத்தில் அழகுக்கு அணி யாகக் காட்சி தந்த பறங்கிப் பூக்களின் வாடிய போக்கைக்காணச் சகியாதவர் போன்று அவற்றை தம் பாதங்களால் எற்றி வீசினார். நடை முடியுமா?

பினாங்கு விரிப்பில் இருவரும் அமர்ந்தார்கள்.

அந்திவெயில் அந்தம் போர்த்துக் கொண்டது. வெய்யல் கீழ்த்திண்ணை கங்கில் சரம் கட்டிக் கதிர் களை முடிந்தது. இருபத்தைந்து நாழிகைப் பொழு தல்லவா?

''மாமா, வந்துங்க...'' என்று இதழ்களை வேஞ்சி னால் துடைத்த வண்ணம் செல்லையா நகர்ந்து கங்காணியின் தொடையை இடித்தான்.

அது தருணம், சாரைப்பாம்பை நிகர்த்த விசை பாய்ச்சி வாசற்புறம் வந்த செவந்தி தன்னுடைய மதர்த்த விழிகளை விளையாட விட்ட மாத்திரத்தில், சுவரொட்டி விளக்கை ஏந்த வேண்டிய ஏந்திழை, தடுமாற்றத்தை ஏந்தியவளாக உள்ளுக்குள் பதுங்கிக் கொண்டாள்.

செல்லயா பண்டாரவாடை வெற்றிலைக் காம்புகளைக் கிள்ளிப் போட்டவனாக, குனிந்த தலை நிமிராமல் இருந்தான்.

"என்னமோ அந்நியம் அசலாட்டமில்லே மகள் தவாளிச்சுக்கிட்டு ஓடுதும், நீங்க தொடங்குங்க!" சிரிப்பின் குடைராட்டினத்தில் சுற்றினார் அவர்.

"நேத்தியப் பொழுதும் போச்சு; இன்னையப் பொழுதும் இந்த அந்தாண்ணு கடந்துக்கிட்டிருக்குது. காளையைக் கடத்திக்கிட்டுப் பறிஞ்சவன் ரவ்வைக் குள்ளே திரும்பிக் கொண்டாந்து கட்டிபிட்டா உசிர் பொழைச்சான்னு வேறுமாப்பு வச்சும், காரியம் சாயக்காணோம். ஆக, ஒண்ணு மட்டும் விளங்கு துங்க, புளி போட்டுத் தேய்ச்சாப்லே. நான் நேத்துச் சொன்னது நூத்துக்கு நூறு மெய்தானுங்க. அந்தப் போகுடி பொன்னம்பலம் தானுங்க இம்மாம் ஒசந்த படுத்தடிக் காரியத்தைச் செஞ்சிருக்கான். நேத்து அறுபது நாழிப்பொழுதுக்கும் ஆளை கண்ணுப் புறத் தாலே காண முடியல்லே. இன்னைக்கும் பேச்சுமூச்சு இல்லை!...ஈரங்கி, வாயிதாண்ணு எம்மாதிரி பட்டுக் கோட்டை, தஞ்சாவூருக்குப் பறியிறவனுமில்லீங் களே அவன்? வாய்ச்சேதியை மறக்கப்புடாதுங்க. கொஞ்சமுந்தி, பொட்டுவண்டி கிடந்த லெக்கிலே கண்ணோட்டம் விட்டேனுங்க. பொன்னம்பலம் கால்தடம் கணக்கிலே அச்சாயிருந்துச்சுங்க!..."

புகைச்சல் இருமலை செல்லையா அறிமுகம் செய்தான். தூக்கம் கண்களைச் சுற்றியது.

"கண்ணுக ரெண்டும் மிளகாய்ப் பழமாச் செவந்து கெடக்குங்களே? .."

"ராத்திரி அலஞ்சிரங்காடு குறுந்தடிச் செய் கண்டுமுதல், கங்காணம் பார்த்தேன். இப்பத்தான்

வெள்ளாமை விளைச்சலிலே ஊர்ப்பட்ட அலுவலுங் களாச்சுதே?''

''ஒடம்பைப் பதனமாப் பார்த்துக்கிடுங்க, மாப் பிள்ளே!''

''அதெல்லாம் நீங்க ரவைகூட சள்ளைப்படத் தேவையில்லீங்க!'' என்று தேறுதல் அளித்தான் செல்லய்யா.

சிலம்பம் ஆடியைப் போன்று கைக்கழியை நெஞ்சுக்கு அணை கொடுத்து வந்து நின்றான் சடையன், ஆஜானுபாகுவான உடற்கட்டு, மீசை வேறு; 'கிருதா' வேறு, பர்மாவில் 'டலாஞ்சூன்வங்கு சாலை'யில் தர்வான் வேலை பார்த்த புலி. 'இரண் டுக்கு ஒன்று' தேக்குச் சட்டத்தைக்கூட ஓர் ஈ, காக்கை கைநாட அனுமதிக்க மாட்டான் இவன். ஆனால், இவனுடைய கட்டுக்காவல் கோட்டையில் இருந்த 'ஏரேப்ளேன் காளை' யைத்தான் கோட்டை விட்டுவிட்டான்!

''ஏண்டா !...''

குரலின் தடிப்புக்கு அதிகாரம் திறை செலுத்தி யது.

''காளை தட்டுப்படவேயில்லீங்க. கெளக்கே சுடு காட்டிலேருந்து மேலப்பக்கம் பள்ளிக்கொண்டான் வாத்தாலை வரைக்கும், வடக்கே நம்ம சோளக் கொல்லை தொட்டு, தெற்கே சர்க்காரு ஆசுபத்தரி முடிய சுத்தாத மண் மிச்சம் மீதி இல்லீங்க முதலாளி ஐயா !... கள்ளன் ஒசத்தியா, காப்பான் பெரி சாண்ணு வசனம் உண்டுங்க. இப்ப மேலிண்ணு நிருபிச்சிருக்கிற அந்தப் பயமவனை சிண்டைப் பிடிச்சு நாளைப் பொழுதுக்குள்ளே ஒங்க

சாலடியிலே கொண்டாந்து போடுறேனுங்க. இன்னொரு பேச்சு ஊர்க்குடிக்காடு பூராவும் அடிபடுதுங்க. நீங்க ஐயப்பட்ட சங்கதியாத்தான் ஊர்ச் சனங்க மொத்தப்பேரும் நினைக்கிறாங்க. பொன்னம்பலம் தான் நம்ம காளையைக் கடத்தி, நமக்குக் கொறைச்சல் செஞ்சிருக்கோணும்னு அந்தரங்கம் வச்சுப் பேசுறாங்களாம். ராவு அந்தப்பக்கமாகக் கோலிப்போய் அந்த ஆள் வீட்டை நோட்டம் பார்த்தேனுங்க. வாசல் வெளியிலே நம்ம காளையோட கால்குளம்புத் தடம் கச்சிதமாப் பதிஞ்சிருக்குதுங்க. உள் தாவாரத்திலே முழங்கை பருமனுக்கு தாம்புக் கயிறு வேறே கிடந்திச்சு; நம்ம மாட்டுக் கழுத்திலே பூட்டப்பட்டிருந்த சிங்கப்பூர்ச் சலங்கை மணிகளிலே ரெண்டு அறுந்தும் கெடந்திச்சுதுங்க, எசமான்!... இப்ப சைக்கோலிலே ஓடி தாணாவிலே இதை விழுக் காட்டட்டுங்களா?...'' வாய்பொத்தி நின்றான். கட்கத்தில் தலை முண்டாசுத்துணி. காவல் நாய் வாசல் தலைப்பில் நின்றது!

''சீ, போடாலே! முதல்லே போயி திருடனையும் நம்ம காளையையும் மீட்டாந்து எங்கண்ணிலே காட்டிப் பூட்டு வக்கணைபேசுடாலே! அண்ணைக்கு படிச்சுப்படிச்சு சொன்ன சொல்லை நினைப்பிலே வச்சுக்கிடு. திருப்பியும் சொல்லுகிறேன். உன்னோட கடமையைச் சரிவரச் செய்யல்லேன்னா, உன் உசிர் உனக்குச் சொந்தமில்லே. இந்தாப்பாரு, இந்தத் திருக்கைவார்ச் சாட்டைக்கு நீ சவாப் சொல்லாமத் தப்பவே ஏல மாட்டாது. ஆமாம்!''

ஏவலாள் விடைபெற்றான்.

''எல்லாம் இந்தக் கண்ணாலப் பேச்சாலே வந்த நடப்புத்தானுங்க!''

'உள்ளதுதாங்க! இன்னம் ரெண்டு கிழமை குந்தினாப்போல கழிஞ்சுதின்னா, எல்லாக் காரிய மும் வெட்ட வெளிச்சமாயிடத்தானே போவுது!''

''அப்ப நான் நகரட்டுங்களா?''

''நல்லாச் சொன்னீங்களே, மாப்பிள்ளே! சூடா தேத்தண்ணி ஒரு லோட்டா குடிச்சுப்புட்டுப் போங்க. நீங்க ஒடம்பைக் கவனிச்சுக்கிடுங்க. ராக்கண் முழிக்காதீங்க, தைப்பொங்கல் முடிஞ்சரீ தியிலவே கண்ணாலப் பத்திரிகை அச்சுப்போட்டு, அப்பாலே ஆகவேண்டியதுங்களை வெரசாச்செஞ்சு முடிச்சுப்பிடுவோம்!''

''அல்லாம் பெரியவுங்க தயவுங்க!''

மைனர் செல்லயாவுக்குச் சிரிப்பதற்குத்தானா கற்றுக் கொடுக்க வேண்டும்?

''இந்தா, ஒன்னைத்தானே!... கங்கம்மா. துரிசு படுத்திங்குறேன்!''

திண்ணையில் 'சம்மணம், கோலிய நிலையினின் றும் இம்மி பிறழாமல், தலையைமட்டிலும் உட் பக்கம் சாய்த்துச் சத்தமிட்டார் கங்காணி. 'மகளுக்கு இந்த மாப்பிள்ளே திருப்பூட்டிப்பிட்டா கண்ணாத்தான், எனக்கும் நல்ல மூச்சு திரும்பும்!'

## 4. ''ஆத்தா''

''லாந்தரு'க்குச் 'சீமை எண்ணெய்' ஊற்றி ஏற்றி, தாய் வீட்டில் வைத்துக் கைதொழுதாள் செவந்தி. இரண்டாங்கட்டுக்கு வந்ததும், தூணுக்குத் துணையானாள். அவளுக்குத் துணையா யின கனவுகள்!... கனவுகள் கயல் விழிகளை வாழ

வைத்தன; மடநோக்குக்கண்கள் கனவுகளை வாழவைத்தன.

"அல்லாம் அந்தந்திலேகனவாட்டந்தான் ஆகிப் பூடும் போலிருக்குதே?" செவந்தி அழுதாள்; அவள் கண்கள் அழுதன; கனவுகளுக்கு ஆடுகளமாக இயங்கிய அந்த நயனங்கள் அழுதன! தட்டுமறித்துப் பூப் போட்டிருந்த சுங்கடிச் சேலையின் முன்றானையைக் கொய்தெடுத்து, இமை வரம்புகளை ஒற்றினாள். கண்களில் சுடுநீர் பறந்தது. ஆனால் அவளது வெம்மை நிறை வேதனையும் உயிரெடுக்கும் வாதனையும் மறையவில்லையே!

காலக்கணக்கன் வினாடிகளையும் நிமிஷங்களையும் இயற்கை என்னும் குறிப்புப் பேரேட்டுப் புத்தகத்தின் பற்றுக் கோட்டில் எழுதிக்கொண்டிருந்தான்.

செவந்திக்குச் சுயஞாபகம் கிளர்ந்தெழலாயிற்று. பெற்றவளின் உற்றமொழிகள் அவளது துயரப் பெருக்குக்கு அணைகட்டக்கூடவில்லை. 'என்னை என்ன பண்ணச்சொல்றே?... உம் மேலே நான் எந்தக் குற்றத்தையும் சாட்டல்லே. ஆனா அப்பா பண்ணுற காரியந்தான் எனக்குத் தப்பாப் போய்க்கிட்டிருக்குது! ஆத்தா, நீயே நெஞ்சிலே கையைப் பதிச்சு, ஆத்தா மூத்தவளை உன்னோட வாக்கிலே மதிச்சுச் சொல்லு. அந்த மச்சான் இம்மாந் தொலைவுக்கு கை நடுங்கும் மோசக்கருத்தான காரியத்தைச் செஞ்சிருக்கும்னு நீ நம்புறியா?... இல்லேதானே ஆத்தா? பின்னாடி, நம்ம அப்பா கடந்துபோன வன்மத்தை மனசிலே இருத்திக்கிணு, எந்தப் பயமவனோ செஞ்ச அடாபுடிச் செய்கைக்கு அந்த மச்சானை உடந்தையாக்கி, அதுக்கு வீணா அவப்பேர் உண்டாக்கக் கங்கணம் கட்டிக்கிட்டு

இருக்காகளே. ஏதுக்கு ஆத்தா?... நம்ம வீட்டுக் காளை ஏப்பை சோப்பையான காளையா?... போன கடுத்தம் நடந்த மஞ்சவிரட்டிலே தெக்கேயிருந்து வந்த மாட்டுச்சிங்கம் மன்னாரையே மண்ணைக் கவ்வ வச்ச மாட்டை இந்த மச்சான் அம்பிட்டு லாகவமாப் புடிச்சு, கடத்திக்கிணு போயி இந்த ரெண்டு பொழுதுக்கு வச்சிருக்க ஏலுமா!... காக்கை குந்துறதுக்கும் பனம் பழம் விழுகிறதுக்கும் ஒத்தாப்பிலே இருந்திச்சு அப்படிண்ணு வாய்ப்பேச்சுக்கு மூச்சுக் காட்டுவாங்க. அதாட்டம், காளை காணாமப் போனதுக்கும், அந்த மச்சான் சோலி நிமித்தம் அண்டை அசலுக்கு நாடிப் போனதுக்கும் ஏன் தான் முடிச்சுப் போடுறாங்களோ, புரியலையே?... மாடு புடிக்கிற கோமாவரத்தான் எவனோ நம்மா காளையைக் கொண்டுகிணு போயி வடக்காலே ஓடி ஒருவாகிலே வித்துப்பிட்டிருப்பான்! இல்லாட்டி, எவனாச்சும் மை மாயம் வச்சு ஏரோப்பிளேன் காளையைக் கண்ணைக் கட்டி, வெறியைத் தணிச்சு, சத்தைக் கொறைச்சு லாந்திப் புடிச்சுக்கிணு மறைஞ்சிருக்கவேணும்! இதுகளைக் துப்புக்காணாம, தெய்வமேன்னு இருக்கிற இளசைப் போட்டு அல்லாடப் பண்ணுறது எந்தத் தெய்வம் திருவுள்ளத்துக்கும் அடுக்குமா?.'

மகளின் வாயைப் பொத்தினாள் சொர்ணத்தம்மா. "இந்தாப் பாரு, செவந்தி. நீ வேண்டி நேர்ந்துகிட்ட மாதிரியே நடக்கும். சும்மா மனசைப் போட்டு அலட்டிக்காதே. கிரகக்கோளாறு இது. வெயில் சுள்ளாப்பைக் கண்டடியும் பனி கடலே கதிண்ணு ஓடுறதில்லையா? தன்னாலே எல்லாம் சரிக்கட்டிப் போயிரும். பெத்தவ பேச்சை நம்பு?"

செவந்தி கப்பம் செலுத்திச் சிரிப்பைக் கொண்டு செலுத்தினாள். வேதனையில் விழிநீரில் இன்பத்

தின் இளநகையை எங்ஙனம் மாற்று உரைக்க முடியும்?

அங்காளம்மன் கோவில் 'கண்டாமணி' துலாம்பரமாக ஒலியெழுப்பியது.

செவந்தி மெய்மறந்து நகைசிந்தினாள். உள்ளம் அமைதி சிந்தியதின் இனிய பலன்போலும்! 'தாயே அடிசாயிறபொழுதுக்கு உன் சந்நிதானத்திலே கையெடுத்துக் கும்பிட்டேன். எம் பிரார்த்தனையை கெலிக்கச் செஞ்சிரு. அந்த மச்சானைத் தவிர வேறே யாரையும் கண்ணெடுத்தும் பார்க்க ஒப்பாது என் மனது. இதை நீ அறிஞ்சவதானே? மேலைக்கு நானும் 'அது'வும் உம் பாதத்திலே விளுந்து ஏந்திருச்சு, பள்ளயம் படைச்சு, மாவிளக்குப் போட்டுக் கும்பிடுறோம். ஏம்பிட்டு உசிரு உங்கையிலேதான் அடங்கியிருக்குதுங்கிற சேதியை மட்டுக்கும் மறந்துப் புடாதே, ஆத்தா!'

உந்திக் கமலத்தைப் பிறப்புப் புள்ளியாக்கிக் கொண்டு மூரல்-சிரிப்புப் புறப்பட்டது. இச்சிலிர்ப்பில் அழகுத்திரட்சி உருவானது; அவ்வுருவில் ஆண்மை பேசியது; சுருட்டைக் கிராப்பும், சுருளாத நேர்மைப் பாங்கும், சொகுசுப் பார்வையும், சொட்டை சாணாத சுந்தரப் புன்னகையும் சேர்ந்து "பொன்னம்பலம்!...பொன்னம்பலம்!......" என்று உச்சரித்தன.

'இவுகதானாக்கும் என்னோட ஆசை மச்சான்; நேச மச்சான்!'

நாலு எழுத்துக் கற்றவன் அவன்!

செவந்திக்கு வாய் முழுவதும் நகை வெள்ளம். பனிப்படலத்தின் ஊடாகத் தெரிவதைப் போன்று தென்பட்ட பொன்னம்பலத்தின் தோற்றம் அவளது

நேத்திரவட்டங்களை வளைத்தது. அவள் நாணி னாள். அவளது நாணம் நாணம் காட்டியது. ஆஹா!

செவந்தி!

ஒருமுறை நேரில் பார்த்தவர்கள், பல தவணை நினைவில் பார்த்துக் கொள்ளத் தூண்டும் அழகு ஒப்பனை. ஒப்பற்ற பருவமெருகு கூடிய உடல்வாகு. தையலின் மைவிழிகளோடு மான் விழிகள் தான் கும்மி கொட்டி விளையாடும். அவளது உதட்டுச் சிரிப்புடன் தான் சிரித்த தாமரை வம்பளக்கும். சங்கரன் குடியிருப்பிலும் சரி, அக்கம் பக்கத்திலும் சரி. செவந்தி என்றால் அசல் செவ்வந்திப் பூப்போலத் தான்! அவளுக்குச் சொந்தமான முகம்பார்த்து, அகம் காணத் தவம் இயற்றிய இளவட்டங்கள் பலருக்கு அவள் வான்நிலவாக கொம்புத் தேனாக— தேவலோகப் பாரிஜாதமாகத் தோற்றம் நல்கினாள். இத்தகைய கூட்டத்திற்கு விதி விலக்கு ஆனவன்: பொன்னம்பலம்!

'மச்சானை என்னாலே ஏழேழு பொறப்புக்கும் மறக்க ஏலுமா?'-மதுக்குடம் ஏந்திய மணமலர் எண்ணியது.

செவந்தியின் இரட்டை வடச்சங்கிலி எழும்பியது; தணிந்தது.

ஒருநாள்.

அன்றைக்கு ஓடை மேடைவழியே 'வாங்கல் அரி வாள்' ஏந்தியவண்ணம் ஆடுகளுக்குத் தழை ஒடிக்கக் கிளம்பிக் கொண்டிருந்தாள் அவள். பாவாடை கட்டி யவளிடம் தாழம்புச் சித்தாடை சொந்தம் கொண் டாடத் தலைப்பட்டது. சீவி முடித்துச் சிங்காரித் திருந்தாள். பூவின் மலர்ச்சிக்கு முன்னோட்டமான

ஒருவகைப் பூரிப்பு உண்டல்லவா, அந்நிலையை மடி ஏந்தி வைத்திருந்தாள் பாவை!

"ஏலே!"

வெடுக்கென்று திசை திருப்பினாள். தன் கையைப் பற்றிய அயலவனை எரித்துவிட எத்தனம் செய்து, பிறகு கை அரிவாளை ஏந்தி அவன் பேரில் குறி வைத்தாள். "சே, தூ!"

அதிரவாணச் சிரிப்புத் துலங்கியது. "இந்தாலே!" என்று சொல்லி, பொய் மீசையை எடுத்தெறிந்தான் பொன்னம்பலம். எடுத்தெறிந்து பேசியதற்கு 'மாப்பு' விட்டு சமிக்கும்படி கெஞ்சிக் கொஞ்சினாள் அவள். புலன் அறிவு தெளிந்து காலந்தொட்டு, காலத்தின் உயிரத்துடிப்பினைத் தொட்டு, காலத்தையும் தங்களையும் வளர்த்துக்கொண்டு வாழ்ந்து வருபவர்கள் ஆயிற்றே அவர்கள்?

'கூடப்பொறந்த தங்கச்சி மகனை இப்படி காண விடாம எட்டுருக்குத் தொரத்தி வெரட்டுகிறாகளே அப்பா?'

செவந்தியும் பொன்னம்பலமும் முதல் நாள் அந்தியில் உலகாளும் மூத்தவளின் திருச்சபை முன் சென்று, "எனக்கு நீதான் பொஞ்சாதி; ஒங்களுக்கு நானுதான் பொண்டாட்டி! ஒனக்கு நாந்தான் புருசன்; ஆமா, எனக்கு நீங்களேதான் புருசன்!" என்று உறுதிகளைப் பரிமாறிக்கொண்டு கையடித்து, மேற்படி உறுதிகளுக்கு வல்லமை சேர்த்தார்கள். மறுநாள் செவந்தி 'சமைந்தாள்' — பெரியவள் ஆனாள். அவர்களது மறக்குல மரபுக்கு ஏற்ப, கங்காணி இந்த நல்ல சேதியைப் பொன்னம்பலத்தின் வீட்டுக்கு ஆள் மூலம் அனுப்புயிருக்க வேண்டும். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. கங்காணி

யார் சொன்னார்: "ஆபத்துச் சம்பத்தான ஒரு ஈரங்கியிலே சாட்சி வந்து சொல்லமாட்டேன்னு பிட்டான் பயல். அதுமட்டுமா? மூணாம்நாளு எங்க அப்பத்தா செத்த கேதத்துக்கும் தலைகாட்டலே. இருந்த பத்துமா நஞ்சையையும் அப்பன் வித்துத் தின்னு அழிஞ்சான். மிச்சம் மீதம் இருந்த நானூறு குழி சோளக் கொல்லையையும் புள்ளே தின்னு முடிச்சு, இப்ப சாயாக்கடை வச்சிருக்கான். நாளைக்கு ஒண்ணுண்ணா, நாலாம்பேர் கையைப் பார்க்கவேண்டிய இவனையா இருந்திருந்து எம் மருமகனா ஆக்கிடுவேன்?"

"இன்னிக்குக் காசு பணம் இல்லாட்டியும், நாளை பின்னைக்கி சீதேவி கண்திறக்காமலா போயிடுவா? முறைச் சொந்தம் தப்பப்புடாதுங்க. மொறைப் பொண்ணு வீடு தப்பி வீடு மாறப்புடாதுங்க. கிடையை விட்டு ஆட்டை பிரிக்கிறது மோசமுங்க. 'அது' இன்னைக்கு கை இறக்கமாயிருந்தாலும், நாளைக்கு நம்மவூட்டு மாப்பிளையானடியும், நம்ம பணம் காசு பூராவும் அதுக்கும் சேர்ந்தது தானுங்களே? நமக்கு இருக்கிற ஒரே ஒரு பொண்ணோட கண்ணைக்கசக்க வச்சுப்புடாதீங்க!" என்று பரிந்து பேசினாள் தாலி பாக்கியம் வாய்க்கப்பெற்றவள்.

"ஊஹூம்!"

சம்பந்தம் இடம்மாறப் போவதறிந்து ஊர் மலைத்தது.

பொன்னம்பலம் நடைப்பிணமானான். அவனை உயிருடன் உலவச்செய்தவள் செவந்தி. இது பகிரங்க ரகசியம்!

செவந்திக்குச் சடங்கு சுற்றப்பட்டது.

அக்கரைச் சீமையிலிருந்து வந்து குதித்தான் செல்லையா. மைனர் பட்டபாடுதான்! மைனர் சங்கி

லியும் வகைவகையான ஆபரணங்களும் குலுங்க, பட்டுச் சொக்காயும் ஜரிகைத் துப்பட்டாவுமாக 'ரேக்ள' வண்டியில் 'வெள்ளோட்டம்' வந்து ஊர்த் தெருக்களைச் சுற்றினான். தேர், திருநாள், 'பயாஸ் கோப்பு'—சகாக்களோடு அலைந்தான். பணமும் அலைந்தது!

காத்தமுத்துச் சேர்வையும் செல்லையாவை நோட்டம் பார்த்தார். மிதமிஞ்சிய 'பசை' இருப் பதை அறிந்தார். ஒட்டிக்கொள்ள விரும்பினார். இயல்புதான். பணம் பணத்தையே கொள்ளும்!

குலவழக்கப்படி 'பெண்பேச' செல்லையாவை ஈன்றவள் சென்று வெற்றிகண்டாள்.

செவந்திப்பூ வாடத் தலைப்பட்டது. 'ஆத்தா மூத்தவளே !' என்று அழுது புலம்பினாள் !

''ஆத்தா !... செவந்தி !''

'தந்தையின் குரல் வந்தது. நூவரெலியா பாத ரட்சைக் கட்டைச் சத்தம் வந்தது.'' இந்தம்மா விபூதி, பிரசாதம்! நீ சாமியை வேண்டிக்கிணு பூசிக்க, உன் ஆத்தாளுக்கும் நீட்டு. ஏ, ஒன்னைத்தானே... வந்து, தை பொறந்து ஆறாம் நாளிலே பொண் ணுக்கு முகூர்த்தம் வச்சுப்பிட உத்தேசிச்சுப்புட் டேன் ! அப்பத்தான், எனக்கு ஒரு குறைச்சல் உண் டாக்கணுமின்னு நம்ம வீட்டு ஏரோப்ளேன் காளையை காடு மாத்திப்புட்டு தலை மறைஞ்சிருக் கிற அந்த பொன்னம்பலம் பயலுக்கு நல்ல பாடம் படிச்சுக்குடுத்து, அவனை உசிரோடவே துளிதுளி யாச் சாகச் செய்ய முடியும்!... அப்புறந்தான் எனக் கும் மனசு ஆறும்!...காத்த முத்துச் சேர்வை சொன் னாச் சொன்னது தான்! சரி, மாப்பிள்ளே... அதான் செல்லையா மாப்பிள்ளே ! வூடு மட்டும்

நடந்திட்டுத் திரும்புறேன்!'' என்று முத்தாய்ப்பிட்டுச் சென்றார்.

தேசிங்கி மகாராஜாவின் நீல வேணிக் குதிரையைப் போன்ற கம்பீரம். மருளச் செய்யும் ராஜ பார்வை. ராஜசுழி. நான்கு பற்கள். தகதகவென்று நிறம். சீவிய கொம்பு நுனிகளிலே தங்கக் குமிழ்கள். மணிகள் அணி செய்தன! ஆயிரத்து இருநூறு ரூபாய் காளைக்குள் அடக்கம்!

''சனியன் புடிச்ச காளை!''

## 5. சீதேவி சொத்து!

'திருமத்தின் வதனமன்ன திகழ்மதி' யினை கருமுகில் துண்டங்கள் அணைந்தன.

வீட்டின் உள் முற்றத்தை அடுத்திருந்த தாழ் வாரத்தில் நார்க்கட்டிலைக் போட்டுப் படுத்திருந்தார் கங்காணி. நெற்குதிர்கள் மேல் வசமாக நின்றன. தூறியது. கூதல் நடுக்கியது. கம்பளிக்குள் சித்துவேலை பழகியவரென முடங்கிக் கிடந்தார் மனிதர்.

தெரு நாய் குறைத்துக் கொண்டிருந்தது.

''அப்பா!...''

பாதிச்சாமன்,

''அப்பா!...''

முண்டி எழுந்தார் சேர்வைகாரர். ''ஏம்மா, விடிஞ்சிருச்சா?... கருக்கலோட ஆவணத்தாங்கோட்டைக்குக் கதிரறுப்புக்குக் போகணும்னு உன் ஆத்தா காதிலே போட்டேனே, அதுக்காக வந்து என்னை உசுப்பிறீயா? தாயே, அங்காளம்மா!... என்றார்.

"அப்பா! இங்கிட்டாலே பாருங்களேன்!" என்று கூறினாள் செவந்தி. அவளது தளிர்க்கரங்கள் பானை ஒன்றை ஏந்தியிருந்தன. 'வேடு' கட்டியிருந்த கிழிசலை விலக்கினாள்.

கங்காணிமூக்கைப் பொத்திக் கொண்டார். கை எட்டும் தொலைவில் கிடந்த மூக்காலியில் இருந்த கை விளக்கை எடுத்துப் பொருத்தினார். 'சாராயத் தண்ணி! தூ!... சனியன்!" என்று காறித் துப்பினார்.

"ஏது அம்மா இந்தப் பானை?

"எனக்குக் கட்டி வைக்க நீங்க முடிவு நெஞ்சிருக் கீங்களே, அந்த ஆம்பிள்ளைவூட்டுச் சொத்து அப்பா இது! சனியன்னு இன்னொரு வாட்டி பேசாதீங்க இதான் சீதேவி!..."

"மெய்யாலுமா?"

"மெய்ப்பிக்க வேணுமாமே? விடியட்டும். அறந்தாங்கி தாணாவிலே இருந்து வந்து விசாரிப்பாங்க. அப்ப அல்லாம் வெட்ட வெளிச்சமாயிடும். கள்ளச் சாராயம் காய்ச்சி, அலஞ்சிறாங்காட்டு ரெட்டைப் பனைக் காட்டிலே இம்பிட்டு நாளா கூத்து ஆடிக் கிட்டு வாரவுகளோட கதை ஒட்டுக்க அம்பல மாகாமலா இருக்கப் போவுது?... ஆத்தா நல்லவ!"

மடைவாயினின்றும் புரண்டு செல்லும் பாருங்கள்-நிறைப்பெருக்கு. அம்மாதிரி இருந்தது அவள் பேச்சு, சீரகச் சம்பா நெல் தளைகளிலே பூத்துச் சிரிக்கும் மணிகளிலே இலங்குகின்ற கருவம் அவளுடைய வாய்மொழிகளில் ரேகை பதித்தது. அவள் கையில் செல்லையா என்று பின்னப்பட்டிருந்த சிங்கப்பூர்க் கைபிடித்துண்டு இருந்தது! பானையைச் சுற்றி மறுபடியும் துணி சுற்றினாள்.

"இந்தச் சனியனைப் போட்டு ஒடைச்சுப் பிடும்மா!"

"அதான் ஏலாதுங்க. என்னைப் புடிச்சிருக்கிற சனியன் விலகிற அரிதி, இதை நான் என் உசிர் போலக் காத்துக்கிட வேணுமுங்க!" கண்ணீர் பொசிந்தது. மறக்கருணையின் சங்கற்பமா?

அவள் உள்ளே நடந்து கூடத்துச் கதவுக்கு நாதாங்கி இட்டாள்.

"செவந்தி!... செவந்தி!..."

## 6. இதோ, காளை!

ஆந்தைகள் கங்காணியின் புயல் மூண்ட இதயத்தில் கூடுகட்டிக் கதறின, அவர் பாவம், எங்ஙனம் கண்வளர்வார்? சுற்றுச் சார்பில் புகை இருட்டு. சுருட்டுப் புகை மண்டியது. நெருப்புக் கங்குக்கு ஊக்கம் ஈந்தார். பிறகு காலம் கண்டார். இன்னம் விடியிறதுக்கு பதினைஞ்சு நாழிகை இருக்குதே?' புரண்டு படுத்தார். மனம் மட்டும் கலங்கவில்லை; கண்களும் கலங்கின 'எனக்குக் கட்டிவைக்க நீங்க முடிவு செஞ்சிருக்கீங்களே, அந்த ஆம்பிள்ளை வூட்டுச் சொத்து அப்பா இது!' அவருக்குக் குலை நடுக்கம் எடுத்தது. வயிறு பற்றி எரிந்தது. அணைந்த சுருட்டை எட்ட வீசினார், இமைகளிடை கைவிரல் நகங்கள் ஊரலாயின.

'நெசமாவே நான் எம்பொண்ணுக் கண்ணை பாழத்த கேணியிலேயா விழுக்காட்ட இருந்தேன்?... ஆத்தாதான் கண்ணுக்கு முன்னே இப்படிச் சோதனை காண்பிச்சிருக்குமா? செவந்தித் தங்கம் சொன்னது அப்படியே உண்மைதானா?... கள்ளச் சாராயம் காய்ச்சிற துப்பு பொண்ணாய்ப்

பொறந்த சென்மத்துக்கு எப்படிக் கிடைச்சிருக்க லாயக்குப் பட்டிருக்கும்? இல்லே, செல்லையா நாடகம் போடுது அப்படிண்ணு எங்கண்ணைக் கட்டிப் பிட்டு, இது நாடகம் ஆடுதா?... ஒரு சமயம், தலைமறைஞ்சு திரிஞ்சுக் கிட்டிருக்கிற அந்தக்காலிப் பயல் பொன்னம்பலத்தோடே வால் சேட்டையே தானா இதுவும்?...ம் எது எப்படி நடக்கட்டும்! வக்கு இல்லாத அந்தப் போண்டிப் பயலுக்கு எம் மக செவந்தி இல்லே! ஆமா!...

விடிபொழுதுக்கென காத்துக்கிடந்த நேரங் கெட்டநேரத்திலே, காலடி அரவம் பையப்பைய ஒலி தந்தது. சிறு பொழுதுவரை யாதொரு சத்தமும் எழும்பக் காணோம். கால் தலையணைய தலை மாட்டுக்குக் கொடுத்தார் அவர்.

''கங்காணி ஐயா!...''

''யாரது?...ஏ, யாரு?''

''காணாமப் போயிருந்த ஒங்க காளை கெடெச்சிருச்சுங்க, கைக்கு மெய்யாய்!''

''என்ன காளை கெடைச்சிருச்சிதா? ஆ!...நீங்க... நீ யாரு?''

சடுதியில் பாய்ந்த அவருடைய ஒரு கை சவுக்கையும், மற்றொரு கை கைவிளக்கையும் எடுத்தது.

ஒளி உமிழ்ந்தது.

''யாரு, நீயாடா?...''

''ஆமா!''

''எங்காளை எங்கே?''

''நீங்க எங்கணே இந்த மூணு நாளா அதை ஒளிச்சு மறைச்சு வைச்சிருக்கீங்களோ, அதே தாராடி சாமித்தோப்பு இடத்திலேதான் காளை கட்டிக் கெடக்குது, ஆனா!...''

"ஆனா என்னா?"

"அதை நல்லது ஒறந்து போட்டுப் புடிச்சு. உசிருக்குத் தத்தளிச்சுக்கிட்டு இருக்குது! ரத்தம் வெள்ளக் காடாக் கொட்டுச்சு!"

"ஆ!" பதறினார் கங்காணி, அரவம் தீண்டினாற் போலே!

பொன்னம்பலம் ஜெயஸ்தம்பத்துக்கு நேராக நின்றான்:

"உங்க உடைமைக்குக் குந்தகம் வந்ததும் உங்க மேனி துடிக்குது. அதுக்குச் சமமாத்தானே என் சொத்தும் பறிபோக, நானும் தத்தளிச்சிக்கிட்டு இருப்பேன்? உங்களோட குட்டிப்புரட்டுகளுக்குக் காது கொடுக்காததாலே, என்னை வேம்பா வெறுத்தீங்க. மண்ணு மிஞ்சாட்டியும், நேர்மையும் நாணயமும் மிஞ்சிக்கிடக்கிற எனக்குக் களவாணிப்பட்டம் பூட்டி இந்த மூணு நாளா ஊரையே அத்தளிப்படச் செஞ்சீங்க? . காளையை வேணுமிண்ணு நீங்களே ஆளைவச்சு காணாக்கடவுலே மறைச்சுப்பிட்டு, அந்தப் பழிபாவத்தை எம்பேரிலே சுமத்துறத்துக்கு ஏதுவாட்டம், என்னை உங்க சேக்காளியைக் கொண்டு வடக்கே போகச்சொன்னீங்க. நானும் சும்மா தலையை யாட்டிக்கிட்டு, இந்தப் பக்கம்தான் மறைவாச் சுத்திக்கிட்டிருந்தேன். பொண்ணு கேட்டு விட்டோம். கண்டபடி ஏசினீங்க. சரி. இப்ப ஒங்க மகளை அரிச்சந்திர ராஜாவுக்குக் கட்டிக் கொடுக்கப் போறீங்க, செய்யுங்க. இதுக்காக, அடாபிடியா என்னை ஏதுக்குச் சந்திக்கு இழுக்க வேணும்?...எனக்கு உள்ள சொத்துச் சொகமான நேர்மை, கைச்சுத்தம், வாய்ச்சுத்தம், நாணயம் இதுங்களுக்கு ஊறு உண்டாக்கமனப்பால்குடிச்ச உங்களை பதிலுக்குப் பதில் இழுத்தடிச்சு, ஒங்கமானத்தைச் சந்தி சிரிக்க வைக்

காம இருக்கவே மாட்டேன் நான்!.. ஊருக்குப் பஞ்சாயம் பண்ணுற உங்க துப்புக்கெட்ட போக்கை யும், பொய்த்தனமான நடப்பையும் விடிஞ்சதும் ஊரு நல்ல மனுசங்களைக் கூட்டி ஆதாரத்தோட ருசுப் படுத்தினால்தானே எம்மனசு சமாதானப்படும்! உங்கவாலைச் சுத்திக்கிணு இருக்கிற சோத்துக்குச் செத்த ஆளுங்க இனிமே என்னைப் பத்தி என்னா அநியாயம் பேச முடியும்ணும் ஒருகை பார்த்துப் புடுறேன்! கங்காணி ஐயா இனிமே ஆகாசத்திலே பறக்கோணும்! ..''கேலிமொழி கோலி நின்றது; சூடு மொழி சுடாமல் ஒதுங்குமா?

மெய் சோர நின்றார் சேர்வை. 'மெய்' அவர் மெய்யை ஆட்டிப்படைத்ததோ?

''மாப்பிள்ளே!''

''ஒங்க அருமை மாப்புள்ளே கடைசியாச் சாரா யம் காய்ச்சி, ஊரை மறந்து குடிச்சுக்கிட்டிருப் பாரு!...விடிஞ்சதுந்தான், அவரு மாமியா வூட்டை நாடிப்போயிடுவாரே!... நான் வாரேன். ஒரு சேதி, உங்க காளைக்கு தீம்பு யாதுமில்லே!''

பொன்னம்பலம் மறுகினான். துவாலையைக் கொண்டு சென்றான் முகத்தருகே. 'ஊம் இந்த பெரிய மனுஷன் கதையை வெள்ளை பண்ணாமய விடுறது?...வரட்டும்!''

திக்கற்றவன் கடைசிப் பட்சமாகத் தெய்வத்தை நாடி ஓடுவான் அல்லவா? அந்த அளவில், அந்நிலை யில் ஓடினார் கங்காணி. ''மாப்புள்ளே! ஆத்தா எங்கண்ணைத் திறந்துப்புட்டா!...என்னைக் காப் பாத்துங்க. எம்மானத்தைக் காத்துக்கொடுங்க, மீதிக் காலத்தையும் கவுரவமாக கழிச்சுக் கண்ணை மூடக் கருணை செய்யுங்க!'' என்று விம்மினார் அவர் பணம் அழுது, நீங்கள் கண்டிருக்கிறீர்களா?

செய்வகை விளங்காமல் வீசம் நாழிகை அப்படியே நின்றான் பொன்னம்பலம். செருமல்ஒலிக்குக் குறிப்புச் சொன்ன முக்குப்பக்கம் பார்வையை நேர் நிறுத்தினான். 'செவந்தி!'

"கங்காணி ஐயா!...என்னோட மானம் அழிஞ்சது அழிஞ்சு தொலையட்டும்!...ஒங்க மானத்தைக் காப்பாத்திப்பிடுவேன். ஆத்தா மேலே ஆணை இது!..."

"பொன்னம்பலம்!"

சிரிப்பில் உயிர் நிலைத்தது. "மாப்பிள்ளே, இனிமே நீங்கதான் என் மாப்பிள்ளை. ஆத்தா முடிவு இந்தப் பாவிக்குச் சரியாப் பிடிபடலே இத்தனை காலமும்! எங்க செவந்தி ஒங்க சொத்து!...ஆத்தா சத்தியம் இது!"

"அவசரப்படாதீங்க, மாமா!...ஆத்தா முன்னாடி செவந்தியை அழைச்சுக்கிட்டுப்போய் அது ஆசையைக் கேட்டுப்புட்டுச் சேதி அனுப்புங்க. ஒண்ணை மட்டும் நினைச்சுக்கிடுங்க. எனக்கு மானம், நேர்மை, சத்தியம், நாணயம் இதுகதான் சொத்து சுகம் சகலமும்!..."—பொன்னம்பலம்.

"செவந்தி!"

நாணப்பூவுக்கு மலர்ச்சி காட்ட இள நீலப் பட்டுப் படுதா வேண்டாமா?

பொன்னம்பலம் கள்ளச் சிரிப்பை வெளிக்காட்டி, கள்ளவிழிப் பார்வையைத் தூதுவிடுத்த நடப்பு கங்காணியின் வெள்ளெழுத்துப் பார்வைக்கு இலக்குத் தரவில்லை,

"மாப்பிள்ளே! ஒங்க சொத்தை நான் காப்பாத்தித் தந்துப்புடுறேன. கணக்கன் விடுதி போக்கிரிப் பயல் ஒருத்தனை 'தனது' பண்ணி, அவன்தான் நம்ம

காளையைப் புடிச்சுப்போனதாக ஊருக்குக் காட்டிப் புடுறேன். இன்னொண்ணு!...இனி நீங்க காசு பணம் இல்லாத ஏழை இல்லே! ''

விடிந்தது.

## 7. சடையன் பேசுகிறான்!

கோடி வேட்டியும் கொவ்வைச் செவ்வாயுமாக நின்றான் சடையன். அவன் ஏதோ பேச வேண்டுமாம்.

''கண்ணாலப் பறுக்கை மிஞ்சிப் போச்சுங்க. மூச்சு முட்டுது. அதுக்காவ, சொல்லிப்பிடவேண்டியதைச் சொல்லாம இருக்கலாமுங்களா? ..... காளையைக் கொண்டுகிணு போனது பொன்னம்பலந்தான்னும், அவுக ஊட்டிலேதான் இதுக்குத் திருட்டாந்த மாட்டம் மாட்டுக்கழுத்துச் சங்கிலி கயிறுத்துணுக்கு அல்லாம் கிடந்திச்சுதின்னும், மாட்டுக்காலடிகூட இருக்குதின்னும் ஒரு கடுத்தம் எசமானர் கிட்ட நான் எடுத்துக் காட்டலீங்களா? அதை எட்டி நின்னு ஒட்டுக்கேட்டிருக்குது செவந்தி. ஓடிப்போயி, பொன்னம்பலம் ஐயா ஊட்டிலே எட்டிப்பார்த்திருக்குது. எதையும் காணாமப் போகவே, அதுக்குச் சம்சயம் முளைச்சிருக்குது. என்னைக் குடைஞ்சு குடைஞ்சு கேட்டுச்சு. இதுக்கு சின்ன ஐயா கிட்ட உள்ள அணைகடந்த ஆசையை நான் அறிஞ்சவன் தான். அதுக்காவ, எங்க பெரிய எசமானர் நாடகத்தை இதுகிட்டே மூச்சுக் காட்டலாமுங்களா?... எந்தலையை ஒரே லாந்திலே லாந்தி, முதுகுத் தோலை உறிச்சு உப்புக்கணம் போட்டுப்புட

மாட்டாராங்காட்டியும்?......ஆனா, அது ஆசைப் பட்ட ராசாவைக் கட்டிக்கிட வாய்க்கலையேங்கிற தொல்லையிலே நஞ்சு தின்னுறதுக்குக்கூட துணிஞ் சதை அறிஞ்சதும், எம்மனசு துடிதுடிச்சுப் போச் சுங்க.

நான் காண வளர்ந்த ராசாத்திங்க இது! .. எந்தோளிலே போட்டு வளர்த்த சொக்கத் தங்க முங்க எங்க செவந்தி, ஒரே மூச்சிலே நடந்த திரு விளையாடல் அல்லாத்தையும் புட்டுப்புட்டு வச்சுப் பிட்டேன். செவந்தி சுட்டிப் பெண்ணாச்சுங்களே? .. நில்லாமல் நிலைக்காமப்போய். இந்த அந்தரங்கத் தைத் தன் நேசமச்சான் காதிலே போட்டிருக்குது. காளையைப்பத்தின ரகசியத்தை அறியவேண்டி சோறு தண்ணி சொல்லாமச் சுத்திகிட்டிருந்த பொன் னம்பலம் ஐயா, இந்தப் புடை கிடைச்சதும் பாய்ஞ்சு வந்து, எங்க முதலாளியை உலுக்கிப்பிட்டாராம் உலுக்கி!......

மைனர் செல்லையாவோட திருக்கூத்தையும் எங்க செவந்திக்கு எச்சரிக்கை பண்ணி, அதுக்கு ஒப்ப, தோப்பிலே மயங்கிக்கெடந்த அந்த ஆள் பக்கத்திலே இருந்த சாராயப்பானைக் கையோட தூக்கியாந்து ஒப்படைச்சதும், செல்லையா இங்கிற பேர் பின்னின சிங்கப்பூர்ச்சீமை கைப்பிடித்துண்டை அது கிட்டத்தந்ததுவும் இந்த சடையன் தானுங்க'... பின்னே என்னவாம்?.. குடி கெடுக்கக்கூடிய குடி காரப் பயலுக்கா எங்க மவராஜியைக் கட்டிக் குடுப்போம்?.. அந்த செல்லையாவாலே என் சுட்டு விரலைக்கூட அசைக்க ஏலாதுங்க!...ஆனா, எங்க கங்காணி எசமானர் நல்லதனமாக மாறி, என்னை

யும் மன்னிச்சுப்பிட்டதானது ரொம்பப் பெரிய அதிசயந்தானுங்க!...

முதலாளி வூட்டிலே பொங்கல் வச்சு, சாமி கும்பிட்டு முடிஞ்சடியும், ராவிலே பரிசம்போட்டு, காலம் நேரம் கணிச்சு கண்ணாலமும் நடந்து முடிஞ்சுருச்சு!... இப்பத்தானுங்க எங்க செவந்திப் பொண்ணு மூஞ்சிலே களை பூத்திருக்குது. பொண்ணுன்னா பொண்ணு கெட்டிக்காரப் பொண்ணு போங்களேன்! எங்க செவந்தியையும் சின்ன ஐயாவையும் எழுதிக்கிடக்கச் செய்யவேணும்... ஆத்தா! .... இவுகளுக்குக் கண்ணாலச் சீதனமாகக் குடுத்திருக்கிற ஏரோப்புளேன் காளைக்கு இனிமேலவும் நானேதானுங்க காவல் இந்த மீசைக்கார ஆம்புள்ளே கோடுகிழிச்சா, அதைவிட்டுத் தாண்ட மாட்டாதாக்கும் அது! ... இந்தக் கடுத்தம் நடந்த மஞ்சி வெரட்டிலேகூட அதை யாராலவும் நாடக்கூட ஏலலையுங்க! நடந்த தாக்கல் சாடாலையும் நினைச்சாக்கா, மலைப்புத் தட்டுதுங்க!... ஆமாங்க அல்லாமே ஆத்தா மூத்தவளோ அம்பலக்கூத்தே தானுங்க!..."

❋ ❋ ❋

# 4. பத்ரகாளியின் கற்பு!

'சபாசு!''

அப்பொழுதுதான் பவளக்கொடிக்கு நல்ல மூச்சுத் திரும்பியிருக்க வேண்டும்! வாயெல்லாம் பல்; பல்லெல்லாம் பூஞ்சிரிப்பு; சிரிப்பெல்லாம் சுகந்தம் ஈரம் மிக்க, தர்ம நியாயமான, நாணயம் மிகுந்த தாணம்!—'நாளு மூச்சூடும் சும்மா நொடிக்கு நூறு வாட்டி தொண தொணத்துக்கினு இருந்த ஆத்தா இனிமே ரெண்டு மூணு நாளைக்காச்சும் மூச்சுக் காட்டாதாக்கும். ஆத்தா இல்லாங்காட்டி, சமைஞ்ச குட்டி எனக்கு எங்கழுத்திலேயும் ஊரு உலகத்தைப் போலே மூணு முடிச்சு விழுகிறமட்டும், யாரு எனக்கு நாதியாம்? ம்... ஆத்தா நல்லா எழுதிக் கிடக்க வேணும்...ஆனா, ... ஆத்தாக்காரி முணுமுணுப்புக் காட்டாமல் இருந்தாக்க, அதுவே புண்ணியந்தானே! ஊம்! ..'அந்தப் புன்னகையில் தான் எத்தனை சத்தியக்கனவுகள்...சத்திய தருமங்கள்!'

அந்தி மாலையின் மணம் பொன் வண்ணக் கதிர்களிலே பரவத் தொடங்கி விட்டது.

அவள் பெருமூச்சு விட்டாள்; இனிய நினைவுகள் சுந்தரக் கனவுகளாகச் சூழ்ந்தது; பூ நாகமாக மீண்டும் நெடுமூச்சு நெளிந்திட. தலை நிமிர்ந்தாள் அவள். தலையை நிமிர்த்தினாள் அவள். நெருஞ்சி முள் நெஞ்சில் குத்தி விட்ட மாதிரி துடித்தாள்; சரிந்து கிடந்த மார்புச் சுங்கடியின் முகதலைவைப் பதட்டமும் பரதவிப்புமாகத் தோளிலே போட்டுக்கொண்டாள்; விம்மிப் புடைத்திட்ட இளம் மார்பகம் கதை

அலையென அடங்கியது; முடங்கியது! 'அடி ஆத்தே!' கொட்டடி ரவிக்கையின் அடிமுடிச்சு இப்போது கெட்டி; கச்சிதம்!

வெய்யிலில் இளந்தென்றல் இன்பச் சல்லாபம் நடத்தத் தொடங்குகிறது.

காலடியில் அம்பரமாகக் குவிந்து கிடந்த சவுக்கைச் சுள்ளிகள் கூளமும் காயுமாகக் கண் சிமிட்டிக் கொண்டேயிருந்தன; இன்னமும் கூட!

எங்கிருந்தோ, என்னவோ ஒரு குருவி குரல் கொடுக்கிறதே! இயற்கைக்குக் கொடுக்கும் பின்னணிக்குரலோ?

குரலின் தரம் என்ன?

காதற் குரலா?

இல்லை...

விரகதாபக் குரலா?

இருந்திருந்தாற்போலே, வானம் 'மப்பு' போடத் தொடங்கி விட்டது.

பவளக்கொடி தவித்தாள்; இனம் புரியாத வகையில் அச்சம் நெஞ்சில் நெளிந்தது. ஆகவே, பிடி கயிற்றைக் கட்டாந் தரையில் வாகாகவும் லாகவமாகவும் வீசிவிட்டு, ஒரு 'குடங்கை' சவுச்கைக் கூளத்தை அப்படியே கொத்தாக அள்ளி வீசினாள். அதோ, பச்சைப் பனைமட்டை ஒன்று மல்லாந்து கிடக்கிறது! பலே! கயிற்றைத் தெற்கு வடக்காக வீசி, மையத்திலே பனை மட்டையை வாகு கணித்து 'முட்டு' போட்டாள். இனி, சுள்ளிக்கூளங்களை 'மூசு மூசு' என்று கொத்துக் கொத்தாக விசிறி பரப்பிக் கட்டிக் கொண்டு கண்பாவ வேண்டியதுதான் பாக்கி! மறுபடி மேலாக்கு அவளைச் 'சீண்டுருவம்' பண்ண நழு

வப்பார்த்தது. பவளமா கொக்கா?—'நல்ல காலம்! சத்தமுந்தி, மேனியிலே மேலாக்குத் துணி இல்லாம அசிங்கமாய் இருக்கையிலே, அந்நியம் அசல் யாரும் என்னைக்கண்டு வைக்கல்லே! அதுவும் கூட, ஆத்தா மூத்தவளோட கருணைதான் போலே!...

சவுக்கைத் தூள் கட்டு உயர உயர அந்தி மஞ்சள் நிறம் மாறிக்கொண்டேயிருக்கிறது!

கருக்கலில் நெல் அவிக்க 'செத்தை—சருகு' ஏதாகிலும் வேண்டுமேயென்று அங்கலாய்த்த ஆத்தா, குச்சைவிட்டுப் புறப்பட்ட சமயம், சிவப்புலாந்தர் காட்டிய எச்சரிக்கையை அவள் எங்ஙனம் மறப்பாளாம்?—'ஆமா; சமைஞ்சபொண்ணு நான்! எனக்கின்னு பரிசம் போட்டிருக்கிற அந்தப் பனங்குளம் மச்சு வீட்டு மச்சான் கையிலே என்னை நான் காவல் வைக்கிற மட்டுக்கும், எனக்கு நானே கண்ணிலே விளக்கெண்ணெய் ஊத்திக்கினு காவல் இருந்து தானே தீரவேணும்!... அப்பத்தானே கண்டிக்காரர் மக வயித்துப் பேத்தி பவளம் பரம்பரைப் பெருமை மாறாத சொக்கப்பச்சையாக்கும்!' என்கிற நல்ல பெயர் நாணயமாய் நிலைச்சுப் பேர் சொல்லவும் வாய்க்கும்! .. 'ஆடி கழிஞ்சாப்பலேதான்! ஊம்; அல்லாம் ஆத்தா காளியோட கடாட்சமே தான்!' கண்கள் பொடிக்கின்றன. அந்தச் சுடுநீரில் ஆத்தா சித்து விளையாடுகிறாளோ?...

'கா...கா...கா!'

பவளம் சுதாரிப்புக்கொள்ளலானாள். சிந்திக் கிடந்த சுள்ளிகளைக் கூட்டியும் குவித்தும் அள்ளிப் போட்டு ஒழுங்குபடுத்திய பின், 'ஒண்டிக்கையாகக் கயிற்றை இழுத்துப் பறித்துச் சவுக்குக் கட்டைக் கட்டி முடித்தபோது, வேர்வை மாத்திரம் சிந்தவில்லை; ஆற்றாமைப் பெருமூச்சும் சிந்தியது.

மனிதனின் மனம் மட்டும் தான் அடிக்கடி பச்சோந்தியாக நிறம் மாறும் என்பதில்லை; வானமும் தான் நிறம் மாறுகிறது. இருந்திருந்தாற்போலே, மப்புப் போடத் தொடங்கிற்று.

ஆம்.

'பவளக்கொடி இனி குச்சுக்குத் திரும்பியாக வேண்டும். பொட்டுப் பொழுதுகூட தாமதிக்கக் கூடாது. ஆத்தா தள்ளாமையோடு உருகித் தவித்துக் கிடப்பாள், பாவம்! ஆசைக்கும் ஆஸ்திக்குமாக, ஒரே யொரு கறிவேப்பிலைக் கொழுந்து. விதியின் பிழை அது!—மற்றபடி, அப்பன்காரனைப் பிழை சொல்ல இயலாது. இருபது குழி சோளப் புஞ்சைத் தாக்கு; வானம் பார்த்த மண்ணில் வானத்தையே பார்த்துத் தவம் இருந்த கேணி; இரண்டு பசு; நாலு ஆட்டுக் குட்டி. கொஞ்சத்துக்குக் கொஞ்சம் ஏதோ சேர்த்து வைத்துவிட்டுத்தான் கண்களை மூடிக்கொண்டாள். ஓ, அமாவாசைக் கெடு வேறா?—ம்..கஞ்சிப்பொழுதுக்கு உப்புக்கல் தூவிக் கஞ்சி குடித்தவள். பசிக்கும் தாராளமாகவே பசி எடுக்கும். கன்னிப்பசி ஆயிற்றே! பயணப்பட வேண்டியது தான். போகும் வழியில் ஆயி பத்ரகாளியைக் கண்டு தண்டி, ஒரு கூழைக் கும்பிடு போட்டு விட வேண்டும்! 'ஊருக்கு மூத்தவளைத் தரிசிச்சு உண்டன நாள் ஆச்சுதே!'—பக்தியில் பாசம் மனிதாபிமானத்துடன் உருகியது. கன்னிக்குக் கன்னி இரங்க வேண்டாமா?

ஒரு பட்சி எங்கிருந்தோ ஏனோ கரைகிறது!

அவளுக்கு—பவளத்துக்கு என்னவோ ஒரு பயம் நெஞ்சைத் துளைத்தெடுக்கத் தலைப்பட்டது. 'காப்புக்கடந்த ஆத்தா காப்பாக இருக்கையிலே, நான் என்னத்துக்கு அச்சப்படோணுமாம்?'

என்ன அரவம் அது?

கால்களின் சதங்கை ஒலியா?

' ஏலே, பொண்டுகளா? ஓ, செவ்வந்திக் குட்டி ஏட்டி, பூரணியோ! அடியே, கருப்பாயி! '

கூட்டுக்காரி ஒருத்தியையுமே காணோமே? கண் கட்டு மாயமாய் அந்திக் கட்டிலே எங்கே தொலைந் தார்களாம்?...ஒரு வேளை, 'ஈசான்ய முடுக்கில் இருந்த பத்ரகாளிகோயில் கம்மாயில் விழுந்து புரண்டு கொண்டிருப்பார்களோ? விடிசாமத்திலே அபூர்வமான அதிசயமாக வானம் கண் திறந்ததன் விளைவாக, வயல் வரப்புகளைச் செய் நேர்த்தி பண்ணி நிலக்கடலை விதைக்க பூர்வாங்க ஏற்பாடு கள் செய்வதில் முனைந்திருந்த அந்தப் பெண்களுக்கு ஈரம் தேவைப்பட்டாலும் தேவைப்பட்டிருக்கலாம்!

இனியும் இந்தப் பொட்டல் காட்டிலே தனியே நிற்கக் கூடாது?

சவுக்குத் தோப்பிலிருந்து 'ஙொய்—ஙொய்' என்ற அரவம், அரவம் சீறுவது மாதிரி கேட்டது.

அந்த இடுக்கில் பத்ரகாளி கோயிலின் கோபுரக் கலசம் துலாம்பரமாகவே தெரிந்தது.

பவளத்துக்கும் உடம்பு அரித்துப் பிடுங்கிறது. முதுகுப்புறத்து ரவிக்கையை நீம்பிவிட்டவளாகச் சொரிந்து கொள்ளலானாள். மாங்குடிச்சேரி எல்லையில் இருந்த சாம்பான் தாக்குப் புஞ்சைக் காட்டில் ஆயி சகிதம் இவளும் மண்ணே கதி என்றிருந்தவள் தான்! இனிமேல் பயம் இல்லை. பஞ்சம் பஞ்சாய்ப் பறந்து விடும்! ஆடிப்பட்டம் பலன் காட்டி விடும்!...ஆமாம்; வானம், ஒரு முறை கண் திறந்து விட்டால், அப்புறம் கொட்டாமல் நிற்கா தாம்!— சீதைப்பாட்டி சொல்ல மாட்டாளா?—

குளிக்கலாமா? ஊகூம், ஏலாது; கூடாது! மல்லுக் கட்டி எப்படியாச்சும் சவுக்கைக் கட்டைத் தூக்கித் தலை மேலே வச்சுக்கிட்டு நடந்து போய், பத்ர காளிக்கு ஒரு கும்பிடு போட்டுப் புட்டு, மேற்காலே மறுகி நடந்து, ஆவணத்தாங் கோட்டைச் சாலை எல்லையை மிதிச்சுட்டா. அப்பாலே, இருட்டும் ஒண்ணும் செஞ்சிடாது; பின்னே, எதுவும் எதையும் செய்ய வாய்க்காது'! மண்ணின் ஈரம் கண்களில் கசிகிறது.

வேடிக்கைதான்!

மப்புக் கலையத் தொடங்குகிறது; மஞ்சள் கதிர்கள் பொன் முலாம் பூண்டு, பொன் மூலம் கொண்டு சுவடு காட்டிக் கண்ணாமூச்சி காட்டிக் கொண்டிருக்கின்றன போலும்!

'பத்தை'ச் செடிப் பக்கம் அரவம் கேட்டது, யாரையுமே காணவில்லையே!...

இப்போது பவளத்திற்கு ஒரு புதுத் தெம்பு, பழைய நெஞ்சுரத்திற்குப் புதிய பலம் கூடியது; கைக் கூடியது. 'ஆத்தாடியோ!' மூச்சைப் பிடித்துக் கொண்டே, சவுக்குக் கட்டை லாந்தித் தூக்கி தலை சும்மாட்டில் பொருத்தி வைத்துக் கொண்டே, இடது கால் பெருவிரலால் வாங்கரிவாள் கம்பை வாகு கணித்து எடுத்து வலது கைப் பிடுப்பில் ஏந்தியவாறு நடக்கத் தொடங்கினாள் பவளக்காடி—! அழகுச் சிலையாக மோஹினிச் சிலையாக!...உள்பாவாடை இப்போது கால்களில் பின்னவில்லை!

தொடரும் விதி, விதிக்கு மட்டும் தான் என்றில்லை; நிழலுக்கும் அவ்விதி உண்டோ?

அந்திக் கன்னியின் கண் பொத்தி ஆட்டம் தொடர்கிறது; தொடர்ந்து கொண்டிருக்கிறது.

நல்லவேளை, மப்பு போட்டு வைக்கவில்லை. ஆடி மேகத்தின் மனத்தை யாரால் படிக்கக்கூடும்?— சித்தம் போக்கு, சிவன் போக்கு!

பவளம் நடக்கிறாள்; நடந்து கொண்டேயிருக்கிறாள்!—தலை மட்டிலும் சுமக்கவில்லை; நெஞ்சுந்தான்!—மடியில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருப்பது போன்ற வேதனை; பயம்; தவிப்பு; தன்மை. சுள்ளி பொறுக்க கூடமாட வந்த தோழிமார்களைக் காணவில்லை. குளித்துக் கொண்டிருந்தாலும் இத் நேரமா குளிப்பது? சே! ..அச்சம் இல்லாத பெண்டுகள்! ஒருவேளை, எதையாவது காற்றுக் கறுப்பைக் கண்டு பயந்து பறந்திருப்பார்களோ? ஒன்றும் மட்டுப்படவில்லை; விளைவு, பயம் கூடியதுதான் மிச்சம். எப்படியாவது காலாகாலத்தில் வீட்டு வாசலை நல்லபடியாகவும் நல்லதனமாகவும் பத்திரமாகவும் பண்பும் பதவிசாகவும் மிதித்தால்தான் நல்ல உயிர்வரும்; நல்ல மூச்சும் திரும்பும். இந்நேரம் ஆத்தாக்காரி வயற்காட்டிலிருந்து மீண்டிருப்பாள். பாவம், இந்தக் கெட்டவளோட மேனிக்கு ஒத்துக் கொள்வதில்லை. இருமல் விட்டால் தானே? வயசும் ஆகிவிட்டது. ஆத்தோடு, சோறும் ஆக்கிவைத்துக் கொண்டு, திட்டி வாசல் வேப்பந் தூரடியில் காத்துத் தவம் இருப்பாள்! 'ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு நீ! ஒனக்கு அக்கம் பக்கம் மெச்சறாப்பிலே கண்ணாலம் காட்சியை மோக்ளாவாகச் செஞ்சு' முடிச்சிட்டாய் தான் எங்களுக்குப் பெருமை. உன்னோட நேசமச்சான்கிட்டே ஊரறிய,உலகம் அறிய, ஆத்தா மூத்தவ பத்ரகாளி அறிய நீ ஒண்டிக்கிட்டால் தான் ஒனக்குப் பெருமிதம்!' பூநாகமெனச் சீறியது நெட்டுயிர்ப்பு. மார்பகம் எம்பி எம்பித் தாழ்ந்து கொண்டிருந்தது. காட்டு வழியில் வண்ணத்துப் பூச்சி

விதிக்குப் பயப்படாத பாவனையில் சிறகடித்துச் சுயேச்சையாகப் பறக்குமே, அப்படி!

ஒன்றிரண்டு காக்கைகள் மாத்திரமே இப்போது கூடு நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்றன.

இன்னமும் பொழுது இருக்கிறது. பலே!...

பத்ரகாளியின் ஆலயம் இதோ, வந்து விட்டது.

சாலப் பரிந்து பாசம் சொரியும் அன்புத்தாயை எண்ணிய மாத்திரத்திலே நெஞ்சில் பீறிடும் பாச வெள்ளத்தில் பொட்டுப் பொழுது மெய்ப்பறக்கவும் பவளக் கொடிக்கு முடிந்தது. 'ஊராண்டு உலகாளும் பத்ரகாளி ஆத்தாளை ஒரு நடை கும்பிட்டுப்புட்டு, சுருக்கண திரும்பிடணும். ஆத்தா துணைக்குக் காவல் இருக்கையிலே, நான் எதுக்குப் பயப்படவேணும்?... அல்லாத்துக்கும் ஆத்தா ஒருத்திதானே சதம்!' ஒரு வாட்டிக்குப் புகையிலைக் காம்பைக் கிள்ளி 'கொடும்பில்' அடக்கிக்கொண்டால் கள்ளாப்பு வரும்; உணக்கையாகவும் இருக்கும்.

'பட்'டென்று ஓர் அரவம்! —அரவம்—சத்தம்!

தலைச்சுமைக் கட்டு வீழ்ந்தது; விழுந்தது, வாங்கரிவாளும் தானே?

சுங்கடியின் முந்தானைத் தொங்கலில் இரண்டு முடிச்சுப் பாய்ச்சி முடிந்திருந்த புகையிலைக் காம்பை அவிழ்த்து விசையோடு கிள்ளுவதற்குள், நாக்கு ஊறவும், பழக்கவழக்கத்தின் வெறிக் கிறக்கம் விஞ்சி மிஞ்சவும், அவள் காம்பைக்கிள்ளி, மொத்தமான பகுதியைக் கடை வாய்க்குள் திணித்துக் கொண்டாள். பனங்குளம் மச்சான் சொல்லிக் கொடுத்த பழக்கம் அல்லவா? ஓர் உரிமையோடும் உரிமையின் உறவோடும் உறவின் ஒட்டுதலோடும் அவள் புகையிலையைச் சுவைத்துக் கொண்டிருக்கை

யில், என்னவெல்லாமோ இன்ப நினைவுகள் இன்ப வேதனைகளுக்கு ஒரு வார்ப்படமாகப் படம் விரித்தும் படம் எடுத்தும் விளையாடத் தொடங்கின; விளையாட்டுக் காட்டவும் தொடங்கியிருக்கலாம். முறைமச்சானான பனங்குளம் பழனியை முறையாக நேசித்துப் பழகி அந்தப் பண்பாடும், பண்பாட்டுடன் ஒற்றைத் தடத்தில் அவனும் அவளும் அந்நியோன்யமான பாசத்தோடும் பரிவோடும் அன்போடும் ஆசையோடும் பழகி, தங்கள் நேசத்தை ஊரறிந் திடப் பிரகடனப்படுத்திய நேர்மையும், நேர்மையின் பரிசிலாகப் பரிசம்போட்டு, ஆவணிக் கெடுவில் இருவரும் ஆசை மச்சானும் நேசக் கண்ணாட்டியுமாக உருக்கொண்டு உருமாறப் போகின்ற சுபவேளைக்குக் கிட்டிய அங்கீகாரமும் இப்போதும் அவள் நெஞ்சக் கிழியில் நிழலாடத் தவறி விடவில்லைதான்! புனையா ஓவியம் பெருமூச்செறிகிறது. ஓர் ஏக்கம்: இனம் புரியாத ஒரு தவிப்பு.

எங்கேயோ நரி ஊளையிடுகிறது. அதற்கு இதைப் பார்க்கிலும் வேறு வேலை என்னவாம்?

கம்மாய்க்கரையில் தோழிமார்கள் இல்லை!— பவளத்துக்குச் சுருக்கென்றது. இனி, கண்கொட்டும் பொழுதுகூட இந்தக் காட்டு வெளியில்—வழியில் கால் தரிக்கக்கூடாது!...மூச்!

ஆந்தாளைச் சேவிக்க வேண்டும்!

பவளம், அந்தப் பத்ரகாளி கோவிலுக்குள் அடியெடுத்து வைக்கிறாள். புகையிலை எச்சிலைக் காறித் துப்பிவிட்டு, வாய் கொப்பளித்து வர வேண்டுமென்றுதான் நினைத்திருந்தாள்; மறந்தாள். இனிபோய் மீள முடியாது; நேரமில்லை!

''ஆத்தா!'' என்று பக்தியின் உணர்ச்சிகள் பொங்கிக் குமுறிக் கொந்தளிக்க வாய்விட்டு விளித்தவளாக உட்பிரகாரத்தில் வந்து நின்றாள். ஓர் ஈ, காகம் இல்லை; வெளவால் பண்ணைகளைக்கூடக் கணோம். மேலக் குடியிருப்பின் புதிய பணக்காரரான கண்டிக் கங்காணி சிவலிங்கத்தேவர் இந்த வியாழச்சந்தைக் கெடுவிலே ஆத்தா பயங்கரிக்குப் பட்டுப் பாவாடை சாத்தி, சந்தன அபிஷேகம் செய்து, பள்ளயம் படைத்துக் கும்பிட்டு, நேந்துதல்- வேண்டுதல் செலுத்திய சங்கதியை எண்ணிக் கொண்டிருக்கையில், உள்ளே என்னவோ அரவம் கேட்கவே, அரவம் கண்ட பாவனையில் தட்டித் தடுமாறியவாறு பார்வையை உள் வசமாக நெட்டித்தள்ளினாள்.

வெளிச்சம் விதியாக விளையாட வேண்டிய கருவறையிலே, இருட்டு விதியாக விளையாட, ஓர் உருவம்...என்னவோ ஓர் உருவம் விதியின் சூட்சுமம் மாதிரியாகக் கண்டும் காணாமலும் தெரிகிறதே...

தூண்டாமணி விளக்கு எங்கே? பூசாரி உச்சிப் பூசை வைத்து விட்டு எப்போதோ காடுமாறி ஓடியிருப்பார்!

பின், என்ன சத்தம் அது?...

பவளம் ஓர் எட்டு எடுத்துவைத்தாள். இருளின் தவிப்பு; தகிப்பும் கூடத்தான்!

''பத்ரகாளி ஆத்தாளே!...ஊருக்கே மூத்தவளே? ஒலகத்துக்கு ஒசந்தவளே!...உத்தமியே, பயங்கரியே!...நீ ஒண்டிதான் எனக்குச் சதமும் சகலமும்! பவளம் குணம் ஒனக்குத் தெரியாதாங்காட்டி; மறுகா என்னவாம்? நான் ஒன்னோட கால் தூசுக்குக்கூட சமட்டி ஆக ஏலாது. ஆனாலும், நான்

நி—5

ஒனக்கு குஞ்சுஆச்சே? தாய்க்கும் மகளுக்கும் உள்ள பாசத்தோட அர்த்தத்தையே ஊருக்கும் ஒலகத்துக்கும் சதா படிப்பிச்சிக்கிணு இருக்கிற சாட்சிக்கல் ஆச்சே, ஈசுவரியே! ஆனாலும், உன்னோட கல்லிலே இருக்கிற ஜீவன் எனக்குத் தெரியும்! ஆமா, ஆத்தா, ஆமா!' கண்கள் பொடிக்க கருவறை நோக்கி புதிய வல்லமை கனிந்திட நடந்தாள் கொடி. அவள், பத்ரகாளியா? ஊஹூம்! பவளம்! — பவளக்கொடி!— கொடிப்பவளம்! கொண்டைப் பூக்கள் காலடிச் சுவட்டில் அமிழ்ந்தன. "யாரது?" என்று ஓங்காரக் குரலெடுத்து, உச்சாடனக் குரல் கூட்டி விதியென வினவினாள். அவள் கன்னிப்பூ! பூவின் மணமென பவளக்கொடி பத்ரகாளி சந்நிதி முன்னே வந்தவள் தடுமாறித் தயங்கி நின்றாள். ஒரு கணம்; ஒரே கணம்!

"யாரது கேட்கிறது?—"

மௌனத்தைச் சுட்டெரித்தவாறு பத்ரகாளியின் முகத்தைத் தடுத்து நின்ற அந்த உருவம் எதிர்க் கேள்வி கேட்டது.

அந்த உருவம் யாருடையதாம்?

பவளத்துக்குத் தீ சுட்ட மாதிரி இருந்தது; தீயாகச் சிரித்தாள். "நான் ஆத்தாளுக்குக் குஞ்சு .. கேட்கிறேன்! நீங் நீ யாராம்? ஆத்தா கிட்டே என்னா செய்யிறே நீ? ..." இன்னமும் அவளால் அவ்வுருவத்தை இனம் கண்டுகொள்ள முடியவில்லை. ஆனால், ஆண்மை வடிந்த ஆத்திரத் தொனியின் பிசிறு மட்டும் அவளுள் ஒலித்துக் கொண்டிருக்கிறது. யார் அந்த அயோக்கியன்? பெண்மையின் கடன் உணர்வு சீற்றம் கொண்டது. பற்களை 'நறநற' வென்று கடித்தவளாக, பதட்டத்துடன் முன்னே நடந்தாள். புண்ணிய பூமியின் பயங்கர மோனத்தை

முட்டித் தள்ளியபடி, இருட்டின் ஒளியாகப் பயந் தாள் உள்ளே. ''அடப்பாவி!'' என்று ஓங்காரமாக வீரிடலானாள் பவளம். ''ஐயையோ! உன்னோட பாளத்த பாவக் கையினாலே தொட்டு அம்மன் பாவாடையையா அவிழ்த்துக்கிட்டு இருக்கே? மழை தண்ணி இல்லாம, இம்மாம் நாளும் நாமெல்லாம் நித்தம் நித்தம் செத்துச் செத்துப் பிழைச்ச இரு சாமப் பொழுதுகளை மறந்துப்புட்டியா நீ? ஆத்தா மூத்தவ, மனசு இரங்கி நமக்குத் தண்ணி காட்டின அருமைக்கு நன்னிகூட ஒனக்கு இல்லியா, பாவி மகனே? ..சீ! எடுடாவே உம்பிட்டுப் பாழாய்ப்போன கையை! டேய்! கையை இப்ப எடுக்கப் போறியா? இல்லே, உங் கையைப் பிடுங்கிக் கடிச்சுக் குதறிக் காறித் துப்பிப் போடவா?'' என்று ஆத்திரமும் ஆவேசமும் பொங்கிக் கொந்தளிக்க அலறினாள் அவள். அவள் காளியா?—பவளம்!

ஆனால்...

அந்தப்பாவி கையை எடுத்தால் தானே? மேற்கொண்டு சிரித்தான்; பலமாகவும் பலவந்தமாக வும் தன்னுடைய பாவத்தின் விதியைச் சிரிப்பாக்கிச் சிரித்தான்; ''விடிசாமத்திலே கண்ணு மண்ணு புரியா மல் அத்தி பூத்ததாட்டம் அடிச்சுப் பேஞ்ச மழை யிலே, ஆடு மேய்ச்சிக்கினு இருந்த எம்புட்டுத் தாயில் லாப் பொண்ணு செவகி நனைஞ்சுக்கிட்டே குடிசைக் குத் திரும்பிச்சு; முட்ட நனைஞ்சி போயிட்ட ஈரப் பாவாடைக்கு—ஆயிரம் கிழிசல் கொண்ட அந்தப் ஈரப்பாவாடைக்கு மாற்றுப் பாவாடை இல்லே எங்குச்சிலே! கடோசீலே, என்னோட ஒரேயொரு கிழிசல் கந்தல் வேட்டித் துணியைக்கொடுத்து, மக மேனியை மூடிக்கிடச் சொல்லி அழுதேன்; ஆஸ்திக்கு இல்லாட்டியும் என்னோட ஆசைக்கு அருமையான கருவேப்பிலைக் கொழுந்து கணக்கிலேயுள்ள என்

அருமை மகள் மானமே அங்கிட்டு காற்றிலே பறந்து கிட்டு இருக்கையிலே, இந்த வெறும் கல்லோட மானம் போனால் என்னவாம்? குடியா முழுகிப் பூடும்? கல்லுக்கு மானம் ஒரு கேடா? எம்மகள் ஒரு பொட்டையாச்சே? எம்புட்டுத் தங்கத்துக்கு அவசியமா—அவசரமா இப்ப இந்தப் பாவாடை வேணும்! ஆமா! ..'' விதியை வெட்டி வீழ்த்தும் அகங்காரச் சிரிப்புடன் கோவண ஆட்டியென இருட்டோடு இருட்டாகக் குமைந்து நின்ற அவன் அம்மன் பாவாடையை உரிவதில் ஈடுபடலானான்!

அவ்வளவுதான்!...

''அட, பாவி!''

அந்தப் பாவியின் கரங்களை 'வெடுக்'கென்று உடும்பாகப் பற்றி 'பைக்'கென்று கடித்துக் குதறி விட்டாள் அவள். அவள் பத்ரகாளியா, என்ன! அவள் பவளம்! வீரிட்டுப் பீறிட்ட ரத்தத்தின் துளிகள் சிந்திச் சிதறித் தெளித்த அம்மன் பட்டுப்பாவாடையைப் பிடுங்கிப்பறித்து, அம்மனுக்கு மீண்டும் உடுத்து விட முனைந்தாள்; ''ஆத்தா மூத்தவளே! நாங்க ஒன்னோட குஞ்சுங்க; வெறும் குஞ்சுங்க. ஆனா, நீ வெறும் கல் இல்லே! ஆனதாலே, எங்களைச்சமிச்சு எங்களுக்கு 'மாப்புக்கொடு' தாயே!... இந்த மிருகம் தன் பிறவிக்கடனை மறந்து, அத்தோட தன் விதியையும் மறந்து, இப்ப பாவி ஆகிப்பூட்டான்! இவன் ஆத்திரத்திலே தப்புப்பண்ணிப் போட்ட தொப்ப நீ வெறும் கல் இல்லே என்கிற தெளிஞ்ச புத்தியை இவனுக்கு உண்டாக்கிக் கொடு, பத்ரகாளி! ஒன்னோட விதிமூலமா யுகாக்கினிக்கற்புக்கு நான் பணயம் இருப்பேனே, ஆத்தாளே பத்ரகாளியே!—'' ரத்தத்தைக் கண்ணீராக்கி தீக்குச்சியைக் கொளுத்தினாள்; நடுங்கிய கைகளால் பாவாடையை உடுத்து

முடித்தாள். "ஆத்தா!" என்று நெஞ்சு வெடிக்க ஓலமிட்டவளாக நெடுஞ்சாண் கிடையாகத் தாயின் பாதங்களிலே சரணடைந்தாள்.

தூண்டாமணி விளக்கின் ஒளியிலே—பத்ரகாளி! சிரிக்கிறாளா?—கன்னத்தில் சிவப்புப் புள்ளியா?

இப்போதுதான் அவள் சுயப்பிரக்கினை கொண்டிருக்க வேண்டும்!

ஆனால்—

அவன் பேயடித்த மாதிரி இரண்டாம் சிலையாக அப்படியே நின்று விட்டான் இன்னமும்!

பவளம் நெருங்கினாள். வழிந்த ரத்தக் கண்ணீருக்கு வடிகால் கட்ட இதுவா வேளை? இடுப்பில் செருகியிருந்த சுங்கடி முந்தானையை அவிழ்த்து விட்டாள்; நடுங்கும் கன்னி மேனியைக் கட்டிக் காத்து நின்ற சுங்கடியை மெல்ல மெல்ல — மெல்ல மெல்ல அவிழ்த்தாள். 'ஆத்தா'...!ஓட்டி ஓட்டி நடந்தாள். "அண்ணாச்சியே! ஒங்க ஆசைகளுக்கு மானத்தைக் கட்டிக் காக்க ஒரு சேலைத் துணி தானே வேணும்? இந்தாங்க, எடுத்துக்கிடுங்க!—" சுங்கடியை வீசினாள் அவள் அரவம் கண்டவளாகக் குலை நடுங்க, அங்கிருந்து பாயத்தலைப்பட்டாள்—விதியாக... வினையாக...

அப்போது—

"ஏ, குட்டி! ..அப்படியே அங்கணேயே நில்லு!"

அந்தப்பாவியின் பயங்கர முகம் ஏன் அப்படி விகாரமடைந்து கொண்டிருக்கிறது?

தீயைத் தீண்டியவளாகத் துடித்து நின்றாள் கன்னிப்பவளம்! .. அவள் அவனை விழுங்கிவிடப் போகிறாளா, என்ன! விதியின் நாயகியா?

"ஈட்டி! எனக்கு உம்பிட்டுச் சேலை என்னாத்துக் காம்? எனக்கு இப்ப நீதான் வேணுமாக்கும்!" வெறி மூள, தீர்ப்புப் படித்தான் அவன்.

"ஐயையோ பாழும் தெய்வமே!" மண்முட்டி விண்முட்ட, விண்முட்டி மண்முட்ட அலறினாள் பவளக்கொடி. மறு இமைப்பில், நேர்வசமாகத் தமிழச்சியாகப் பாய்ந்தாள். "அட பழிகாரிப்பாவியே! நீ ஒன்னோட ஒக்கப்பொறந்த தங்கச்சியைத்தான் பெண்டாளுவியா? சீ!" — காறிக் காறி எச்சிலைத் துப்பினாள் —அவன் முகத்திலே! அப்பால் முன் அறை பின் அறையாக அவனுடைய கன்னங்களிலே 'சாத்துப்படி' நடத்தினாள்!

அந்தப்பாவி 'ரோசம்' செத்துக்கல்லாகி விட்டானா? 'மானம்' தப்பி மரத்துப்போய் விட்டானா? 'ஈனம்' இழந்து இறுகிப் போய் விட்டானா?...

"ஆத்தா!"

கன்னிப் பவளம், கன்னித் தெய்வத்தைப் போன்று கல்லாகி விடவில்லை. சுயப்பிரக்கினையுடன் கண்களை வழித்துவிட எத்தனம் செய்திட்ட அந்த வேளையிலே—

பூ நாகமென்று 'அவன்' காலடியில்—அந்தப் பாவியின் காலடியில் பூவின் நெடியாக மலர்ந்து நெளிந்து கொண்டிருந்தது!

"ஆத்தாளே! மூத்தவளே!"

அவள் அந்தப் பூ நாகத்தை மூர்த்தண்யமான பெண்மையின் வீரச்சாகசத்துடன் காலால் எற்றி விட்டாள்!

அந்தப் பாவியின் ஊனக் கண்களில் இப்பொழுது தான் அந்தப் பூநாகம் தரிசனம் தந்திருக்க வேண்

டும்! மறு நொடியில் ''ஆத்தாளே'—தங்கச்சியே!'' என்று அலறியவனாக, அவளது கஞ்ச மலர்ப் பாதங் களிலே நெடுஞ் சாண்கிடையாகச் சரண் அடைந் தான்!—கண்ணீர் வெள்ளம் பூம்புனல் வெள்ளமென ஓடியது!—ஓடக்காண்பது பூம்புனல் தானோ?...

கணங்கள் போய்க் கணங்களாக நெளிகின்றன; ஊர்கின்றன; நடைபயிலவும் செய்கின்றன!

அவள் தண்ணளியின் விளிம்பில் தன்னுணர்வை மீட்டுக் கொண்டாள்; கல் நிலையினின்றும் மீண் டாள். இனி அவல் கல் இல்லை!—தெய்வம் கல்லாகவே இருந்து விட்டுப் போகட்டும்! ஆனால், அவள் கல் அல்லள்!...''அண்ணாச்சி!'' என்று சாலப்பரிந்து, அளப்பரிய பாசம் மதூர விளித்து, அவனை—அந்தப் 'பாவி'யை வாரியெடுத்தாள்! கண்கள் பொடித்தன.

அவன் கூப்பிய கைகளுடன் அப்படியே நின்றான். ''தங்கச்சி! எந்தங்கச்சியோ! நம்பூட்டுத் தெய்வமே!''

எங்கிருந்து அந்தச் சாக்குருவி அப்படிச் சோகம் பரப்பிக் கொண்டிருக்கிறது?

அடுத்த மின் வெட்டுப் பொழுதிலே—

அவள்—பவளக் கொடி அவனுடைய முகத்தை நேருக்குநேர் பார்த்தாள்; ஊடுருவிப் பார்த்தாள்; உருக்கமாகப் பார்த்தாள்; உருக்காட்டும் பாவனை யில் இப்போது பார்த்தாள். ''அண்ணாச்சிதானே நீங்க எனக்கு?'' என்ற கேள்வியை விதியாகத் தொடுத்தாள்; வினையாக விடுத்தாள்!

''அட்டியில்லை; தங்கச்சி!''

''அப்படீன்னா என்னை நீங்க இப்ப நன்னியோட நம்புறீக?''

"சத்தியமா! ஆத்தா சத்தியமா நம்புறேன்!"

"அப்பன்னா, ஆத்தாளையும் நீங்க நம்ப ஆரம் பிச்சிட்டீங்களாக்கும்!"

"பின்னே?"

"ஆத்தா கல்லாச்சுங்களே, அண்ணாச்சியோ?"

"இல்லே; ஆத்தா கல் இல்லே. நான்தான் அது மட்டுக்கும் வெறும் செம்புராங் கல்லா இருந்துப் பூட்டேன்!"

"சபாசு!" என்று சிரித்தாள் பவளம்!...மறுகணம், அவனுடைய குரல்வளையைக் கண் மூடிக்கண் திறப்ப தற்குள் ஒரே மூச்சிலே நெறித்து விட்டாள்! —அந்தச் செக்கச் சிவந்த ரத்தத்துளிகள் அவளுடைய கன்னிப் பவள உதடுகளில் எத்துணை அழகாகத் 'தரிசனம்' தருகின்றன!—'இம்மாங்கொத்த ஈரம் இல்லாத—மானம் இல்லாத—ரோசம் இல்லாத சமுதாயப் பாவியான என்னோட அண்ணாச்சியை இப்பத்தான் இத்தி இத்தியாய்த் திருத்திக்கிட்டு வருகிற இந்தத் தமிழ்ச் சமுதாயத்திலே இனிமேலும் 'மாப்பு' கொடுத்து ஊடாட விட்டால், அப்பாலே, புத்துயிர் பெறப் பழகிக்கிட்டு வருகிற நாயமும் நாணயமும் சத்தியமும் தருமமும் திரும்பவும் உருமாறி உருக்குலைஞ்சு போயிடாதாங்காட்டி. —அதாலேதான், அந்தப் புண்ணியத்தை பூநாகத்தைத் தோற்கடிச்சுப்பூட்டு நானே கட்டிக்கிட்டேன்!...ஆமாடி, ஆத்தாளே!'—சிரித்தாள் பவளக்கொடி.

அவளுக்கென்று இப்படி ஒரு அதீதச் சிரிப்பா, என்ன?—

அவள் பவளக் கொடி தானா?
கன்னிப்பவளமே தானா அவள்?...
மீண்டும் சிரித்தாள்!
மறுபடியும் சிரித்தாள்!
அப்பால்—

அவள் ஓடினாள்; காலில் சிக்கிய சுங்கடியைச் சிக்கறுத்துவிட்டு ஓடினாள்!

எங்கேயோ ஓடுகிறாள்!

ஏனோ ஓடுகிறாள்!

அதோ, விரித்த தலையுடன் சிரித்த ரத்த உதடுகளுடன், சிரிக்காத செந்தழல் கண்களுடன் விதியின் நாயகியாக—தர்மத்தின் தேவதையாக—சத்தியத்தின் திருமகளாக ஓடுகிறாள்... ஓடிக்கொண்டே இருக்கிறாள்!...

பத்ரகாளி சிரிக்கிறாள்!...

# 5. தேவி கருமாரி

மனித விதி அந்நேரத்திலே வெறிச்சோடிக் கிடந்ததற்கு ஆயிரம் அர்த்தங்கள் இருக்கக்கூடும்!

ஆனால்—

மெரினா கடற்கரை அப்போது சூன்யமாக காட்சியளித்ததற்கு ஒரே அர்த்தம்தான் இருந்தது.

விடிந்தால் தீபாவளி!

விடிய விடியத் தீபாவளி!

இந் நிலையிலே—

இந்நேரத்திலே—

அந்தக் கடலோரம் பாவமாகவும் பரிதாபமாக வும் விளங்கியது இயற்கைதான்! இயற்கையின் விதி யும் அதுவேதானோ?

காந்தி மகாத்மாவை நினைக்கக்கூட, நினைத் துப் பார்க்கக் கூட நேரம் இல்லாத அருமை மிகு இந் தப் பாரதத் திருமண்ணிலே, யாரோ நரகாசூரனை நினைக்க—நினைத்துக் கொண்டாட விதிக்கப்பட்ட தீபாவளிக்கு அலுவலெல்லாம் அவரவர்களின் வீடு களிலேதானோ?

ஆகவேதான், அங்கங்கே மனிதக்கும்பல் பண்டி கையை அமர்க்களமாகக் கொண்டாடப் பாசத்தை யும் பந்தத்தையும் உறவின் உரிமையோடும் உரிமை யின் சொந்தத்தோடும் கொண்டாடிக் கொண்டிருக் கிறார்கள் போலும்!

ஆனாலும்—

அங்கே—

அப்போது—

அவள் ஒருத்தி மட்டிலுமே மிச்சம் இருந்தாள்! அவள் என்றால், அவளது குடும்பம் என்பதாக அர்த்தம். அவள் குடும்பம் சாமான்யப்பட்டதா, என்ன?—கட்டுப்பாட்டையும் இலக்கையும் மீறின குடும்பம்!—ஏழு குழந்தைகள்! அந்நாளிலே, நல்லதங்காள் ஏழு குழந்தைகளைப் பெற்றெடுத்தாளாமே?—அப்படி ஒரு கணக்கில் அவள் நின்றாள்; நிறுத்தப்பட்டாள்!—அவள் என்றால், அவள் பேர் என்ன? பெயரிலே என்ன இருக்கிறதாம்?—அவள் தாய்! ஏழு குழந்தைகளின் தாய்;ஏழு குழந்தைகளுக்குத்தாய் போதாதா?—'நான் பாவி! ஆனா என்னோட குஞ்சுங்க—குழந்தைங்க ஒரு பாவமும் அறியாதவங்களாச்சே? ஆமா அவங்களோட புண்ணியந்தான் சோதிப்பான இந்த அவலப்பொழுதிலேயுங்கூட, எம்புட்டு உசிரை இம் மட்டுக்கும் கட்டிக்காப்பாத்தி வச்சிருக்காக்கும்!' ஒடுங்கிக் கிடந்த பாசத்தின் விழிகளில் ரத்தச் சிவப்பான சுடுநீர் இன்னமும் வறட்சி கண்டு வற்றிவிடவில்லை!—அவள் அற்ப சொற்பமானவளா?—எல்லோரும் இந்நாட்டு மன்னர்களாமே! அப்படியென்றால், அவள் இந்தப் புண்ணியப் புனித மண்ணின் பட்டத்து மகாராணி அல்லவா?

வெளிச்சத்தின் வெளிப்பாட்டில், இருள் 'பாவ மன்னிப்பு'க் கேட்டு உருக்கிக் கரைகிறது.

இது கலிகாலமா, என்ன்? இல்லை, கலியுகமா? ஊஹூம்!

இது அதிநவீனமான 'கம்ப்யூட்டர்'யுகம்!—இந்தச் சித்திர விசித்திரயுகத்தின் வேடிக்கை விதிக்கு

நயமான—விநயமான பிரதிநிதியாக விளங்குகிற அவளுக்கு—அந்த நவீன நல்லதங்காளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அழுகை அழுகையாக வந்தது. பழைய — பழைமையான நல்லதங்காளுக்குத் தானொன்றும் குறைந்தவளல்லள் என்பதை மெய்ப்பித்துக் காட்டியவள் மாதிரி அங்கே பெற்றுப் போட்டுப் பிறந்து கிடந்த அத்தனை குழந்தைகளையும் பார்த்தாள்; பார்த்தாள், பார்த்துக் கொண்டேயிருக்கிறாள்!—

"டேய் மணி ..ராமு ...கமல் . .ரசினி ....அம்மாடி சீதேவி, லட்சுமி, அம்பிகா!"—அழைத்தாள்; வெகு; கச்சிதமாகவே விளித்தாள். ஆனாலும், அவளுக்கு இவ்வளவு ஞாபகச் சக்தி இருக்கக்கூடாதுதான்!

கெட்ட சொப்பனம் கண்ட பாவனைகளில் குழந்தைகள் பசியைத் தாளமாட்டாமலே, வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தார்கள்.

அவள் மனம்— மனச்சாட்சி உள்வட்டத்தில் சுழித்துக் குமுறியது; கதறியது. 'பாவி நான்! நான் பெத்த பிள்ளைங்களோட பசியையும் பட்டினியையும் காணச் சகிக்காமல், கொஞ்சம் முந்தி நான் போய்ப் புத்தி பேதவிச்சாப்பிலே பழாய்ப்போன இந்தக் கடலிலே நான் சுயநலத்தோட குதிச்சுச் செத்துப் போயிருந்தேன்னா, இந்நேரம் எம்பிள்ளைங்க முழிச் செழுந்து என்னைக் காணாமல் 'அம்மா அம்மா'ன்னு அலறித் தவிச்சுத் தடுமாறி, அதுங்களும் மனுசத் தனம் இத்துப்போன இந்தக் கடலுக்குப் பலியாகி இருக்குங்களோ?...தெய்வம்னு ஒண்ணு லோகத்திலே இருக்கத்தான் இருக்கும் போலே!—அதொட்டுத் தான் நாங்க எட்டு ஜீவனும், உயிர் பிழைச்சிக் கிட்டோம்!...ரத்தமும் கண்ணீராக விஞ்ஞானம்! மாற்றம் பெறலாமே?

நாய் விற்ற காசு வேண்டுமானால் குரைக்காமல் இருந்து தொலையட்டும்!

ஏழை ஒருத்தி பெற்று விட்டதால், அவளுடைய செல்லக் குழந்தைகள் அழக்கூடாதென்று இந்தியச் சட்டம் எதிலும் எந்த விதியும் விதிக்கப்பட்டிருக்க வில்லையே?

காலதேவன் எங்கிருந்தோ கடமையின் நியதிக் குரலை நீதி வழுவாமல் ஒலிபரப்பி—ஒளிபரப்பிக் கொண்டிருந்தான்!

மணி பத்து!

தீபாவளியன்று நிலவுக்கு 'ஜாதிப்பிரஷ்டம்' செய்தது, யார்?

"அம்மா!..."

முகாரியின் கோரஸ் ஏழு சுரங்களிலே ஆலாபனம் நடந்தது.

கொண்டாடினால்தான் தெய்வம்!

குழந்தைகளின் கதையும் அதுவேதான்!

தாய்க்காரி அன்போடும் பாசத்தோடும் ஏக்கத் தோடும் பிள்ளைகளை ஊடுருவினாள்; தொண்டை அடைத்தது. "எல்லோரும் ஏந்திருச்சுப் புறப்படுங்க... பாவம், உங்களுக்கெல்லாம் அந்திக் கட்டிலேருந்தே பசிச்சுக்கிட்டு இருக்கும்...பாவம்! இன்னும் துளிப் பொழுதிலே, உங்களோட பசியான பசி ஆலாப் பறந்துப் பூடும்!...வேணுங்கற சோறு போடுவேன், நான்! பேசாமல் புறப்படுங்க எல்லாரும்!—சிரிக்க முயற்சி செய்கிறாள் அவள். அவள் சமர்த்து இந்த உலகிலேயே யாருக்கு வருமாம்.

அலைகடலில் அலைகள் அலைந்து ஆர்ப்பரித் தன, ஆர்ப்பரிக்கின்றன.

அவள் மணல் வெளியில் விரிக்கப் பட்டிருந்த கந்தல் துணியை உதறினாள். சாஸ்திரத்திற்கேனும் ஓர் ஐந்து காசாகிலும் தர்மம் செய்திடப் புண்ணியவான் ஒருவன் கூட இல்லாமல் போய்விட்டானா?— 'ஆத்தளே!'—கண்களுக்குத் தெரியாத, ஆனால், நெஞ்சுக்கு ஏழையாய்ப் பிறந்து விட்ட பாவத்தைத் தவிர வேறெந்தப் பாவத்தையும் அறிந்திருக்காத நெஞ்சுக்குத் தெரிந்த ஆத்தாளை நினைத்து நெஞ்சு நெகிழ்ந்தவளாக அவள் நடந்தாள். நடந்து கொண்டிருந்தாள்!—ஏழு பிள்ளை குட்டிகள் பின் தொடர நடந்து கொண்டேயிருந்தாள்!

பட்டணம் எவ்வளவு அழகாக, வெளிச்சமாக, ஆடம்பரமாக இருக்கிறது!

ஜார்ஜ் டவுன்!

பாவம், ஐந்தாம் ஜார்ஜ்!—பாவமல்ல, புண்ணியம்! போய் விட்டான்! சென்ற மண்ணுக்கே போய்த்தொலைந்தும் போய் விட்டான்!

அதோ...

அரண்மனை மாதிரியான ஒரு வீடு; ஊகூம்; பங்களா!

அவள் நின்றாள்.

'நாய்கள் ஜாக்கிரதை' என்கிற எச்சரிப்புப் பலகை மட்டிலும் நிற்கவில்லை; ஆடியது; ஆட்டம் போட்டது!

''தாயே பசிக்குது, பிச்சைபோடு தாயே'' அழைத்தாள், கூவினாள், அலறினாள் பெற்றவள்!

நாக்குகளில் ஈரம் வழிந்திட ஏழு குழந்தைகளும் பங்களாவின் உட்புறத்தில் ஆசையோடும் பசியோடும் பசிக்காகவோடும் பார்த்தார்கள்!

தட்டினாள்.

திறக்கப்படவில்லை கதவுகள்.

ஜாக்கிரதையாக நாய் ஜன்மங்கள் மணி அடிக்காமலே உண்டு கும்மாளம் போட்ட 'பன்—பட்டர்—ஜாம்' ருசியை—தேவாமிர்தச் சுவையை மறக்காமல் நன்றியோடு வாலை அடக்கியவையாகக் குரைத்தன!

தெய்வம் எனும் தாய் எச்சிலைக்காறி உமிழ்கிறாள்!—சே! மூதேவிங்க! பிச்சை போட்டா தருமம் கிடைக்கும்னு சொல்லிக்கிடுவாங்க; அதுகூட பொய்ச்சுடுமோ? உலகத்திலே தருமம்னு ஒண்ணு இல்லாமலே பூடுமோ?...இந்த ஆத்தாளுக்கு ஒசந்த இடங்கதான் இஷ்டம் போல ஆனாலும் எங்களை மாதிரியான ஏழை பாழைங்களைப் படைச்சு அவங்களோட வாழ்க்கையையே பிரச்னையாக்கிச் சாகிறபரியந்தம் அவங்களை ஏழை பாழைங்களாகவே வச்சு வேடிக்கை பார்த்து வேடிக்கை காட்டுறாளே ஆத்தா மூத்தவள்! இது எந்த நாயத்திலே எந்த—! நீதியிலே—எந்த விதியிலே சேர்த்தியாம்!...

அவள் தாய்!—தாய் என்னும் தெய்வம்!

"அம்மா...அம்மோ! பசிக்குதே!— பசியைப் பொறுக்கவே முடியல்லியே?.. இனிமே பசியைப் பொறுக்கவே ஏலாது அம்மா! நாங்க செத்துப் போயிடுறோம். இரு ஜாதிக் குழந்தைகளும் 'ஜாதிகள் இல்லையடி பாப்பா' என்கிற பாவனையில் ஒரே குரலில் அழுதார்கள்! பசியால் துடிதுடித்து அழுதார்கள்! அவளுக்கு நெஞ்சு வெடித்து விடும் போலிருந்தது!

—"பசிக்கத்தான் பசிக்கும்; அந்திக்கு ஆளுக்குத் துளி காஞ்ச தோசை துண்ணது, பசிக்காதா பின்னே? ... இன்னம் கொஞ்சப் பொழுதிலே

எல்லாரும் நல்லாச் சாப்பிடலாம். எம்பின்னாலே வெரவாவும் சல்தியாவும் ஓடியாங்க!, என்னவோ ஒரு யுக்தி பளிச்சிட்ட நம்பிக்கையின் துணையோடும் துணிவோடும் நடந்தாள் அவள். குழந்தைகள் ஒட்டமாக ஓடிவர, அவளும் இப்பொழுது ஓடினாள்.

பட்டாசு வெடிச்சத்தத்தங்கள் சுருதி பேதத்தோடு திக்கெட்டிலும் முழங்கின!

''விடீஞ்சா, தீபாவளி!......இல்லேம்மா?—மூத்த பயல் சுட்டி!''

''ஊம்'' போடுகிறாள் அவள்.

''தீவாளிக்குப் பலகாரம் பட்சணமெல்லாங்கூட எல்லாரும் சாப்பிடுவாங்க இல்லையா அம்மா? கடைக்குட்டி ராசாத்திக் குட்டி கேட்டாள்.

''ஊம்!''

திட்டமிட்ட ஒரு நம்பிக்கையின் வெளிச்சத்தில் ஓடுகிறாள் அவள்!— தெரிந்தே செய்த ஏழு தவறுகளின் நிதர்சனச் சாட்சியங்களாகித் திகழ்ந்திட்ட குழந்தைகள் விதியாய்த் தொடர ஓடினாள் அவள்! கழுத்தைத் தடவிக்கொண்டே ஓடினாள். கழுத்திலே சூன்யத்தை உணர்ந்த ஆற்றாமையோடு ஓடினாள்! 'மச்சானே' எங்களை இப்படித் தவிக்க விட்டுப்புட்டு மானத்துக்குப் பறிஞ்சிட்டீகளே? அவள் ஓடிக்கொண்டேயிருந்தாள்.

வாழ்க்கை ஒரு பந்தயமாக ஆகிவிட்டபின், ஓடாமல் இருக்கலாமா?— இருக்க முடியுமா?

கடைசி கடைசியாகச் சந்தொன்று குறுக்கிடுகிறது.

நின்றாள் தாய்க்காரி!—அவளுக்குச் சந்தோஷம் தலைகால் புரியவில்லைதான்!—அவள் சமர்த்து

யாருக்கு வருமாம்?—போட்ட புள்ளி தப்பவில்லை. தப்பவும் முடியவில்லை!

அங்கே—

அப்போது—

தேவி கருமாரி தரிசனம் தந்தாள்!

உலகாளும் அன்னை அல்லவா

அதோ—

உலக மாதாவின் காலடியிலே வகை வகையாக, வண்ணம் வண்ணமாக தீபாவளிப் பண்டிகைக்கான புத்தம் புதிய பட்டுச் சிற்றாடை!—தெய்வமும் தீபாவளி கொண்டாடத்தான் வேண்டும்!

அவள் தன்னுடைய அருமைச் செல்வங்களை ஆரத் தழுவி அணைத்தவளாகப் பாசம் பீறிட்டு வீறிட என்னவோ சிதம்பர ரகசியம் பேசினாள்! பட்டத்து மகாராணியாகவே வாய் விட்டு—மனம் விட்டுச் சிரித்தவளாகத் தலை நிமிர்ந்தாள்.

மறு இமைப்பில்—

ஏழு குழந்தைகளும் உஷார் ஆயின!—தீபாவளிப் பட்சணங்களைச் சாப்பிடுவதில் மும்முரமகாவே லயித்தனர். பாசத்திற்குப் போட்டி ஏது! பொறாமைதான் ஏது?

நைவேத்தியத்திற்கு வைக்கப்பட்டிருந்த தண்ணீர் பாத்திரத்தை எடுத்துத் தயாராகவே வைத்திருந்தாள் அவள்!—குருக்கள் அய்யர் எங்கே தொலைந்தாராம்? பாவம்!...இப்போது அவள்—அந்தத்தாய் கருமாரித்தாயின் இடுப்பில் சிரித்த சிற்றாடையில் கண்பதித்தாள். பதித்த கண்களை எடுத்து, அங்கே அம்மணமாய் நின்ற அம்முக்குட்டி மீது தொடுத்தாள்.

அவளுடைய சோற்றுக்கை அந்தப் பட்டுச் சிற்றாடையைப் பற்றி எடுக்க நீண்ட போது, அவள் மனத்திலே 'சுரீர்' என ஓர் உணர்வு பூநாகமாகிச் சீறியது!

—இந்தச் சித்தாடையை அவிழ்த்துப்பூட்டா, அப்பவே ஆத்தாளும் அம்மணமாகிட மாட்டாளா? ஐயையோ, ஆத்தாளே! என்னைப் பெருமனசு வச்சுச் சமிச்சு மாப்புக் கொடுத்துப்பிடுடி. மூத்தவளே!— நான் நன்னி இல்லாத சென்மம் இல்லேயாக்கும்!— தலையைப் பிய்த்துக் கொண்டு விம்மி வெடித்தாள் அவள்.

அவள். தாய் எனும் பெருந்தெய்வம்!

என்னவோ, அரவம் அரவம் வந்து விட்டதா என்ன?

ஊ கூம்...

குருக்கள்தான் வந்தார். "அட, பாவப்பட்ட ஜென்மங்களா? கருமாரித்தாயோட தீபாவளிப் பட்சணம் எல்லாத்தையுமே எச்சல் படுத்திட்டேளா? சனியன்களா?! நீங்கல்லாம் உருப்பிடுவேளா?"

அலறிப்புடைத்தவராக அந்தச் சனியன்களைக் கூடிப்பிடிக்க எத்தனம் செய்தார் குருக்கள்.

ஆனால்—

அவளோ அசல் தேவி

கருமாரிமாதிரியே சிரிக்காமல் சிரித்துக் கொண்டே இருக்கிறாள்!

குருக்கள் தலைமுடிகள் பறக்க, ஏழு குழந்தைகளையும் வெகு சமர்த்தோடு கூடிப் பிடித்ததும்,

அவர்களை அடித்து நொறுக்க ஆத்திரத்துடன் கைகளை ஓங்கினார். மறுகணம், "ஆ .. ஐயையோ!" என்று பாம்பு கடித்து விட்ட மாதிரி அலறித் துடித்தார்.

ஓங்கியகை ஓங்கியபடி அந்தரத்தில் நின்றது!

அது பட்டணமா, இல்லை, கொக்கா?

கூட்டமான கூட்டம் நீர் துளிப்படுகிறது!

இப்போது அவள்—அந்தத்தாய் உலகாளும் தாயாம் தேவி கருமாரி மாதிரியே சிரித்தாள்!

ஓங்கிய சோற்றுக் கையைத் தாழ்த்த முடியாமல் வேதனையில் துடித்துக் கொண்டிருந்த குருக்கள் தலைக்குடுமி பிரிந்து புரள நடுங்கத் தொடங்கினார். இப்போது அவர் கண்ணுக்குத் தெரிந்த இந்தத் தாயையும் கண்ணுக்குத் தெரியாத அந்தத்தாயையும் மாறி மாறி மாற்றி மாற்றிப் பார்த்தார். அவரது கண்களினின்றும் பூம்புனல் வெள்ளமெனக் கண்ணீர் பாய்ந்தோடி அந்த ஏழை அன்னையின் பாதங்களிலே சரணடைந்தது! "ஆத்தாளே! இந்தப் பாவிக்குக்கூட தரிசனம் தந்து...நோக்கு மனசு இளகிடுத்தா? அப்படின்னா, நான் புண்ணியவான்தான்! பேஷ்... பேஷ்! மெய்ம்மறந்த நிலையில் புலம்பிக் கொண்டே அந்தத் தாய்க்காரியின் [பாதங்களிலே நெடுஞ்சாண் கிடையாக விழுந்தார்!

"சாமி...சாமியோ!"

அவள் பதறினாள் கதறினாள்! தீயை மிதித்து விட்டாளா, என்ன?

குழந்தைகள் சிரித்தன.

ஆகவே—

இப்போது—அவளும் அதாவது, பூவத்தக்குடி மண்ணிலே குடிக் காணியாட்சிப் பாத்தியம் கொண்டிருந்த ஒலைக்குடிசையில் அவள் அவதரித்து வளர்ந்த காலத்திலே, ''சொக்கி சொக்கி'' என்பதாக அழைக்கப்பட்ட அந்த ஏழைத்தாயும் சிரித்தாள்! அலகிலா விளையாட்டுடைய உலகத்தாய் தேவிகருமாரியையும், உணர்ந்து சிரித்தாள்!

திருநீறு பொலிந்திட்ட குருக்களையும் மாறி மாறி மாற்றி மாற்றிப் பார்த்துக் கொண்டே சிரித்தாள்!...சிரித்தவள், இப்போது நெஞ்சம் உருக விம்மினாள். 'ஆத்தாளே! நீ வெறுங்கல் இல்லேடி, மூத்தவளே! இப்படியெல்லாம் விளையாடவும், விளையாட்டுக் காட்டவும் உன் ஒருத்தியாலேதான் ஏலும்!...ஆத்தாளே! எனக்குப் பசிக்கிற மாதிரி உனக்கும் பசிக்குமே!—எம் பிள்ளை குட்டிங்க உனக்கு எதையுமே மிச்சசொச்சம்வைக்காமல் அவங்களே அல்லாத்தையும் மொச்சிப் பூட்டாங்கதானே? உங்கிட்டக்க மாப்பக் கேட்கிறதைத் தவிர இந்தப் பாவப்பட்ட ஏழைச் செம்மத்தினாலே வேற ஒண்ணுமே செய்ய வாய்க்கல்லையே?...ஆத்தாளே! அப்பால ஏதுனாச்சும் உண்ணக் கெடைச்சாக்க உனக்கு நன்னியோட ஈவு தந்துப்புடுறேண்டி? ஆத்தாளே? கதறினாள். கண்ணீர் என்ன நிறமாம், சிவப்புத்தானோ?

குருக்களின் மேனிச் சிலிர்ப்பு இன்னமும் கூட அடங்கவில்லை போலும்! — பாவமன்னிப்புக் கிடைக்கப் பெற்றவரைப் போன்று நிம்மதி கண்டவராகத் தலையை நிமிர்த்தினார். இப்போது அவர் உலகாளும் அந்த அன்னையையும் பசியாளும் இந்த அன்னையையும் மாறி மாறியும் மாற்றி மாற்றியும் பார்த்தார். பின்னர் மெய்மறந்தவராகப் பேசினார்:

"இன்னக்குத்தான் கருமாரித் தாயார் நிஜமாகவும் சத்தியமாகவும் தருமமாகவும் தீபாவளிப் பண்டிகையைப் பரம திருப்தியோட கொண்டாடிருக்காளாக்கும்!..."

குவிந்திருந்த கரங்களிலே ஈரம் கசிகிறது.

திடீரென்று—

என்னவோ விம்மல் சத்தம்.

மறு இமைப்பிலே—

கூட்டம் மெய்சிலிர்த்தது,

தெய்வ விதியாய் அட்டகாசமாய்ச் சிரிக்கத் தெரிந்ததாய் தெய்வத்திற்குத் தெய்வாபிமானத்தோடு மனம் திறந்து அழ மட்டிலும் தெரியாதா என்ன?...

# 6. மகமாயி பேசினாள்

முத்தாயின் அழகான முத்துப் பற்களைத் திறந்தால், முத்துச் சிதறுமோ சிதறாதோ, கட்டாயம் அழகான, கவர்ச்சிமிகுந்த புன்னகை சிதறி விளையாடும். அப்படிப்பட்டவள், அப்பொழுது எள்ளும் கொள்ளும் முகத்தில் வெடிக்க, கவ்வல் கழியுடன் தன் குடிசையின் முன்னே வந்து நின்றாள். அவளைப் பெற்ற கருப்பாயிக்குக் கதிக்கலக்கம் உண்டாகக் கேட்கவா வேண்டும்? பாவம், பதறிப் போய்விட்டாள். பெற்ற மனம் பித்து ஆனது.

"என்ன, என்ன சங்கதி?" என்று தாய் பதற்றம் மூளக்கேட்டாள். அவளது தளர்ந்த மேனி அல்லாடியது.

அதற்குப் பதில் ஏதும் சொல்லாமல் வாசலுக்கு விரைந்தாள் முத்தாயி. சமைந்த பெண்ணின் பருவச் செழிப்பும் உருவக் கவர்ச்சியும் அவளுடன் குலுங்கக் குலுங்க ஓடின. "ட்ரியோ! ஏலே... ட்ரியோ!" என்று சொல்லி அதட்டியவளாக, உசிலை மரத்து ஒண்டலை அடைந்த ஆட்டுக் குட்டியைக் கழி கொண்டு மடக்கித் திருப்பி, மற்றக் குட்டிகளோடு வசப்படுத்தினாள்.

தழைகளைத் தின்றுகொண்டிருந்த அந்த ஆட்டின் பால் மடியைச் சுவைக்கத் தொடங்கி விட்டன, அந்த இரண்டு குட்டிகளும்! தாய் ஆடு தன் குட்டிகளை மாறி மாறி, மாற்றி மாற்றிப் பார்த்தது; மறுகணம், பாசத்தை வெளிப்படுத்தத் தீனமாகக்

குரல் கொடுத்தது. சுற்றும் முற்றும் பார்த்தது; அதன் முகத்தில் துயரமும் ஏமாற்றமும் வேதனையும் நிழலாடின. அத்தகைய உணர்வுகளுக்கு ஜீவாதார மாகப் பாசம் முழங்கிக் கொண்டிருந்தது!

''ஆத்தாடியோ! இன்னும் ஒரு வெள்ளாட்டுக் குட்டியைக் காணலையே, முத்தாயி?'' என்று ஆத்தி ரத்துடனும் துயருடனும் வினவினாள் தாய்.

''ஆமாம், ஆத்தா! ஒரு குட்டியைக் காணா மெத்தான் தவிக்குது இந்தத் தாய் ஆடு. நானும் அதை நெனைச்சுதான் தவிச்சுத் தண்ணியா உருகிக் கிட்டு இருக்குறேன்!'' என்றாள் முத்தாயி. அவளது பேச்சுத் தழுதழுத்தது. கண்களில் விளிம்பு கட்டி யது கண்ணீர்.

''ஐயையோ! எம்புட்டு ஆசையாயிருந்தேன், ஆயி மகமாயி புண்ணியத்திலே இந்தத் தடவை மூணு குட்டி போட்டிருக்குதே ஆடு, அப்படின்னு! மண் ணிலே காலு பாவாமல், குதிச்சேனே! அந்தப் பாவத் துக்காகவா இப்படிப்பட்ட சோதனை வந்திருச்சு? குறளிவித்தை வச்சுக் காடு மாத்தினாப்பலே ஒரே ஒரு குட்டி மட்டும் பொட்டுப் பொழுதுக்குள்ளாற எப்பிடியடி, ஆத்தா கண்மாறிப் போயிட ஏலும்?''

''அதுதானே, எனக்கு மட்டுப்படல்லே, ஆத்தா! சத்தேழுந்தி மடத்துக்குளத்து உள்வாயிலே இருக்கிற அரச மரத்திலே இலை தழைகளை இணிங்கிப் போட்டுகிட்டிருந்தேன். தாயும் மூணு ஆட்டுக் குட்டியும் ஒண்ணடி மண்ணடியாத் தழையைத் தின்னுக்கிட்டு இருந்திச்சு. கழுத்து ஒட்டிலே வேர்வை கசகசத்ததாலே தண்ணியிலே இறங்கி நாலுகை அள்ளித் தெளிச்சுக்கிட்டுத் திரும்பினேன். வந்து

பார்த்தாக்கா ஒண்ணைக் காணல்லையே! நானு என்ன செய்யட்டும்? சுத்துவட்டம் முழுதும் அரிச்செடுத்துப் பார்த்தாச்சு. ஒரு தடயமும் தட்டுப்படல்லையே?'' என்றாள் முத்தாயி. அந்திக் கதிர்கள் அவளது முகத்திரையில் கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டேயிருந்தன.

ஆமா, நீ ஆடு மேய்ச்சுக்கிட்டு இருக்கிறப்போ குளத்திலே யாராச்சும் இருந்தாங்களா?''

சற்றே நிதானமாகச் சிந்தித்தாள் முத்தாயி. பிறகு, தலையைச் சிலுப்பிக்கொண்டாள். தண்ணீர் தெளித்தால் ஆடு தலையைச் சிலுப்பி உலுக்கிக் கொள்ளுமே, அப்படி! ''நம்ம பெரிய அயித்தை புருசன் மட்டுக்கும் குளிச்சு முழுகி வெளியேறிக்கிட்டு இருந்தாக'' என்று பதில்சொன்னாள் கன்னிப்பெண்.

''அந்த அண்ணாச்சியா? அந்த ஆளு மாசிமலைத் தேவருதான் ஆடு குட்டி போடறதுக்கு முந்தியே இதை விலைக்குக் கேட்டாரே! அவருகிட்ட தாக்கல் தகவல் விசாரிக்கப்புடாதா? வழித் தடத்திலே எங்கானும் குட்டி ஒண்ணு தடம் மாறித்தென்பட்டுச் சான்னு கேட்டா என்ன, ஆத்தா?''

''எல்லாம் கேட்டாச்சு! அந்த ஆளு தனக்குத் தெரியாது அப்படின்னு நறுக்குத் தெறிச்சமாதிரி சொல்லிட்டாரு, ஆத்தா! அவர் மகனுக்கு நான் வாழ்க்கைப்படச் சம்மதிக்கலைங்கிற ஆத்திரம் இன்னமும் அவருக்கு. மூஞ்சியை மாறவச்சிக்கிட்டு வூட்டுக்குள்ளாற இருந்த வாக்கிலேயே சொன்னாரு அவரு!''

''உம்' என்று பெருமூச்செறித்தாள் தாய்.

தாய் ஆடு மீண்டும் தீனமாகக் கத்தியது. பெண் ஆட்டுக்குட்டிகள் இரண்டும் தம் சகோதரனைக் காணாமல் மறுகின. பாசத்தின் பிரிவு அங்கு மவுனமாக வருந்தித் துடித்துக்கொண்டிருந்தது.

முத்தாயி கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு அந்தத்தாய் ஆட்டையும் குட்டிகளையும் பரிவுடன் பார்த்தவளாக நின்றாள். பின்னர், அவற்றைப் 'கேட்' மூலையில் கட்டிப் போட்டாள். இலை தழைகளைப் பகிர்ந்து போட்டாள். புளியங்கொட்டைகள் மிகுந்த வடிகஞ்சிச் சட்டியைத் தாய் ஆட்டின் முன்னே வசமாக இழுத்து வைத்தாள்.

தாய் ஆடு ஒருமுறை அந்த வடிகஞ்சியை நக்கியது; பிறகு தலையை உலுக்கியது. மீண்டும் குட்டிகளை நாக்கால் தடவியபடி, சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு "ம்...மே!" என்று குரல் கொடுத்தது.

இரண்டு குட்டிகளும், "ம்...மே!" என்று பதில் குரல் கொடுக்கத் தொடங்கின.

பனி வாடை வீசியது.

மாக்கோலத்தில் அம்மன் தேர் எழுதி, அதன் உச்சியில் பறங்கிப் பூ வைத்துத் தொழுது தலை நிமிர்ந்தாள் முத்தாயி.

காலை இளங்கதிரவன் கண்சிமிட்டத் தொடங்கினான். "ஏண்டி, முத்தாயி! ஒங்க வூட்டு ஆட்டுக் குட்டியைக் காணல்லையாமே? நம்ம குப்பாயி இந்தச் சேதியைக் காதிலே போட்டா; ராவுக்கு வர முடியல்லை. பாவம், அந்தக் குட்டி நாலாறு மாசம் வளர்த்தா ஃகா நாப்பது அம்பதுக்குச் செவ்வாய்ச் சந்தையிலே விலைபோகுமே!" என்று சொல்லித் தன் அநுதாபத்தைத் தெரிவித்தாள் பொன்னம்மா.

"ஆமாடி! என்னா செய்யிறது? எங்க காலத்துக்கு இப்படி நடக்குது! அந்த ஆட்டுக்குட்டி எப்படித்தான் மாயமாய் மறைஞ்சுதோ, ஒரே கமுக்கமாத்தான் இருக்குது. நாங்க அசலார் வூட்டுச் சொத்துக்கு இம்மிகூட ஆசைப்படாதவங்க. எங்க அப்பன் எங்களுக்காக விட்டுட்டுப் போன சொத்து இந்த மானம் மரியாதை ஒண்ணுதான். இப்படிக்கொத்தவங்க சொத்தை எந்த ஆம்புளையோ, எந்த பொம்புளையோ திருடிப் போயிட்டாங்க! எல்லாம் நம்ப குடியிருப்பு ஆளுங்களாத்தான் இருக்கோணும்! ஆயி மகமாயியோட சூட்சுமப் பார்வை கட்டு விட்டா பூடும்?"

முத்தாயிக்கு மூச்சு இரைத்தது.

"நீ சொல்றது முக்காலும் மெய்தான், முத்தாயீ! 'காணிலாபம் கட்டையோட'ன்னு ஒரு பேச்சு நம்ம எருக்கலக் கோட்டையிலே தலைமுறைத் தத்துவமாய் இருந்துகிட்டு வருது. அது பொய்க்காது! வர வர, இந்த ஜனங்களுக்குத் தெய்வங்கூட அத்துப் பூடுச்சு! அதாலதொட்டுத்தான், பிறத்தியார் சொத்துக்கு இப்படி ஆலாப் பறக்கறாங்க?" என்று பேசிவிட்டு நகர்ந்தாள் பொன்னம்மா.

கருப்பாயி வேர்க்க விறுவிறுக்க வந்தாள்.

முத்தாயி கஞ்சி வட்டிலைக் கழுவியவள் அதைத் திண்ணை முன்றிலில் வைத்துவிட்டு நின்றாள். இணுங்கிய முருங்கை இலைகளைக் கையில் இடுக்கியபடி வந்த தாயை ஏறிட்டு விழித்துப் பார்த்தாள் மகள்.

"முத்தாயி, நேத்திக்கு ராவு அந்த அண்ணாச்சியைக் கண்டு தண்ட முடியலை. இப்ப அந்த மாசிமலைத் தேவரைத் தேடிப்புடிச்சுக் கேட்டேன்.

ஆட்டுக் குட்டி விசயம் எதுவுமே தனக்கு எட்டலை. தனக்கு நம்ம வூட்டு ஆட்டுக் குட்டிபத்தி அக்கறை இல்லே, அப்படின்னு மூஞ்சிலே அடிச்சாப்பேல சொல்லிட்டாரு. அவரு பேசின தோரணையை யோசிச்சுப் பார்த்தாக்கா நாம ஆளு மாத்தி ஆளு அவரைக் கேட்டது கூட அவருக்குப் பிடிக்கலேன்னு தோணுது!'' என்றாள் அன்னை.

''அவரு நினைச்சா நினைக்சுக் கட்டுமே! நமக்கா காசு காய்ச்சுத் தொங்குதாம்? பேச்சுன்னு வந்தா, அண்டை அயலிலே உள்ளவங்களை ஒரு பேச்சுக்கு விசாரிக்கறது. நாட்டு வளமைதானே? அல்லாருமே அரிச்சந்திர மவராசா கணக்கிலேதான் பேசுவாக! ஆனா, அவுக அவுக குட்டு அம்பலத்துக்கு வந்தாத் தானே ஊர்நாட்டுக்குப் புலப்பட ஏலும்!''

''ஆமா, ஆத்தா!'' என்று மகளின் பேச்சுக்கு உத்தரவாதம் மொழிந்தாள் கருப்பாயி.

அப்போது, வேலாயுதம் மாப்பிள்ளை நடை போட்டுக்கொண்டு அங்கே நின்றான்! அவனுடைய களைசொட்டிய முகத்தில் இப்போது கிலேசம் படர்ந்தது. முத்தாயி நாணத்தின் பதுமையாக வாசல் வேப்பமரத்து ஒண்டலிலே வந்து ஒண்டிக் கொண்டாள்.

''வாங்கங்கிறேன்!'' என்று முகமன் மொழிந்தாள் முத்தாயியின் தாய்.

''ஆமா, சங்கதி எல்லாம் எனக்கு விழுந்திச்சு. எப்படி அந்த ஆட்டுக்குட்டி மாயமாய் மறைஞ்சுதுங் கறது ஒரே பூடகமாத்தான் இருக்குது! ஒரு சேதியை உங்க காதிலே போட்டு வைக்கலாமின்னுதான் பரிஞ்சு வந்தேனாக்கும்?,' என்று கணப்பொழுது நிறுத்தினான் வேலாயுதம்.

காட்டு ரோஜா என்றுதான் முத்தாயியைக் கிராமத்தில் யாரும் சொல்லுவார்கள். அவளுக்கென்று முறை மச்சான்கள் மூன்று நான்குபேர் இருந்தார்கள். பசை மிகுந்தவர்கள் அவர்கள். ஆனால் அவர்கள் யார் பேரிலேயும் முத்தாயியின் கன்னி நெஞ்சம் ஒட்டினால்தானே? மாசிமலைத்தேவர் என்றால் பத்து மா நன்செய்க்கும் இருபது மா புன்செய்க்கும் உடைமைக்காரர்தான்; அவர் மகனும் அவளுக்கு 'முறை' தான். என்றாலும் அந்த மாப்பிள்ளையை ஏற்க அவள் மனம் ஒப்பவில்லை! ஒரு துண்டுப் புன்செய் நிலத்தை மட்டுமே தந்தை வழிச் சொத்தாகக் கொண்டு வயிறு வளர்த்து வந்த முத்தாயிக்கு மாசிமலைத்தேவரின் பெரிய இடத்துச் சம்பந்தம் கட்டோடு பிடிக்கவில்லை. 'அந்த ஆம்பளை மனச் சுத்தம் இல்லாதவுகளாம். கிணத்தடியில் பேச்சு அடிபடுது. அவுக மகனை நான் கட்டிக்க மாட்டேன்' என்று கச்சிதமாகச் சொல்லிவிட்டாள் பெற்றவளிடம். அதிலிருந்து இரு குடும்பங்களுக்கும் இடையில் பகை ஏற்பட்டு விட்டது முத்தாயியின் மனசுக்குப் பிடித்த மாப்பிள்ளையாக இருந்த வேலாயுதம் அந்தஸ்து பெற்றான். தன் குடும்பம் மாதிரியே அவன் குடும்பமும் இருந்தது. சமநிலைப்பட்ட சூழல். "இவுகளையே நான் கட்டிக்கிடறேன். கட்டின பெண்சாதியைக் கண்கலங்க வைக்காமே இவுக காப்பாத்துவாங்கற நம்பிக்கை எம் மனசிலே விளுந்திருச்சு.

ஆயி மகமாயி குடுத்த மனத்திடமும் கையும் காலும் இருக்குது. இதுங்களைக்கொண்டு கஷ்டத்தை வெளிக்காட்டாமெ மானமாய்க் காலந் தள்ளிப் புடலாம், ஆத்தா!" என்றும் கூறினாள் முத்தாயி. தாயும் சம்மதம் கொடுத்தாள்.

''சொல்லுங்கங்கிறேன், வாய்த்தாக்கலை'' என்று தூண்டினாள் மூதியவளான கருப்பாயி, வேலாயுதத்தைப் பார்த்து.

''நேத்து ராவு நான் அறந்தாங்கிச் சந்தைப் பேட்டையிலேயிருந்து திரும்புகாலிலே மாசி மலைத் தேவர் ஆட்டு வாசலோட வந்துகிட்டிருந்தேன். அப்ப எங்க சின்னாயி மவன் சுப்பையா ஒங்க ஆட்டுக் குட்டி பறிபோனதைப் பத்திச் சொன்னான். அப்படியே கல்லாட்டம் நின்னுகிட்டிருந்தேன், அப்போ மாசிமலைத் தேவர் ஆறு கலம் கொள்ளுற ஓர் ஈச்சங் கூடையைத் துணிபோட்டு மூடிக்கிட்டுத் தலையிலே வச்சுச் சுமந்து கிட்டு வடக்காலே நாடிப்போனாரு; அமாசை இருட்டிலே கூடைமட்டுந்தான் கண்ணுக்குத் தெரிஞ்சுது. ஆனால், அதுக்குள்ளாற இருந்த சாமான் என்னா ஏதுன்னு எனக்கு விளங்கல்லே. சத்தே கழிச்சு, ஆட்டுக் குட்டி கத்தின மாதிரி ஒரு சத்தம் மட்டும் என் காதுக்கு விளுந்திச்சு!...தடம் பார்த்து நடந்து போறதுக்குள்ளே, அந்த மனுஷன் எந்தத் திக்கிலே விழுந்து மடங்கினார்னு புரியல்லே, திரும்பிட்டேன். இன்னிக்குக் கருக்கலோடே அக்கம் பக்கம் கத்திரிக்காடு வரை போயி விசாரிச்சுப் பார்த்தேன். ஒரு துப்பும் ஒரு தடயமும் கெடைக்கல்லே. மாசி மலைத்தேவர் கொடுக்கல் வாங்கல் வச்சிருக்கிற ஊரு குருந்தரக்கோட்டை மட்டுக்கும் இருக்குது! மாசி மலைத்தேவரைப்பத்தி எனக்கு அம்புட்டு ஒசந்த கருத்து இல்லாங்காட்டியும், அம்புட்டுத் தொலைவுக்கு மட்டமான அபிப்பிராயமும் இது பரியந்தம் எம் மனசிலே நெருங்கினது கிடையாது. நடந்த நடப்பு இதுதானுங்க எந்தப் புத்திலே எந்தப் பாம்பு குருக்குமோ, யாராலே காண வாய்க்குது...?'' என்று சொல்லி மூச்சு விட்டான் வேலாயுதம்.

"அப்படிங்களா சமாசாரம்? எனக்கு இப்பல்ல சங்கதி புரியுது! ஊம்!" என்றாள் கருப்பாயி.

"அயித்தைக் கைலே சொல்றேன்; நல்லவங்க பொருள் நாடு தப்பிப் போனாலும், உங்ககிட்டே தன்னாலே வந்து சேர்ந்துப்புடும். இதைப்பத்தி இந்தத் தள்ளாத வயசிலே கிலேசப்பட்டுக்கிட்டு இருக்காமெ, மத்த வேலைங்களைக் கவனியுங்க!" என்று சொல்லி விட்டு விடைபெற்றான் வேலாயுதம்.

மாசிமகத் திருநாளுக்கு மகமாயியின் கோயிலுக்குப் போய்விட்டுத் திரும்பினாள் கருப்பாயி' விபூதிப் பிரசாத முடிச்சைத்தன் குடிசை வாசலில் குந்தி அவிழ்த்தாள். 'மவளை எங்கண்ணுப் புறத்தாலே காணமே? உருமப் பொழுது வந்திடுச்சே?' என்று எண்ணமிட்டது தாயுள்ளம்

"ஆத்தா!" என்ற அழைப்புக் கேட்டுத் தலை நிமிர்ந்தாள் முதியவள்.

"இந்தாடி ஆத்தா, சோளமுறுக்கு!" என்று சொல்லி, சோளமுறுக்குக் கொண்டையை மகளிடம் பாசத்துடன் நீட்டினாள் தாய்.

மகளுக்குப் பாசக் கண்ணீர் தளதளத்தது. "ஆத்தா, வளமை மாறாமெ இன்னுங்கூட எனக்குத் திங்கிறதுக்குப் பண்டம் வாங்கியாந்திருக்கியே? நீ கொஞ்சம் தின்னு!" என்று சொல்லி, பாதியைப் பெற்றவளிடம் சமர்ப்பித்தாள் முத்தாயி.

"ஆத்தாளோட அன்பைத் தட்ட ஏலுமா? என்று சொல்லிக் கொண்டே சோள முறுக்குகளை ஏந்தினாள் கருப்பாயி. அவளது பார்வை, எதிர்ப்புறத்தே தீனி தின்றுகொண்டிருந்த ஆட்டையும் அதன் குட்டி

களையும் நாடியது. அவளது மனக் கண்ணில் காணாமற்போன அந்தப் பச்சிளம் ஆட்டுக்குட்டி நிழலாடியது. கறுப்பு உடலும் அழகிய அமைப்பும் கொண்ட அந்தக் குட்டியின் காதுப்புறங்களிலே இருந்த வெண்மை வண்ணம் அவளால் மறக்கவொண்ணாத இன்ப கனாப்போல அமைந்திருந்தது அவள் நெடுமூச்செறிந்தாள்.

"மாசம் மூணு நெருங்கப் போவுதே! காணாமப் போன நம்ம ஆட்டுக்குட்டியைப்பத்தின தடயம் எதுவுமே தட்டுப்படக் காணமே? ம்?" என்று வருந்தி நெட்டுயிர்த்தாள் தாய்.

தாய் ஆடு கதறியது. பிரிந்ததன் குட்டியை எண்ணிக் மவுனக் கண்ணீர் சொரிந்ததோ?

"ஆத்தா! அதுபத்தின ஒரு சேதியைச் சொல்லத்தான் இம்மாம் அவதியாய் வந்து நிக்கிறேன்" என்றாள் முத்தாயி.

"என்னடி, ஆத்தா? பொட்டுனு சொல்லிக் காட்டு!" என்று பறந்தாள் கிழவி.

"கஞ்சிப் பொழுதுக்கு நேரா, சத்தே முந்தி நம்ம வூட்டை நாடி வந்துகிட்டிருக்கிறப்ப, என்னமோ ஒரு குருட்டாம் போக்கிலே மறுகத் திரும்பி மாசிமலைத் தேவர் வூட்டுப் பக்கமா நடந்தேன். அப்ப, அவர் வூட்டு வாசலிலே காணாமப் போன நம்ம வூட்டு ஆட்டுக்குட்டி நின்னுச்சு. நம்ம குட்டியேதான் அது. அது நல்லா வளர்ந்திருக்குது. காதிலே உள்ள வெள்ளை நிறம் ரொம்பத் தூக்கலாய்ப் பளிச்சின்னு இருக்கும்! 'இது தான் எங்க ஆட்டுக்குட்டி'ன்னு தேவர்கிட்டே சொன்னதுக்கு, 'இது, வாரத்துக்கு நான் வடக்கே விட்டிருந்த குட்டியாக்கும்! தாய் ஆட்டுக்கு நோய். அதனாலே இதை இங்கே கொண்டு

வந்திட்டேனாக்கும்! இது என் வீட்டு ஆடு! இன்னொரு வாட்டி இதுபத்தி ஏதாவது சொன்னியோ அப்பாலே மூண்டிடும் வம்பு!...ஆமா!'— அப்படின்னு காட்டமாச் சொன்னார். ஆத்தா! மகமாயி சந்நிதிக்கு வந்து சூடத்தைக் கொளுத்திச் சத்தியம் செய்வேன், அது அச்சுக்குலையாத நம்ம வெள்ளாட்டுக் குட்டின்னு! நான் விடல்லே அந்தக் கிழவனை! 'சத்தியம் பண்ணுவீங்களா?'—அப்படின்னு மல்லுக்கு இழுத்தேன். 'உம்' இன்னு வீராப்போட பேசினாரு!'' என்று நடந்த நடப்பை விளக்கினாள் முத்தாயி.

''ஆமா, இப்ப நாம என்ன செய்யறது? அந்த அண்ணாச்சி இம்மாங்கொத்த முடிச்சுமாறி ஆளுன்னு லவலேசமும் நான் நினைக்கவே இல்லையே, ஆத்தா? இப்ப நாம அந்தக்குட்டி நம்மதுன்னு எப்படி ரூபிக்க ஏலும்? வாயில்லாச் சீவனாச்சே அது! ஆயி மகமாயியும் வாயில்லாச் சீவனாக ஆயிட்டாளே!'' என்று கலங்கினாள் கருப்பாயி.

இவர்களின் பேச்சைக் கேட்டு விவரம் அறிந்து கொண்ட பாவனையில், தாய் ஆடு மகிழ்ச்சியுடன் துள்ளியது.

அன்னை மகமாயி அந்த ஆட்டுக்கு விவரம் உணர்த்தியிருப்பாளோ?

''ஆத்தா, மகமாயியா வாயில்லாச் சீவன்? அவ இல்லாட்டி நாமளெல்லாம் எப்படிப் பேச வாய்க்கும் நம்ம ஆட்டுக்குட்டியை நம்மகிட்டே சேர்ப்பிச்சிருவா, ஆயி மகமாயி! இப்பவே போயி, ஊர்ப்பஞ்சாயத்தைக் கூட்டுறதுக்குத் தோது பண்ணுவம்! அப்பாலே கூத்தை நேருக்கு நேரப் பாரு, ஆத்தா!''

'ஊர்ப் பஞ்சாயம்' கூடியது!

களத்து மேட்டுத்திடலில் ஜனநெரிசல் அமளிப் பட்டது. ஆறுகரைத் தலைக்கட்டுக்காரர்கள் கம்பீர மாகக் குந்தியிருந்தனர்.

ஒரு புறம் மாசிமலைத் தேவர் வயிற்றைக் கையால் பிசைந்தவராக நின்றுகொண்டிருந்தார். எதிர்ப்புறத்தில் கருப்பாயியும் அவளுடைய மகள் முத்தாயும் நின்றார்கள்.

''ஐயா, மாசிமலைத் தேவரே! நீங்க வயசிலே ஒசந்த புள்ளி. ஒங்க பேரிலே கருப்பாயி சொல்லிக் காட்டுற குத்தச்சாட்டுக்கு நீங்க என்ன சவாப்புச் சொல்லுறீங்க?'' என்று அந்த அறுவரில் ஒருவர் கேள்வி தொடுத்தார்.

''என்னோட வூட்டிலே நிக்கிற அந்த ஆட்டுக் குட்டி என்னோடது தானுங்க! இதிலே என்ன சொல்ல வேண்டிக் கிடக்குது?'' என்றார் மாசி மலைத் தேவர்.

''வாயில்லாச் சீவன் விவகாரத்திலே நீங்க என்ன சொல்லுறீங்க, ஆத்தாளும் மகளும்?'' என்று அறு வரில் இரண்டாமவர் குறுக்கிட்டார்.

''இம்மாம் பெரிய கும்பலிலே சமைஞ்ச பொண்ணு நான் பேச நேர்ந்ததுக்கு மூத்தவுங்களும், நல்லவுங்களும் என்னைச் சமிச்சுப்புடணும்! சொத்து எங்க வூட்டுதுங்க; அவரு இல்லைன்னாக்கா அத் தோட விட்டுப் போச்சுங்களா கதை?'' என்று முழங் கினாள் முத்தாயி.

''வாய்ப் பேச்சை வளர்த்து விடப்புடாதுங்க பஞ்சாயத்திலே! அந்த ஆட்டுக்குட்டி தன்னதுன்னு

சொல்லுதே இந்தப் பொண்ணு, அதுக்கு என்னா ஆதாரமுங்க?'' என்று ஒரு போடு போட்டார் மாசி மலைத் தேவர். மறுகணம், ''ஆ!'' என்று முனகினார்.

''அந்த ஆட்டுக்குட்டி எங்களதுங்கறத்துக்கு ஆதாரம் இருக்குதுங்க!'' என்றாள் முத்தாயி.

''என்ன, ஆத்தா, ஆதாரம்?'' என்று கேட்டது ஊர்ப் பஞ்சாயம்.

''ஆயி மகமாயிதான் ஆதாரம்!'' என்றாள் முத்தாயி, கண்களை மூடித் தியானத்தில் லயித்தவளாக.

''ஆயி மகமாயி சொன்னாச் சரிதான்!'' என்று இணங்கினார் மாசிமலைத் தேவர். அவருக்கு இப் போது முனகல் மிஞ்சியது. வெளிக் காட்டிக்கொள் ளாமல் தவித்தார், பாவம்! வயிற்றுவலி!

''அப்படின்னா, அவரு வூட்டிலே நிக்கிற அந்த ஆட்டுக்குட்டியைக் கொண்டுவரச் சொல்லுங்க! ஆத்தா, நம்ம ஆட்டையும் சொச்சக் குட்டிங் களையும் கொண்டா!'' என்றாள் முத்தாயி.

கணங்கள் சில மவுனத்தை விழுங்கின.

''ஆத்தா, வந்திட்டீயா?''

கிழவி கருப்பாயியின் கைப்பிடியில் அவளுடைய தாய் ஆடும் இரு குட்டிகளும் நின்றன.

அதோ வந்து விட்டார் மாசிமலைத் தேவர், அந்த ஆட்டுக்குட்டியுடன்!

கம்பீரமான அமைதியுடன் தலை நிமிர்ந்து நின்றாள் முத்தாயி. அவளது மார்பகம் எம்பி எம்பித் தணிந்துகொண்டிருந்தது!

அந்தக் குட்டியைக் கண்டதும் தாய் ஆடு பாசத் திளைப்புடன் ஓங்கார நாதமிட்டுக் கத்தியது.

மறுகணம், தேவரின் கைப்பிடிப்பில் இருந்த அந்த ஆட்டுக்குட்டி கட்டறுத்துக்கொண்டு, தாய் ஆட்டை நோக்கி ஓடி வந்து, பாசத்துடன் வீறுடன் தாய் ஆட்டை அண்டி, அதன் பால் மடியில் பால் குடிக்கத் தலைப்பட்டது! ஏனைய இரு குட்டிகளும் அந்த ஆட்டுக்குட்டியைப் பாசச் செறிவுடன் நக்கிக் கொடுத்துக் கொண்டிருந்தன. தாய் ஆட்டின் கரிய பெரிய விழிகளின் அடிவாரத்தில் கண்ணீரின் அமுதத் துளிகள் சத்திய பாசத்தின் சாட்சிகளாகத் தெறித்துச் சிதறின! அந்தத் தாய் ஆடு இப்போது மகிழ்வின் துடிப்பால் துள்ளி வீரிட்டது! தாயுடன் குட்டிகள் மூன்றும் குரல் கொடுத்தன!

ஊர் அதிசயித்தது.

''பஞ்சாயத்துக்காரர்களே! ஆயி மகமாயி பேசுவதைக் கேட்டீங்களா?'' என்றாள் மூத்தாயி.

''ஆமா, தாயே! ஆயி மகமாயிக்கா பேசத் தெரியாது? ஆத்தா மூத்தவ உன் பேச்சிக்கு மதிப்புக் குடுத்து, அந்த வாயில்லாச் சீவன்களைப் பேச வச்ச திருக்கூத்தை நேருக்கு நேராகக் கண்டுகிட்டோம்! எங்களுக்குப் புதுப் பாடம் படிச்சுக் குடுத்திட்டா ஆயி நீயேதான்!''

ஊர்ப் பஞ்சாயத்தின் நீதிக்குரல் விரிந்தது. மறுகணம் ''மாசிமலைத் தேவர்! நீங்க ஓங்க அடாவடிக்குத் தண்டனையாய் அவதாரம் ரூவா இருபத்தஞ்சு கட்டிப்புடணும் இப்ப!...'' என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

நீதியின் குரலைக் கேட்க முடியாமல், வயிற்று வலியால் துடித்துத் தவித்துத் தரையில் புரண்டு கொண்டிருந்தார் மாசிமலைத் தேவர்!

அண்டப் பெருவெளியில் மாயச் சிரிப்பு ஒன்று எதிரொலித்துக் கொண்டேயிருந்தது.

# 7. காணிக்கை

*வருண பகவானே! கண் திறக்க மாட்டாயா?*

முத்தரசனுக்கு அழுகை அழுகையாக வந்தது. வாய்விட்டு 'ஓ'வென்று ஒரு பாட்டம் அழுது தீர்க்க வேண்டும் போல் இருந்தது. ஆனால் அழுவதற்கும் ஒரு தெம்பு வேண்டாமா? கண்களிலே கண்ணீர் வேண்டாமா?— 'ஒசக்கே ஆகாசத்திலவே தண்ணிக்குப் பாடு வந்தாச்சு; இந்த இடுசாமத்திலே, எங் கண்ணிலே மட்டுக்கும் தண்ணி எப்பிடி வருமாம்? ஆயி மகமாயி! நாடு போற போக்கைக் கண்டு ஒனக்கே நெஞ்சு பொறுக்கலையாங்காட்டி? அது தொட்டுத்தான் ஏழை பாழைங்களான எங்களையும் சேர்த்துச் சோதிக்கிறியா? மனுசங்க கண் திறந்தாத்தான், நீயும் கண் திறப்பியா?...ஐயையோ! ' பாளம் பாளமாக வெடித்துக் கிடந்த வயல்வெளியின் உச்சிச் சூடு அப்போதுதான் அவனுக்கு உள்ளங் காலில் உறைத்திருக்க வேண்டும். தாவிப் பாய்ந்து ஓட்டம் பிடித்தான் அவன்.

தென் புறத்தில் காகம் கரைகிறது.

'ஏதுணாச்சும் ஆகாரம் தட்டுப்பட்டால், பங்கு போட்டுக் கூடித் தின்கிறதுக் கோசரம் சேக்காளிங் களைக் கூவிக் கூப்பிடும் காக்கை அப்படின்னு நாலும் தெரிஞ்சவங்க சொல்லுவாக!'—கண்ணீர் இப்போது கரைகிறது; அந்தச் சொட்டுக் கண்ணீரில் செல்விக் குட்டியின் பசியும் கரைந்திருக்கலாமோ?

செல்லிக்குட்டிக்கு 'ரோசம்' கூடுதல். ராத்திரி முன்சாமத்திலே, பசியின் அரிப்போடும் ஆசையின் உறுத்துதலோடும் சிம்னி விளக்கைக் கையில் ஏந்திக் கொண்டு, எட்டடிக் குச்சின் ஒட்டை அடுப்படிப் பக்கம் நாடினாள் செல்லி. கலவடையில் குடம் சாய்ந்து கிடந்த கஞ்சிக் கலயத்தைத் தடவித் துழாவினாள். நாலு கவளம் சோளக் களி அபூர்வமாகத் தரிசனம் தந்தது. நாக்கில் நீர் ஊற, இடுக்கு விழுந்த விழிகளையும் ஒடுக்கு விழுந்த வாயையும் மூர்த்தண்யமான வெறியுடன் திறந்தபடி, அந்தக் கவளங்களை ஒரே எட்டில் கூட்டிச் சேர்த்து அள்ளினாள்; வாய்க்குள் கொண்டு சென்றதுதான் தாமதம்; அப்படியே நிலைகுத்திக் சமைந்துவிட்டாள். 'அப்பன், பகல் முச்சூடும் பச்சைத் தண்ணி பல்லிலே படாமல் வைராக்கியமான ரோசத்தோட கிழிசல் கோணியிலே தலை சாய்ச்சுக் கிடக்குது! பாவம், எனக்காக வேண்டி சேமிச்சு வச்சிருக்குது போலே. அப்பனுக்கு என்னைத் தவிர, வேற நாதி ஏது? ஆத்தாதான் ஏச்சுப் போயிட்டாளே? பாவி!'—அப்பனை உசுப்பினாள். அவன் தூங்கினால்தானே? "நீ உண்ணு; பாவம், தாயில்லாப் பொண்ணு நீ!...அப்பன் நான் இருக்கேன். ஒன்னோட பசிக்கு வகை செய்யத் துப்பில்லாமல் செஞ்சு பூடுச்சே அந்த மானம்!" என்று விம்மி வெடித்தான்.

செல்லி சின்னக்குட்டி தான்; ஆனாலும், ரோசம் மிருதி; பாசம் ஜாஸ்தி. தொடவில்லை அவள். "பாவப்பட்ட சென்மம் நீ! எனக்கு மகளாய் ஏதுக்காம் பிறந்தே? பிள்ளைக் கலி தீர்க்கவா பிள்ளைக் கலி தீர்த்து வச்ச மகராசின்னு நம்பியிருந்தேனே உன் ஆத்தாளை! மோசம் செஞ்சுப் புட்டாளே, பாதகி!"—தலை ஆலவட்டம் சுற்றத்

தலைப்பட்டது. தடுமாறினான்; சாயவேட்டிக் கிழிசல்வேறு குதிகாலில் பின்னிக் கொண்டது. 'இன்னிக்கானும் எம் மவளுக்கு — கறிவேப்பிலைக் கொழுந்தாட்டம் இருக்கிற எம் பொண்ணுக்கு பசி தீர ஏதுனாச்சும் வயிற்றுக்குப் போட்டாக வேணும்! பாவம்!'—வெறிபற்றி, வெறிமூண்டு எதிர்வசம் ஓடினான்; எங்கே?—சோளக் கொல்லைக்குள்ளே தான்! பசிப்பிணி அகற்றிட ஏதாவது தட்டுப்படாதா என்ற சபலத்தில்தான்!

கால்களில் கடுப்பு மிஞ்சியதுதான் மிச்சம். கருகிக் காய்ந்து சருகாகித் தலைசாய்ந்து கிடந்த சத்தியத்தின் சின்னங்களாகப் பிரகடனப் படுத்தப்பட்டுக் காட்சியளித்த வெறும் சோளத் தட்டைகளிலே என்ன கிடைக்கும்?—

ஆ! விஷக்கிழங்குச் செடிகள்!

என்னவோ நினைவுடன் அண்டி ஒண்டினான் சாலைத் தடத்திலே பத்திரிகை வாசிச்சவங்க ஒரு கிழமை காதைக் கடிச்சுக்கிட்டாங்க. அது இந்தச் செடிகளாகத்தான் இருக்க வேணும். இதோட அடிப் பக்கக் கிழங்கைக் கல்லி எடுத்து, சுடு தண்ணியிலே வேக வச்சு, பின்னே, நச்சுநீர் கழிஞ்சதும், அப்பாலே அதை மறுபடியும் அவிச்சு, கூடமாட உப்பு—பொடி ஏதாச்சும் தூவிப்போட்டுச் சாப்பிட்டாங்களாம் தெற்குச்சீமை ஆளுங்க.

ஐயோ! இந்த விஷக்கிழங்குச் செடிகள் கூட பட்டுப் போய்விட்டனவே! 'ஐயோ! என்னோட செல்லிக்குட்டி இம்மாம் பொழுதுக்குப் பசியிலே துடிச்சுச் செத்துக்கிட்டு இருக்குமே!'

பார்வையை மறைத்திட்ட ஈரத்தை வேட்டிக் கிழிசலின் முனையைக் கொய்து துடைத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளானான் முத்தரசன். இல்லையென்றால்... ஈரத்தை—கண்களின் அந்த ஈரத்தைச் செல்லிக்குட்டி பார்த்துவிடமாட்டாளா?

கூப்பிடும் தூரத்தில் தரிசனம் தந்த அந்தக் குச்சை—ஓர் அழகான—அந்தமான ஆலோசனை கொடி மின்னலாகப் பளிச்சிட்டது. கைந்நொடிப் போது நின்றான்.—'பலேடா!...அப்படியே செஞ்சுப் புட்டா என்னவாம்? குடி முழுகியா பூடும்? பொழுது பட்டு, கருக்கிருட்டு கால்பாவினடியும், அப்படிச் செஞ்சால் என்னவாம்? நான் பிழைச்சிடுவேன்! நான் பிழைச்சுக் கிழிக்கிறது கிடக்கட்டும். எம்புட்டுச் செல்லிக்குட்டி பிழைச்சுடுமே!—என் செல்லித் தெய்வத்துக்கோசரம் தானே அந்த அஞ்சலை எனக்கும் சாமிக்கும் கூட அஞ்சாமல் செஞ்ச துரோகத்தையும் ஒதுக்கி வச்சுக்கிட்டு, இந்தப் பாழாய்ப்போன உசிரையும் உடும்புப் பிடியாய்ப் பிடிச்சு வ்ச்சுக்கிட்டு ஓடியாடிக்கிணு இருக்கேன்!'

அவன், 'சே!' என்று காறித்துப்பிவிட்டு, கையை உதறினான். 'கூடாது! அப்படிச் செய்யவே மாட்டேன்! முத்தரசன் ஏழைதான்; ஆனா, இவன் மானி; யார்கிட்டேயுங் கையேந்த மாட்டான்! ரோசக்காரன்!'—புதிய தென்பு ஊற, கை வீசி, தலை நிமிர்ந்து—தலையை நிமிர்த்தி நடக்கலானான்.

'இனி, என்னோட செல்லியை எப்படிக் காப்பாற்றுவேன்? ஆளாகிறதுக்கு வேளை கணிச்சுகிணு நிற்கிற பொண்ணாட்டமா செல்லி இருக்கு! ஆயி, ஒனக்கு நெஞ்சின்னு ஒண்ணு இல்லியா? அதாலேதான் எனக்கு — இந்தப்

பஞ்சைப் பனாதிக்கு—ஒன்னைத் தவிர நாதியத்த இந்தப் பரத்தை ஆண்டிக்கு நெஞ்சின்னு ஒண்ணைத் தந்திட்டியா ஆத்தா? எனக்கு இந்த நெஞ்சைத் தந்த தொட்டித்தான், செல்லிக்குட்டியையும் எனக்குத் தந்திருக்கியாங்காட்டி? ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணுன்னு இருக்கிற எம்மவ பசியிலே துடிச்சிக் கிட்டு இருக்குமே? பிடிசோறுக்குக் கூட வகை இல்லையே? வாங்கின கடனையே நாணயத்தோட திருப்பிக் கொடுக்கத்தான் மழை பேயக் காணோமே! குடிசையிலே இனி காஞ்ச ஓலைங்களும், சட்டி பானையும்தானே மிஞ்சியிருக்கு!.. ஊர் நாட்டிலே உள்ள பணக்காரவுங்க ஒண்டியுந்தான் புண்ணியம் செஞ்சவுங்க போலே! அவங்க தெய்வத்தைக் கூட விலைப்பேசத் தயாராயிருப்பாங்க!‘மானம் பார்த்த’ மண்ணிலே ஆப்பிட்டுக்கிட்ட என் மாதிரி பாவச் சென்மங்களுக்குக் கூலி வேலைக்குக் கூட வழி இல்லாமல் பூடுச்சே? இந்நேரம் மழை பேஞ்சி ருந்தால், நானும் மகளும் விடிய விடிய மண்ணே கதின்னு உழைச்சுக்கிட்டு இருந்திருக்க மாட்டமா? ஒரே முட்டாய்ச் சோதிச்சிட்டியே தாயே, இது உனக்கே அடுக்குமா? இது நியாயமா? தருமமா, ஆத்தா?’

கேணியில் விழுந்துவிடலாமா?

கேணியில் தண்ணீர் இருந்தால்தானே?

தண்ணீர் கிடக்கட்டும்!—செல்லிக் குட்டிக்குத் தண்ணீர் ஊற்ற நாதி யார்?

அந்தப் பாவி—பழிகாரி அஞ்சலை இல்லையா?—“அஞ்சலை!”—அவன் பற்களை சிம்ம அவதாரம் கொண்டாற்போலே ‘நற நற’வென்று கடித்துக் கொண்டான். ‘எம் மவ ஆளானதும், அவளை ஒரு

நல்லவன்கிட்டே ஒப்படைச்சு முடிச்சதும், அடுத்த அலுவல் அந்த வஞ்சகியைக் குடலைக் கிழிச்சு மாலையாய்ப்போட்டுக்கிட்டு இந்தப் பூவத்தகுடி ஒழுங்கைத் தடத்திலே தலைநிமிர்ந்து நடக்க வேண்டியதுதான் பாக்கி!'—நெஞ்சை என்னவோ செய்தது!

''அப்பாவே!''

—அவன் ஆடாமல் அசையாமல் அப்படியே சிலையாக மலைத்து நின்றான்! 'பெத்த மகளோட பசியைப் போக்க வழியத்த வெறும் முண்டம் கணக்கிலே வந்து நிற்கிற என்னையா அப்பான்னு வாய்நிறைய அழைக்கிறே?'—

''அப்பா...அப்பா! உள்ளாற வாங்களேன். ஓர் அதிசயம் காட்டுறேன்!''

கிழிசல் பாவாடையையும் ஒட்டுப்போட்ட ரவிக்கையையும் ஒங்கி மண்டையில் அடித்துவிட்டு, மகாலட்சுமி மாதிரி இதயத்தால் — பாசத்தால் சிரித்தாள் செல்லிக்குட்டி. பேய் பிடித்த மாதிரி நின்று விட்டதந்தையைக் கரம் பற்றி இழுத்துக் கொண்டு குடிசைக்குள் நுழைந்தாள்.

அங்கே—

பெரிய ஈயச் சருவச்சட்டியிலே சோறும் குழம்பும் வெஞ்சனமும் பிதுங்கி வழிந்து கொண்டிருந்தன.

முத்தரசனின் விழிகள் பிதுங்கின.

செல்லியின் எண்சாண் உடல் ஒரு சாணாகக் கூனிக் குறுகியது.

''செல்லி! இம்மாஞ் சோறும் கறியும் குழம்பும் ஏது?''

"ம், சொல்லு. கங்காணி வீட்டிலே காது குத்தின்னு பேசிக்கிட்டாங்களே, அங்கேயா?"

"ஊ ஹூ-ம்!"

"பின்னே?"

"பிச்சை எடுத்தேன் அப்பா, பிச்சை எடுத்தேன்!"

"நம்ப ஊருக்குள்ளாறவா?"

"இல்லே!"

"மறுகா?"

"மூணு கல்லுத் தாண்டி, மாங்குடிச் சேரியிலே! ஏழைக்கு ஏழைதானுங்களே அப்பா இரங்குவாங்க!... அப்பாலே தெய்வமா இரக்கப்படும்?"

"அடி, பாவி மகளே! மானம் அவமானம், சூடு சொரணையை விட்டுப்போட்டு, கையேந்திப் பிச்சை எடுக்கறதுக்கு ஒனக்கு வெக்கமாயில்லே? பசி தாங்க முடியலேன்னா, நாக்கைப் பிடுங்கிக்கிட்டு செத்துப் போயிருக்கப் புடாதா?...மானஸ்தன்னு பேரெடுத்த இந்த முத்தரசன் மானத்தை ஏலம் போட நீயுமா துணிஞ்சிட்டே?"

வெகுண்டெழுந்தான் முத்தரசன். சோற்றுச் சட்டியையெடுத்து வாசலில் வீசினான்; பிறகு, செல்லிக் குட்டியை தலைமுடியைப் பற்றிப் பிடித்து காலடியில் கிடந்த மூங்கில்குச்சியால் விளாசு விளாசென்று விளாசினான்.

செல்லிக்குட்டி மூச்சுக் காட்டவில்லை.

தரை மீனாகத் துவண்டு துடித்த முத்தரசன், "ஐயோ, மவளே! நான் பாவி, ஆத்தா, நான் பாவி! பெற்ற மகளை குலைப்பட்டினியாகப் போட்டுட்டு வேடிக்கை பார்த்துகிட்டு இருக்கிற பாவி நான் .. தாயே!" என்று ஓலமிட்டான்.

கிழவி மங்காத்தா ஓடோடி வந்தாள்; "டே, முத்தரசா! ஒனக்குப் புத்தி பிசகிப் பூடுச்சா? உம் மேலே உசிரையே வச்சிருக்கிற உம் மவளையா அடிச்சுப் போட்டே? ஓடிப்போன உம் பொஞ்சாதி அஞ்சலை உச்சிக்கு வந்து உம் பொண்ணைத் தன்னோட வந்திடச் சொல்லிக் கெஞ்சிக் கூத்தாடினா! உன் தங்கம் அவ மூஞ்சியிலே காறித் துப்பி அனுப்பிச்சிட்டாடா! ஆத்தா கல் இல்லேடா! அதைப் புரிஞ்சுக்கிடுடா!"

"மகளே! மகளே! எனக்கு மாப்புக் கொடுக்க மாட்டியாடி, ராசாத்தி!"

"அப்பாருக்குப் பசிக்குமேன்னுதான் நான் பிச்சை எடுக்கத் துணிஞ்சேன்!" என்று செருமினாள் செல்லி.

கிழவி கண்களைத் துடைத்துக் கொண்டாள்; "முத்தரசா! நீ மானி! அதாலே தான் உங்கிட்டே ஓடியாந்தேன். நம்பிக்கையோட, எனக்கொரு ஒத்தாசை செய்வியாப்பா?" என்று கேட்டாள்.

"சொல்லு ஆயா!"

"குசேலர் வூட்டுக்கு கிருட்டிணர் சாமி மட்டுக்கும் தான் விருந்தாடி வந்தார். ஆனா, என்னோட குச்சுக்கு இப்ப நீயும், உன் மகளும் விருந்தாடி வாரோணும். அம்புட்டுத்தான்! இருக்கிற கூழை நிரந்து குடிப்போம்!"

"மகமாயி!"

"மகமாயி இருக்கிறாடா, முத்தரசா!"

பிறை நிலா முறை கொண்டு எட்டிப்பார்க்கிறது.

முத்தரசன் மனச்சாட்சியை ஏதோ ஒன்று என்னவோ செய்து தொலைத்தது; 'செல்லிக்குட்டி

நான் கையாலாகாத வெறும் மூண்டம்தான். உன்னைப் போட்டு நச்சுப்புட்டேன். நான் உனக்காக வேண்டி ராவிலே பிச்சை எடுக்க ரோசிச்சேன்; மனசு துணியல்லே! ஆனா, நீ எனக்கோசரம் பிச்சை எடுத்திட துணிஞ்சிட்டே!'

குறட்டைச் சத்தம் கேட்கிறது.

செல்விக்குட்டி அசந்து தூங்குகிறாள். வலது கன்னத்தில் விழுந்திருந்த அடியின் வடுவைக் கண்ட மாத்திரத்தில், வாயைப் பொத்திக் கொண்டு அழுதான். கன்னத்தின் வடுவை மெதுவாகத் தடவிக் கொடுத்தபோது, கைசுட்டது; பதைப்பு மூண்டது. 'மகளுக்குக் காய்ச்சல் வந்திடுச்சே!'— செருமிச் செருமி அழத் தொடங்கினான்.

வாசல் வழி ஓடிய மருதங்குடி ஒற்றையடிப் பாதையில் நிலவில் மிதந்தவர்களாக, நாலைந்து பேர்வழிகள் சல்லாபம் அடித்துக்கொண்டே நடந்தார்கள்.

முத்தரசன், குடிசையின் துவாரங்களின் வழியாக வெளியே ஊடுருவிப் பார்வையிடலானான்.

ஊர்ப்பெரிய மனிதர்கள் மகமாயிக்கு வேண்டுதல் செலுத்திப் 'பள்ளயம்' படைத்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

'ஓர் ஆசாமி எங்கிட்டோ ஒரு சிவன் கோயில் ஐம்பொன் சிலையை கை ஆள் வைச்சுத் திருடி, 'குல்லுமால்' பண்ணி லட்சக்கணக்கிலே பணம் சேர்த்தவன்; இன்னொரு புள்ளி கள்ளநோட்டுக்காரன்; மறு பேர்வழி கலப்படக்காரன்; நாலாம் ஆள் அரசியல் மூலம் புதுத் பணக்காரன் ஆனவன். இப்படிப்பட்ட சமுதாயத் துரோகிங்களெல்லாம் சட்டத்

தையும் சமுகத்தையும் ஏமாற்றிக்கிட்டு இருக்கிறது போதாதின்னு தெய்வத்தையும் ஏமாற்றிக்கிட்டு இருக்கானுக! இப்படி பாவிங்கள் ஊர் நாட்டிலே மலிஞ்சிட்டு வாரதாலேதான், பெய்கிற மழை—பெய்ய வேண்டிய மழைகூட அடைபட்டுப் பூடுச்சு!'

கண்ணீரும் கம்பலையுமாகவே உறங்கிப் போய் விட்டான் முத்தரசன்.

விடிசாமம்.

'வெள்ளி' முளைந்து விட்டது.

தீக்குச்சியைக் கிழித்தான் முத்தரசன்; துண்டுப் பீடி ஒன்று அபூர்வமான நம்பிக்கையின் மின்னல் கீற்றாகப் பளிச்சிட்டது.—கோணிப் பையை சுவர் ஆணியைவிட்டு எடுத்தான். கிழிசல் வேட்டி, பாவாடை ரவிக்கையை எடுத்துத் திணித்தான். காலில் இடறிய காசுச் சம்புடத்தை எடுத்தான்; திறந்தான். நாலைந்து ரூபாய்க்குச் சில்லறைகாசுகள் இருந்தன. 'சே!' என்று வயிற்றெரிச்சலுடன் அதைத் தலையைச் சுற்றித் தூர வீசியெறிந்தான். அஞ்சலை சுங்கடி பிடித்து 'சிறுவாடு' சேர்த்திருந்த பணம் அல்லவா?

''செல்லிக்குட்டியோ...!''

''அப்பா!''

''மகளே, எந்திரு, போவோம்!''

''பாழத்த இந்த மண்ணை விட்டுட்டு, கண் காணாத அசலூரை நாடிப்பறிஞ்சிடலாம்; கிளம்பிடு, ஆத்தா! வழியிலே, மனுசத் தன்மை கொண்ட வைத்தியரை கண்டுதண்டி காயலாவுக்கு ஒனக்கு மருந்து மாயம் வாங்கித் தந்திடுவேன். தஞ்சாவூர்ப்பக்கம்

ஆத்தா காவேரி ஓடுறாளாம். அங்காலே, வேலை வெட்டி கிடைக்குமாம்! நீ ஆளாகி, ஒன்னை நீ ஆசைப்படுற மாப்பிள்ளைக்குக் கண்ணாலம் கட்டி வச்சால்தான் என் வைராக்கியம்—நோம்பு தீரு மாக்கும்!''

செல்விக்குட்டியின் விழிகளினின்றும் கண்ணீர் வழிந்தோடியது.

''பொறந்த மண்ணை விட்டுப்புட்டா கிளம்பச் சொல்றீங்க? வளர்ந்த மண்ணை விட்டுப்புட்டா வெளியேறச் சொல்றீங்க?''

''மழை இல்லே; தண்ணி இல்லே; வயல் காடெல் லாம் பட்டுத் தீஞ்சு போச்சு; மழை இருந்தால்தானே வேலை இருக்கும்; வேலையும் கிடைக்கும்! அசலூருக்குப் பறிஞ்சிட்டா, எப்பாடு பட்டாச்சும் உன்னை வளர்த்துப்பிடுவேன். ஒருவேளை அத்தி பூத்தாப்பிலே மழை பெய்ய ஆரம்பிச்சிடுச்சின்னா, நம்ப மண்ணுக்குத் திரும்பிடுவோம்!''

—தந்தை விம்மிப் பொருமினான்.

''மழை பேஞ்சால் சொந்த மண்ணுக்குக் கட்டாயம் திரும்பிடுவோமில்லே?''

''ஆத்தா ஆணையாய்த் திரும்பிடுவோம்!''

''அப்படின்னா, இப்பைக்கு மானம் கண் திறந்து மழை பெய்யாதின்னே முடிவு கட்டிப்பிட்டீங்களா?''

''பின்னே?...''

''நல்லவர் ஒருத்தர் இருந்தா, அவர் பொருட்டு நம்ப அல்லாருக்கும் மழை பெய்யும் அப்படின்னு வாத்தியார் பாட்டுப் படிச்சுக் கொடுத்தாருங்களே, அப்பாவே!''

"நல்லவங்க இருந்தாத்தானே, தாயே?"

"அப்படின்னா ஊர் உலகத்திலே நல்ல மனுசர் ஒரே ஒருத்தர் கூடவா இல்லாமல் போயிட்டாக?"

"அப்படி நல்லவர் ஒருத்தராலும் இருந்திருந்தால் எப்பவோ மழை கொட்டியிருக்காதாங்காட்டி?"

"அப்படியானா, நீங்கூட நல்ல ஆள். இல்லையா, அப்பாவே?"

"இல்லே; நான் நல்லவன் இல்லே. பெற்ற அருமைப் பொண்ணைப் பட்டினி போட்டுக்கிட்டு வர்ற நான், எப்படி நல்லவன் ஆக முடியும்?"

"ஆயி மகமாயியாச்சும் நல்லவள் இல்லையா?"

"மகமாயி நல்லவளாய் இருந்திருந்தால் அவளைக் கொண்டாச்சும் இந்நேரம் மழை பேஞ்சு, பஞ்சம் தெளிஞ்சிருக்காதா, என்ன?"

"சரி; நான்...?"

"நீ ஒருத்திதான் நல்லவள்! அப்பனுக்காகப் பிச்சை எடுக்க மனம் துணிஞ்ச தெய்வம் ஆத்தா நீ!"

"மெய்யாலுமா, அப்பா?"

"ஆத்தா ஆணையாய்த்தான்!"

"சரி, புறப்படுங்க அப்பா!"

மகமாயி கோயில் அது.

அம்மன் புதுப் பட்டுப்பாவாடை உடுத்தியிருக்கிறாள்.

தூண்டா மணிவிளக்கு தூண்டாமல்—தூண்டப் படாமல் எரிந்து கொண்டே இருக்கிறது.

அம்மனை விழுங்கி விடுபவன்போலே வெறித்துப் பார்த்தான்; கும்பிடப்போன கைகள் பிரிய, சந்நிதியைவிட்டு நகரலானான் முத்தரசன்.

''வா, செல்விக்குட்டி!'' மகளின் குரல் கேட்கவில்லை.

அரவம் கண்ட பாவனையிட்டுத் திடுக்கிட்டான் அவன்; அவன் திரும்பினான்; மறுகினான்; ஓடினான்.

ஆ!—

''ஆயி மகமாயி! ஊர் உலகத்திலே கேவலம் நீ ஒருத்தியாச்சும் நல்லவளாக இருந்திருந்தால், உன பொருட்டாச்சும் எல்லாருக்கும் மழை பெய்ஞ்சிருக்காதா? ஆமா; நீ நல்லவள் இல்லே; இல்லேன்னா, மானம் ரோசத்துக்கு ஆற்ற மாட்டாமல், நாங்க ஏன் உன் நிழலை விட்டுப்புட்டு ஓடி ஒளியப் புறப்பட்டுக்கிட்டு இருக்கிறோம்? ஆமா, நீ நல்லவள் இல்லே; நீ நல்லவள் இல்லவே இல்லை!''

உச்சாடனம் பெற்றவளாக, மகமாயியின் முகத்தோடு முகம் சேர்த்துப் பிணைத்து முட்டி மோதிக் கொண்டேயிருந்தாள் செல்விக்குட்டி! அவளது நெற்றிமேட்டினின்றும் இரத்தத்துளிகள் காணிக்கையாகிப் பீறிட்டுச் சிதறிக் கொண்டேயிருந்தன!

''செல்விக்குட்டி!...செல்விக்குட்டியோ!''

மகமாயி ரத்தக் கண்ணீர் சிந்துகின்றாளா?

செல்விக்குட்டி, இப்போது மகமாயியின் காலடியிலே சரண் அடைந்து கிடக்கிறாள்!

''ஐயையோ! என் செல்விக்குட்டியோ!''

என்ன சத்தம் அது? ஆஹா...!

அதோ, வானம் கண்திறந்து விட்டது!

அவனுடைய நடுங்கும் கரங்கள் இரண்டும் நடுங்கிக் கொண்டே ஒன்றாய்க் குவிந்து கொண்டிருக்கின்றன!

ஆயி மகமாயி சிரிக்கிறாள்; சிரிக்கிறாள்; சிரித்துக் கொண்டே இருக்கிறாள்..!

❋❋

# 8. தீபாவளிக் கடவுள்

'கொள்ளே காலம் ஸில்க் எம்போரியம்' சிரித்துக் கொண்டிருந்தது. சிரிப்பிற்கென்ன கேடு, சிரிப்பிற்கு? தீபாவளி வாசலுக்கு நெருங்கி வந்து கொண்டிருக்கிறதல்லவா?

வேலையன் சிரித்துக் கொண்டிருந்தான். தன்னை மறந்து—எதிரே ஒளியில் மூழ்கி, நாகரிகத்தின் எல்லைக் கல்லாய், பணப்பெருக்கத்திற்கு ஒரு வரம்புக் கோடாக நின்ற அந்தக் 'கொள்ளே கால'த்தை மறந்து, தன்னைத் தானே சுற்றிக்கொள்வதாகச் சொல்லும் உலகத்தை மறந்து, அலகிலா விளையாட்டுடைய அந்தப் பாழாய்ப்போன அம்மையப்பனைக்கூட மறந்து அவன் சிரித்துக்கொண்டிருந்தான். அவன் சிரிப்பிலே கண்ணீர், பெருமூச்சு, துயரச் சுமை எல்லாம் கும்மி கொட்டின.

வேடிக்கை மனிதன்!

இல்லையென்றால் அவன் மறுபடியும் மறுபடியும் இப்படிச் சத்தம் போடுவானா?

"ஐயா, இந்த நாலு முழ வேஷ்டி ஒண்ணு, ஒண்ணேகால் ரூவா ஸார், இந்த நாலு முழ வேஷ்டி ஒண்ணேகால் ரூவா தான், ஸார்...!"

வியாபாரத்திற்கு இவன் தேர்ந்தெடுத்திருக்கும் இடத்தைப் பார்த்தீர்களா? கொள்ளேகாலம் என்றால் பட்டணத்திலே குபேர பட்டணம் என்று அர்த்தம்; இங்கு தான் நாகரிகம் உடை உருவிலே

வினாடிக்கு வினாடி புனர் ஜன்மம் எடுப்பதாக 'நாலும் தெரிந்தவர்கள்' சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட இடத்திற்கு முன் இந்த வேடிக்கை மனிதன் கையில் இரண்டு ஜதை கைத்தறி வேஷ்டி களை வைத்து விலை கூவிக் கொண்டிருப்பதென் றால்?......வியாபாரக் கண்ணோட்டத்திலே புன் னகைப் பூவை கொவ்வைக் கனி இதழில் இழைய விட்ட வண்ணம் ஆடாமல் அசையாமல் நின்று கொண்டிருக்கும் அந்த நாகரிக அழகி ஆம், அந்தப் பொம்மைகூட எள்ளி நகையாடிக்கொண்டிருக் கிறதே!

வீதி விளக்குக் கம்பத்தில் தலையைச் சாய்த்துக் கொண்டான்; கண்கள் கிறங்கின; உலர்ந்திருந்த உதடுகளில் நுனிநாக்கை ஓட விட்டான்; சிறு குடல் பெருங்குடலைக் கவ்வியது.

மீண்டும் கூவினான்; கதறினான்: "ஐயா, நாலு முழ வேஷ்டி ஒண்ணு ஒண்ணேகால் ருவா தானுங்க; ரொம்ப சல்லிசான விலையுங்க; பெரிய மனசு பண்ணி வியாபாரம் செய்யுங்க; எங்க ஆறு பேருடைய வயிற்றிலே பால் வார்த்த புண்ணியம் கிடைக்கு முங்க!"

இதயத்தின் அடிவாரத்திலிருந்து உண்மை பிறக் கிறது. வேலையன் அந்த உண்மையைச் சொல் கிறான். வெறுங்கையால் முழம் போடாமல், பசியை பணயமாக்கி, தான் நெய்த கைத்தறி வேஷ்டிகளை வைத்துக் கொண்டு வியாபாரம் செய்யத்தான் விடிந்ததிலிருந்து ஒற்றைக் காலால் நெடுந்தவம் செய்து கொண்டிருக்கிறான். பலன்?......ஒரு வேளை பஞ்சும் பசியும் வட துருவமும் தென் துருவமாக ஆகி விட்டனவோ?

கொள்ளேகாலத்தின் சுவர்க்கவாசலில் முதல் அடி எடுத்து வைத்த குபேரர்கள் சற்று நின்றார்கள்; 'புண்ணியம்' என்ற சொல்லின் எதிரொலியைக் கேட்டதும். மறுகணம் வேலையனை—அல்ல விருமையின் திரு உருவைப் பார்த்தவுடனே, அவர்கள் 'பூ' என்று அலட்சியமாகச் 'சப்பு'க் கொட்டிவிட்டுச் சென்று விட்டார்கள். இவர்களுக்குத்தான் புண்ணியம் கூட கள்ள மார்க்கெட்டில் கிடக்கிறதே. வருமான வரிமுதலிய தொல்லைகள் கூட இல்லாத வகையில்!

பத்தோடு பதினொன்றாக ஒரு 'புண்ணியவதி' பட்டுக் கடைக்குள் நுழையப் போனாள்.

வேலையன் கருமமே கண்ணானான்!

''ஏண்டா. உனக்குப் போற வார வழிதானா வேஷ்டி விற்பனைக்குக் கிடைச்சிது? அப்படிச் சந்து பொந்துப் பக்கம் நின்று உன் காட்டுத் கத்தலைக் கத்தக்கூடாது? வேணும்னா ஒரு மைக் ஏற்பாடு பண்ணிக்கேயேன்! பெரிய மனுஷங்க வருகிற இடத்திலே இப்படித் திருஷ்டி பரிகாரம் போல...சீ! போ... போ ..சத்திரம் சாவடியை நாடி!''

ஏற இறங்கப் பார்த்தான் வேலையன். சிரிப்பு வந்தது—அந்தப் புண்ணியவதியின் உருப்படாத ஹாஸ்யத்தைக் கண்டல்ல; பசியும் வறுமையும் ஊடும் பாவுமாகிவிட்ட தன் கோர நிலை கண்டு, தறிகெட்டுச் சுழலும் தன் அவல நிலை கண்டு!

வேலையன் ஒரு தப்படி தள்ளி நின்று மறுபடியும் பழைய பல்லவியைப் பாடினான் பெரிய பெரிய கொள்ளேகாலம், பெனாரஸ் பட்டுப் புடவைக்காரர்களைப் போல் 'செட்டிச் சாயம், நூல் முதல் தரம், இரண்டு வருஷம் மூணு மாசம் உத்திரவாதம்' என்று

ஒன்றுக்கு ஒன்பதாக அனுபல்லவி, சரணம் பாட அவனுக்குத் தெம்பு இல்லை; அதற்குக் கூலியும் வராது. உழைத்ததற்கே 'துட்டு' வருவதற்குத்தான் நாள் நட்சத்திரம் பார்க்கிறதே!

சந்து முனையில் திரும்பிய 'வாக்ஸால்' வேலையனை முழங்கையைப் பதம் பார்த்து விட்டு, ஓடியே ஓடி விட்டது. முன் ஆசனத்தில் புன்னகை கோலமிட, பஞ்சுப் பொம்மையும் கையுமாகக் காணப்பட்ட அந்த 'இளவர'சை எண்ணினான்; நூலிழை இடம் காற்றுப் போகக்கூட விடாதவாறு பின்னால் அரியாசனம் வீற்றிருந்த 'லகாரம்' தம்பதிகளையும் எண்ணினான்.

மனக்கண்ணிலே அவனுடைய சின்னஞ்சிறு குஞ்சுகளும், அவனுக்கெனத் தன்னை அர்ப்பணம் செய்த 'இனிய பாதி'யான வேலாயியும் தோன்றினார்கள்!

வேலையன் இப்போதும் சிரிப்பதற்கு மறக்கவில்லை! பைத்தியக்காரன். இவன் ஏன் சிரிக்க வேண்டும்? இவர்கள் அறுவரையும் படைத்து ஆண்டியாக்கி நடுத்தெருவில் சந்தி சிரிக்க விட்டு, ஹாயா'க உமையுடன் 'டான்ஸ்' ஆடும் அந்தப் பித்துக்குளி ஆண்டி அல்லவா வேதனைச் சிரிப்புச் சிரிக்க வேண்டும், உலகிலே தான் காட்டும் பாரபட்சத்தை நினைந்து?

மணிக் கூண்டுக் கடிகாரம் பத்து முறை 'டாண் டாண்' என்று ஒலித்தது. ஊரடங்கி வந்தது.

கொள்ளே காலம் ஓய்வு பெற்றது. பணக்கார இடம், பாருங்கள்!

வேலையனுக்கு நெஞ்சில் பயம் கவ்விக்கொண்டது. விடிந்தால் தீபாவளி. வாழ்க்கையில் வருடத்

துக்கு ஒருமுறை வரும் திருவிழா ஸ்ரீமதி சீதேவியின் கடைக்கண்ணுக்கு இலக்கானவர்களுக்கு.

பேசும் சத்தம் கேட்டது, பக்கத்திலிருந்த எம். எல். ஏயின் பங்களாவில்! தீபாவளிப் பட்டுப் புடவைகள், சொக்காய்கள், ஜரிகை வேஷ்டிகள் பற்றிய விமரிசனம் நடந்தது. தீபாவளித் திருநாளை கொண்டாடுவதற்குரிய 'ஒருநாள் திட்டம்' ஜரூராக 'பாஸ்' ஆகிக்கொண்டிருந்தது. எம். எல். ஏக்கு. ஏக குஷி; வாயெல்லாம் பல்!

இந்தத் தியாகியைப் பற்றிய ஒரு நடைச் சித்திரம்:

அவல நிலைக்காளான கைத்தறி நெசவாளர் களை ஆதரிக்க வேண்டுமென்று இவர் தலைமையில் ஒரு கூட்டம் கூடியது, 'வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும், தாழ்த்த சென்னியும் தந்த தலை' வனின் திருச்சந்நிதியிலே, செய்யும் தொழிலுக் கெல்லாம் உயர்வு நெய்யுந்தொழில்—வள்ளுவப் பெருந்தகையே நெசவாளர்தான் என்று புராணம் படித்தார். சரித்திரம் சொன்னார் புள்ளி விவரங் களுடன். கடைசியில், "பாருங்க, சுதேசித் துணிகளை அணியணும்னு சொல்லி, லாரி லாரியா பரதேசத் துணிகளைக் கொளுத்தினதிலிருந்து — இன்னிய வரைக்கும் அடியேன் அயல் நாட்டுத் துணியைத் தொட்டதே இல்லை. சுத்தக் கதர்தான்—அசல் திருப்பூர் குமரன் கதர்தான்—இப்போ கைத்தறித் துணியையும் உடுத்தறேன்......வீட்டிலேகூட கைத் தறிப் புடவைதான்! பாவம், கைத்தறிக்கு விடிவு வந்தால்தான் எனக்கு நிம்மதி பிறக்கும்!" என்று 'தொகையறா'வை ஒருவழியாக முடித்து, மங்களம் பாடினார். அவர் தொண்டு, கடமை எல்லாம்

அவருக்குக் கிடைத்த ஒருகிரஷ், ரோஜா மாலை. கை தட்டல் ஆரவாரம் — இவற்றுக்குள் ஐக்கியமாகி விட்டன!

கூட்டம் நடந்து ஒரு தீபாவளி போய் மறு தீபாவளியும் வந்து விட்டது. ஆனால் நெசவாளி வேலையனோ அன்று போலத்தான் இன்றும் இருக்கிறான். அதே சாவின் நிலைப்படியிலே, 'வறுமை, வறுமை, வறுமை என்று கதறியபடி.

கடவுள் பக்தர்களை சில சமயம் 'சோதனை' செய்வதுண்டு என்ற கதை நினைவு வந்தது வேலையனுக்கு. உடனே, பின்னோக்கி நடந்து, எம். எல். ஏ.யை "ஐயா!" என்று அழைத்தான்.

ஐயா வந்தார். நாலு முழ வேஷ்டியைக் காட்டி "ஸார், இதை எடுத்துக்கிடுங்க......இரண்டு ஐவைந்து இருக்குது. மூணு நாள் வீட்டிலே எல்லோரும் குலை பட்டினி......நீராகாரத்துக்குக்கூட வழியில்லைங்க. சேலத்திலேருந்து பட்டணத்துக்கு வந்த இந்த நாலு வருஷமா நிதமும் செத்துச் செத்துப் பிழைக்கிறோமுங்க, நான், என் பெண்சாதி, பிள்ளைகள் எல்லோரும்...! நீங்ககூடப் போனவருஷம் கைத் தறிக்காரங்களுக்கு ஒத்தாசை செய்யணுமின்னு பேசினீங்களே, இப்போ நீங்கதான் எங்களுக்குத் தெய்வம்...நீங்க படி அளந்தாத்தான் எங்க ஆறு ஜீவனும் பொழுது விடியறதைக் கண் விழிச்சுப்பார்க் முடியமுங்க!" என்று பல்லெல்லாம் தெரியக்காட்டி அவன் சிரிக்கவில்லை—விம்மினான், அழுதான்; கதறினான்!

பேச்சுத் தொண்டரின் முகத்தில் பயம் எழுதி ஒட்டியிருந்தது. வறுமையில் உழலும் பஞ்சைகள், பிச்சைக்காரர்கள், துன்பப்படுபவர்கள் ஆகிய

இத்திருக் கூட்டத்தினர்தாம் 'கடவுள்கள்' என்ற பாடத்தை அந்த எம். எல். ஏ. அறிந்திருப்பாரோ என்னவோ?

"போ போ!.... கைத்தறிக்காரங்க தொல்லை வரவரப் பெரிசாப் போயிடுச்சே ..போ போ!" என்று சொல்லிவிட்டு, படாரென்று 'அந்தர்த் தியானம்' ஆகிவிட்டார் அந்த ஐந்து ஏக்கர் தியாகி!—இந்தப் பக்தனுக்கு கூடுவிட்டுக் கூடு பாயும் இந்திர ஜாலத்தைக் கற்றுக் கொடுத்தது எந்தக் கடவுளாம்?

ஒரு பாட்டம் அழுதான்; அழுதான்; அப்படி அழுதான். நல்லவேளை, அழுகையாவது அவன் கூப்பிட்ட குரலுக்கு வந்ததே!

வேலையனின் கையில் தவழ்ந்திருந்த அந்து நாலு கைத்தறி வேட்டிகளிலும் அவன் சொரிந்த வறுமைச் சின்னங்கள் முத்துப்பதித்திருந்தன. இந்த வேஷ்டி களை நெய்து முடிப்பதற்குள் வேலையனும் அவன் மனைவியும் எத்தனை பாடு பட்டார்கள்? அன்று நடுச்சாமத்தில் அகல் விளக்கு எண்ணெய் இன்றி அணைந்து போக, தெரு விளக்கில் தறிக்குரிய நாடா, தார்க்குச்சி, திருவட்டம், படை மரம் முதலிய சாமான்களுடன் டேரா போட்டு விடிய விடிய விழித்திருந்து வேஷ்டியை நெய்து முடித்ததை அவன் எப்படி மறப்பான்?

"அத்தான், நம்ப குழந்தைகள் ரொம்ப கிறங்கிப் போயிடுச்சுங்க...இதை நினைக்கிறப்போதான் பெற்ற வயிறு வெடிச்சுடும் போலிருக்குது. எப்பாடு பாட்டாச்சும் இந்த இரண்டு ஜோடி வேஷ்டியையும் பணம் பண்ணிகிட்டு வந்துடுங்க... கடன் வாங்கின நூல்சிட்டத்துக்கு வேறே பணம் கட்டணும்...... நம்ப செல்வங்களுக்கு தீபாளிக்காச்சும் வயிறு நிரம்பக் கூளு காச்சி ஊத்த வேணாமா?"—கேள்விக்

குறியில் தன் நப்பாசையை சேர்த்து சேதி சொல்லியனுப்பிய ஆசைக்கிழத்தி, அவன் வருகைக்காக ஆவலுடன் காத்திருப்பாளே? இந்த ஏழைகளுக்காவது, பசியாவரம் அருளக்கூடாத அந்த ஏழைபாங்காளன்!...... ஹஹ்ஹா! தன்மானத்தைக்கூடக் காற்றில் பறக்க விட்டு விட்டு, திருவோடு ஏந்திய பிச்சையாண்டியாவது, வரம் கொடுப்பதாவது!

வேலையன் தன்னை மறந்து நின்றான்; யாரோ தோளில் கையை வைத்த அரவம் தெரிந்து நிமிர்ந்தான். "சோதனை போதும்; பக்தன் இனிப்பொறுக்க மாட்டான்னு ஆபத்துக்கு உதவ பண முடிச்சுடன் ஆண்டவனே மாறு வேஷத்தோடு மானத்திலேயிருந்து குதிச்சிருப்பாரோ!—இல்லே, இந்த ஏழையின் உசிரை இனியும் பூலோகத்திலே விட்டு வச்சா பூமாதேவி கோபிப்பாளேன்னு எமதர்மப்பிரபுவே எருமைக்கடா வாகனத்தில் குதிச்சிருப்பாரோ" என்ற பொல்லாத கற்பனையில் தன் கண்களைத் திறந்து பார்த்தான். பஞ்சைக்குத் தஞ்சம் தர 'முதலும் முடிவுமில்லான்' பதினோராராவது அவதாரம் எடுத்து அவனுக்காகக் காட்சி தரவில்லை; ஏன், தர்மப்பிரபுகூட மனமிரங்கிப் பிரசன்னமாகித் தொலைக்கவில்லை!

ஆனால்......

அங்கே அவனைப்போல ஓர் ஏழை நின்றுகொண்டிருந்தான். ஏழை—பரம ஏழை!

'144' போட்டான் கூர்க்கா; வேலையன் 'சட்டை' பண்ணவில்லை; வியாபாரத்தைக் 'கோட்டை' விட முடியுமா?

"அண்ணாச்சி! விடிஞ்சா தீவாளியாச்சே, எங்கிட்டேயிருக்கிற இந்த ஒரு மடி வேட்டியையும் வாங்கிக்கிறீங்களா? எங்க வீட்டிலே நான், என்

பெண்சாதி, நாலு கண்ணுங்க எல்லாரும் கஞ்சித் தண்ணியைக் கண்டு வள்ளிசா மூணு நாள் ஆச்சுது; உங்களுக்குக் கோடிப் புண்ணியம் உண்டு. உங்க பிள்ளை குட்டிங்களுக்குக் ஒரு குறையும் வராது... ஐயா!'' என்று விம்மினான் வேலையன். திறந்திருந்த மேனியில் ஊதல் காற்றுப்பட்டது; கைகளைக் குறுக்குவசத்தில் வைத்து மூடிக்கொண்டான்; மேனி நடுங்கியது, காற்றில் அசைந்தாடும் நூலிழைபோல!

வந்தவன் கண்களில் கலக்கம் கண்டது; தாடியும் மீசையுமாயிருந்த அவன் முகத்தில் கண்ணீர்சிந்தியது; கந்தைக் கிழிசலின் ஒரு நுனியில் முத்துக்களைச் சேமித்தான். பிறகு கோடாரியைத் தோளில் சாத்திக் கொண்டே இடுப்புக் கோடியில் பத்திரப்படுத்தி முடிச்சு வைத்திருந்த சுருக்குப்பையை எடுத்து சில்லரைகளை உள்ளங் கையில் கொட்டி எண்ணினான்.

''அண்ணாச்சி! இன்னிக்கு விடிஞ்சதிலேருந்து ராவுமட்டும் விறகு உடைச்சுக் கிடைச்சகூலிப் பணம் ரெண்டுரூவாதான் இருக்குது. உன் கஷ்டத்தை நினைச்சுத்தான் சொல்றேன். இந்தா, ஒண்ணேகால் ரூவா! ஒரு வேட்டிமட்டும் கொடு; மீதி என்கைச் செலவுக்கு வேணும். நம்பளைப்போல ஏழை பாழைங்களுக்குத் தீபாவளிவேறே கேடாக்கும்! உசிரை உடம்பிலே ஒட்ட வைக்கிறதுக்குத்தான் அன்றாடம் காவடி தூக்கவேண்டியிருக்குதே! ம்... நம்பளுக்கெல்லாம் பொதுவுடைமைங்கிறது இந்த பசியும் வறுமையுந்தான்போலே இருக்குது! நீ போ அண்ணாச்சி, நடுச்சாமம் ஆச்சு;'' என்று சொல்லி, வேலையனும் சில்லறையை நீட்டினான் அந்த ஏழை—

அல்ல ஏழைபங்காளன்!

''நம்ப தரித்திரம் தெரிஞ்சு, தீபாவளிப் பொழுதை ஒட்டக் கடவுள்தான் இப்படி வந்திருக்க வேணும்!' என்று எண்ணி, அந்தத் 'தீபாவளிக் கடவு'ளுக்கு நன்றி கூறி மகிழ்ந்தவாறு பணம் குலுங்கத்தன் குடிசையை நோக்கிப் பறந்தான் வேலையன்!

# 9. பதினோராம் அவதாரம்

எலிப் பண்ணை இப்படியும் அட்டூழியம் பண்ணுமா, என்ன? சே!

அடுப்படிப் பரண் மீதிருந்த கூடை 'தொபுகடீர்' என்று கீழே குடம் சாய்ந்தது. பழைய காகிதக் கிழிசல் குப்பைகள் அலங்கோலமாகச் சிந்திச் சிதறினதுதான் மிச்சம்.

வள்ளியம்மைக்கு எரிச்சலாக வந்தது. 'இந்தா. ஊஸ்ஸ்!' என்று ஆத்திரத்தோடு கூச்சல் போட்டு எலிப் பட்டாளத்தை விரட்டினாள். 'செவ்வாய்ச் சந்தைக்குப் போயிருக்கிற அத்தான்காரர் இன்னிக் காச்சும் மறக்காமல் எலி மருந்து வாங்கிட்டு வந்தால் தேவலாம். எலித் தொல்லை வரவரச் சகிக்கலையே!'

''ஆத்தா, தண்ணி!'' என்றான் இளையவன் அவன் சேது; சாது.

குழந்தைக்குச் சவரட்சணை செய்துவிட்டு நிமிர்ந்தாள் வள்ளி. அத்தான் இன்னமும் திரும்பக் காணோம். சேலைத் தலைப்பை இழுத்து வேர்வையைத் துடைத்துக்கொண்டே, கடுதாசிக் கூளங்களை அள்ளிச் சேர்க்கக் குந்தினாள்.

அப்போது, ''பழைய பேப்பர் இருக்குங்களா, ஆச்சி?'' என்ற குரல் பொட்டில் அறைந்த மாதிரி கேட்டது.

''யார், மாரியப்பனா?'

''இருக்குது!'' என்று சுவாரசியம் இழந்த தொனியில் சொல்லிக்கொண்டே, இரண்டாம் கட்டைத் தாண்டி நிலைப்படியை அடைந்தாள் அவள். முகம் சலனம் அடைந்தது. நாசூக்காகச் சமாளித்துக் கொண்டாள். ''மாரியப்பனா? வாப்பா, ஆளையே இங்கிட்டு கண்ணுப்புறத்திலே காண வாய்க்கலையே?'' என்றாள் வள்ளியம்மை. கொண்ட பெண்டாட்டியை 'விலக்கி' வைத்துவிட்டு குடியும் கூத்தியுமாகத் தடம் தவறித் தறிகெட்டுச் சுற்றித் திரியும் அவன் கதை அவளது பெண் நெஞ்சை உலுக்கியது இயல்புதான். நல்ல காலம், அவன் இப்போது 'சுயபுத்தி' யோடுதான் காணப்படுகிறான்.

''நிதமும் சோலி சரியாய்ப் போயிடுதுங்க, ஆச்சி. நேரமாகுது. பழசுபட்டது காகிதங்க சேர்ந்திருந்தால் எடைக்குப் போடுங்க!''

''கிலோ எம்புட்டு, மாரியப்பா?''

''ஒரு ரூபாய் போட்டுக்கிடலாம்.''

''கொஞ்சம் கூடப் போடப்புடாதா?''

''கட்டாதுங்க. வாடிக்கைக்காரங்க நீங்க. உங்க விசயத்திலே இந்த வாட்டி ஒரு பத்துக் காசு கூடுதலாவே போட்டுத்தான் சொல்லியிருக்கேனுங்க, ஆச்சி,''

''ம், சரி. சரி. நிறு!'' என்றாள் ஆச்சி. இந்த மாரிமுத்து எழுதிக் கொடுத்திருந்த பிராமிஸரி நோட்டுச் சம்பந்தமாக இரவு தன் கணவன் ஆத்திரத்துடன் சொல்லி வருத்தப்பட்ட தாக்கல் தகவல் அவள் உள்ளத்தை வேர்ப்புழுவாகக் குடைந்து கொண்டே இருந்த நடப்பை அவள் எப்படி மறந்து விட முடியும்?

எல்லாவற்றையும் கூட்டிக் குவித்து அள்ளிப் போட்டு நிறுக்கத் தலைப்பட்டான் மாரியப்பன்.

அந்தச் சமயத்தில் நடையில் தொட்டில் ஆடி விளையாடிய அல்லி, ''ஆத்தா, ஆத்தா! நம்ம அப் பாரோட பீரோவுக்கு அடியிலே வேறே கடுதாசிக் கூடை கவிழ்ந்து கிடக்குதே!'' என்று குரல் கொடுக் கவே, இந்தாலே வாரேன்'' என்று சொல்லி உள்ளே விரைந்தாள் ஆச்சி. அதையும் கொண்டுவந்து கொட்டலானாள் அவள்.

ஏறிட்டுப் பார்த்தான் பழைய பேப்பர் வியா பாரி மாரியப்பன். மறு நிமிஷம், அவனுடைய கரிய பெரிய விழிகள் இரண்டும் 'சடக்'கென்று மின்னல் கட்டுப் பளிச்சிட்டன. ''சபாசு!'' என்று சிரித்தபடி, அவசர அவசரமாக எல்லாவற்றையும் ஒன்று திரட்டித் தராசில் திணித்தான். இடக்கை நடுங்கத் தொடங்கியது. சமாளித்துக்கொண்டான்.

நாலே முக்கால் கிலோ நிறுவை நின்றது.

''இந்தாங்க, அஞ்சு ரூபாய்ச் சலவைத்தாளாவே தந்திட்டேன். கணக்குப் பிரகாரம் நாலே முக்கால் ரூபாய் ஆகும். ஒரு கால் ரூபாய் கூடுதலாவே தந் திட்டேனுங்க. திருப்தி தானுங்களே, ஆச்சி?'' என்று சொல்லிக் கொண்டே, எல்லாக் காகிதங்களையும் தன் கூடையிலே வாரிப் போட்டான் அவன்,

ஆச்சி ஐந்து ரூபாய் நோட்டை வாங்கி நன்றாகச் சோதித்து மடியில் செருகிக்கொண்டாள். இருபத் தைந்து காசை மாரியப்பனிடம் நீட்டினாள். ''இந் தப்பா கால் ரூபா. எனக்கு உண்டானது லவிச்சால் போதும்'' என்றாள்.

''வாஸ்தவந்தான்!''

மாரியப்பன் புறப்பட ஆயத்தப்பட்டவாகன, முண்டாசைக் கட்டுக்கொள்ளலானான்.

"வரட்டுங்களா ?"

"கொஞ்சம் நில்லப்பா மாரியப்பா!"

ஆச்சியைக் கலவரம் சூழ நோக்கினான் மாரியப்பன். வேர்வைதான் கொட்டியதா?

"மாரியப்பா. மூணு வருசத்துக்கு முந்தி வியாபாரத் தோதுக்காக எங்க வீட்டுக்காரச் செட்டியார் கிட்டே கடன் கேட்டுக் கெஞ்சி வாங்கிக்கிணு போனே. நாளை புதன்கிழமை அந்தப் புரோ நோட்டு காலாவதி ஆகுதுன்னு நேத்து உன்கிட்டே வந்து 'செல்' வச்சுக் கொடுன்னு செட்டியார் கேட்டதுக்கு, 'அதெல்லாம் முடியாது. முடிஞ்சாக் கோர்ட்டிலே போட்டு தாவா பண்ணிக்கிடுங்க'ன்னு எடுத்தெறிஞ்சி நிட்டூரம் பேசிட்டியாமே? தர்ம நியாயம்னு ஒண்ணு இல்லையாப்பா?" என்று வேதனை தாளாமல் கேட்டாள் வள்ளியம்மை.

மாரியப்பன் அசட்டுச் சிரிப்பை வெளியிட்டான். "ஆச்சி, தர்மநாயம்னு ஒரு சங்கதி எப்படிங்க இல்லாமல் இருக்க ஏலும்? நேத்து அந்திக்கு நேரம் கெட்ட நேரத்திலே வந்து காட்டமாப் பேசினாங்க, வட்டியும் முதலும் கைக்கு மெய்யா வந்திடணும்னு சட்டம் படிச்சாங்க. இல்லாட்டி பிராது பண்ணிப் புடுவேன்னு பயம் காட்டினாங்க. ஒட்டுக்கு ரெட்டியாய் எழுதிக் கொடுத்த நோட்டைக் கோர்ட் மேலே போட்டுப்புடறதா அழிச்சாட்டியம் பண்ணினதும், எனக்கும் கோபம் மூண்டிரிச்சுங்க. நான் கை நீட்டி வாங்கின கடன் இருநூத்து அம்பதுதானுங்க, இந்த அசலையும் அதுக்கு உண்டான வட்டியையும் எப்பப்பும் நாளைக்குப் புதன் உச்சிக்கு வந்து கட்டிப்புட்டுப்

புரோநோட்டைக் 'காது கிள்ளி' வாங்கிக்கிட்டுப் போயிடறேனுங்க. நூத்துக்கு மாசம் ஒண்ணுக்கு ஒரு ரூபாய் வட்டின்னு எங்களுக்குள்ளாற வாய்ப் பேச்சுங்க, செட்டியார் வந்ததும், நான் எழுதிக் கொடுத்த நோட்டை எடுத்துப் புள்ளி போட்டு வச்சிடச் சொல்லிடுங்க. நான் வருத்தப் பட்டதாகவும் அய்யாகிட்டே சொல்லுங்க. புறப்படுறேன். பசிக்குது!'' என்று சொல்லிப் புறப்பட்டான் மாரியப்பன்.

''மாரியாத்தா'' என்று அமைதி கனியப் பெருமூச்சுவிட்டாள் வள்ளியம்மை.

அறந்தாங்கியிலிருந்து இரண்டே கால் மணி பஸ்ஸுக்குத் திரும்பி விட்டார். 'சூனா பானா' இம்மாதிரியான தருணங்களிலே, வீட்டில் அடியெடுத்து வைத்தவுடன், குழந்தைகளைக் கூப்பிட்டு, கொஞ்சி விட்டுத்தான் விசிப் பலகையில் அமருவது வழக்கம். ஆனால், இன்றோ வந்ததும் வராததுமாக, அவர் நடைக்கு நடையைக் கட்டினார். கவலையோடும் கலவரத்தோடும் பீரோவுக்கு அடியிலும் சுற்றிலுமாக எதையோ தேடினார். பிறகு, இடுப்பில் செருகியிருந்த சாவிக் கொத்தை எடுத்துப் பீரோவைத் திறந்து, ஒரு துணிக்கட்டைப் பிரித்தார். அடுக்கடுக்காக வைத்திருந்த பிராமிசரி நோட்டுக்களைப் பதற்றத்துடன் ஒவ்வொன்றாகப் பிரித்துப் பார்த்தார். முகத்தில் ஏமாற்றத்தின் நிழல் படர்ந்தது. நெஞ்சு துரிதகதியில் அடித்துக்கொள்ளத் தொடங்கியது.

எங்கே அந்தப் புரோநோட்டு?

சோற்று வட்டிலையும் வெஞ்சனத் தட்டையும் கழுவி முற்றத் திண்ணையில் வைத்து விட்டு, ''என்னாங்க! பசியாறிட்டு மத்த அலுவலைக் கவனிக்கப்

படாதாக்கும்?'' என்று செல்லமாகக் குழைந்த வண்ணம் வந்து நின்றாள் வள்ளியம்மை.

''வள்ளியம்மை, பழைய பேப்பர்க்கார மாரியப்பனோட புரோநோட்டை ராத்திரி பீரோவிலேருந்து பிரிச்செடுத்துப் பீரோவுக்கு அடியிலே வச்சேன். விடிகாலையிலே பட்டுக்கோட்டைக்குப் போய் அவனைப் பிராது பண்ணுறதுக்காகவே ஞாபகமாய் எடுத்து வச்சேன். இப்ப அதை இங்கிட்டுக் காணலையே? நீ கண்டியா?''

''ஐயையோ! இல்லீங்களே, அத்தான்!''

''அட கடவுளே! ஐநூறு ரூபாய் பெறுமதி கொண்ட புரோநோட்டாச்சுதே?''

வள்ளியம்மைக்குக் கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை. கொண்ட கணவரை ஏறிட்டு நோக்கினாள் அவள். பிறகு, ''நோட்டு எழுதினது ஐநூறுக்குத்தான். சரி; ஆனா, அந்த மாரியப்பன் கைக்கு மெய்யாய் வாங்கினது அதிலே செம்பாதி தானாமே?'' என்று குறுக்காக மறித்தாள்.

சுப்பையா மனைவியை ஊடுருவிப் பார்த்துப் பெருமூச்செறிந்தார். ''வாஸ்தவந்தான் வள்ளியம்மை! கடவுளுக்குப் பயந்து லேவாதேவித்தொழில் பண்ணுறவன் நான். நேற்றுச் சாயரட்சை அந்தக் குடிகார மாரியப்பனாவது, என்னைத் துச்சமாய் மதிச்சுத் தூக்கியெறிஞ்சு பேசறதாவது! அவனோட புத்தியைத் தெளிய வைக்கிறதுக்காகவே பொழுது விடியக் கோர்ட்டுக்குப் புறப்பட்டுப் போகணும்னு இருந்தேன். இல்லாட்டி நானா தப்புத்தண்டா காரியத்திலே இறங்குவேன்? நம்ப பணம் நமக்கு நிலைச் சால்பத்தாதா?'' என்றார். ஆத்திரமும் வேதனையும் இன்னமும் இடம் பெயரவில்லை. 'அது சரி. அந்த

மாரியப்பன் இங்கிட்டாலே வந்தானா?' என்று சந்தேகத்துடன் கேட்டார் செட்டியார்.

களை இழந்த வள்ளியம்மை கைகளைப் பிசையத் தொடங்கினாள். ''ஆமாங்க, பதினஞ்சு நாழிகைப் பொழுதுக்கு அந்த ஆள் வந்தானுங்க. அடுப்படிப் பரண்மேலேயும், நடையிலே உங்க பீரோவுக்கு மேலேயும் வச்சிருந்த கடுதாசிக் கூடைங்களைப் பாழாய்ப்போன எலிகள் தள்ளிப் போட்டுச்சுங்க. எல்லாத்தையும் கூட்டி அவன் கிட்டே வித்துப் புட்டேனுங்க!'' என்று மென்று விழுங்கினாள். மூச்சு முட்ட, வேர்வையும் முட்டியது.

சுப்பையா கைகளை உதறினார். ஐயோ! காரியம் கெட்டுப் போச்சுதே? பிராமிசரி நோட்டு, அந்தப் பாவி மாரியப்பன் கைக்குத்தான் போய்ச் சேர்ந் திருக்க வேணும்! என்று ஏக்கத்துடன் கூறினார் அவர்.

இப்ப என்னாங்க அத்தான் பண்ணுறது?

சுப்பையா பெருமூச்சு விட்டார். 'மாரியப்ப னுக்குச் சுளை சுளையா மூணு வருசத்துக்கு முன்னே எண்ணிக் கொடுத்த சாடாவும் இனி ஆத்திலே வீசிப் போட்ட பணம் கணக்குத்தான்! இயன்ற மட்டுக்கும் மனசறிஞ்சு நியாயமான பாதையிலே நடந்து சம்பா திச்ச என் பணம் இப்படியா தொலைய வேணும்? அந்த மாரியப்பன் என்னைக் மதிக்காமல் நடந்து கிட்ட கோபத்திலே அவன் ஒட்டிக்கு ரெட்டியாய் எனக்கு எழுதிக் கொடுத்திருந்த புரோநோட்டைக் கொண்டு அவனைக் கச்சேரிக்கு இழுத்துப்பிட வேணும்னு ஒரு தப்பான கள்ள நினைப்பு மனசிலே தோணிச்சே? அந்தப் பாவத்துக்கு வட்டியும் முதலு மாக் கூலி கொடுத்திருக்காப் போல ஆத்தா மாரி யாத்தா!'' கண்களைத் துவாலையினால் துடைத்துக் கொண்டார் அவர்.

வள்ளியம்மைக்கு இருப்புக் கொள்ளவில்லை. "அத்தான், மாரியப்பன் கிட்டே பேச்சுக் கொடுத்தேனுங்க. நேத்துக் குடிபோதையிலே வசம் கெட்டிருந்து உங்களை ஏசின தப்பை உணர்ந்து ரொம்பக் கிலேசப்பட்டான். அவன் நம்பளுக்குப் பட்டிருக்கிற கடன் தொகை ரூபாய் இருநூத்தி அம்பதையும் அதுக்குள்ள பேச்சு வட்டியையும் கணக்குப்படி நாளை உச்சிப் பொழுதுக்கு உங்க கையிலே கொண்டாந்து கொடுத்துக் கடனைத்தீர்த்துட்டு, நோட்டை 'ரத்து'ப் பண்ணி வாபஸ் வாங்கிக்கிணு போயிடுறதாகவும் சொன்னானுங்க" என்று விவரம் கூறினாள்.

'ரூனா பானா' சுரத்தில்லாமல் 'ஊம்' கொட்டினார்.

வள்ளியம்மையின் மனத்தைக் குற்ற உணர்வு அரித்தது. "தப்பு என்பேரிலேதான் இருக்குது. காகிதக் குப்பைகளை நிறுவைக்குப் போடையிலே சோதிச்சுப் பார்த்துப் போடத் தவறிட்டேனுங்க, அத்தான்!" என்று தாழ் குரலில் தெரிவித்தாள். தொடர்ந்து, "நான் இப்பவே சாலைக்குப் போய், மாரியப்பனைக் கண்டு தண்டி, அவன் கிட்டே எடைக்குப் போட்ட கடுதாசிகளைச் சோதனை பண்ணிட்டு வந்திடுறேனுங்களே?" என்றாள் அவள்.

சுப்பையா விரக்தி தெறிக்கச் சிரிக்கலானார். "அந்த எமகாதன மாரியப்பன் நம்ப புரோநோட்டை இந்நேரத்துக்குக் காகிதக் குப்பையிலேயே போட்டு வச்சிருப்பான்னு நினைக்கிறியா, வள்ளி? சுத்தப் பைத்தியக்காரியா இருக்கியே? ஊம். எடைக்கு நீ பழைய பேப்பர்களைக் கொட்டையிலேயே அந்த நோட்டு அவன் கண்ணிலே தட்டுப் காட்டியிருக்கும். அந்தக் கொண்டாட்டத்திலே, அரிச்சந்திர

னாட்டம் பணமும் கையுமாய் வந்திடுறதாப்பொய் புளுகிட்டுப் பறிஞ்சிருக்கான்'' என்றார்.

''வாங்க அத்தான், சாப்பிடலாம்.''

''எனக்குப் பசி இல்லை, ஒரேயடியா ராத்திரிக்கே சாப்பிடுறேன். இப்ப என்னைக் கொஞ்ச நேரம் தனியே விட்டுவிட்டுப் போ, வள்ளி!''

புதன் கிழமை.

உச்சிவேளை தாண்டியது.

வள்ளியம்மை வாசலுக்கும் உள்ளுக்குமாக ஆயிரம் நடை நடந்து பாதங்கள் தேய்ந்தது தான் மிச்சம் பழைய பேப்பர் வியாபாரி மாரியப்பன் இன்னமும் வரவில்லை.

''இனிமே மாரியப்பன் வரமாட்டான். வள்ளியம்மை, பணம் போனது தான்.''

''நீங்க ஒரு நடை அந்தத் தில்லுமல்லுக்காரன் மாரியப்பனைத் தனியே கண்டா என்னாங்க?''

''தனியே கண்டு...?''

''தனியே கண்டு இதம்பதமாப்பேச்சுக்கொடுத்து அவனை எப்படியாச்சும் தனது பண்ணி, அவன் நமக்குத் தரக் கட்டுப்பட்ட பணத்தை வசூல் பண்ணிட்டால்?''

''மாரியப்பனோ மலைவிழுங்கி மகாதேவன். அவன்கிட்டவா நம்ப கூத்துப் பலிக்கப்போகுது?''

''மாரியப்பன்கிட்டே. அவன் எழுதித்தந்த புரோநோட்டு அவன் நிறுத்துக்கினுபோன கடுதாசியோட கடுதாசியாய்க் கலந்து அவன் கைக்கே போய்ச் சேர்ந்திட்ட நடப்பை எடுத்துச் சொல்லுங்க. அவன்

அந்த நோட்டைத் திருப்பித் தந்திரட்டும். இல்லாட்டி நோட்டுப் பணத்தைத் தந்திரட்டும். ஆத்தாளுக்குப் பயப்படாம, இந்த ரெண்டு தர்ம நியாயங்களுக்கும் கட்டுப்படாமல் வீறாப்புப் பேச ஆரம்பிச்சா, நீங்க மறுபேச்சாடாமல் திரும்பிடுங்க. அவன் பாவத்துக்குத் தக்க கூலியை மாரியாத்தா கொடுத்துக் இடட்டும்.''

''சரி, வள்ளி. உன் ஆசையைத்தான் கொடுப்பானேன்?'' என்று சொல்லி எழுந்தார் செட்டியார்; வாசலை அடைந்தார்.

அப்போது, அங்கே சாட்சாத் மாரியப்பனே நின்று கொண்டிருந்தான்.

''வாப்பா, மாரியப்பா. அப்படித் திண்ணையிலே குந்து.''

''ஆகட்டுமுங்க ஐயா, நீங்க தப்பிதமா நினைச்சுக்கப்படாது. ஆச்சிகிட்டே கொடுத்த வாக்குப்பிரகாரம் இங்கிட்டு வந்து விழறதுக்குச் சுணங்கிப் போச்சுங்க!''

''பரவாயில்லை.''

''என் கணக்கைப் பார்த்திங்களா? ஆச்சிக்கிட்டே சொல்லிட்டுப் போனேன். அசல், வட்டி எல்லாம் எம்புட்டுக்கு வந்து நிக்குதுங்க, ஐயா?''

''வந்த காலோட நிக்காமல் முதலிலே அப்படி உட்காரப்பா.''

''சரிங்க.''

''உனக்கு நான் கொடுத்த கடன் பணம் ரூபாய் இருநூத்தி ஐம்பதும், ஒண்ணு வட்டி வீதம் மூணு வருஷத்துக்கு உண்டான வட்டியும் சேர்ந்தால்,

ரூபாய் முந்நூத்தி நாற்பது கூட்டுப்புள்ளி ஆகுது, மாரியப்பா.''

''அப்படீங்களா? வட்டி தூங்காதின்னு சொல்வாங்க; சரியாப் போச்சு. அது கிடக்கட்டும். பட்ட கடனைத் தலையை அடகு வச்சானும் அடைக்க வேண்டியதுதானே மனுசனுக்கும் நாணயத்துக்கும் அழகு?''

''வாஸ்தவந்தான், மாரியப்பா.''

''இதோ பாருங்க, சாடாப் பணத்தையும் கொண்டாந்திருக்கேனுங்க, செட்டியார் ஐயா. என் நோட்டைத் துருசு பண்ணி எடுத்திட்டு வந்து பணத்தை வாங்கிக்கிட்டு, நோட்டைக் காதுகிள்ளி என்கிட்டே கொடுத்துப்புடுங்க!'' என்று சொல்லி, இடுப்பு மடியில் கட்டியிருந்த ரூபாய் நோட்டுப் பொட்டலத்தை ஒரு நிமிர்வோடு பிரித்துக்காட்டினான் மாரிமுத்து.

பாவம். சுப்பையா தவியாய்த் தவித்தார்; தண்ணீராய் உருகினார்.

''சீக்கிரம் என்னை அனுப்பி வையுங்க, ஐயா!''

''மாரியப்பா!''

''என்னாங்க, தவிக்கிறீங்க?''

''அவசரப்படாதேப்பா, மாரியப்பா நீ என் பேருக்கு எழுதிக் கொடுத்த அந்தப் பிராமிசரி நோட்டு இப்பைக்கு என் கையிலே இல்லை!''

''பின்னே?''

''அது உன்கிட்டே இருக்குது, மாரியப்பா! உன் நோட்டைப் பீரோவுக்கு அடியிலே வச்சிட்டுச் சந்தைக்குப் பறிஞ்சிட்டேன். பழைய பேப்பரை எங்க

ஆச்சி உன்கிட்டே போட்டப்ப, அதுவும் காகிதக் குப்பைங்களோடே சேர்ந்து உன் கையிலே அகப் பட்டுச் சிக்கிக்கிட்டுது!''

''அட பரிதாபமே! அந்தப் புரோ நோட்டை நான் கண்ணாலேகூடக் காணவே இல்லீங்களே, செட்டியார் ஐயா!'' என்று பதற்றம் காட்டினான் பழைய பேப்பர் மாரியப்பன்.

''நிஜமாத்தான் பேசுகிறீயா மாரியப்பா?''

''நான் பொய்பேச வேணுமென்கிற தேவை எனக்கு ஏதுங்க, செட்டியாரே?''

''மாரியத்தா!'' என்று துடித்தார் 'சூனா பானா', பிறகு நிதானமான சுயப்பிரக்ஞையோடு. ''சரி. இப்ப என்னோட பணத்துக்கு வழி என்ன மாரியப்பா?'' என்று வினவினார்.

''வழியை என்கிட்டே கேட்கிறீங்களே? நீங்க என்னோட புரோ நோட்டைக் காட்டினால், நான் அடுத்த நிமிசமே பூராப் பணத்தையும் கட்டிப்பிடு றேனுங்க, ஐயா!''

''அந்த நோட்டுத்தான் இப்ப என் வசத்திலே இல்லையே, மாரியப்பா''

''அதுக்கு நான் என்ன செய்வேன், ஐயா?''

''நீ என் கையிலேருந்து ரூபாய் இருநூத்தி ஐம்பது கடன் வாங்கினது உண்மைதானே?''

''ஆமா!''

''பின்னே என்ன? உன் புரோநோட்டு இல் லாட்டி என்னவாம்? நாணயத்துக்குக் கட்டுப்பட்ட வனா இருந்தால், எனக்குச் சேரவேண்டிய தொகையை என்கிட்டே செலுத்திப் புடவேண்டியது தானே நியாயம்?''

மாரியப்பன் நிர்த்தாட்சிண்யமாகவும் அட்டகாசமாகவும் சிரிக்கலானான்: ஐயா செட்டியாரே! எனக்கு முன்னாடியே காது குத்தியாச்சுங்க. உங்க சூத்தும் தந்திரமும் என்கிட்டவா பலிக்கும்? நான் உங்களுக்கு எழுதிக்கொடுத்த நோட்டு காணாமப் போயிடுச்சின்னு சொல்லி, நையம் பாடி, இப்ப ஒரு வாட்டி எல்லாப் பணத்தையும் கறந்துக்கிட்டு, அப்புறம் நீங்க கமுக்கமாய் ஒளிச்சு வச்சிருக்கிற அந்தப் புரோநோட்டைக் கோர்ட்டிலே போட்டு ரெண்டாம் வாட்டியும் சாடாப்பணத்தையும் வசூல் பண்ணிக்கிட வேணுமென்கிறது உங்க சூதுமதித் தந்திரம்! சுயபுத்தியோட வந்திருக்கிற எனக்கு இது கூடவா புரியாது. செட்டியாரே?'' என்று மீண்டும் எக்காளமிட்டுச் சிரித்தான் மாரியப்பன்.

சுப்பையாவின் இரத்த நாளங்கள் அத்தனையும் சூடேறித் துடித்தவன். ''அட பாவி! என்னை மோசடிக்காரனாகவா நீ எடை போடத் துணிஞ்சிட்டே? அயோக்கியப் பயலே!'' என்று ரோசம் பொங்க, மாரியப்பனை அறையக் கையை ஓங்கினார் சுப்பையா.

அந்தக் கணத்திலே, ''அத்தான், அத்தான்'' என்று கூவிக்கொண்டே குறுக்கே விழுந்து தடுத்து விட்டாள் வள்ளியம்மை.

அதே நேரத்தில், ''மச்சான், மச்சான்!'' என்று கூறியபடி வந்தாள் செண்பகம்.

மண்முட்டி விண்முட்டச் சிரித்த மாரியப்பன் இருந்திருந்தாற் போலே ஏன் இப்படி விம்மிப் புடைத்து உருகிக் கரைய வேண்டும்?

சுப்பையா திகைத்தார்.

வள்ளியம்மையையும் செண்பகத்தையும் விநயமாக ஒரு முறை பார்த்துவிட்டு, மாரியப்பன் பேசத் தலைப்பட்டான்: "செட்டியார் ஐயா! முதலிலே நீங்க பெரிய மனசு பண்ணி என்னை மன்னிச்சாக வேணும். தங்கமான உங்களைத் தவறுதலாக எடை போட நான் துணிவேனுங்களா? சும்மா அப்படி நடிச்சு ஒரு பொய்க்கூத்து நடத்தினேன். ஐயா, முதலிலே உங்க பணத்தைப் பிடியுங்க. முந்நூத்தி நாற்பது இருக்குதுங்க!"

மாரியப்பன் பணத்தைச் சுப்பையாவின் கைகளிலே சமர்ப்பித்தான்.

மாரியப்பன், "ஐயா, நான் உங்களுக்கு எழுதிக் கொடுத்த அந்தப் பிராமிசரி நோட்டு காணாமப் போயிடுச்சேன்னு ரோசிக்கிறீங்களாங்காட்டி? மதியம் இங்கே பேப்பர் நிறுக்கையிலே அந்த நோட்டு என் கையிலேதான் சிக்கிச்சிதுங்க! காகிதக் குப்பைங்களுக்கு ஊடாலே அந்தப் புரோநோட்டைக் கண்டடியும் நானும் மிருகமாகத்தான் மாறிப் புட்டேன். ஆனா, தெய்வம்னு ஒண்ணு இருக்குதுங்களே, அது என்னோட கண்ணைத் திறந்து விட்டிருச்சுங்க! கேளுங்க கதையை!" என்று சொல்லி நிறுத்திவிட்டு மீண்டும் தொடர்ந்தான்:

"ஐயா, அதோ நிக்குதுங்களே செண்பகம், அது தானுங்க நான் தொட்டுத் தாலிகட்டின பெண்சாதி. அதுக்குத் துரோகம் செஞ்சிட்டுக் குடியும் கூத்தியுமாய்த் தட்டுக்கெட்டுத் தடுமாறி அலைஞ்சேன். என்னைச் சொக்குப்பொடி தூவி மயக்கின அந்த வேசிச்சிறுக்கி, நான் உங்களுக்கிண்ணு சேர்த்து

வச்சிருந்த பணம் அம்புட்டையும் களவாடிக்கிட்டு எங்கேயோ தலைமறைஞ்சிட்டா! அப்பதானுங்க, நான் செஞ்சபாவம் என் புத்தியிலே உறைக்கத் தொடங்கிச்சு! அப்பவே நான் புது மனுசனா மாற வைராக்கியம் கொண்டுட்டேனுங்க. உடனே, நான் திருப்பூட்டின என்னோட செண்பகத்தைத் தேடி ஓடினேன். எல்லாக் கதையையும் கேட்ட அந்தப் புண்ணியவதி தன் கழுத்துச் சங்கிலியையும் கைக் கொலுசுகளையும் கழற்றி நீட்டி, அடமானம் வச்சுப் பணம் தோதுபண்ணி முதல் அலுவலாய் உங்க கடனை அடைச்சுப்பிட வேணும்னு ஆணையிட்டுச்சு என் செண்பகம். செட்டியார் ஐயா, இந்தாங்க உங்க புரோ நோட்டு.''

நன்றியறிவு சிலிர்க்க, அந்தப் பிராமிசரி நோட்டை இடையவரின் பெருமை சிறக்க நீட்டினான். அந்தப் பொன்னொளியில் முகம் பளபளத்தது. நாணயத்தைக் காப்பாற்றத் தெய்வம் பதினோராவது அவதாரம் எடுத்து விளையாடுயிருப்பதாகத் தோன்றியது.

# 10 செந்தாழம் பூ

## முன்னுரை

நான் அண்மையில் தான் தூத்துக்குடி எக்ஸ்பிரஸுக்கு நன்றி தெரிவித்திருந்தேன். இப்பொழுது இரண்டாம் முறையாகவும் அதற்கு நன்றி கூற வேண்டியவனாக ஆகிறேன், அத்துடன், என் நன்றி பெண்ணாடம் ரயில்வே ஸ்டேஷனுக்கும் உரியது.

பெண்ணாடத்தில் ஒரு கல்யாணம்— உற்ற நண்பர், மாறுபட்ட இதயங்கள் அங்கே 'தமிழ்இனம்' என்ற உறவுப் பண்பில் பின்னிப் பிணைந்தன. ஆனந்தமான சம்பவம். விருந்து முடிந்தது. தாம்பூலம் தரித்துக் கொண்டோம். பிரயாண அசதியும் அறுசுவை உண்டியும் நண்பர்களுக்கு நீலாம்பரி பாடின. மத்தியானத்தில் நான் படுக்கை தேடி அறியேன். என் மைத்துனன் ராமகிருஷ்ணனை ஓய்வு கொள்ளச் செய்தேன்.

காலாறப் போய்வரலா மென்று புறப்பட்டேன் நான். என்னுடன் பேசிக்கொண்டே தொடர்ந்தார் மாப்பிள்ளை. உச்சி வெயிலில் நாங்கள் அமுதப் பால் நிலவின் குளிர்ச்சியை உணர்ந்தோம். நடந்தோம். ஊரின் எல்லை ஒதுங்கிக் கொண்டது.

பெரியகாடு. இருள் கை கொட்டிச் சிரித்தது. கதைகளில் காடுகளைப் படைக்கும் சந்தர்ப்பங்கள் சில எனக்கு ஏற்பட்டிருக்கின்றன. அப்போது என்னுள் பரவிய திகில், இப்போது என் நெஞ்சுரத்தை எப்படியோ களவாடிச் சென்றது.

''ராமசாமி!'' என்றேன்.

"வாருங்கள், ஆறுமுகம். காரணமில்லாமலா இந்த வெயிலில் இந்தக் காட்டுக்கு உங்களை இட்டு வருவேன்?" என்றார் அவர், புன்னகையை வழி காட்ட விட்டு.

"திரும்பி விடலாமே?"

"ஊஹும்! கதை ஒன்று உங்களுக்குத் தரப் போகிறேன். ஸார்!"

"வேண்டாம், இப்போது நான் துப்பறியும் மர்மக்கதை எதையும் எழுதும் நிலையில் இல்லை."

அவர் சிரித்தார்.

எனக்குச் சிரிக்கத் தெரியவில்லை.

மறுகணம், பயங்கரமான பேய்ச் சிரிப்பு என் காதுகளைச் செவிடாக்கியது.

நண்பர் திரும்பவும் சிரித்தார். அவர் சிரித்த சிரிப்புத்தான் நொடியில் பேய்ச் சிரிப்பாக எதிரொலித்ததோ? ஊழிக் கூத்தாடிய அந்தச் சுடலையாண்டியிடம் கற்றுக் கொண்டாரோ? அவர் ஆண்டவனை நம்பாதவராயிற்றே?

'ஸார்' பயப்படாதீர்கள்' இதோ, இப்போது பாருங்கள்!"

அழகுக்கு வரம்பு கட்டும் ரதியின் பிரதிபிம்பம் போல் ஒரு யுவதி தோன்றினாள். அதே சடுதியில் மன்மதனுடைய வாரிசாக ஓர் இளைஞன் தோன்றினான்.

"ஸார், இப்போது உன்னிப்பாகக் கேளுங்கள்!"

வேய்ங்குழல் சிருங்காரப் பண் பாடியது; பாதச் சதங்கைகள் 'ஜல், ஜல்' என்று நாதம் கூட்டின.

அவள் ஆடினாள்.

அவன் குழலூதினான்.

ஐயோ, மறுபடியும் அந்த இடிச்சிரிப்பு இடை வெட்டுகிறதே?

என் விழிகள் பிதுங்கின.

இந்திர, மஹேந்திர ஜால வித்தைகளை நண்பர் எங்கே கற்றார்?

"அகோ வாரும் பிள்ளாய், எழுத்தாளரே! காதலைப் பற்றி ஒரு சில வார்த்தைகளை முதலில் சொல்லும்; அப்புறம்தான் நீர் மூச்சு விடவேண்டும். உஷார்!" என்றொரு பயங்கரக் குரல் வெடித்தது. அந்த மன்மதனுடைய குரலா இப்படிக் கர்ணகடோர மாகக் கேட்கின்றது..?

"காதல்...காதல்தானே? ... இருமனம் ஒன்று சேரக் கனவு கண்ட காதலர்கள் அதிருஷ்ட வசமாகத் தம்பதிகளாகி விட்டால், அது அவர்களுக்குத் தேநிலவுத் திருநாள்தான்! காதல் வெற்றி காண வில்லையென்றால், அப்புறம் காதலனும் காதலியும் பைத்தியமாகி, பேயாகி, பிசாசாகி இப்படி உங்கள் மாதிரி அலைந்து திரிய வேண்டியதுதான்!..."

வியர்த்துக் கொட்டியது; உளறிக் கொட்டினேன். நான் என்ன செய்யட்டும்?

"பேஷ்! ஆனால் ஒன்று—நீர் சொற்களை அள்ளிக் கொட்டுகிறீர். 'உங்களைப்போல பைத்தியமாய்; பேயாய், பிசாசாய்' என்று நீர் சொன்ன வார்த்தை களைக் கேட்டு அதோ பாரும், என்னுடைய ரஞ்சிதம் கண்கலங்கி நிற்கிறாள். அவள் அழுதால், நான் பொறுக்கமாட்டேன். கொஞ்சம் உம்மை ஆசுவாசப்

படுத்திக் கொள்ளும்; நல்ல மூச்சுவிடும். நானும் கண்களைத் துடைத்துக் கொள்கிறேன். காதலைப் பற்றிய என்னுடைய—ஊஹூம், எங்களுடைய விளக்கங்களை நீர் கேட்கிறீரா, ஐயா? பூஞ்சோலையில் பிறந்து, பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் வளர்ந்து, சுடுகாட்டில் சாந்திபெறும் விந்தைப் பொருள்தான் காதல்! உடல், பொருள், ஆவி ஆகிய முப்பொருள்களையும் தன்னுடைய மூன்றெழுத்துப் பெயருள் அடக்கிக் கொண்டு, உலகத்தை உருளச் செய்யும் மாயசக்தி அது! மனிதன், தேவனாக உயிர் மாற்றம் பெறும் நிலையில்தான், அவன் காதலைப் புரிந்து கொள்ள முடியும். அப்போதுதான் அது சித்திக்கவும் சித்திக்கும்! ஆனால், தேவர்களுக்கு இந்தப் பாழாய்ப்போன காதலுக்குமோ தொலை தூரம். காதல் அவர்களுக்குக்கூட எட்டாக்கனி—கொம்புத்தேன்!...ஒரேவரியில் சொல்லப் போனால், காதல் பித்துக் கொண்டவர்கள் எங்கள் இருவரையும் போலப் பைத்தியமாய், பிசாசாய் உருமாறி உருக்குலைந்து போகவேண்டியதுதான்!...ஆமாம்...''

"உங்கள் பின்னுரையைத் தான் நான் தொடக்கத்திலேயே முன்னுரையாக்கி விட்டேனே?...'' என்று நான் சொல்ல வாயெடுத்தேன்.

என் முன் கையில் நான்கு கண்ணீர்த் துளிகள் சிதறி விழுந்தன. ஏறிட்டுப் பார்த்தேன். அவர் விம்மினார்; அவளும் விம்மினாள்.

"உங்கள் பேச்சு என் கண்களைக் கலங்கடித்து விட்டன!''

"இந்த குணசீலன் மட்டுமென்ன, என்னுடை ஆருயிர் ரஞ்சிதம் மட்டுமென்ன—இருவருமே தான் நாளெல்லாம் கண்ணீர் விடுகிறோமே ? கல்யாண

மாப்பிள்ளை இந்த முனித்தோட்டத்துப் பக்கம் வந்ததுதெரிந்திருந்தால், பாவம் அவருடைய புது மனைவி வேதனைப் படுவார்களாம்—என் ரஞ்சிதம் ஜாடைகாட்டிச் சொல்கிறாள். மெய்யான சேதிதான்! எங்கள் காதற்கதையைத் தயவுசெய்து கேட்பீர்களா? கதையைக் கேட்டால் மாத்திரம் போதாது; எங்கள் கதையை உங்கள் பத்திரிகையில் வெளியிடவும் வேண்டும். ஆனால் ஒருவார்த்தைக் கூட மாற்றக்கூடாது, ஜாக்கிரதை!''

''அப்படியே ஆகட்டும்!''

இல்லையென்றால், என் அமிர்தத்திற்கு என்ன பதில் சொல்வேன்?

ஆஹா, அமரர் புதுமைப் பித்தன் போன்றவர்களிடம் தான் பேய்கள் கதை சொல்லியிருக்கின்றனவாம்! எனக்குக் கூட அந்தப் பாக்கியம் கிடைத்து விட்டிருக்கிறதே! இன்றுபோல் என்றும் அமரர்களாக வாழ்க, குணசீலன்— ரஞ்சிதம் தம்பதிகள்-தம்பதிகளா-ஆம்; காதலர்கள்!

## குணசீலன் சொல்கிறார்

கவிஞன் பிறக்கிறான் என்கிறார்கள். கவிஞன் மட்டுமென்ன, கலைஞனும்தான் பிறக்கிறான். ஆண்டவனின் படைப்புக்கு அவன் ஓர் எடுத்துக் காட்டாக அமையவேண்டுமென்பது படைத்தவனுடைய கனவு. ஆனால் படைப்புக் கடவுளுக்கு ஒரு சவாலாக அமைய அந்தக் கலைஞன் தன்னை ஆக்கிக் கொண்டதும், முதல் பிரம்மா மூக்கில் விரலை வைக்கிறான்- அதிசயத்தினால்! இல்லையென்றால், கல்லைக் கடவுளாக்கிப் படைக்கும் கலைத்திறன் இந்த இரண்டாவது பிரம்மாவிடம் தஞ்சமடைய முடியுமா?

ஆமாம்; நான் கலைஞன் ஓவியக் கலைஞன். நான் கலைஞனாகத்தான் புவனியில் அவதரித்தேன். என்னுடன் சித்திரம் வரையத் துணை புரியும் தூரிகை, வர்ணக் கலவைத் தட்டுகள், 'பாலட்' எல்லாம் ஐக்கியப்பட்டன. கோடுகள் கிறுக்கினேன். சித்திரங்கள் உருவாகின. பருவ மாற்றங்கள் காலத்தின் வளர்ச்சியைச் சொல்லவில்லையா? என் வளர்ச்சியை என் சித்திரங்கள் எடுத்துக் காட்டின அவை என் உயிரின் உயிராக அமைந்தன. இறக்கை கட்டிப் பறந்தேன் ககனவெளியிலே, இயற்கை அன்னை வானமுகட்டில் தீட்டிய வானவில் ஒரு சமயம் எனக்கு 'மாடல்' ஆக அமைந்தது. பூநாகம் வஞ்சத்தை உள்ளடக்கி, உயிரைக் குடிக்கும் நஞ்சை ஒளித்து வைத்துச் சீரமைத்துப் பண் சேர்த்து அற்புதமாகச் சிறுமல்லவா. அந்த ஆனந்தப் பயங்கரத்தில் செந்தாழம்பூவின் 'அமுத விஷ'த்தை நுகர்ந்தேன். செந்தாழம்பூவும் பூநாகமும் என் ஓவியத்தில் கைகுலுக்கிக் கொண்டன. தளிர்க்காடு: குளிர்ப்புனல்: பூலோக ரம்பை ஒருத்தி-கன்னிப்பெண்; ஆசைகளைக் கனவுகளாக்கித் தளர் நடை பயின்று வந்தாள். புனலாடி வந்த அவளது உருவில் மட்டுமல்ல, நமட்டுச் சிரிப்பைக் கக்கும் அந்தப் பூரித்த அங்கங்களிலும் புனிதம் கண்டேன். நான் ஓவியம் வரைய அமர்ந்தேன். இத்தனை நாட்களாக இல்லாத ஓர் இன்ப வேதனை என்னுள் நரக வேதனையைத் தந்தது.

சித்திரம் தீட்டலானேன். அந்தப் பெண் பாவையை உருவாக்கினேன். தங்கமேனி, போதையூட்டும் பருவ எழில் மயக்கம். அன்புச் சிரிப்பு எல்லாவற்றையும் என் படத்தில் கண்டேன். என் நிலை மறந்தேன். சித்திரத்துடன் ஓடினேன், ஓடினேன். அவளை எங்கே தேடுவேன்? சீதேவி வலிய வந்தாள்.

அவள் சிரித்தாள், என் ஓவியம் கண்டு. என்னைப் பார்த்துச் சிரிக்க வேண்டுமென்றல்லவா அவளிடம் அணுகினேன்?

—மாயக்காரி...!

ரஞ்சிதம் சொல்கிறாள் :

ஆம்; நான் மாயக்காரிதான்! அதனால்தானே எனக்கு இவருடைய காதல் கிடைத்தது—இவர் கிடைத்தார்.

காதல், சோம்பேறிகளின் தொழிலாம்!—யாரோ ஒரு பைத்தியக்காரன் சொல்லியிருப்பான். காதல் ராஜ்யம் ஒரு பூலோக சுவர்க்கமாயிற்றே! ஆசா பாசங்கள், எண்ணங்கள், கனவுகள் எல்லாம் ராஜ்யத்தின் மந்திரிகள் அல்லவா? காதல் இல்லையேல் நான் ஏது? என் நாட்டியம் ஏது? இவர் ஏது? இவருடைய ஓவியம் ஏது?

கதாசிரியர் ஸார்! பார்த்தீர்களா, மறந்து போனேன்—உங்களுடைய 'முதல்பூ' கதையை நான் வாசித்துப்பார்த்தேன். பணக்காரி நிரஜாவின் உயர்ந்த காதலை அழகாகச் சித்திரித்திருக்கிறீர்கள். காண்டேகர் சொல்லியிருக்கிறாரென்று ஞாபகம்; 'ஆண், பெண்ணுடைய உடலைக் காதலிக்கிறான்; பெண், ஆணின் பணத்தைக் காதலிக்கிறாள்.'

சிரிப்பு வரவில்லை, உங்களுக்கு? எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. நல்ல வேளை, நீங்கள் உண்மை நடப்பை எழுதிவிட்டீர்கள்—காதலைப் பணம் தன் வலைக்குள் சிக்க வைக்கமுடியாதென்பதை! ரொம்பவும் நன்றி.

காரணம் இல்லாமல், காரியங்கள் நடப்பதில்லை.

அந்த ஒருநாள் எனக்கு என்றுமே நினைவிருக்கும். அதாவது எங்கள் காதல் சந்தித்துகொண்ட நாளைச் சுட்டுகிறேன் நான் அவரைப்பார்த்தேன்; அவர் என்னைப் பார்த்தார். ''காதல்!'' என்ற சொற்களை இரட்டைதொண்டை பேசிற்று. நான் ஏழைப்பெண். இவரோ பணக்காரக் குடும்பத்துச் சொத்து. அல்லி, தண்மதியைக் காதலிக்கும் கதையாகி விடக்கூடாதே என்று நான் பயந்தேன்.

எனக்கு நடனம் தெரியும். அவருக்குப் புல்லாங் குழல் வாசிக்கத் தெரியும். இத்தகைய இன்பச் சூழ விலே நாங்கள் காதலித்துக்கொண்டேயிருந்தோம்!

உங்களுடைய பாஷையில் சொல்லப் போனால், காலமென்னும் தாழையினுள் வாழ்க்கை மடல் சிறை பிடிக்கப்பட்டது. உலகம் அப்பொழுதுதான் புதிர்க் கோளமாகச் சுழலத் தொடங்கியது—ஆமாம்; இது கூட நீங்கள் 'முதல் பூ'வில் எழுதியிருந்த வரிகள்தாம்!

ஒருநாள் துயில் நீத்து எழுந்தேன். இருமினேன்; ரத்தம் கொட்டியது. காச நோய் என்றார்கள் ரகசிய மாக. பிரமன் பணக்காரர்களுக்கென்று தனியே படைத்த நோயாமே இது? காதல் நோயின் சங்கமம் இதிலே தானாமே...?

சூரியகாந்திக்குக் கதிரவனின் காதல் கிடைப்பது பெரிய பாக்கியம்தான்—ஆனால், என்னைப் பற்றிய நோய் அவரையும் பற்றினால், நான் என்ன செய்வேன்? என் காதலினால் அவர் வாழ்வுக்கு உலை வைப்பதா? ஒப்பவில்லை. இரவோடு இரவாக ஊரை விட்டே ஓடிவிட்டேன், பாவி!—பைத்தியககாரி...!

### குணசீலன் சொல்கிறார்

பைத்தியக்காரி!—ஆமாம், அவள் பைத்தியக் காரிதான்!

சொல்லாமல் கொள்ளாமல் மறைந்து விட்ட அவளை நான் பழிகாரி என்று திட்டினேன். உடலை விட்டு உயிர் பிரிந்து விட்டது. அவள் எனக்குச் சீதனம் தந்த அந்த மாயசக்தி, என்னிடமிருந்து மாயமாக மறைந்து விட்டது. ஐயோ, நான் வெறுங் கூடு!

''ரஞ்சிதம், ரஞ்சிதம்!'' என்று முணு முணுத் தேன்; அலறினேன். வசந்தத்தின் வரவை உவகை சிந்த எதிர் பார்த்திருந்த வானம்பாடி எனக்குப் பதில் சொல்லவில்லை. கதிரவனின் கதிர் முத்தத் திற்குக் காத்துத் தவம் கிடந்த கமலம் கூட என் இதய தாபத்தைப் புரிந்து கொள்ளவில்லை. என் ரஞ்சிதமே என்னைப் புரிந்துகொள்ளாமல், என்னுள்—என்னைச் சுற்றி உலகத்தைச் சுற்றச் செய்துவிட்டு, காரினும் கடிது சென்றபின், இந்த வானம்பாடியும் கமலமுமா என்னை—என் காதல் வேதனையைப் புரிந்து கொள்ளப் போகின்றன...?

அழகின் உச்சி என் ரஞ்சிதம். அவள் என்னை மலை உச்சியிலிருந்து அதல பாதாளத்துக்குத் தள்ளி விட்டுச் சென்று விட்டாளே? எங்கே சென்றாள்? ஏன் சென்றாள்...?

பட்டணத்துக்கு இதயம் இல்லை. என்னையும் என் உயிரையும் பிரித்துங் கூட, அது எப்போதும் போலத்தான் நாகரிகப் போதையில் மயங்கிக் கிடந்தது. நான் சுழன்றேன் உலகத்தை மையமாக்கி. என்னை மையமாக்கி உலகம் சுழன்றது.

நான் பைத்தியமானேன்—என் நினைவெல்லாம் ரஞ்சிதமானேன்!

காலம் ஒரு நாடோடி; நானும் நாடோடியானேன். என் கண்கள் என் அழகுப் பதுமையைக் காட்டவேயில்லை. நான் செய்த பாவம் என்ன? பாவமாம், பாவம்..... !

ஒருநாள் எனக்கு இந்த ஊரில்தான் உதயம் மடலவிழ்ந்தது. நான் கண்களை மலரத் திறந்தேன். என் முன் அம்பிகை மஹேஸ்வரியின் திருச் சந்நிதி தோன்றியது. கரங்கூப்பினேன்; சிரம் வணங்கினேன். "ரஞ்சிதத்தை எனக்குத்தா!" என்று நெஞ்சுருகப் பிரார்த்தித்தேன். அவள்தான் கல்லென்றிருந்தேன்; அவளது இதயமும் கல்லாகத்தான் இருந்தது!

திரும்பினேன். சுற்றுப் பிரகாரத்தின் முகப்பு மூளியாகக் காட்சியளித்தது! எழுதப்பட்டிருந்த சித்திரம் தேய்ந்து, அழிந்து, மறைந்து போயிருந்தது. அது அந்த அம்பிகையின் திருஉருவென்று சொன்னது என் கற்பனை.

"ஆஹா, உலகமாதாவின் அருள் பாலித்து விட்டது!" என்ற சத்தம் கேட்டுத் திரும்பினேன்.

சிவப்பழம் ஒன்றைத் தரிசித்தேன்.

"வணக்கம்!"

"வணக்கம்!"

"அம்பிகைதான் உங்களை இங்கு அழைத்து வந்திருக்க வேண்டும். ஏன், அப்படித்தானே ஐயா?"

"ஏன், என்னுடைய ஜீவன் ரஞ்சிதம் இங்கேதான் இருக்கிறாளோ?..."

"ரஞ்சிதமா?...ஐயா, முதலில் இந்தலோகத்துக்கு வாருங்கள். இதோ, இந்த இடம் சூன்யமாயிருக்கிறதல்லவா? இங்குதான் அம்பிகை மஹேஸ்வரியின் ஓவியம் தீட்டப்பட்டிருந்தது. அது கால வெள்ளத்தில்

கரைந்து விட்டது. நானும் பலநாளாகப் பிரயத்தனப் படுகிறேன். இங்கே மாதாவின் படத்தைக் கைதேர்ந்த ஓவியனைக் கொண்டு எழுதச் செய்ய வேணுமென்று. இன்று அது உங்களால்தான் பூர்த்தியாக வேணும். அட்டி சொல்லாதீர்கள். பையில்தான் எல்லாச் சாமான்களும் இருக்கின்றனவே?'' என்றார் அவர்.

"ஆனால் என் ரஞ்சிதம் இல்லையே, ஐயா! அவள் இல்லையேல் நான் இல்லையே...? நான் என்ன செய்யட்டும்?...'' என்றேன் நான்.

''பைத்தியக்காரர்!...''

''ரஞ்சிதப் பைத்தியம் என்று திருத்திக் கொள்ளுங்கள் — நான் ஆனந்தக் கூத்தாடுவேன்!''

''ஐயா, உலகாளும் அன்னையிடம் மனம் விட்டு ஒரு கணம் பிரார்த்தியுங்கள். உங்கள் ரஞ்சிதம் உங்களுக்குக் கிடைக்க அருள் புரிவாள் அம்மை''

''நிஜமாகவா?''

"ஆமாம்.''

''அப்படியென்றால், நாளை விடிந்ததும் அம்பிகையின் உருவை இந்த இடத்தில் நீங்கள் தரிசிப்பீர்கள்.''

''ரொம்பவும் நன்றி!''

பொழுது 'கிண், கிண்' என்று ஏறிக் கொண்டிருந்தது.

நான் தன்யனாக வில்லை; தனியனானேன். அடி பதித்து, வழி மிதித்து நடந்தேன். மஹேஸ்வரி சிரித்தாள். அந்தச் சிரிப்பில் புனிதம் தோய்ந்திருந்தது.

அந்தச் சிரிப்புக்கு ஈடு ஏது? அந்தச் சிரிப்பைப் படத்தில் நான் எப்படி எழுதப் போகிறேன்...?

கல்லினுக்குள் அறிவொளி காணுங்கால்,
காலவெள்ளத்தில் நிலை காணுங்கால்,
புல்லினில் வயிரப்படை காணுங்கால்,
பூதலத்தில் பராசக்தி தோன்றுமே!

பாரதியின் கவிச்சொல் கேட்டேன். நான் என்னை மறந்தேன்.

விடிந்தது.

''மஹேஸ்வரியைப் படைத்து விட்டேன்—புவனம் காக்கும் புனிதத் தாயைப் படைத்து விட்டேன்—தெய்வத்தை மனிதன் படைத்து விட்டான்—இந்த குணசீலன் படைத்து விட்டேன்! ஹஹ்ஹா! இனி, எனக்கு என் ரஞ்சிதம் கிடைத்து விடுவாள்!...''

மெய்யன்பர் வந்தார்.

''மஹேஸ்வரியைத் தரிசியுங்கள், ஐயா!''

பக்திப்பரவசம் நுரைக்கும் அவருடைய கண்கள் சுவர் நாடி ஓடி நிலைத்தன.

''ஐயோ!'' என்று கூக்குரலிட்டார் கோயில் தர்மகர்த்தர்.

''பெரியவரே...''

''வாயை மூடு. மீறி உன் வாயைத் திறந்தால், அம்பிகை உன் வாயை அடைத்து விடுவாள். மஹேஸ்வரியை வரையச் சொன்னால், ஊர் சுற்றும் தேவடியாளைப் படம் எழுதியிருக்கிறாயே?... அருள் மாதாவின் அந்தப் புனிதச் சிரிப்பு எங்கே? இந்தத் தாசியின் போதைச் சிரிப்பு எங்கே...? பெண் குலத்துக்கே சாபக்கேடான இந்தத் தாசியின் உருவத்

திலா என் குலதெய்வத்தை நீ கற்பனை செய்தாய்? பாவி! தெய்வப்பழி உன்னைச் சும்மா விடாது...! ரஞ்சிதம், ரஞ்சிதம் என்று உளறினாயே, இவளைத் தானா...? இவளைப் பற்றி ஊர் கதை சொல்லும்... ஓடு!...'' என்று கதறினார் பெரியவர்.

''ஐயோ!... ரஞ்சிதம், நீ தூய்மையற்ற மாயக்காரியா? புனிதத்தை உதறி விட்டாயா? தூய்மையைக் கை மாறச் செய்துவிட்டாயா?... அடி, துரோகி!...'' என்று அலறிக்கொண்டே ஓடினேன், என்னை நையாண்டி பண்ணின அவச்சொற்களைச் சூறையாடிக் கொண்டே.

''அன்பரே...!'' என்ற குரல் கேட்டது. திடுக்கிட்டேன். திசை மாறினேன். அங்கே என்—அல்ல அந்தக் கணிகை ரஞ்சிதத்தைக் கண்டேன்! ஒரே கணத்தில் இன்பக் கதை நான்கு வருஷங்களின் பிரிவுத் துயரை அந்த விழி சிமிட்டும் நாழியின் போதை வெறி விழுங்கப் பார்த்தது. ரஞ்சிதம் சிரித்தாள்.

''உங்களைத் திரும்பவும் காணும் பாக்கியம் பெற்று விட்டேன்!'' என்றாள் அவள், தன்னை மறந்து.

''கடந்ததைநாம் மறந்து விடுவோம்!'' என்றேன் நான்,

பால் நிலவு

நான் அவளுள் உருமாறினேன்!

விடி வெள்ளி முளைத்துக் கொண்டிருந்தது.

''ஐயோ!'' என்ற குரல் பூதலத்திற்குத் திருப்பள்ளி எழுச்சி பாடியிருக்க வேண்டும்.

ரஞ்சிதத்தின் உடற் கூட்டை என் மடியில் கிடத்திக் கொண்டேன். என் கண்ணீர்த் துளிகள்

அவளுடைய பொன் மேனியைக் கழுவிக் கொண்டிருந்தன. கறை அகற்றப்பட வேண்டாமா?

திரைச் சீலையை எடுத்தேன். தூரிகை கைப் பிடிக்குள் அடங்கிக் கொண்டது.

விழி விலக்கினேன்.

மஹேஸ்வரி சிரித்துக் கொண்டிருந்தாள். ஆம்; புனிதச் சிரிப்பு—அமைதிச் சிரிப்பு—அருட் சிரிப்பு—அன்புச் சிரிப்பு!

இனி எனக்கு எதற்கு இந்த 'மாடல்' வேண்டும்?

ரஞ்சிதத்தின் உதட்டோரத்தே மஹேஸ்வரியின் புனிதச் சிரிப்பு—அமைதிச் சிரிப்பு—அன்புச் சிரிப்பு—அருட் சிரிப்பு தவழ்ந்து கொண்டிருந்தது!

அம்பிகையின் கோவிலுக்கு ஓடினேன், அம்பிகையின் படத்துடன். என் கையிலிருந்து ஏதோ கடிதத் துண்டு நழுவியதை உணர்ந்தேன். பிரித்தேன்.

"இதய தெய்வம் குணசீலனுக்கு,

என்னைப் பற்றியிருந்த காசம் உங்களுக்கும் தொற்றிக் கொள்ளக் கூடாதே என்றுதான் நான் தங்களை விட்டுப் பிரிந்தேன்.

இது பற்றித் தங்களிடம் வெளியிட்டால் என் நிமித்தம் தங்கள் உடலையும் தியாகம் செய்து விடுவீர்களே என்றுதான் அஞ்சி நழுவி விட்டேன். கால இடைவெளி என் நோய்க்கு மருந்து தந்தது. புனர் வாழ்வு பெற்று நான் உங்களுக்காக எங்கெல்லாமோ தேடினேன்—தேடுகிறேன். உங்களுடைய அன்பு முகத்தைக் காணப் பாக்கியம் செய்யவில்லை. ஓர் அழகி, உலகிலே தனித்து விடப்பட்டால் எத்தகைய பழியும் பாவமும் வந்தணையும் என்பதையும் நிதர்சனமாக நான் இப்போதுதான் உணர்கிறேன். கோவில் தர்மகர்த்தரின் வேண்டுகோளுக்கிணங்கி

ஒருநாள் மஹேஸ்வரியின் சந்நிதியில் நடனமாடினேன். இரவு, அவர் என்னைத் தன் பங்களாவில் நடனமாடப் பணித்தார். மறுத்தேன். உங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட இந்த உடல் அவருக்குக் கை மாற வேண்டுமாம்...!

என் உயிர் உங்கள் உடற்கூட்டிலே வந்து அடைக்கலம் சேரும் நாள் எந்நாளோ? ரஞ்சிதம் என்றுமே உங்கள் உயிர்! இந்தக் கடிதத்தை மஹேஸ்வரிதான் உங்கள் பார்வைக்கு அனுப்ப வேண்டும்! தாயே, தயை செய்!

இப்படிக்கு,
குணசீலனின் ரஞ்சிதம்."

அடுத்த நாள் உலகம் இச்செய்தியை அஞ்சல் செய்தது; "மஹேஸ்வரியின் மண்டபத்தில் குணசீலன், ரஞ்சிதம், கோவில் தர்மகர்த்தர் ஆகிய மூவரின் சடலங்கள் கிடந்தன. திரைச் சீலையில் உயிர் பெற்றிருந்த மஹேஸ்வரி அருட் புன்னகை புரிந்து கொண்டிருந்தாள்!..."

## பின்னுரை

கால் புள்ளி, அரைப்புள்ளி கூட மாறாமல், அமர தம்பதிகளின் காதற் கதையை நான் எழுதி முடித்தேன். பத்திரிகாலயத்தில் அச்சுக் கோர்க்க அனுப்பு முன், என் அமிர்தம் கதையைப் படித்தாள். கடைசியில், இந்தவரிகளைச் சேர்த்துச் சிவப்பு மையால் கோடிட்டாள்.

"ரஞ்சிதம் ஒரு செந்தாழம்பூ; குணசீலன் ஒரு பூநாகம். செந்தாழம் பூவின் மணத்தை விட்டுப் பூநாகம் எப்படிப் பிரிந்திருக்க முடியும்?...... செந்தாழம் பூவும் பூநாகமும் இணையும்போதுதான் காதல் அமரத்துவம் பெறுகிறது; பெறமுடியும்...!"

# 11. கஞ்சிக் கலயம்

நாளது குரோதன ஆண்டு, கார்த்திகைத் திங்கள் முப்பதாம் நாள் ஞாயிற்றுக்கழமை சுக்கல பட்சம் உத்திராட நட்சத்திரம் அமர்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில், காலை ஒன்பது—பத்தரை மணி அளவில், திருநிறைச்செல்வன் வீர மணிக்கும் திருநிறைச்செல்வி அன்னக்கிளிக்கும் கல்யாணம்!

தீபாவளிக்கு முந்தி, ஐப்பசி இருபத்தைந்திலேயே. ஊர் வளமைப் பிரகாரம், சம்பந்தம்—சாடிக்கை மற்றும் சீர்செனத்திப் பேச்சுவார்த்தை நடத்தி, பரிசம் போட்டு, 'தேதி' வைத்து 'பாக்கு—வெற்றிலை' மாற்றி, நிச்சயத்தாம்பூலச் சம்பிரதாயச் சடங்கையும் தடபுடலாக முடித்தாகி விட்டது!

அப்புறம் முகூர்த்தத்துக்கு முந்தின ராத்திரியில் 'ஊர் வெற்றிலை பாக்கு' வைத்துப் பத்திரிகை கொடுத்து விருந்து சொல்லி, விருந்துக்கு அழைத்து முடிந்ததும், மறுநாள் கலியாணப் பெண்ணின் சீமை ஓட்டு மச்சு வீட்டிலே கெட்டி மேளம் கொட்டி முழக்க வேண்டியது தான் இனிமேல் பாக்கி.

ஆவணத்தாங்கோட்டை மட்டுமல்லாமல் பூவத்தக்குடியும் மூக்கிலே விரலை வைத்தது! அங்கங்கே... ஊர்ப்பஞ்சாயத்துக் கேணியடி திமிலோகப்பட்டது!

அன்னக்கிளி மெய்மறந்தாள்... ஆனந்தக் கண்ணீர் மடை திறந்தது. மாராப்புச் சுங்கடி மயங்கிச்

சரிந்தது கூட அவளுக்குப் பிரக்ஞையில் உறைக்கக் காணோம்! கையிலே விளையாடிய—விளையாட்டுக் காட்டிய திருமணப்பத்திரிகையிலே, பெண்வீட்டாரின் பெயருக்கு அடியில் குறிக்கப் பெற்றிருந்த 'சுப. கந்தசாமிச் சேர்வை' என்னும் பெயரில் பாசத்தின் ஆத்மார்த்தமான உணர்வுகள் சிலிர்த்தன. 'அப்பன் ஆயி இல்லாத எனக்கு என்னோட அன்பான அண்ணாச்சி கணக்கிலே ஒக்கப் பொறந்திட்ட தங்கச்சி பேரிலே பாசம் கொண்டாடுற ஒரு ஒசந்த—ஓர்மையான அசல் புள்ளியை இந்தப் பூவத்தக் குடியிலேயும் சரி, அந்த ஆவணத்தாங்கோட்டையிலேயும் சரி, இனிமே சல்லடை போட்டுச் சலிச்சாக்கக்கூட இனம் கண்டுக்கிட வாய்க்காதாக்கும்! அண்ணாச்சி, ஒங்களோட கூடப் பொறக்கிறத்துக்கு மெய்யாலுமே நான் போன சென்மத்திலே உண்டனப் புண்ணியம் செஞ்சிருக்கத்தான் வேணுமுங்க, அண்ணாச்சியோ!'' இளம் வெயில் சூடேறியும் சூடேற்றியும் சுள்ளாப்புடன் உறைக்கவே, அவளது சுயப்பிரக்கினையும் உறைத்தது. 'அடுப்புக் கொளுத்திப் பத்தவச்சுக் கஞ்சித்தண்ணி காச்சி வைக்கவேணும். காம்பான் தாக்கை நாடிக் கோழிக் கூப்பிட்டப் பறிஞ்சிட்ட அண்ணாச்சி திரும்பினடியும் பசியாற வேணாமாக்கும்!? பூஞ்சிரிப்பில் பூந்தேறல் இனிக்கிறது. மணக்கிறது.

தொடர்ந்தும் தொடர்சேர்த்தும் சோதித்துத் தீர்த்த-தீர்ந்த அடர் மழையில் தலைவாசலின் சேறும் சகதியும் இன்னமும் கூடக் காயவில்லை!

கலியாணப் பத்திரிகையில் மாப்பிள்ளை வீரமணி கள்ள விழிப் பார்வையால் இளமை குலுங்க, அழகு துலங்க, ஆடம்பரம் ஆரவாரம் செய்யச் சிரித்தான், அப்படிச் சிரித்தான்.

அன்னக்கிளிக்குக் கூச்சம் வந்துவிட்டது. கூச்சம்!- சரிந்த மாரகப் புடவையைச் சரியாமல் சரியாக்கிக் கொள்கிறாள், அன்னமென நடந்தாள், கிளியாகக் கூவினாள். 'நேசமச்சானே!'-உயிரால் அழைத்தாள், உள்ளத்தால் விளித்தாள். சிவந்த உதடுகளிலே சிவக்காத ஈரம் உருகுகிறது, கசிகிறது!- 'நெனைச்சிப் பார்த்தாக்க, அல்லாமே சொப்பனமாட்டம் தான் நெஞ்சுக்கும் நினைவுக்கும் தோணுது. சத்தியமாவே, நான் நல்ல தாலிப் பொசிப்புக் கொண்ட குட்டிதான் அட்டி இல்லே! இல்லாங்காட்டி, இம்மாங்கொத்த, பயங்கரச் சோதிப்பெல்லாம் மலை மாதிரி வந்து, இப்பப் பனி கணக்கிலே மறைஞ்சிருக்க ஏலுமா? .. கட்சிச் சண்டையும் கொள்கைப் பூசலுமே வாழ்க்கைன்னு நம்பி, 'நான் முந்தி, நீ முந்தின்னு ராத்திரியும் பகலுமாய்ச் சதா போராடிக்கிட்டிருந்த கீரியும் பாம்பும் பழைய வன்மத்தையும் குரோதத்தையும் ஆத்திரத்தையும் வள்ளிசா மறந்துப்புட்டு, இப்பைக்கு ஒண்ணடி மண்ணடியா 'ராசி' ஆகிறதின்னா, அது ஆயிமகமாயியோட தர்மமான விளையாட்டு இல்லாமல் பின்னே என்னவாம்?'—சன்னமாகவும் சல்லாபமாகவும் மூக்கை உறிஞ்சிக்கொண்டாள் கன்னி கழியாக் கன்னி.

நிலா முற்றம் தகிக்கிறது. 'இந்நேரமாகியும் அண்ணனைக் கண்ணுப்புறத்திலே காணல்லியே?' பாசம் தவித்தது. எங்கேயோ மாடப் புறா ஒன்று ஜோடி சேர்க்கத் தாபமும் தாகமும் கொண்டு கிறீச்சிட்டது.

நினைவுகள் கண்ணாமூச்சி விளையாடின. அழகானதோர் அந்திக் கட்டில், கந்தசாமி தஞ்சாவூரி விருந்து! கச்சேரி வழக்கு அலுவல்களை முடித்து அவசரம் அவசரமாகத் திரும்பினான். தங்கச்சியிடம்

ஓடோடி வந்து கதம்பப்பூப் பொட்டலத்தை நீட்டினான். ஆரியபவன் அல்வாத் துணுக்கை வாயில் போட்டான். உடன் பிறந்த கேசத்தைப் பான்மையுடன் கோதிவிட்டான். 'அன்னப் பொண்ணே! நம்ம அப்பன் ஆயி காலத்திலே பெயராத இருபதாயிரம் ரூபாய் நாணயம் இப்பப் பெயர்ந்திடுச்சு, மீமிசல் ராவுத்தர் புரோநோட்டுப் படியான பணம் சாடாவையும் கச்சேரியிலே கட்டிப்புட்டாரு. அது எம் புட்டுக் கைக்கும் வந்திடுச்சு. நம்மளைப் பெத்தவங்க இட்டக்கக் கையடிச்சிக் குடுத்தாப்பிலே, ஒன்னை ஒம் மனசான மனசுக்குப் புடிச்ச நல்ல மாப்பிள்ளைக்குக் கண்ணாலம் கட்டி வச்சுப்புட வேண்டியது எங்கடமையாக்கும். ஒனக்கு இஷ்டமான மன்மதச் சிங்கம் உன்னோட ஆவணத்தாங்கோட்டை அயித்தை மகன் வீரமணி தானே? உன் ஆசைப்படியும் நேசப்படியும் பாசப்படியும் உன் மச்சான் வீரமணியையே நீ கொண்டுக்கிடலாம்!- எனக்குச் சொந்தப் பிரச்னை முக்கியம் இல்லே சொந்தந்தான் ஒசத்தி!' என்று உணர்ச்சிவசப்பட்டவனாக உத்தாரம வழங்கினான் கந்தசாமி.

அண்ணாச்சியோ; அல்லாம் ஆத்தாளோட கருணாகடாட்சம் தான்!'

அன்னக்கிளி பாசத்தின் காலடியில் கண்ணீரைப் 'பள்ளயம்' படைத்தாள். கொட்டடியிலே, கன்றின் குரல் கனிந்து வந்தது. தேடி வந்த தாய்ப்பசு தேடி வந்திருக்குமோ?

அன்னம் மண்ணுக்கு மீண்டாள். 'அண்ணனை இம்மாம் பொழுதுக்கும் காணோமே?' — ஒழுங்கைக்கும் வாசலுக்கும் எத்தனை 'வாட்டி'தான் ஓடிஓடித் திரும்புவாள்? — பாவம்! கணங்கள், பேய்க்கணங்களாக ஊர்கின்றன.

காலடிச் சத்தம் அன்னக்கிளியின் பேசும் விழிகள் பேசாமலே மகிழ்கின்றன. ஓ!... செண்பகம்!

''அன்னம் உம் மூஞ்சியிலே கிலேசம் மண்டிக் கிடக்குதே!''

''ஒண்ணுமில்லேங்க.''

''மறுகா?''

''அண்ணன்காரவுக வயல் காட்டுப்பக்கம் நிலந் தெளிப்பறிஞ்சாங்க. அவுங்க இன்னம் வீடுதிரும்பலே வேதாளம் மறுதக்கமும் முருங்கைப் போத்திலே ஏறிக்குந்திக்கிடுறதாட்டம், எங்க அண்ணன் காரருக்கு உன்கூடப் பொறந்தவரான எம் மச்சான் காரருக்கும் ஊடாலே ஏதுனாச்சும் தவசல் வந்து ஊர்ச்சந்திகிந்தியிலே வம்படிச்சுகிட்டு இருக்காங் களோ, என்னமோன்னு உள்மனசிலே அடிச்சுக்கிடு துங்க!''

''அதெல்லாம் ஒண்ணும் நடக்காது அன்னம். உன்னை உன் அத்தை கையோட ஓடியாரச் சொன்னாங்க.''

''என்ன சங்கதியாம்?''

''அந்தத் துப்பு மாமியாருக்கும் மருமகளுக்கும் தானே விளங்க ஏலும்? மூணாம் மனுசியான நான் என்னத்தைக் கண்டேனாம்?''

''ஆத்தாடி! நீங்க மூணாம் மனுசியா, என்ன?''

',ஊகூம், நான் நாலாம் மனுசியாக்கும்!''

அன்னத்திற்கு வாயெல்லாம் பல், பல்லெல்லாம் பவளச் சிரிப்பு. ''நல்ல பொண்ணுங்க நீங்க. என்னோட அண்ணனுக்குச் சமட்டியான ஜோடி தானுங்க நீங்க. செண்பகம்.. ஊகூம், செண்பகம்

அண்ணி!'' என்றாள். ''தங்கச்சி தங்கமே! உனக்கும் உம்மச்சான் வீரமணிக்கும் கொட்டுமேளம் கொட்டிக் கண்ணாலம் காட்சி நடந்ததுக்குப் பொற காலேதான், நான் எம்புட்டுக் கண்ணாலத்தைப் பத்தியே யோசிப்பேனாக்கும்!'' என்று பட்டுக் கத்தறித்த பாவனையில் 'பட்'டென்று கந்தசாமி அண்ணன் சொல்லவில்லையா? செண்பகம் விடை பெற்றாள்.

''அயித்தை ..!''

அன்னக்கிளி அன்புப்பான்மையுடன் அழைத்தாள். காதுச் சிமிக்கிகள் வெளிச்சத்தில் நிழலாடின. ஒற்றைக்கல் தும்பைப்பூ மூக்குத்தி மின்னியது. அள்ளிச் செருகிய கொண்டை, அள்ளாமல் செருகிய மருக்கொழுந்து. காந்தப் பொட்டுத் தளதளத்தது. ஆசைக் கனவு பளபளத்தது.

மீனாட்சி அத்தை திருநீறு துலங்கிட வந்தாள். ''மருமக ராசாத்தி, எனக்கு மேலுக்கு முடியல்லே. உன் அயித்தை மகன் வீரமணிக்கும் கஞ்சியைக் கொடுத்திட்டு, உன் அண்ணன் கந்தசாமி வீட்டுக்குத் திரும்புறத்துக்குள்ளாற சுருக்களாத் திரும்பிடு. அம்மன் கோயிலுக்குக் கிழக்கிட்டாலே கிடக்கிற மாங்காளிப் புஞ்சைத் தாக்குக்குப் பக்கத்திலே தம்பி பசியோட காத்துக் கிட்டு இருக்கும். கையை வீசிப் போட்டு வெரசாவே நடந்திடு, அன்னம்!''

அதோ, கஞ்சிக்கலயம் கனவுகளின் துணைக்காவலோடும் காதலின் இனிய துணையோடும் ஆனந்த லயம் பின்னிப் பின்னி நடை பயில்கிறது!

ஆவணத்தாங்கோட்டைச் சாலைக்கு நேர் கிழக்கே, பூவத்தக் குடித்தேவர் குடியிருப்புக்கு மேல் வசத்தில் மடங்கும் ஒற்றையடித் தடத்தை அண்டி அணைத்திருந்த கங்காணிச் சவுக்கைத் தோப்பு வந்தது. வேர்க்க விறுவிறுக்க ஓர் அரைக்கணம் நிற்கிறாள் அன்னக்கிளி.

கஞ்சிப்பொழுது வறுத்துக் கொட்டாமல் இருக்குமா? இருக்கலாமா? திடீரென்று என்னவோ சத்தம் ஒலித்தது. எதிரொலித்தது அன்னம் பதறினாள்,

எதிர்த்து ஓடோடி வந்தாள் செண்பகம். ''அன்னம் வேகமாக, ஓடியா. எம்மச்சானுக்கும் உம் மச்சானுக்கும் மறுபடி கட்சி—ஊழல் விவகாரம் பத்தின வாதப்பிரதிவாதம் தடிச்சு, வாய்ப்பேச்சு மூத்திக் கடைசீலே கைகலப்பு மூண்டு போச்சு... ஓடியா, அன்னம்!'' பதறித் தவித்தவளாக விவரம் சொல்லிவிட்டு விரைந்தாள். ஓட்டமும் நடையுமாகப் பாய்ந்தாள் அன்னக்கிளி ..

அங்கே—தோப்பின் வெட்டவெளி வெளிச்சத்தில் இருட்டிலே போராடுபவர்கள் மாதிரி கந்தசாமியும், வீரமணியும் மல்லுக்கட்டிப் போராடி தலைமுடிகளைப் பிய்த்துக் கொண்டிருந்தார்கள்.

மறு இமைப்பில் வீரமணி திமிறி விலகி, எட்டத்தில கிடந்த கழியை எட்டி எடுத்துக் கந்தசாமியின் மண்டையிலே ஓங்கி அடித்துவிட்டான். கந்தசாமி சுடுமணலிலே சுருண்டு விழ்ந்தான். ரத்தத்துளிகள் சிதறின.

''ஐயையோ, அண்ணாச்சியோ!''

அன்னக்கிளி மண்ணும் விண்ணும் முட்ட அலறினாள். கஞ்சிக் கலயத்தைக் கட்டாந்தரையிலே வைத்தாள். தலையை நிமிர்த்தினாள். முந்தானையை இடுப்பில் பலமாகவே செருகிக்கொண்டாள் ஆசை மச்சான் வீரமணியின் காலடியிலே கிடந்த அந்தக்கழியை சீற்றத்தின் வெறியோடு கையில் எடுத்தாள். பத்திரகாளியாகப் பாய்ந்தாள்.

'அப்பன் ஆத்தாளுக்கும் ஒசத்தியாய் எம்பேரிலே அன்பும் பாசமும் வச்சிருக்கிற எம்புட்டு அருமை அண்ணாச்சியை — கந்தசாமி அண்ணாச்சியை அடிச்சிப் போடுறதுக்கு ஒங்களுக்கு ஈரலிலே பித்தா! இல்லே, எலும்பிலே பித்தா! நாட்டிலே எம்புட்டோ கட்சிங்க இருக்கத்தான் இருக்குது. அதொப்ப, கட்சிங்களுக்குள்ளே எத்தனையோ உள்விவகாரமும் இருக்கத்தான் செய்யுது. வாய்ச்சண்டை போட்டுக்கிட்டு மனுசத்தனத்தோட அந்தந்தக் கட்சித் தலைவர்கள் கணக்கிலே நல்ல படியாய்ப் பிரியுறத்தை விட்டுப் புட்டு, எங்க அண்ணாச்சியை முரட்டுக் கம்பினாலே அடிச்சா வீழ்த்திப்புட்டீங்க?...நான் உங்க மேலே ஆசை வச்ச பாவத்துக்காக, தன்னோட ரோசத்தையும் விட்டுக் கொடுத்துப்புட்டு, எனக்காக உங்க வீட்டுக்குப் பொண்ணு கேட்க வந்து சம்பந்தம் சாடிக்கை பேசி முடிச்ச எங்க கந்தசாமி அண்ணாச்சியோட பெருந்தன்மையை இளக்காரமாக நினைச்சுப்புடத் துணிஞ்சிட்ட நீங்களும் வேட்டி கட்டின ஆம்பளையாட்டம் நின்னு, பொட்டச்சி கணக்கிலே எங்க அண்ணாச்சியைக் கழியாலே அடிச்சுப் போடுறத்துக்கு உங்களுக்கு எம்மாம் தைரியம் இருக்க வேணும்!... எங்க அண்ணன் ஒங்க மாதிரி ஒண்டிக்கை கிடையாது இந்தாலே, அவரோட அன்புத் தங்கச்சிக் குட்டி நான் இருக்கேனாக்கும்!'

வீறு கொண்ட முழங்கிய அன்னக்கிளி, மறுகணம் கைக்கழியை வீரமணியின் தலையைக் குறி வைத்து சுழற்றி ஓங்கி, அவன் மண்டையிலே படாரென்று அடித்தாள்! அவ்வளவுதான், அடுத்த நொடியிலே, வீரமணி ரத்தம் சொட்டச் சொட்ட மண்ணிலே சாய்ந்தான்.

இன்னமும் கண்களைத் திறக்காமலே கிடந்த கந்தசாமியை மடியிலே போட்டிருந்த செண்பகம் திடுக்கிட்டாள்—'மச்சான், மச்சான்னு தன்னுடைய மச்சான் வீரமணி மேலே உசிரை வச்சுக்குட்டு இருந்த அன்னக்கிளிப் பொண்ணுதானா இது? - விழிகள் நிரம்புகின்றன.

இப்போது அன்னக்கிளி ஆடும் பம்பரமாக ஆடாமல் சுழன்றாள்!-'மச்சானே!' என்று அலறிக் கதறியவளாகப் பாய்ந்து, ரத்தம் பீறிட்டுச் சிதற நினைவு தப்பிச் சாய்ந்து கிடந்த வீரமணியை மடியிலே போட்டுக்கொண்டு விம்மினாள். சுடுநீர்த் துளிகள் வீரமணியின் கன்னங்களிலே சொட்டுச் சொட்டாக வழிந்து. ரத்தத்தோடு ரத்தமாக இணைகின்றன, பிணைகின்றன!

கெட்ட சொப்பனம் கண்டு விழித்த வீரமணி எழுந்து கண்களை மூடி மூடித் திறக்கிறான்.

அன்னக்கிளி வேதனையுடனும் விரக்தியுடனும் சோகமாகச் சிரிக்கிறாள். 'நீங்க கண்ணு முழிச்சிட்டீங்களா? உங்க மனசு முழிக்காமல் கண்ணு மட்டிலும் முழிச்சு என்ன புண்ணியம்?—அவள் விம்மினாள்.

'அன்னம்...எம்புட்டு அன்னப் பொண்ணு!'

விரமணி செருமினான்.

அன்னக்கிளி இப்போது விதியாகச் சிரிக்கிறாள். 'உப்புப் புளிக்கு உதவாத அரசியலுக்கு அப்பாலே, நாடும் வீடும் ஒண்ணு கூடி உன்னதம் அடைஞ்சிடக் காத்திருக்குது என்கிற சத்தியத்தையும், அதுக்கு மேலே, இந்தப் பத்தொம்பது வருசமா அல்லும் பகலும் நீங்களே சதம்னு நம்பி மதிச்சு உங்க பேரிலே சுத்தமான நேசம் வச்சித்துத் தவம்இருந்தாளே இந்த அன்னக்குட்டி என்கிற தருமத்தையும் மறந்து, ஒரு சராசரிமனுசனாகக்கூட நடந்துக்கிடத் தவறிப்புட்ட நீங்களப்பவோ என் நெஞ்சிலேயே செத்துப்பூட்டீங்க. அதொப்ப, நானும் கேடுகெட்ட உங்க மனசிலே ருந்து மடிஞ்சு போயிடுவேன்!—வம்புப் புத்தியையும் வீம்புக் குணத்தையும் ரவைகூட மாத்திக்கிடாமலே இந்த நீங்க எம்புட்டு அண்ணனை—எனக்காகவும் என்மேலே வச்சிருந்த பாசத்துக்காகவும் பொட்டிப் பாம்பாக உண்மைக்குக் கட்டுப்பட்டு கிடந்த எம்புட்டுக் கந்தசாமி அண்ணனை அநியாயமாய் அடிச்சிப் போட்டீங்க. அப்ப நான் ஆடல்லே. என் சதை ஆடிச்சு, அதாலே, உங்களைப் பதிலுக்கு அடிச்சேன். இப்ப நான் ஆடுறேன். என் சதை ஆடல்லே. அதனாலேதான், இப்ப மனசிரங்கி உங்களுக்கு நன்னியோட மாப்பு தந்து நான் இப்படி விதியாவே சிரிக்கிறேன்!''

அன்னக்கிளி எழுந்தாள், நடந்தாள், ஓடினாள். எங்கே ஓடுகிறாள் அவள்?

''அன்னம்...அன்னக்கிளி!'' வீரமணி அலறினான். செண்பகம் மலைத்தாள். கூச்சல் கேட்டு கந்தசாமி வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தான்.

மறு இமைப்பிலே—புயல் வீசியது. விதி சிரித்தது.

"ஐயையோ! நம்ம அன்னப் பொண்ணு அங்கிட்டாலே சர்க்கார்க் கேணியிலே விளுந்திடுச்சீங்களே!"

செண்பகம் அலறினாள். "ஐயையோ, தங்கச்சியோ!" கந்தசாமி கிணற்றிலே பாய்ந்தான்.

"ஆத்தாடியோ...அம்மான் மகளே அன்னம்!"

வீரமணியும் நீரில் குதித்து விட்டான்.

கணங்கள், பேய்க்கணங்களாகவே நெளிகின்றன.

வீரமணியும் கந்தசாமியும் பெரும்பாடுபட்டு, அன்னக்கிளியைக் கிணற்றிலிருந்து தூக்கிச் சுமந்து வந்து கேணி அடிவாரத்தின் வெட்ட.வெளியிலே போட்டனர்!

பஞ்சாயத்துத் திடலிலிருந்து கூட்டம் திமிலோகப் படுகிறது!

அன்னக்கிளி மூச்சுப் பேச்சில்லாமல் போட்டது போட்டபடி கிடக்கிறாள்!

மாயத் தேவதை நீராடினால் இப்படித்தான் தரிசனம் தருவாளோ? பூக்கள் சிதறிக் கிடந்தன.

அன்புத் தங்கையின் பாசம் வழிந்திட்ட அழகான வதனத்தைச் செருமிக்கொண்டே துண்டினால் துடைத்தான் கந்தசாமி. "தங்கச்சி! தங்கச்சியோ!" என்று விம்மி வெடித்தவனாக அன்னக்கிளியின் பேசாத விழிகளைப் பேசச் செய்ய ஆசைப் பட்டுத் திறக்க முயன்றான். மறு கணம், "ஐயையோ, உன் அண்ணனை ஏய்ச்சிப்பூட்டியே?" என்று அலறினான்

செண்பகம் வீரிட்டாள்.

"ஆத்தாளே! மிருகமாக இருந்த இந்தப் பாவியை ஒரு சமுதாய மனுசனாகவும் பாரத மண்ணின், மகனாகவும் நல்லபடியாக ஆக்கிப் போட்டுப்புட்டு, நீ ஊருக்கு ஒசந்த தேவதையாக ஆகிப்பூட்டியே, அன்னம்!"—வீரமணி கதறினான்.

விதிக்கு மட்டிலும் அழவே தெரியாதோ?

என்ன அதிசயம்! மூடிக்கிடந்த அன்னக்கிளியின் கண்களினின்றும் கண்ணீர்த் துளிகள் மாயமாய் கசி கின்றன!—கண்ணீரைப் பாசத்திற்கும் நேசத்திற்கும் சமபங்கிட்டு ஆத்ம நிவேதனம் செய்திருப்பாளோ?

அங்கே மகாத்மா! இங்கே பேரறிஞர்!

மறுகணம்—கந்தசாமி பாசத்தின் வெறியோடு விதியைச் சாடியவனாகக் கேணியை நோக்கி ஓடினான்.

செண்பகமும் தொடர்ந்தாள். வீரமணியும் நிற்க வில்லை.

திடீரென்று மாயச்சிரிப்பொன்று கேட்டது! அவர்கள் மந்திரத்தால் கட்டுண்டவர்களைப் போன்று அப்படியே நின்றார்கள். என்ன ஆச்சர்யம்! அங்கே அன்னக்கிளி விதியாகச் சிரித்தவாறு நின் றாள்! வித்து விளையாட்டா?

"தங்கச்சிக் குட்டியோ!"

"அம்மான் மகளே!"

அன்னக்கிளி இப்போது கண்கண்ட தேவதையெனப் புன்னகை செய்கிறாள். "அயித்தை மகனே! ஆசை மச்சானே! இப்ப செலிச்சது நான் இல்லே! எங்க அண்ணனாக்கும்!" என்று விம்மி, ஆனந்தக் கண்ணீரைப் பூச்சொரிந்தாள்!

மெய்தான், அன்னக்குட்டி!"

அதோ...ஈரம் சொட்டச் சொட்ட நடந்து போய்க் கஞ்சிக் கலயத்தைச் சுமந்துகொண்டு, நேச மச்சான் வீரமணியின் காலடியிலே சமர்ப்பிக்கிறாள், அழகுக் கன்னி அன்னக்கிளி!

உச்சிப்பனையிலே உச்சிக்கதிரவன் விஷமப் புன்னகையுடன் விளையாடிக் கொண்டிருந்த நல்ல நேரம் அல்லவா அது?...

# 12. காவல்

கெட்ட சொப்பனம் கண்டவள் போல், வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள் கண்ணாத்தா. கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டாள். செண்பகத்தைக் காணவில்லை. 'நிலந் தெளிஞ்சதும் மாந் தோப்பிலிருந்து வீட்டுக்கு வந்திடச் சொல்லியும், இன்னமும் வரக் காணலியே செம்பகத்தை?'— பெற்ற மனம் இல்லாததையும் பொல்லாததையும் எண்ணித் தவித்தது

கண்ணாத்தாளுக்கு இருப்புக் கொள்ளவில்லை. ராத்திரி முழுவதும் அடித்த காய்ச்சலின் நிலவரத்தை ஊகித்துக் கணிக்கக் கூடிய நேரம் இதுவல்லதான். 'மேலுக்கு முடியாமல் மேனி குலுங்கிக்கிட்டு இருந்ததையொட்டி. நானே ராத்திரி தோப்புக் காவலுக்குப் போகாமல், கன்னி கழியாப் பொண்ணைத் தோப்புக் காவலுக்கு அனுப்பிச்சி வச்சது புத்தி கெட்ட காரியமாகிப் போயிடுமோ?''—பதறி ஓடினாள் கண்ணாத்தா.

மாந்தோப்பின் திறந்திருந்த முள்பத்தைக் கதவுப் படலைத் தாண்டி நிழலை மிதித்த கண்ணாத்தா, தீயை மிதித்த பாவனையில் பதைபதைத்தாள்: "அடியே செம்பகம்!" என்று அடி வயிற்றினின்றும் அலட்டிக் கொண்டே செண்பகத்தின் சிவந்த பாதங்களில் ஒரு தட்டுத் தட்டி விட்டாள்.

அலங்கோலமாகக் கிடந்த செண்பகம், மூண்டியடித்துக் கொண்டு எழுந்தாள். பெற்ற ஆத்தாளைக் கண்ட பதட்டத்தை அனுபவித்தவளாக. ரவிக்கைக்கு முடிச்சுக்கள் போட்டாள், சரிந்து கிடந்த சுங்கடியின் முன்தலைவைக் கொய்து மேனியில் போட்டுக் கொண்டாள்: "ராத்திரி முச்சூடும் கொட்டக்கொட்ட கண் முழிச்சுக்கிட்டு இருந்தேனில்லே?— அதான், மம்மலிலே தூக்கம் கண்ணைச் சொக்கி அசந்திட்டேன் போலே, ஆத்தா" என்று தவிப்புடன் மென்று விழுங்கினாள் செண்பகம்.

கண்ணாத்தாளின் தளர்ந்த மேனி தள்ளாடிற்று: "சமைஞ்ச குட்டியாச்சியிங்கிற அக்கறை இத்தினிகூட இல்லாம, கள்ளன் களவாணி பூந்து கொள்ளையடிச்சால்கூட தெரியாமெ சுரணை கெட்டு அடிச்சுப் போட்ட தொத்துக் குடிசையிலே தூங்கிறவ நீ. உன்னோட புத்தியும் போக்கும் புரிஞ்சு தானே உன்னை வெள்ளனவே தோப்பிலேருந்து பறிச்சாரச் சொன்னேன்; உங்கழுத்திலே மஞ்சள் தாலி விழுகிற மட்டுக்கும் ஊர் நாட்டுக்குப் பயந்து மானம் மரியாதைக்குக் கட்டுப்பட்டு மட்டோட நடக்க வேணுமிங்கிற நல்லபுத்தி உனக்கு எப்பதான் மட்டுப்படப் போவுதோ?" என்று பெருமூச்செறிந்தாள் அவள்.

"செண்பகம், இன்னிக்கு உருமம் கழிஞ்சதும் ஒட்டுப் பழம் சாடாவையும் பறிச்சால்தான், நாளைக்கு அறந்தாங்கிச் செவ்வாய்ச் சந்தையிலே கொண்டு போய்வித்துக் காசாக்கத் தோதாயிருக்குமாக்கும்!" என்று விவரம் சொல்லிக் கொண்டே மகளின் மீதிருந்த பார்வையைத் திசை திருப்பி, மாமரங்களை ஆசையோடும் ஆவலோடும் நோக்கிய

கண்ணாத்தா, ''ஐயையோ! தாராடி சாமியோ!', என்று வீரிட்டாள்.

''என்னா ஆத்தா?'' என்று பதறினாள் செண்பகம்.

''அடி. பாவி மகளே! கொம்புக்குக் கொம்பு பழுத்துக் குலுங்கின ஒட்டுப் பழங்களை ஒட்டுக்கும் காணலையேடி? எங்கேடி மாயமாய் மறைஞ்சி போச்சு அம்புட்டுப் பழங்களும்? யாரடி ராவோடு ராவாய்க் களவாடிக்கிட்டுப் பறிச்சான்? இதனாங் காட்டி நீ வீச்சரிவாளும் கையுமாய் காவல் பார்த்த லட்சணம்? உள்ளது உள்ளபடி செப்பிடுடி! ராத்திரி இங்கிட்டு யார் வந்தது?''

விழிகளை மிரள மிரள உருட்டி விழித்துக் கொண்டே தயங்கி நின்றாள் அவள்.

கண்ணாத்தாளின் கழுகுக் கண்கள் நாலா பக்கமும் துழாவி ஓடின. அங்கொன்றும் இங்கொன்று மாகச் சிதறிக் கிடந்த பீடித் துண்டுகளுக்கு ஊடாகச் சிந்திக் கிடந்த இரண்டொரு மாம்பழக் கொட்டைகளை அவள் காணாமல் விட்டு விடுவாளா? ''ஊம், பேசடி பொண்ணே, பேசு!'' என்று அதட்டினாள் அவள்.

''ஆத்தா, நான் கண் முழிச்சிக்கிட்டு இருக்கிற பரியந்தம் ஒரு ஈ காக்கை இங்கிட்டு நாடவே நாடல்லே!''

''அப்படீன்னா, நீ கண்ணை மூடினதுப் கப்பாலே யாரோ வந்து சாடா மாம்பழங்களையும் பறிச்சிருக் கான். அதானே அர்த்தம்? என்னடி சொல்லுறே செண்பகம்?''

"ஊம்...!"

"அப்படீன்னா..? ஊம், நாலைஞ்சு சாக்குக் காணும்படியான மாம்பழம் அம்புட்டையும் பறிச்சு மூட்டை கட்டிக்கிட்டுப் பறக்கிற மட்டுக்கும் உன்னோட பிசாசுத் தூக்கம் முழிப்புக் கொடுக்கல்லே! இல்லையாடி? அப்படின்னா இந்த மாந்தோப்பையே நறுவிசாய்க்காலி பண்ணின அந்தக் களவாணிப் பயல் உன்னை மட்டும் சும்மா விட்டுப் புட்டாப் போயிருப்பான்? ஊகூம், ஒருக்காலும் நீ தப்பியிருக்கவே ஏலாது!.. அடி, பாவி மகளே! கழுசடை என்கிற அவப்பேருக்கு நீ ஆளாக்கிப்புட்டே?" என்று கதறினாள் கண்ணாத்தா.

"ஐயையோ, ஆத்தா! என்ன பேச்சுப் பேசறே நீ, நாக்கிலே நரம்பில்லாமெ? நீ சொல்லுற மாதிரி நடந்திருந்தா வீச்சரிவாளை விளையாட விடாமல் ஓய்ஞ்சா இருந்திருப்பேன்?"

செண்பகத்தின் மான உணர்ச்சியின் நெருப்பு அவள் முழங்கிய சொற்களிலே சூடு பறந்தன.

"எங்கேடி மகளே உன் வீச்சரிவாள்?" என்று வினாவினாள் -

"இந்தாலே இருக்குது!" என்று சொல்லிக் கொண்டே அங்குமிங்கும் திரிந்து கடைசியில் வீச்சரிவாளும் கையுமாக வந்து நின்றாள் செண்பகம்.

"அடி தட்டுக்கெட்டவளே! இதாடி நீ புழங்கிக் கிட்டிருந்த தம்பிக்கோட்டை வீச்சரிவாள்? கண்ணை விளக்கிப் பாரடி!" என்று கூக்குரல் பரப்பினாள் செண்பகத்தைப் பெற்றவள்.

வீச்சரிவாளைப் பதட்டத்தோடு பார்வையிட்டாள் செண்பகம். மறு இமைப்பில் அவளுடைய சிவந்த முகம் கறுக்கத் தொடங்கிற்று, வீச்சரிவாளின் கைப்பிடியில் வெட்டப்பட்டிருந்த சின்னத்தம்பி என்ற பெயர் அவளைக் கல்லாய்ச் சமையச் செய்தது! அவள் தன் தாயை நிதானமாக நோக்கினாள்: "ஆத்தா, அது அந்நியம் அசலானோட வீச்சரிவாள் இல்லே!" என்றாள்.

"பின்னே யாரோடது?" என்று குறுக்கு மறித்தாள் கண்ணாத்தா.

"இது சாயாக் கடைச் சின்னத்தம்பி மச்சானோடதாக்கும்!"

"இது எப்பிடி இங்கிட்டு வந்திச்சு?",

"அந்த மச்சான் ராவிலே எனக்குத் துணை வந்தார். அவரோட இத்த வீச்சரிவாளும் வந்திச்சு!"

"ஆ!" என்று வாயைப் பிளந்தாள் பெற்றவள் கண்களில் சினம், சிவப்பு விளக்கைக் காட்டியது: "ஊர் நாட்டிலே அந்த முரட்டுப் பிள்ளை சின்னத்தம்பியைக் கண்டா, பயந்து விலகுவாங்க. அம்மாங் கொத்த போக்கிரி உனக்குத் துணை வந்திச்சா?" என்றாள்.

"நல்ல பாம்பைக் கண்டு ஓடினா, அதுஓடுறவங்க தப்பா, இல்லாட்டி, பாம்போட தப்பான்னு யோசிச்சிப் பார்க்கத் தவறிட்டியே ஆத்தா! நீ சொல்றதாட்டம் அந்த சின்னத்தம்பி மச்சான் என்வரைக்கும்கூட நல்ல பாம்புதான். சாதாரண நல்ல பாம்பு இல்லே. சத்தியத்துக்குக் கட்டுப்பட்ட நல்ல பாம்பு. அது ராத்திரி எனக்குத் துணையா மட்டும் இருக்கல்லே; காவலாவும் இருந்திச்சு!"

"அடி, மானங்கெட்டவளே! அந்தப் போகுடிச் சின்னத்தம்பி யாரோ? நாம யாரோ? இப்படிப் பட்ட நிலவரத்திலே, கன்னிகழியாப் பொண்ணான நீ, அசலானை மச்சான் முறை கொண்டாடி உனக்குத் துணைக்கு இழுத்துக்கிட்ட நடப்பு உனக்கே வெட்கமா இல்லையா? ஐயையோ, இனி நான் இந்த ஊருக்குள்ளாற எப்படித் தலை நிமிர்ந்து நடப்பேனோ?" என்று தலையில் அடித்துக் கொண்டு புலம்பினாள் கண்ணாத்தா.

செண்பகம் சிரித்தாள்: "ஆத்தா, நான் உன்னை ஒரு கேள்வி கேட்கப்போறேன். ரோசப்படப்புடாது. அந்த நாளையிலே அந்நியம் அசலான என் அப்பன் காரரை நேசிச்சு அவரோட நீ ஓடிப் போனியே, அப்போ உனக்கு வெட்கமா இல்லையா, ஆத்தா?" என்று பதனமான நியாயம் கேட்டாள்.

கண்ணாத்தா செயலற்று, வாயடைத்துப் போய் விட்டாள், பாவம்! பாக்குக் கடிக்கும் நேரம் கழித்ததும், அவள் சுதாரித்தாள்: "பெற்றவளை எதிர்த்துப் பேச வாய் வந்திடுச்சு உனக்கு. சரி, சரி. ராத்திரி நீ காவல் காக்க வந்த ரகசியம் விளங்கிடுச்சு. எக்கேடோ கெட்டுத் தொலை. நூறு இருநூறு காசு பண்றதுக்காக ராக்கண் பகல் கண் முழிச்சுக் கருக்கடையாக் காபந்து பண்ணி வச்சிருந்த மாம் பழங்க அத்தனையும் இப்போ களவு போயிடுச்சே? அதுக்கு என்ன இப்போ சவாப் சொல்லுறே? துணைக்கு வந்ததாட்டம் வந்து, சமயம் கணிச்சு எல்லாப் பழத்தையும் லவட்டிக்கிட்டுப் போயிட்ட உன் ஆசை மச்சான்கிட்டே போய் ஒரு வார்த்தை பல் போட்டுக் கேட்க முடியுமா உன்னாலே?" என்றாள்.

செண்பகம் மௌனமாகத் தவித்தாள்; தடுமாறினாள்; பின், நம்பிக்கையின் சிலிர்ப்போடு வாய் திறந்தாள்:

"ஆத்தா, அந்த சின்னத்தம்பி மச்சான் ஒரு காலும் இந்தச் சின்னதனத்தை செஞ்சிருக்கவே செஞ்சிருக்காது. யாரோ ஒரு புறம்போக்குப் பய மகன் இப்பிடி மாம்பழங்களைத் திருடிக்கிட்டு ஓடியிருக்கான். அந்தக் களவாணிப் பயலை கையும் மெய்யுமாய்ப் பிடிக்காமல் இனி உன் மூஞ்சியிலே முழிக்கவே மாட்டேன்!" என்று சூள் உரைத்து விட்டு நகர்ந்தாள் செண்பகம்.

அப்போது .....

"நில்லு, செண்பகம்!"

பழகின அன்பின் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள் செண்பகம்.

கண்களில் கண்ணீர் வழிய, உணர்ச்சி வசப்பட்டு நின்றான் சின்னத்தம்பி.

"மச்சான்!" என்று உணர்ச்சிப் பெருக்கோடு ஓடினாள் செண்பகம்.

"செண்பகம், உன்னோட நல்ல எண்ணத்தையும் அன்பையும் என்னாலே சம்பாரிச்சுக்கிட முடிஞ்ச வரைக்கும் நான் கொடுத்து வச்சவன்தான்! எல்லாக் கூத்தையும் ஆவாரம்பத்தையடியிலே கமுக்கமாய் ஒளிஞ்சிருந்து புரிஞ்சுக்கிட்டேன். பாவம்; என்னாலே உனக்குத்தான் எம்மாம் சோதிப்பு?

"செண்பகம், எனக்கு ஒரு விளையாட்டு நினைப்பு வந்திச்சு. உங்க தோப்பு ஒட்டுப்பழங்களைப் பறிச்சு நாளைக்குச் சந்தைக்குக் கொண்டுகிட்டுப் போகணும்னு நீ சொன்னதை மறந்திடல்லே. நீ வசமாய்த் தூங்கிக்கிட்டு இருக்கையிலே சாடாப் பழங்களையும் தட்டி மூட்டை கட்டிப்புட்டு, விடிஞ்சடியும் உனக்குக் காட்டி உன்னை மூக்கிலே விரலை

வைக்கச் செய்யோணும்னு ஒரு நப்பாசை மூண்டு, அந்தப்படிக்கே என் காரியத்தை செஞ்சும் முடிச்சுப் புட்டேன். ஆனா, நீயோ நல்ல தூக்கத்திலே இருந்தே. உன்னை எழுப்ப மனம் வரல்லே. சங்கதியை உங்கிட்டே சொல்லவும் முடியாமல் என் வீச்சரிவாளையும் விட்டுப் புட்டு கடைக்கு ஓட நேர்ந்திடுச்சு நல்ல காலம், என்னோட விஷப் பரீட்சை இந்த மட்டோட தப்பிச்சுது!''

சொல்லி முடித்த சின்னத்தம்பி முறுக்கு மீசையை முறுக்கி விட்டவனாக, ஈசான்ய முடுக்கிலிருந்த ஈச்சம்பத்தைக்கு ஓடினான். ஓட்டுப்பழங்கள் கொண்ட ஐந்து கோணிச்சாக்கு மூட்டைகளைப் புரட்டிக் கொண்டு வந்து தள்ளினான்:

''இந்தா செண்பகம், உங்க சொத்து!'' என்றான்.

செண்பகம் நயமாகப் புன்னகை செய்தபடி. 'ஆத்தா, உன் சொத்தை ஒப்புக் கொள்'' என்றாள்.

கண்ணாத்தா திகைத்தாள்.

''செம்பகக்குட்டி, நீ புடிச்சது வசமான அசல் புளியங் கொம்புதான்னு நீ மெய்ப்பிச்சுக் காட்டிப் புட்டியேடி?'' என்றாள்.

மீண்டும் சிரித்தாள் செண்பகம்: ''ஆத்தா, நான் பிடிச்சது புளியங்கொம்பேதான் என்கிற உண்மையை மெய்ப்பிச்சு ஊர் நாட்டிலே வாழ்ந்து காட்டினால் தான் எங்க நெஞ்சு வைராக்கியம் பலிச்சதாக அர்த்தமாக்கும்!''— அள்ளிச் செருகிக் கொண்டாள் கொண்டையை.

''ஆத்தா, செம்பகம்!'' என்று வியப்பில் வீரிட்டாள் கண்ணாத்தா.

***

# 13. உரசல்

ஜட்கா சத்தம் கேட்டது.

பட்டறையிலிருந்தபடியே ஆவலோடு தலையை நீட்டிப் பார்த்தார் பொன் வேலை செய்யும் காசி. 'நெக்லஸ் கொடுத்திட்டுப் போன அந்த மீனா அம்மாளாக இருந்தால் தேவலாமே!'

அவர் முகம் மாறியது.

ஜட்கா ராணி ஆஸ்பத்திரியைத் தாண்டி நேராக ஓடியது.

மீனா அம்மாள் ஏன் இன்னமும் வரவில்லை?

''என்னாங்க! ராத்திரிப் பாட்டுக்காச்சும் ஏதேனும் வழி பிறந்திச்சா? இல்லே, இன்னிக்கும் ஏகாதசி விரதம் தானா?''

காசி கைகளைப் பிசைந்தார்;

''கையிலே மடியிலே காசு புழங்குகிறபோது, கால் அரை சேர்த்து வைக்கச் சொல்லிக் கெஞ்சி கூத்தாடினேன். நான் சிறுவாடு சேர்த்து வச்சிருந்த ஒண்ணு ரெண்டையும் தங்க விடலே!'' என்று செருமினாள் காமாட்சி.

காசி மெல்ல எழுந்தார். ''காமாட்சி! திருக்கோகர்ணம் வரை போயிட்டு வந்திடறேன்!'' என்றார் காசி.

அவள் துணுக்குற்றாள். ''திருக்கோகர்ணத்துக்கா? ஏன், மாப்பிள்ளையைப் பார்த்துப் பல்லைக்

காட்டி, முடைக்கு அஞ்சுபத்து பணம் காசு வாங்கிட்டுவரவா?'' எரிச்சலும் எகத்தாளமுமாகக் கேட்டாள்.

காசியின் கண்கள் ரத்தம் கட்டிச் சிவக்கத் தொடங்கிவிட்டன.

''காமாட்சி, பல்லுப் போனாலும் சொல்லுப் போகாதவன் இந்தக் காசி. பொண்ணைக் கொடுத்த மாமன்காரனாச்சே என்கிற மட்டு மரியாதையைக் கூட மறந்து, பணத்திமிரிலே என்னையே எடுத்தெறிஞ்சு பேசின ம்மாப்பிள்ளை கணபதிகிட்டவா நான் பல்லைக் காட்டப்போறேன்?''

''பின்னே எதுக்குப் புறப்படறீங்க?''

''வேலை இருக்குது? நேத்திக்கு நெக்லஸைக் கொடுத்து அழுக்கு எடுத்து நகாசு போடச் சொல்லிக் கொடுத்திட்டுப் போனாங்களே, அந்த மீனா அம்மாளோட ஊர் திருக்கோகர்ணம் தான். இந்த சில்லறை வேலைக்கு அஞ்சு, பத்து கூலிக் காசு தந்தால், ரெண்டு நாள் பாடு தீருமில்லையா?''

கணவன் புறப்பட்டதும், காமாட்சி நெடுமூச்செறிந்தாள். அந்தக் கண்டசரம் கண்ணுக்குள்ளேயே ஊசலாடியது, 'கண்டசரம் போட்டு அழகு பாக்கிற பொசிப்பு எனக்கு ஏது, ஹூம்!'

அந்தி மங்கிய நேரத்தில், காசி தள்ளாடியபடி வீட்டுக்கு வந்து சேர்ந்தார். ''ஏ, காமாட்சி!'' என்று கூப்பிட்டவர், வெளித் திண்ணையிலேயே அரிசிப் பையைப் போட்டு விட்டு உட்கார்ந்தார்.

அவளுக்கு அரிசியைக் கண்டதும், புதுக் களை பட்ர ஆரம்பித்தது. வாயெல்லாம் பல். ''ஏனுங்க.

அந்த மீனா அம்மா இருந்தாங்களா? மெருகுக் கூலி தந்திட்டாங்களா?''

அவர் கண்கள் கலங்கின, ''தெரிஞ்சவர்கிட்டே ரெண்டு ருபாய் கைமாற்று வாங்கி அரிசி வாங்கினேன்.''

காமாட்சி திகைத்தாள். ''ஏன், அந்த அம்மாள் ஊர்ப் பயணம் போயிட்டாங்களாமா!''

'ஆமாம்' என்ற பாவனையில் சோகத்தோடு தலையை உலுக்கினார் காசி.

''எங்கே போயிருக்காங்களாம்? எப்பத் திரும்பி வருவாங்களாம்?''

''திரும்பி வரமுடியாத ஊருக்குப் போயிட்டாங்களாம் அந்தப் புண்ணியவதி!''

''அட பாவமே!'' அதிர்ந்தாள் காமாட்சி.

''காலம்பற திருக்கோகர்ணத்திலேயிருந்து பஸ்ஸிலே வந்து வடக்கு வீதி திருப்பத்திலே இறங்கினாங்களாம் அவங்க. அநேகமா நம்ப வீட்டுக்குத் தான் புறப்பட்டு வந்திருக்க வேணும். ஒரு எட்டு எடுத்து வச்சதும் மாரடைப்பு வந்திடுச்சாம் தரையிலே சாய்ஞ்சிட்டாங்களாம். தர்மத்துக்கு இரக்கப்பட்டவங்க அந்த அம்மாளை வண்டி வச்சுத் தூக்கிபோட்டு ராணி ஆஸ்பத்திரியிலே சேர்த்தாங்களாம். அப்பவே மூச்சு நின்னுடுச்சாம். பாவம்!'' அவருக்குத் தொண்டையை அடைத்தது.

காமாட்சி அரிசிப்பையை எடுத்துக்கொண்டு நிமிர்ந்தாள். ''ஆமாம், அந்த மீனா அம்மாளுக்குப் பிள்ளை குட்டி ...?''

"யாரும் இல்லையாம். அந்த அம்மாள் சாகிறப்ப வீட்டுச் சாவிக் கொத்து மட்டும்தான் இருந்திச்சாம். அதையும் ஸி. எம். ஓ. ஐயா வசம் சேர்ப்பிச்சிட்டாங் களாம்! சொந்தம் சோபாரின்னும் அக்கம் பக்கத் திலே யாருமே இல்லைன்னுதான் பேசிக்கிட் டாங்க!"

"ஒகோ! என்றாள் காமாட்சி. "இப்ப...அந்த அம்மாளோட நெக்லஸை இனி என்ன செய்கிற துங்க?"

திகைப்பூட்டியவளை உன்னிப்பாக ஊடுருவினார் காசி. "இது சம்பந்தமாக நீ யார்கிட்டவும் மூச்சுக் காட்டிடாதே. பிறத்தியார் சொத்து நமக்கு வேண் டியதில்லை. ஆனால், அந்த அம்மா என்கிட்டே மெருகு போடக் கண்ட சரம் கொடுத்தது தெரிஞ்ச தும், அவங்களுக்கு வேண்டியவங்க யாராச்சும் 'வளையல் தந்தாங்களாமே அழுக்கெடுக்க?" அப் படின்னு இல்லாததெல்லாம் கேட்பாங்க."

எதையோ சிந்தித்தவளாக, "மூச்சு விடாமல் நாம நம்ம கிராமத்துக்குப் போயிட்டால் என் னங்க?" என்று அவள் புதிர் போட்டாள்.

காசி சிரித்தார். "காமாட்சி! அயலார் சொத் துக்கு நான் பிறக்கல்லே! அந்த நெக்லஸைச் சரியான வாரிசுக்காரன் யார் வந்து கேட்டாலும் சிவனேன்னு வீசிப்பிட வேண்டியது தான் என் கடமை. அப்ப தான், உண்ணுற சோறு உடம்பிலே ஒட்டும்!"

"ஆமா! இப்படியே சாப்பாட்டுக்குத் திண் டாடிக்கிட்டுக் கிடக்கலாம்" என்று கழுத்தை நொடித்தாள் காமாட்சி.

மறுநாள் காலை.

உள்ளே போய் அலமாரியைத் திறந்தவருக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஏய் காமாட்சி!''

''என்னங்க,'' என்றாள் பின் கட்டிலிருந்து அவர் மனைவி, அமைதியாக.

''இங்கே வைச்சிருந்த கண்டசரம் எங்கே? உண்மையைச் சொல்லு!''

''எனக்கு எதுவும் தெரியாதுங்க?''

''கொலை பண்ணி விடுவேன் உன்னை! கொடுக்கப் போறியா இல்லையா?''

அதற்குள் வாசலில் ஜட்கா வந்து நின்றது.

''ஐலயயோ! அவங்க வந்திட்டாங்க போலிருக்கு!'' என்று பதறினார் காசி.

ஆனால், வண்டியிலிருந்து இறங்கினவர்களோ அவர்களுடைய மகள் கமலமும், மாப்பிள்ளை கணபதியும் தான். சீர்வரிசை விவகாரத்தினால் ஏற்பட்ட முறிவுக்குப் பின் இப்போது தான் வருகிறார்கள்.

''வாம்மா, கமலம். வாங்க மாப்பிள்ளை,'' என்று திகைப்பும்! சிரிப்புமாக வரவேற்றார் காசி.

பிள்ளைத்தாச்சி மகளை உள்ளே அழைத்துச் சென்றாள் காமாட்சி,

காசி, மாப்பிள்ளையை ஊடுருவிப் பார்த்தார், ''ஏன் மாப்பிள்ளை என்னவோ போல் இருக்கிறீங்க?''

அதே சமயம் உள்ளே மகளின் விம்பலும் கேட்டது அவருக்கு.

மாப்பிள்ளை கணபதி ஒரு பெருமூச்சு விட்டார். "எங்க ஊரிலே பக்கத்து வீட்டு அம்மாள், யாரோ வேண்டப்பட்டவங்களுக்குக் கல்யாணம் என்று சொல்லி நம்ம கமலத்தோட புது நெக்லஸை இரவல் வாங்கிட்டுப் போனாங்க. நேற்றைக்குக் காலையிலே திருப்பித் தந்திடுறதாகச் சொன்னாங்க. ஆனால் திடுதிப்னு மாரடைப்பிலே செத்துப் போயிட்டாங்களாம்..."

காசிக்குத் தலை சுற்றியது. "வந்து... திருக்கோகர்ணத்தைச் சேர்ந்தவங்களா ...அவங்க பேர்?"

"மீனா அம்மாள்ணு சொல்வாங்க... ஏன், உங்களுக்குத் தெரியுமா அவங்களை..."

காசி மென்று விழுங்கினார். "அவங்க நல்லவங்க தான்... இரவல் வாங்கிய நகையை நல்லா மெருகு போட்டுத் திருப்பிக் கொடுக்கணும்னு நினைச்சிருகாங்க..."

"அப்படியானால்..." மாப்பிள்ளை கணபதி ஆனந்தத்துடன் பட படத்தார். "அது ."

"காமாட்சி!" என்று குரல் கொடுத்தார் காசி "இப்பவாவது கொண்டு வந்துவிடு! காதிலே விழுந்திச்சல்ல எல்லாம்?"

உள்ளேயிருந்து மகளுடன் வந்தாள் காமாட்சி. "நல்ல காலம், நம்ப கமலத்தோட கண்டசரம் வேறே மூணாம் மனுசன் கையிலே கைமாறிப் போயிடாமல் தப்பிச்சுதே!"

மகளின் கழுத்தில் நெக்லஸ் சிரித்துக் கொண்டிருந்தது.

# 14. கல்லா.

கொத்தவால் சாவடியிலே 'மேனா-முனா மண்டி'க்குத் தனித் தன்மை பூண்ட வியாபார அந்தஸ்து உண்டு. வியாபாரத்தில் கடைப்பிடிக்கப்பட்ட நாணயத்தின் ஒழுங்கும் நேர்மையின் திறனுமே இந்த அந்தஸ்துக்கு அடிப்படையான காரணங்கள். இந்தக் காரணங்களின் அடிப்படையில் தான் அந்த மண்டியினிடம் வாடிக்கைக்காரர்களுக்கும் சரி, அன்றாடம் பண்டங்கள் வாங்குவோருக்கும் சரி, ஓர் அபிமானம் நிலவி வந்தது.

''இந்த அபிமானம் ஒண்ணையேதான் அழியாத அழிக்க முடியாத சொத்தாக நான் கருதிக்கிணு இருக்கேன். என்னோட சொத்து இண்ணிக்கு இருக்கும், நாளைக்குப் போனாலும் போயிடலாம். ஆனா வியாபாரியான எனக்கும் என் வியாபாரத்தை வளர்த்து வாழ்த்துகிறபொது மக்களுக்கும் ஊடே நிலவி வாழ்ந்துக்கிணு வருகிற இந்த அபிமானம் எனக்கு அப்பறங்கூட என் பேரைச் சொல்லிக்கிணு இருக்கும்; இல்லியா?''

இந்த நன்னம்பிக்கையையே தமது தொழிலியல் வாழ்க்கையின் ஆதார சுருதியாக மதித்து வந்தார் செட்டியார்.

செட்டியார் என்றால், அவர்தாம் மேனா முத்துராமன் செட்டியார்; 'மேனா-முனா' மண்டியின் ஏகபோக உரிமையாளர்.

கோடை வறுத்தெடுத்தது.

பெட்டியடியில் செட்டியாரைக் காணோம். அதோ, கணக்குப் பிள்ளை கடமையில் கண் பதித்திருக்கிறார்.

கல்லாவில் இருந்த வேலாயுதத்துக்குச் சற்றே ஓய்வு கிட்டியது போலும், நெட்டி பரித்தான். வேர்வை மின்விசிறிக் காற்றைக்கூடச் சட்டை செய்யாமல், அவன் சட்டையை நனைத்தது.

செட்டியாரை யாரோ தொலைபேசியில் அழைத்தார்கள். ''ஓ ஆமாங்க. அப்படீங்களா? சாயந்தரம் வட்டித் தொகையைக் கணக்குப் பார்த்துக் கட்டிடச் சொல்லிடுறேனுங்க, சேட்! என்னங்க?... ...ஓ, அப்படியா?... சரி ஆகட்டுங்க!'' என்று பேசி முடித்தார் கணக்கர். அவர் முகத்தில் கவலையின் ரேகைகள் பதியத் தொடங்கின.

செட்டியாரைக் காணோமே! எங்கே போய் விட்டார்?

'ஸீஸனுக்கு ஊட்டிக்கு உறவு கொண்டாடச் சென்றிருப்பாரோ?'

ஊஹூம்! ''ஊட்டியாவது ஒண்ணாவது! சோறு போட்டு இருபத்தஞ்சு ரூபா சம்பளம் கொடுத்து என்னைக் கல்லாவிலே இதே கடையிலே அமர்த்தினார். இந்த மண்டியின் அப்போதைய முதலாளி சோமுப்பிள்ளை. என்னவோ பூர்வ ஜன்மப் பலன் எனக்கும் அதிர்ஷ்டம் வந்திச்சு, நான் இந்த மண்டியையே வாங்கினேன். பொன்னும் பொருளும் என் கையிலே குவிஞ்சாலும், நான் போன காலத்தை ஒரு போதுமே மறக்கிறதில்லை. பணம் இண்ணிக்கு வரும்; நாளைக்கு ஓடினாலும் ஓடும். எனக்கென்ன ஊட்டி வேண்டிக் கிடக்குதாம்?'' என்பார் செட்டியார்.

அப்படியென்றால், செட்டியார் எங்கேதான் போய்விட்டாராம்?

அவர் கிண்டிக்கு யாத்திரை போயிருக்கிறார். அவருடைய 'ஸீஸன்' அங்கு ஆரம்பமாகி ஒரு வாரம் ஆகப்போகிறதே! பசியையும் பட்டினியையும் உய்த்துணரச் செய்து அலைக்கழித்த முத்துராமனை அதே காலம் குதிரைப் பந்தயத்தின் மூலமாக லட்சாதிபதியாக ஆக்கியது, அன்று தொட்டுக் கிண்டி யாத்திரையை மட்டிலும் நிறுத்தத் துணியவில்லை முத்துராமன் செட்டியார். "இந்தக் கெட்ட பழக்கம் என்னோட ரத்தத்தோடு ரத்தமாக ஊறிப்போயிடுச்சே? நான் என்ன செய்வேன்? குதிரைப் பந்தயத்திலே வந்த பணம், இதே குதிரைப் பந்தயத்திலே வந்த வழியே போனாலும் போகட்டுமே! என்னாலே கிண்டிக்குப் போகாமல் இருக்கவே முடியாது!" என்று அவர் தம் பங்களாவில் ஆயிரம் தடவை குற்றமுணர்ந்த வேதனையோடு சொல்லிவிட்டார் அல்லவா?

விதியே விளையாடும்போது, மனிதன் மட்டும் விளையாடாமல் இருக்க முடியுமா? விளையாடாமல் இருக்கலாமா?

இப்போது கதிரவன் இறங்கு முகம் காட்ட எத்தனம் செய்த நேரம். கல்லா வேலாயுதத்துக்குக் கைவிரல்களில் வலி எடுத்தது. கிட்டங்கியினின்றும் வகை வகையான எண்ணெய் டின்களும், வெல்லம், கருப்பட்டிக் கட்டுக்களும் தேடிப் போகும் சீதேவி மாதிரி வெளியேறிய வண்ணம் இருந்தன.

வழிந்த வேர்வையை வழித்துவிடக்கூட நினைவின்றி, வந்து நின்ற சாயாவை ஒரே மடக்கில் குடித்துவிட்டு, இடக் கைப் பெருவிரலில் நடனம் புரிந்த நூறு ரூபாய்த்தாளைக் கல்லாவில் வீசினான் வேலாயுதம். சிந்தனை தோய்ந்த அவன் இளமுகத்தில் அயர்வு தடம்பதித்தாலும், அவன் பில் பாக்

இயை வாடிக்கையாளரிடம் நீட்டிய பிறகுதான் நெடுமூச்சைப் பிரிக்கலானான். 'ராத்திரி வீட்டுக்குப் போறப்ப செட்டியார் ஐயா கையிலே துட்டு வாங்கியாகணும். மசக்கையிலே அவதிப்படுற பூவரசிக்கு மருந்து மாயம் வாங்கிக் குடுக்கோணும்' என்ற நினைவுப் பூ மலர்ந்தது.

கடைவீதியில் சென்ற ஒருவன் கட்டை வண்டியில் மோத இருந்து தப்பிய விபத்தைப் பற்றிக்கூட பொருட்படுத்தாமல், விரிந்திருந்த மாலைப் பதிப்புப் பத்திரிகையிலே விழிகளை விரித்தபடி சென்று கொண்டிருந்த காட்சியை வேலாயுதம் காணத் தவறவில்லை. 'ஒகோ!' என்று தன்னுள் முணு முணுத்தவனாக மெல்லக் கல்லாவை விட்டு எழுந்தான் அவன்.

கணக்குப் பிள்ளையின் கயிறு முடிந்த மூக்குக் கண்ணாடி ஏறிட்டு விழித்தது.

"ஐயா, ஒரு பத்து நிமிஷம் வெளியிலே போயிட்டுத் திரும்பிடறேனுங்க. கல்லாவிலே வந்து இருங்க" என்றான் வேலாயுதம்.

"ஆகட்டும்ப்பா!"

கல்லா வேலாயுதம் என்றால் அந்த மண்டியில் நல்ல பெயர்!

மெ. முத்துராமன் செட்டியார் அடியளந்து வந்தார். கிண்டி யாத்திரைக்குக் கைகொடுத்த 'டாட்ஜ்' இப்போது சின்னத் தம்பித் தெரு முனங்கிலேயே நின்றுவிட்டது. ஜன நெரிசலில் இப்போது அவருடைய கால்களே கைகொடுக்க நேர்ந்தன. கார் யாத்திரையும் பாத யாத்திரையும் அவர்வரை ஒரு பொருட்டல்லதான். அவர் நெடுமூச்சு எறிந்தார்.

வந்த வழியில் ஏகாந்த சொரூபிணியாகக் காட்சி தந்த மகமாயித் தாய்க்கு ஒரு கும்பிடு போட்டார் செட்டியார். மாமூல் காணிக்கை இது. நடுங்கிய கைவிரல்களால் விபூதியையும் குங்குமத்தையும் ஒரு சேர அள்ளி நெற்றியில் அப்பிக்கொண்டார். முன் நெற்றியில் அலைந்து கிடந்த வெண்கேசத்தைப் பின்வசமாகக் கோதி விட்டவராக நடை தொடர்ந்தார். கும்பிடு கொடுத்துக் கும்பிடு வாங்கிக் கொண்டபடி, புன்னகையும் தாமுமாக மண்டியின் படிக்கட்டில் வந்து நின்றவரின் பார்வை கல்லாவில் நிலைத்தது.

"கணக்கப்பிள்ளை ஐயா, எங்கே வேலாயுதம்?"

"வெளியிலே போயிட்டு வர்றதாச் சொல்லிட்டுப் போனான் கொஞ்ச முந்தி. வந்திடுவானுங்க."

"ஓ! சரி. நீங்க எந்திருங்க. நான் கல்லாவிலே உட்காருகிறேன்" என்று சொன்னார் முத்துராமன். சூழ்ந்துகொள்ளும் பரபரப்பைச் சமாளித்துப் பழகியவை ஆயிற்றே அந்தக் கைகள்.

சேட் தொலைபேசியில் கண்டித்துச் சொன்ன தாக்கலையும் கணக்குப்பிள்ளை வெளியிட மறந்துவிடவில்லை.

"அப்படியா? வழியிலே பார்த்தேன் சேட்ஜியை. வட்டி வேணாமாம். அவருக்கு; அசல் வேணுமாம். அந்தக்கணக்கைக் குறியுங்க,நேற்றுச் சொன்னேனே, அந்த லிஸ்ட்டைத் தயாராக்கிட்டீங்களில்லையா?" என்று வினவினார் செட்டியார்.

"ஆமாங்க" என்றார் கணக்கர்.

கையில் சுருட்டி வைத்திருந்த புதுப் பத்திரிகையை நான்காக மடித்துச் சட்டைப்பையில் திணிக்க முயன்றவனாக, அச்சம் சூழ வந்து நின்றான் வேலாயுதம். 'நான் பார்த்துக்கிறேனுங்க'' என்றான், பயம் சூழ்ந்த குரலில்.

குரல் கேட்டு ஏறிட்டு நோக்கினார் செட்டியார். ஒடுங்கக் காணும் யோகியர் உள்ளம் போல அவர் மனம் நிச்சலமான புன்னகையை வெளிக்காட்டியது ''வேலாயுதமா? வாப்பா. வந்து உன் யதாஸ்தானத் திலே உட்கார்ந்துக்க'' என்று தெரிவித்து எழுந்தார். எழுந்த போது, அவர் வேலாயுதத்தின் சட்டைப் பையில் விழித்துத் தினறிய பத்திரிகையைக் கவனிக் கத் தவறவில்லை. ''ஏப்பா, ஈவினிங் பேப்பரா? ஓ! லாட்டரி ரிசல்ட் வந்திருக்கணுமே?'' என்று கேட்டு முடிப்பதற்குள் அவர் கையில் பத்திரிகை தவழத் தொடங்கியது.

அதிர்ஷ்டச் சீட்டுக்களின் எண் விவரங்களை நோட்டம் இட்டபடி, ''கணக்கபிள்ளை ஐயா, நம்ப ஜாதகத்தைப் பாருங்க!'' என்றார். நல்லது கெட் டது கடந்த ஒரு விசித்திர உணர்வு அவரது தொனி யில் அடிநாதமிட்டது.

''கிளிப்' போட்டிருந்த கற்றைக் சீட்டுக்களையும் மாலைப் பதிப்பையும் பரிசோதித்துப்பார்த்த கணக் கர் பதினைந்து நிமிஷங்களைத் தேவைக்கு மேலாக எடுத்துக் கொண்ட பின், செட்டியாரின் கண்களில் படும்படியாகத் தம்முடைய நலிந்து மெலிந்த கைகளை அகல விரித்துவிட்டார்.

செட்டியாரின் ஜாதகம் கேவலம், அந்த லாட் டரி டிக்கட்டுக் கட்டுக்களிலா அடங்கிவிடும்? செட்டி யார் முடிவு கண்டு புன்னகையே செய்தார்.

செட்டியாரின் விந்தைப் புன்னகையைக் கண்டான் வேலாயுதம். அவன் முகத்தில் நிறைந்திருந்த புதிய மலர்ச்சி, மறுகணம் மாற ஆரம்பித்தது.

அந்தி மஞ்சள் நிறம் மாறத் தலைப்பட்ட நேரத்தில் தான் செட்டியாருக்கு அவருடைய பங்களாவிலிருந்து மாலைக் காபி காரில் வந்தது.

விநயம் கலந்த புன்சிரிப்புடன் வந்த காபியை வாயில் ஊற்றிக் கொண்டார் செட்டியார். ஜரிகைத் துண்டு அவருடைய சிவப்பேறிய கண்களை ஒற்றித் திசை மாறியது. "மீனாட்சியின் மனச் சந்தோஷத்துக்கோசரம் இருபத்தஞ்சு காசில் முடிய வேண்டிய ஒரு கப் காபிக்கு நாலைஞ்சு ரூபா பெட்ரோலுக்கு ஆகுது! ம்!" என்று வாய்விட்டுக் கூறினார் அவர்.

கிண்டி யாத்திரையின் முடிவு முதலாளியைப் பொறுத்தமட்டில் வெறும் காய் என்பதை அநுமானம் செய்து கொள்ள வேலாயுதத்துக்கு ஒரு விநாடிகூடப் பிடிக்கவில்லை. தூது வந்த அந்தப் பத்திரிகையை மீண்டும் நான்காக மடித்துச் சட்டைப் பைக்குள் சரணடையச் செய்தான் அவன். அவனுடைய கண்கள் ஓரிடத்தில் நிற்கக் காணோமே! ஏனாம்? மறுகணம் அவனையும் மீறிய வகையில், புதுவகைச் சிரிப்பொன்று திசைமாறும் விதிபோல வெடித்தது. அடுத்த விநாடி, அவன் சுயப் பிரக்ஞை பெற்றதும். அந்தப் புதுச் சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டான். மேனி சிலிர்த்து அடங்கியிருக்க வேண்டும். கல்லாப் பெட்டியில கண் பதித்தான். இழிசல் சட்டைகூட வேர்வைப் பெரு வெள்ளத்துக்கு அணை போடுமோ, என்னவோ?

இரவு கடை அடைக்கும் வேளையில் வேலாயுதம் தன் எஜமானரிடம் பவ்யமாகத் தன் கோரிக்கையை வெளியிட்டான்.

"அதிகப் பற்று வந்திடாமல் பார்த்துக்கிடணு மப்பா" என்றார் செட்டியார்.

"வராதுங்க!"

"சந்தர்ப்பங்க நமக்கு எப்பவுமே அநுசரணை யாக இருக்க முடியாதில்லையா? அதனால் தான் இப்படிப் புது ஷரத்து வச்சுச் சொல்ல வேண்டி யிருக்கு."

"சரிங்க, எஜமான்!"

செட்டியாரின் கண் நோக்கு பெட்டியடியில் நிலைபெற்றது, இப்போது.

"பிஸினஸ்கூட டல் ஆகிக்கிணு வருதுங்க, ஐயா!"

"அப்படியா? கண்டச் சனி. தப்பிக்கிறது சுலப மில்லை. பகவானே!" வழக்கம் போலவே இப் போதுங்கூட அந்தப் புன்னகை விதியாக விளைந்தது.

மண்டிக்கும் ஓய்வு வேண்டாமா?

உலகத்தின் நெற்றித் திட்டில் நெற்றிப் பொட் டாக ஊசலாடிய நாள் காட்டியின் சில தாள்களைக் கபளீகரம் செய்தது காலம்.

'மீனாட்சி விலாசம்' அன்று இளங் காலைப் பொழுதில் உயிர்க் கழுவில் ஊசலாடித் தவித்தது.

மெ. முத்துராமன் செட்டியார் மட்டும் தமக்கே உரிய அந்த அழகான புன்சிரிப்புத் தவழ 'யூஃபோம்' திண்டில் சாய்ந்தவண்ணம் இருந்தார்,

முனிபுங்கவரா அவர்?

இல்லை, கர்மயோகியா?

இல்லை, அவர் சாட்சாத் 'மேனா-முனா' செட்டி யார்தாமே?

"கணக்கப்பிள்ளை ஐயா!"

"எஜமான்!"

செட்டியார் விதிபோலச் சிரித்தார். "வரும் விதி ராத்தங்காதுன்னு சொல்வாங்க. ஆகச்சே, ராத்திரியே எல்லா விவரங்களையும் செட்டில் செஞ்சிடணும். பங்களாவையும் காரையும் விற்று. கொடுக்க வேண்டிய நாலு இனங்களோட கடனை அடைச்சிடலாம். மண்டியை ஸேல் பண்ணி, சேட்ஜி யின் கடனை அடைச்சிட வேண்டியதுதான். ஆரம்ப மாக இருக்கிற புதிய வாழ்க்கை எங்க மீனாட்சிக்கும் பசங்களுக்குந்தான் புதுசாயிருக்கும், பாவம்!" என றார். சலனம் துளியும் இல்லாத குரலமைப்பு.

கணக்குப்பிள்ளை கண்ணீரைத் துடைத்துக் கொண்டார். மூக்குக்கண்ணாடியின் கயிறு அவிழ்ந்து தொங்கியது.

"கணக்குப்பிள்ளை ஐயா, மறந்துவிடாமல் நினைப்பூட்டுங்க. உங்களுக்கு ஒரு புது மூக்குக் கண் ணாடி வாங்கிக் கொடுத்திடுறேன்."

கணக்குப் பிள்ளை விம்மினார்.

"ஐயா, நம்ப மண்டிக் கல்லாப்பெட்டி அமுதசுரபி யாட்டம். அதோட விதியும் மாறிடுச்சே. அதுதான் ஆச்சரியம்! அதுவும் கைமாறப் போகுதே!" குரல் கம்மினாலும், புன்சிரிப்பு மாற்றுக் குறையவில்லை.

"சாயந்தரம் மண்டி ஸ்டாக் எடுத்திடுங்க. விற் பனைக்காக மதிப்பு நான் வந்து போட்டுக் கிட லாம்."

"ஆகட்டுமுங்க, ஏஜமான்!"

"மண்டியை விலைக்கு வாங்கறவங்க உங்களை யும் நம்ப கல்லா வேலாயுதத்தையும் மற்றச் சிப்பந்தி

களையும் அப்படியே வேலைக்கு வச்சுக்கிட்டா கணும். என் திட்டத்துக்கு ஓ. கே. சொல்லுற இடத் திலேதான் என் மண்டியைக் கிரயம் செய்வேனாக் கும்.''

''சரிங்க!''

''கடைசீலே ஏதானும் கொஞ்ச நஞ்சம் மிஞ்சா மல் போகாது. அதிலே ஆளுக்குக் கொஞ்சம் துட்டு தரணும்னும் ஆசை. பகவான் நல்ல மனசு வைக்க ணும். கணக்கப்பிள்ளை ஐயா, எனக்கு ஓர் உதவி செய்யணும். இந்தக் கீழ்ப்பாக்கம் ஏறியா தவிர, வேறே இடத்திலே ஒரு சின்ன வீடு வாடகைக்குப் பிடிச்சுக் கொடுத்துடுங்கோ.''

''உத்தரவுங்க, முதலாளி.''

செட்டியாருக்கென்று இப்படி ஒரு புன்னகையா?

ரேடியோவில் ஆங்கிலத்தில் செய்தி வாசிக்கப் பட்டது.

விதிக்கு மட்டுமல்ல, அந்த மண்டிக்கும் கண் திறக்கும்!

முதலாளிச் செட்டியார் வந்திருந்தால் அரை நாள் லீவு பெற்று வெளியில் போய்த் திரும்ப வேண்டுமென்று எண்ணியிருந்தான், கல்லா வேலாயு தம். துவைத்து உலர்த்திய சட்டையின் ஈரம் இன்ன மும் உலரக் காணோம். காலை இளம் பரிதி அவ னுடைய சட்டைக்குக் கை கொடுக்காதா என்ன?

கணக்குப் பிள்ளையிடம் தன் கோரிக்கையை முன் வைக்கத் திட்டமிட்ட வேலாயுதம் அவரை அண்டினான்.

அப்போது கணக்குப்பிள்ளை 'கதை'யை அவன் வசம் ஒப்படைத்தார். ''நம்ப மண்டியை யார் கையி

லானும் விற்று. சேட் கடனை அடைக்கப் போறாங்க செட்டியார்!'' என்றும் தெரிவித்தார்.

உந்திக் கமலத்தில் யாரோ சம்மட்டி கொண்டு நையப் புடைத்து விட்ட மாதிரி துடிதுடித்தான் வேலாயுதம். சுனைநீராக விழிகளில் நீர் பெருகத் தொடங்கியது. ''தெய்வமே!'' என்று தவித்தான். காலடியில் இருந்த கல்லாவைப் பார்த்தான். வாய் விட்டு விம்மலானான். கல்லாவினின்றும் புறப்பட்ட ஊதுவத்தியின் நறுமணம் அவன் மூச்சைத் திணறச் செய்தது போலும். எதையோ சிந்தித்தவனாக, விழி களைத் துடைத்துக் கொண்டு தன் அரை நாள் விடு முறைக் கோரிக்கையை வெளியிட்டு, வெற்றியும் பெற்றான்.

''கடைசி நேரத்தில் நாமும் நம்ம எஜமானரைச் சோதிக்கப்படாதப்பா!''

''வாஸ்தவந்தானுங்க. மவுண்ட்ரோடு வரை போய்த் திரும்பணும் ஜோலி சீக்கிரம் முடிஞ்சிட் டால், பறந்து வந்திரமாட்டேனா?''

''சரிப்பா!''

அந்தி மாலை மணந்தது. ஆனால் 'மேனா·மூனா மண்டி'யில் மட்டும் பேய்க்களை விளையாடியதோ?

கல்லா வேலாயுதம் கடமையில் கருத்துப்பதித் திருந்தான். உலர்ந்திருந்த சட்டையில் மீண்டும்ஈரம் படிந்தது சட்டைப் பையில் துருத்திக் கொண்டிருந்த அந்தப் பழைய செய்தித்தாள் உறுத்தியதோ என்னவோ, அதை எடுத்து அருகில் போட்டுக் கொண்டான்.

செட்டியார்-முத்துராமன் செட்டியார், முற்றும் துறந்த முனிவரென நடைபயின்று வந்து, மண்டியின் படிக்கட்டில் கால் பதித்தார்.

வேலாயுதம் மரியாதையோடு எழுந்து நின்றான்.

''உட்காரப்பா, உட்கார்!'' என்று புன்னகை தவழச் சொல்லிவிட்டுக் கடைக்குள் பிரவேசித்தார் செட்டியார்.

கணக்குப்பிள்ளை தயாரித்து வைத்திருந்த கால் கடுதாசியை நடுக்கம் மூளச் செட்டியாரிடம் நீட்டினார்.

செட்டியார் அந்தக் காகிதத் துண்டைப்பார்வையிட்டார் பிறகு யோசனை மின்ன, என்னஎன்னவோ புள்ளிகள் போட்டார்; கூட்டினார்; கழித்தார். ''மண்டி ஸ்டாக், கடையோட இடம் எல்லாம் சேர்த்து லட்சத்து இருபதாயிரம் ஆகுது. இந்தத் தொகைதான் கறார் விலை. இதுக்குச் சேட்ஜி சம்மதிச்சால், அவர் கையிலேயே மண்டியை ஒப்படைச்சிடலாம். அவருக்குக் கொடுக்க வேண்டிய அசல், வட்டி எல்லாம் போக என் கைக்கு ஐயாயிரம் மிஞ்சும். இதிலே எனக்குக் கொஞ்சம் வச்சிக்கிணு பாக்கியை கடைச் சிப்பந்திகளுக்கு ஈவு போட்டுக் கொடுத்திடணும். சேட்ஜியைப் போனிலே கூப்பிட்டு இங்கே வரச் சொல்லுங்க, கணக்கப்பிள்ளை ஐயா!'' என்றார் முத்துராமன். வேர்வையை ஞாபகமாகத் துடைத்துக்கொண்டார்.

நிமிஷங்கள் சிலவற்றைத் தேயவிட்டு, சேட் அழகான புத்தம் புதிய காரில் வந்து இறங்கினார். அவர் கேட்ட தொகையும் இறங்கி வந்தது. பேச்சு முறியவே, சேட் புறப்பட எழுந்தார்.

''இன்னும் நாலு நாளிலே உங்க கடனைச் செட்டில் செஞ்சிடுறேனுங்க, சேட்ஜி!'' என்று உத்தரவாதம் அளித்தார் செட்டியார்.

சேட்ஜி புறப்பட வேண்டியவரானார்.

வேலாயுதத்துக்கு ஓரிடத்தில் இருப்புக் கொள்ள வில்லை. செட்டியார் தலையைத் திருப்பி அண்ணாந்து பார்த்தார்.

வல்ல வேல் முருகன் வினை தீர்த்தான்—மாலை சூழப் புன்னகைக் கோலம் ஏந்தியவாறு தரிசனம் ஈந்தான்.

'முருகா! அப்பனே!' செட்டியாரின் பக்திமனம் பாகாய் உருகி வழிந்தது.

காலம் ஆமையாக அவதாரம் பூண்ட அதிசயமும் அந்த மண்டியில் நிகழ்ந்தது.

கடைகட்டும் நேரம் அண்டியது.

அதற்குள் நடந்த இரண்டு மூன்று பேரங்களும் முறிய நேர்ந்தன.

கடை கட்டப்பட்டது.

டாக்ஸி வரவழைக்கப்பட்டது.

செட்டியார் புறப்பட போனார்.

அப்போது அவரை மரியாதையோடு நெருங்கினான் கல்லா வேலாயுதம். ''முதலாளி ஐயா! உங்களிடம் ஒரு விஷயம் சொல்லவேணும். உத்தரவு கிடைக்குங்களா?'' என்றான்.

முத்துராமன் அவனை ஏற இறங்கப் பார்த்தவாறு இயல்பான புன்னகையுடன், ''உத்தரவு எதுக் கப்பா வேலாயுதம்? விஷயத்தைச் சொல்லேன்'' என்று ஆதரவுடன் தெரிவித்தார்.

மேனி நடுங்க வேலாயுதம் உணர்ச்சிப் பெருக்குடன் சொல்லலானான்: ''எஜமான்! எனக்கு—இந்த

ஏழைக்கு—லாட்டரியிலே முதற்பரிசு ஐந்து லட்சம் ரூபாய் விழுந்திருக்குதுங்க!'' என்று மேற்கொண்டு பேச முடியாமல் நிறுத்தினான் வேலாயுதம்.

''அப்படியா!'' என்று அதிசயப்பட்டார் செட்டியார். ரொம்ப ரொம்பச் சந்தோசமான சேதி அப்பா!'' என்றார். தெய்வம் இல்லாமல் இல்லை தான்!'' என்று தொடர்ந்தார். அழகான புன்னகை பளிச்சிட்டது.

வேலாயுதம் கண்களைத் துடைத்துக் கொண்டு, தன் முதலாளியை ஒருவகைப் பயத்தோடு நோக்கிய வண்ணம், ''எஜமான், இன்னொரு சங்கதியையும் உங்க கையிலே சொல்ல வேணுமுங்க. தப்பாய் நினைச்சுக்காமல் இருக்கணுமுங்க'' என்றான்.

''சொல்லப்பா!'' என்று சிரித்தார் செட்டியார்.

''நீங்க சொன்ன தொகைக்கு உங்க மண்டியை என் கையிலே கொடுப்பீங்களா, எஜமான்?'' அவன் பேச்சில் அத்து மீறிய அச்சம் குரல் கொடுத்தது.

மீண்டும் புன்முறுவல் கோலம் ஏந்தினார் செட்டியார். ''பேஷாகக் கொடுக்கிறேன், வேலாயுதம்! இதைக் காட்டிலும் எனக்கு ஆறுதல் தரக்கூடிய சங்கதி வேறே இல்லையப்பா'' என்றார்.

''ரொம்ப ரொம்ப நன்றிங்க, முதலாளி ஐயா!'' என்று கையெடுத்துக் கும்பிட்டான் வேலாயுதம். ''இன்னும் ரெண்டு மூணு நாளிலே 'செக்' மாறிடுங்க. ரொக்கத்தைக் கொண்டாந்து கொடுத்துப்பிடுறேனுங்க, எஜமான்!''

நல்லதப்பா, நல்லது!''

உணவு வேளை.

மண்டியிலே முத்துராமன் செட்டியாரும் கணக்குப் பிள்ளையும் மட்டும் சாப்பாட்டுக்குச் செல்லவில்லை. அவர்கள் எதிர்பார்த்திருந்த வேலாயுதம் அதோ வந்துவிட்டான்.

"உட்காரப்பா, வேலாயுதம்!" என்றார் செட்டியார்.

கல்லா வேலாயுதம் நின்றுகொண்டேயிருந்தான். மடிப் பணத்தை எடுத்து அப்படியே செட்டியாரிடம் பக்தியும் மரியாதையும் துலங்கச் சமர்ப்பித்தான்.

புன்னகையுடன் பணத்தைக் கை நீட்டிப் பெற்றார் செட்டியார்.

நிமிஷங்கள் புள்ளிமான்களாயின.

"ஒரு லட்சத்து இருபதாயிரம் சுரெக்டா இருக்குதப்பா, வேலாயுதம்!" என்று வேலாயுதத்தை நோக்கிச் சொன்னார் செட்டியார். பிறகு, கணக்குப் பிள்ளையை நோக்கி, சேட்ஜியை வரச் சொல்லுமாறு தெரிவித்தார்.

சேட் வந்தார். கடன் அடைந்தது.

மிச்சம் இருந்த ஐயாயிரம் செட்டியாரின் உள்ளங்கையில் அடங்க முடியாத விதிபோலக் காட்சி கொடுத்தது.

"வேலாயுதம்!"

"எஜமான்!"

"இனி நீ நீங்கதான் இந்த மண்டிக்குச் சொந்தக்காரர்" என்றார் செட்டியார், வழக்கமான புன்னகையோடு.

கல்லா வேலாயுதம் கண்களில் நீர் மிளிர அந்தக் கல்லாவை நோக்கி வணங்கினான்.

அந்தக் காட்சியைக் கவனித்தார் செட்டியார். "வேலாயுதம், ஒரு சிறு மாறுதல். இந்தக் கல்லா மட்டும் எனக்கு வேணும்" என்று நிறுத்தினார்.

வேலாயுதம் மலைத்து நின்றுவிட்டான், "எஜமான்! ஆகிவந்ததாச்சுங்களே இந்தக் கல்லா?" என்றான்.

செட்டியார் சிரித்தார்; "வேலாயுதம், எனக்கு முந்தி இருந்த இந்த மண்டிச் சொந்தக்காரர்கிட்டே நான் கல்லா வேலைக்கு அமர்ந்தேன். பிறகு, ஓர் அதிர்ஷ்டத்திலே நானே இந்த மண்டியை விலைக்கு வாங்கினேன். இப்போ என்கிட்டே வேலைக்குச் சேர்ந்து கல்லாவிலே இருந்த நீ என்கிட்டேயிருந்து இந்த மண்டியை விலைக்கு வாங்கியிருக்கே. இந்த விசித்திரமான அதிசயம் இனியும் தொடரக்கூடாதே என்ற நல்லெண்ணத்திலேதான் சுயநலக்காரன் மாதிரி, இப்போது இந்தக் கல்லாவுக்கு மட்டும் நான் உரிமை கொண்டாடுகிறேன். இப்போதாவது விஷயம் புரியுதாப்பா, வேலாயுதம்?" என்று விக்கலுக்கும் விம்மலுககும் இடையே பேச்சைத் துண்டித்தார் செட்டியார்.

வேலாயுதம் தெய்வத்தைப் பார்ப்பது போன்று செட்டியாரை விழி பிதுங்க நோக்கினான். "முதலாளி ஐயா!" என்று விம்மலானான். பிறகு, அந்தக் கல்லாவை அப்படியே எடுத்துக்கொண்டு வந்து செட்டியாரிடம் ஒப்படைத்தான்.

செட்டியார் கல்லாவைத் திறந்து பார்த்தார். அதில் இருந்த ஒரு பைசாவைத் தவிர, பாக்கி எல்லாப் பணத்தையும் வேலாயுதம் வசம் ஒப்புவித்து விட்டு, மறந்து விடாமல் சிரிக்கலானார். அவர் மார்பில் அணைந்தது கல்லாப்பெட்டி.

வேலாயுதம் தொண்டை அடைக்க, "நீங்க என்னைச் சோதிக்கிறீங்களே, எஜமான்? உங்க கையிலே என் நன்றியைக் காட்டுறதுக்கு ஒரு வழியும் தோணலீங்களே?" என்று தவித்தான்.

மீண்டும் புன்னகை சொரிந்தார் செட்டியார், "வேலாயுதம், நியாயப்படி பார்த்தால் நானல்லவா உன் கையிலே நன்றி பாராட்ட வேணும்?" என்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறிய அவர் உள்ளங்கையில் இருந்த பணக்கற்றையில் பாதியை எடுத்துச்சட்டைப் பையில் திணித்துக்கொண்டு, மறுபாதியில் தம் சிட்டைக் குறிப்பைப் பார்த்து எழுபத்தைந்து ரூபாயை எண்ணி வேலாயுதத்திடம் நீட்டினார். "வேலாயுதம், இந்த ஏழையினால் இந்த அளவுக்குத் தான் இப்போது நன்றி தெரிவிக்க முடியுது. மறுக்காமல் ஏற்றுக்கிடுங்க வேலாயுதம்! கடைச் சிப்பந்திகளை என்னாலே மறக்கவே முடியாது!" என்று நாத் தழுதழுக்கக் கூறினார் செட்டியார். பிறகு கணக்குப் பிள்ளையிடம் குறிப்புத்தாளையும் மிகுதிப் பணத்தையும் சமர்ப்பித்தார். இன்று வரை உள்ள சம்பளப் பாக்கி, என்னாலான நன்றிக் காணிக்கையோட ஈவு எல்லாத்தையும் அவங்க அவங்களுக்குக் கொடுத்திடுங்க. மீதம் ஒரு ஐம்பது இருக்கும். அதிலே நீங்க ஒரு புது மூக்குக் கண்ணாடி வாங்கிக்கிடணும். இனி நம்ப கல்லா வேலாயுதந்தான் முதலாளி என்கிற சந்தோஷச் செய்தியையும் நம்ப சிப்பந்திங்க வந்ததும் சொல்லிடுங்க" என்றார். பிறகு, நிதானமும் அமைதியும் தடம் புரளாமல், "எனக்கு விடை கொடுங்க, மிஸ்டர் வேலாயுதம்! நான் புறப்பட வேண்டிய வேளை வந்தாச்சு" என்றார் செட்டியார். அவருக்கென்று ஒரு சிரிப்பா?

"எஜமான்! எஜமான்!"

எதிர்வெயில் இப்படியா அடிக்கும்?

# 15. ஆணை பிறந்தது

சே!...

தரித்திரம் பிடித்த ட்ரங்குப் பெட்டி அது.

மீனாவின் தாய் உள்ளம் எரிதழலாகத் தகித்தது சுட்டது மேனியில் ஓடிய ரத்தம் பூராவும் பனியாக உறைந்து விட்டதோ?

அந்தப் பெட்டியைக் கையினால் தொட்டுப் பிரித்து, வள்ளிசாகப் பதினாறு மாதங்கள் ஆகி விட்டன.

"ராஜ!...ராஜாவே!..."

அவள் புலம்பினாள்; துடித்தாள்; உருகினாள்; தவித்தாள். ராஜாவின் பாலமுதச் சிரிப்பும் பால் வண்ணமுகமும் நீலவிழிகளும் கோல இதழ்களும் அவளுடைய பெற்ற நெஞ்சிலும் நினைவிலும் நிழலாடிக் கொண்டேயிருந்தன! கண்களின்றும் உருகி, ஓடிய ரத்தக் கண்ணீர், அவளது மெலிந்த கைகளிலே ஊசலாடிய அந்தச் சட்டையில் துளித் துளியாகச் சொட்டிக் கொண்டிருந்தது. பாசத்திற்குப் பாசம் வைக்கும் ஆத்ம சமர்ப்பணம் போலும்!

அது—

ரோஸ் கலர் ஸ்லாக்!

ஆஹா! எவ்வளவு அழகுடன் திகழ்கிறது அந்தச் சொக்காய்! சட்டை புதுக் கருக்கு குலையாமல் அப்படியே இருக்கிறது!

ஆனால்...!

ஆனால், அந்த ஸ்லாக்கைப் போட்டு அழகு பார்த்த— அழகு காட்டிய ராஜாவைத்தான் காணோம்;

ராஜா எங்கே?

அவன் போய் விட்டான்!

எங்கே போய் விட்டான்?

திரும்பி வராத இடத்துக்கு போய் விட்டான்!— போயே போய் விட்டான்! பயணங் கூடச் சொல்லிக் கொள்ளாமல் போய் விட்டானே?

அப்படியென்றால், ராஜா திரும்பிவரமாட்டானா? திரும்பி வரவே மாட்டானா?

''ஐயோ, ராஜா!—''

தலையிலும் வயிற்றிலுமாக அடித்துக் கொண்டு அழுதாள்; புலம்பினாள்; துடித்தாள்; புரண்டாள் அவள். அவள்: மீனா!—தாய்!

சின்னகுட்டி பானுவின் கவுன் கிழிந்து போயிற்று; புதுக் கவுன் வேண்டுமென்று அடம்பிடித்தாள். மீனாவுக்கு ரோதனை தாங்க முடியவில்லை, அவள் கணவன் தங்கவேலு கொத்து வேலைக்கு கோழி கூப்பிடக் கிளம்பிப் போய் விட்டான். அவன் இருந்திருந்தால், அவனே தான் அந்த ட்ரங்குப் பெட்டியைத் திறந்து மகளுக்குக் கவுன் எடுத்துக் கொடுத்திருப்பான். இப்போது சுமை மீனாவின் நெஞ்சில் ஏறியது. கவுனை எடுத்துக் கொடுத்தவளுக்குச் சுமை இறங்கவில்லை. சுமையோடு சுமையை ஏற்றி

விட்டது ராஜாவின் ரோஜா வண்ணச் சட்டை. "அ...ட்...டை! அட்டை, என்று சட்டையைப் பிடித்த வண்ணம், வண்ணச் சிரிப்பு ஏந்தி, வாய் கொள்ளா மழலை ஏந்தி கை கொட்டிக் குதூகலம் அடைந்தானே ராஜா.

ராஜாவின் சட்டையை வைத்துக் கொண்டு அழுது புலம்பிக் கொண்டிருந்தாள் மீனா. ராஜா கண்ணை மூடும் தருணத்தில் மீனாவுக்கு ஒன்பது மாதம் இறந்த ராஜாவே மறுபடியும் வந்து பிறப்பான் என்று நம்பினாள் அன்னை; அவ்வாறே பிறக்க வேண்டுமென்று பிரார்த்தனையும் செய்தாள். ஒரு நஷ்டம், ஒரு லாபத்தில் ஈடு ஆகி, சோகத்தில் ஓர் ஆறுதல் கிட்டாதா என்று தாய் மனம் தவித்தது. ஆனால், தெய்வம் மீண்டும் அவளைச் சோதித்து விட்டது. ராஜா மறு பிறப்பு எடுக்கவில்லை. பானுக் குட்டிதான் பிறந்தாள். பானு என்றால் பானுதான்! பானு எங்ஙனம் ராஜாவாக முடியும்? ராஜா பிறப் பான் மீண்டும் என்று மேலத் தெருப்பாட்டி சொன்ன சோதிடம் பொய்த்துவிட்டதே? ஆனால் தெய்வப் பிரார்த்தனையும் பொய்த்து விடுமோ?...

ஏறுமுகச் சூரியனின் கதிர்கள் குடிசைகளைச் சூடுபடுத்திக் கொண்டிருந்தன.

மீனாவுக்குக் காலைக் கஞ்சியில் மண் விழுந்தது. சோகமும் ஏக்கமும் நெஞ்சில் நீக்கமற நிறைந்தது, வேர்ப்புழுவாக அரித்துக் கொண்டிருக்கையில், வயிறு பசிக்குமா, என்ன? என்னவோ சத்தம் கேட்கவே திசை திரும்பினாள். காற் சதங்கை ஒலி கேட்டது. திகீரென்றது அவளுக்கு ஆடிவரும் தேனாக ராஜா ஆடி அசைந்து நடைபயின்று வரும்போது இப்படித்

தான் கார்சதங்கை பண் கூட்டுவது வழக்கம்! ராஜா திரும்பி வந்து விட்டானா?

தெய்வமே!...காளி ஆத்தா!...

ராஜாவாவது திரும்புவதாவது?

ஐயோ, தெய்வமே!... ஐயோ, காளி ஆத்தா!...

மணி வந்து நின்றான்! ''ம்மா!... ம்மா!'' என்று அவனுடைய செப்புவாய் செப்பிக் கொண்டிருந்தது.

ஏறிட்டுப் பார்த்தாள் மீனா. கண்ணீர் பார்வையை மறைத்தது. ''வா வா!' என்று அன்புடன் அழைத்தாள் அவள். 'ராஜா' ராஜா!'' என்று அவள் உள்ளம் ஓலமிட்டதை அந்தக் குழந்தை எங்ஙனம் அறியும்? — பாவம்! மணி ஓடிவந்து அவளிடம் அணைந்தான். குஞ்சு மயிர்களைக் கோதி விட்டபடி அவள் கண்களிலே மணி அணிந்திருந்த சட்டை தென்பட்டது.

ராஜா போட்டுக் கொண்டிருந்தது போலவே, அதே ரோஜா நிறச் சட்டையை இப்போது மணியும் போட்டிருந்தான். அவள் துயரம் மடை உடைந்த வெள்ளமாகி விட்டது. அவளுக்குத் திடுதிப்பென்று ஒரு பயம் தோன்றியது. 'மரகதம் சுத்த மூசிடு ஆச்சுதே... அவள் மகன் மணியை எடுத்து வைத்து ஆசையாகக் கொஞ்சுவதைப் பார்த்தால் கூட, என்னை ஏசுவாளோ? ராஜா என்னை ஏய்த்து விட்டுப்போய் விட்ட விதியைச் சொல்லிக் காட்டி நையாண்டி பண்ணுவாளோ?... என்ற அச்சம் தோன்றவே பானுக்குட்டியிடமிருந்து சோளமுறுக்கு ஒன்றை 'தனது' பண்ணி வாங்கி அதை மணியிடம்

கொடுத்து, அவனை மெதுவாக வழியனுப்பி வைத்தாள் மீனா. பெருமூச்சு எரிதழலாக தகித்தது.

மரகதத்துக்கு நாக்கில் நரம்பு இருப்பதில்லை. அவள் மீனாவின் ''கொழுந்தன் பெண்டாட்டி''!— அதாவது, மீனாவைக் கொண்டவனுடைய தம்பியின் மனைவி!...அண்ணன் குடும்பமும் தம்பி குடும்பமும் அக்குவேறு ஆணி வேறாகப் பிரிந்துவிட்டன. பாசமும் உறவும்கூட அப்பால் பிரிய வேண்டியதுதானோ?

பானுக்குட்டிக்கு நல்ல தூக்கம்.

மகளுக்குப் பக்கத்தில் மீனா பாயில் படுத்துப் புரண்டு கொண்டிருந்தாள். உறக்கம் பிடிக்கவில்லை அவளுக்கு. பசியின் கிறக்கமும் பாசத்தின் சுமையும் இதயத்தை வேலி கட்டி அடைத்துக் கொண்டிருந்தன. தவம் இருந்து, நான் கடந்து பெற்ற பிள்ளை ராஜாவுக்கு இந்த எட்டடிக் குச்சு கசந்து விட்டதோ? உண்மைதான்; அரண்மனையில் அவதரித்திருக்க வேண்டிய தங்க ராஜா அல்லவா அவன்!

வேப்பமரக் காற்று 'உணக்கை' கூட்டி வீசத் தொடங்கியது.

உலை வைக்க வேண்டும்.

வேலை முடித்து மூன்று கல் கடந்து திரும்பும் மச்சானுக்கு வெந்நீர் வைக்க வேண்டும். பொழுது பட்டதும் வந்து குதித்து விடுவான் தங்கவேலு!

மீனா மெல்ல எழுந்தாள். நெஞ்சின் பளு மண்டைக்கு ஏறிக்கிடக்கிறது. தலைமாட்டில் கிடந்த அந்த சட்டையை அப்படியே போட்டுவிட்டு நகர்ந்தாள். ராஜாவும் அந்தச் சட்டையை அப்படியே போட்டுவிட்டுத்தானே போய்விட்டான்?

அப்போது, மரகதத்தின் தலை மகள் தெய்வானை பாவாடை சரசரக்க வந்தாள். பெரியம்மா! எங்க தம்பி இங்கிட்டு வந்தானாமில்ல? அவன் சட்டை இங்கிட்டாலே கிடக்குதாங்காட்டி?'' என்று சகஜமான தொனியில் கேட்டாள். சிறுமியின் சிறு விழிகளிலே ராஜாவின் சட்டை தென்படத்தவறுமா?

மீனாவுக்கு 'திக்'கென்றது. ''உன் தம்பி மதியத்துக்கு முந்தி வந்தான். போட்ட சட்டை போட்ட படியே போயிட்டானே?...அந்தப் பிள்ளையோட சட்டை இங்கிட்டு எப்படிக்கிடக்கும்?'' என்று பான்மை சேர்த்துச் சொன்னாள் மீனா.

சிறுமி தெய்வானையின் குறு குறுத்த விழிகள் ராஜாவின் அந்தச் சட்டையிலேயே குறியாய்ப் பதிந்திருந்தன. ''பெரியம்மா, அந்தாலே கிடக்குதே எங்க தம்பியோட சட்டை! எதுக்கு பெரியம்மா பொய் சொல்லுறீங்க? எங்க தம்பியோட சட்டையைவச்சுக்கிட்டு நீங்க என்னா செய்யப் போறீங்களாம்? அம்மாவுக்குத் தகவல் தெரிஞ்சா, வம்பு வராதா? தந்திடுங்க எங்க சொக்காயை! தீபாவளிக்கு ஆசையாய் எங்க அப்பன்காரர் தச்சாந்த தாச்சுங்களே அந்த ரோஜாப் பூச்சிகப்புச் சட்டை!'' என்று அழமாட்டாத குறையாகக் கெஞ்சினாள் சின்னப்பெண் தெய்வானை.

மீனா தவித்தாள். 'ஆத்தா மூத்தவளே! எங்க ராஜாவுக்கு எடுத்த சட்டை மாதிரியே அதே நிறத்திலேயே மரகதத்தோட மகனுக்கு எடுத்தசட்டையும் அமைய வேணுமா? என்ன சோதனை இது? மறு கடுத்தமும் மரகதம் வந்து ஏசிப் பேசி, நான் தவிக்க வேணுமா? ராஜா என்னை ஏமாத்திட்டுப் பறிஞ்ச இடுசாமத்தைச் சொல்லிக்காட்டத் தயங்கமாட்

டாளே பாவி மரகதம்?''— இப்போது என்ன செய்வது? அவளுடைய கண்கள் தளும்பத் தொடங்கிவிட்டன. ஒரு நினைவு மின்னல் பாய்ந்தது. ''ராஜாவோட அந்தச் சட்டை இங்கே கிடந்து என்ன புண்ணியம்? மரகதத்தோட ஆசை மகன் மணிதான் போட்டுக் கிழிக்கட்டுமே? யார் யாருக்கு விதி இருக்கிறதோ, அதுக்குத்தக்கனை தானே எல்லாமே லோகத்திலே நடக்க வாய்க்கும்?'—அவள் சுற்றிச் சூழப்பார்த்தாள்.

சிறுமி தெய்வானையின் கைகளிலே இப்போது அந்த ரோஜா நிற ஸ்லாக் அழகு காட்டிப் பொலிந்தது.

''தெவ்விக்குட்டி! எனக்குப் புத்தி மறுகிப் போன கிலேசத்திலே உன் தம்பி மணியோட சட்டை அங்கிட்டாலே கிடந்ததுகூட; இந்தப் பாவி கண்ணுக்குக் தட்டுப்படல்லே, ஆத்தா! உன் தம்பி சட்டையை எடுத்துப்போய் உங்க அம்மாகிட்டே சேர்த்துப்பிடு, பொண்ணு!'' என்றாள் மீனா. வழிந்த நீரை வழித்துவிடக்கூட நினைவிழந்தாள் தாய் மீனா.

சட்டையும் கையுமாக 'கடலே கதியாகப் பறந்து ஓடிவிட்டாள் தெய்வானை!

அடுப்பில் உலை கொதித்தது.

''பெரியம்மா, பெரியம்மா!... எதுக்காம் நீங்க அப்படிப் பொய் பேசினீங்களாம்? இந்தாங்க உங்க சட்டை! எங்க தம்பி மணியோட சட்டை காளி கோயில் வாசலிலே கிடந்து தேடிப்புடிச்சிட்டு வந்திருச்சு எங்க அம்மா!—உங்க ராஜா வீட்டுச் சட்டையை நீங்க எடுத்துப் பத்திரமாய் வச்சிக்கிடுங்க!... உங்க தங்கப்பிள்ளை ராஜா கட்டாயம்

மறுபிறப்பெடுத்து உங்க வயிற்றிலே திரும்பியும் வந்து பிறந்திடுவானுங்க, பெரியம்மா! .. அப்போ, அவனுக்கு அவனோட இந்தச் சொக்காயைப் போட்டு அழகு பார்க்கவேணுமில்லே!... ஆத்தா மூத்தவ கண் திறப்பா! நீங்க உங்க கண்ணைத் துடைச்சுக்கிடுங்க பெரியம்மா!' என்று உணர்ச்சிப் பெருக்குடன் பேசிய சிறுமி தெய்வானை விம்மலானாள்.

ராஜாவின் ரோஸ் கலர் ஸ்லாக் திரும்பிவிட்டது!

இதே போன்று, ராஜாவும் திரும்பி வந்து விடுவான் அல்லவா?—அவளுடைய பெற்ற மனம் நம்பிக்கை எனும் உயிர்க் கழுவில் தவித்துத் துடித்துத் தத்தளித்த வண்ணம் ஆனந்தக்கூத்து ஆடிக் கொண்டிருந்தது 'ஆத்தா மூத்தவளே!'...முத்து முத்தாகக் கண்ணீர் உருகிக் கரைந்து வழிந்து கொண்டே இருக்கிறது.

நல்வாக்குக் கொடுத்தவள் சிறுமி தெய்வயானையா?— அல்லது...?

மீனா அந்த ரோஸ் கலர் ஸ்லாக்கை ஆர்வத்துடிப்புடன் எடுத்தாள்; நடுங்கும் கரங்களால் அதைத் தன்னுடைய மார்பகத்தில் அணைத்துக் கொண்டாள். மூடிய கண்கள் மூடியவாறே இருந்தன,

அதோ, ராஜா!...

''ராஜா!'' உயிரைக் குரலாக்கிக் கூவினாள். நெஞ்சைத் தடவிக் கொண்டாள்.

ராஜாவுக்கு எவ்வளவு அழகாக, பாசமாக, பரிவாகப் புன்னகை செய்யத் தெரிந்திருக்கிறது!

மார்பில் இழைந்த அந்தச் சட்டையை எடுத்து கொண்டு கண்களை ஆசையோடு திறந்தாள்.

சூன்யம் சிரித்தது!

மீனாவுக்கு மட்டிலும் சிரிக்கத் தெரியாதா?" என்ன?— கண்ணே ராஜா! நீ எப்பவும் என்னோட நெஞ்சிலே உயிரும் நிணமுமாய் வாழ்ந்துக்கிட்டு இருக்கே! நான் கொஞ்ச முந்தி உனக்குப் போட்டுப் பார்த்த சட்டை எவ்வளவு பொருத்தமா இருந்திச்சு என்கிற ரகசியம் பெற்ற எனக்கும் பிறந்த உனக்கும் மட்டுந்தானே புரியும்? இல்லையாப்பா ராஜா?'

அடுத்த இமைப்பில்;

மீனா விம்மத் தொடங்கினாள். 'ராஜா! இதை மட்டும் நீ மறந்திடாதே! — நீ தெய்வாதீனத்தாலே திரும்பி உன்னோட — இந்தச் சொக்காயைப் போட்டுக்கிட்டாத்தான் நான் உயிர் தரிச்சிருப் பேன்!... இல்லாட்டி, நானும் இந்தப் சட்டையும் தீயோடு தீயாய்ப் பொசுங்கிப் போயிடுவோம்! ஆமா, சொல்லிட்டேண்டா, கண்ணே! உன்மேலே ஆணை இது...!!

கண்ணீர்— ரத்தக் கண்ணீர் சிலிர்க்கிறது!

இவ்வுலகத்தைப்பற்றிய உண்மை ஒன்று உண்டு. இதுமுற்றிலும் இனிமையே நிறைந்ததுமன்று, முற்றிலும் கயமை நிறைந்ததுமன்று. நலம் கேடு ஆகிய இரண்டும் இவ்வுலகில் உள. இவ்வுலகை ஆழ்ந்து ஆராயுமிடத்து இதைப்பற்றிய மற்றோர் உண்மை நமக்குப் புலப்படும். இவ்வுலகினின்று மனிதனுக்கு உண்டாகும் துன்பங்களுக்குக் காரணம் இவ்வுலகத்தின்கண் இல்லை. மனிதன் அடைகின்ற துன்பத்துக்கு மனிதன் தானே பொறுப்பாளியாகின்றான்.

—சுவாமி விவேகானந்தர்

T. M. S. Printers, Madras-17. Phone : 440155